# கோவலன் கதை



பதிப்பாசிரியர்

முனைவர் சூ. நிர்மலா தேவி

International Institute of Tamil Studies

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# கோவலன் கதை

## (சுவடிப் பதிப்பு)

பதிப்பாசிரியர்

முனைவர் சு. நிர்மலா தேவி

International Institute of Tamil Studies

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Kōvalan Kaṯai |
| Editor | : | Dr. S. Nirmala Devi<br>Dip.in Epigraphy & Archaeology<br>Dip.in Manuscriptology. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 2254 2992 |
| Publication No. | : | 450 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2003 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 200 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.50/- (Rupees Fifty Only) |
| Printed by | : | Powerman Printers<br>89, Coral Merchant Street<br>Mannady, Chennai - 600 001 |
| Subject | : | Folk Ballad (Manuscriptology) |

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

என்பார் தொல்காப்பியர். செவ்விலக்கியம், நாட்டார் இலக்கியம் என்ற இருவேறுபட்ட இலக்கிய வகைகள் தொன்று தொட்டே வழங்கி வந்தன என்பதற்கு இச்சூத்திரம் சான்றாகத் திகழ்கிறது. செவ்விலக்கியங்கள் தோன்றுவதற்கு நாட்டார் இலக்கியங்களும் நாட்டார் இலக்கியங்கள் தோன்றுவதற்குச் செவ்விலக்கியங்களும் காரணங்களாக அமைந்து வந்துள்ளதை இலக்கிய வரலாறு தெளிவுறுத்தும்.

சிலப்பதிகாரத்தைப் பொறுத்தமட்டில் நாட்டார் இலக்கியமாகத் திகழ்ந்து வந்த கோவலன்-கண்ணகி கதையை இளங்கோவடிகள் பெருங்காப்பியமாகப் பாடினார் என்ற கருத்தும் ஆராய்ச்சியாளர் களுக்குண்டு. அதே நேரத்தில் சிலப்பதிகாரக் கதையை மையமாகக் கொண்ட முப்பதுக்கும் மேற்பட்ட நாட்டார் இலக்கியங்கள் தோன்றியுள்ளதையும் அறிய முடிகின்றது. அவை நாட்டுப்புறப்பாடல், நாடகம், கும்மி, கதைப்பாடல், வெண்பா, நாட்டிய நாடகம் போன்ற பல்வேறுபட்ட வடிவ வேறுபாடுகளோடு திகழ்கின்றன.

'இதுவரையும் வெளிவராத தமிழ்ச் சுவடிகளை வெளிக் கொணர்தல்' என்ற அடிப்படையில் "கோவலன் கதை" என்ற நாட்டுப்புறக் கதைப்பாடற் சுவடி இப்பொழுது பதிப்பித்து வெளியிடப்படுகின்றது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழ்ச் சுவடிகளைத் திரட்டுதல், பாதுகாத்தல், பதிப்பித்தல் என்ற பணிகளை 1979 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செய்து வருகின்றது. தமிழ்ச் சுவடிகளைப் படிப்போர் அருகி வருவதைக் கருத்திற் கொண்டு, சுவடி படிக்கும் பயிற்சி வகுப்பைக் கடந்த 25 ஆண்டுகளாக நடத்தி வருகின்றது. இத்தகு சுவடியியல் பட்டய வகுப்பு தமிழகத்தில் வேறு எந்த இடத்திலும் தொடர்ந்து நடத்தப் பெறுவதில்லை என்பது குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகும். இத்துடன் சுவடிக் கருத்தரங்குகள், சுவடிப் பயிலரங்குகள், சுவடியியல் தொடர்பான அறக்கட்டளைச்

சொற்பொழிவுகள் பலவற்றையும் நிறுவனம் தொடர்ந்து சிறப்பாக நடத்தி வருகின்றது. இந்த வகையில் சுவடியிலுள்ள "கோவலன் கதை" என்ற நாட்டுப்புறக் கதைப்பாடலைப் பதிப்பித்து வெளியிடுவதில் நிறுவனம் பெருமகிழ்வடைகின்றது.

இதுவரை வெளிவந்துள்ள கோவலன்-கண்ணகி கதைகளின்றும் மாறுபட்டுக் காணப்படும் பல கூறுகள் இந்நூலுள் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவாகத் தென் மாவட்ட வழக்குச் சொற்கள், மலையாளச் சொல்வழக்குகளைக் கையாண்டிருத்தல், மாசாத்தான் கரிகாற்சோழனின் மந்திரி, தளபதியாக இருந்து கல்லணை கட்டியதில் முக்கியப்பங்கு வகித்தல், கோவலன்-மாதவியிடையே மனவேறுபாட்டை உருவாக்கத் தாய்க்கிழவி வசிய மருந்து தயாரித்த முறை, கண்ணகி மலையாளம் சென்ற வழி ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இந்நூலின் பதிப்பாசிரியர் முனைவர் கு. நிர்மலா தேவியின் பன்னிரண்டாம் நூலாக இந்நூல் வெளிவருகின்றது. சின்னத்தம்பிகதை, உஜ்ஜைனி மாகாளி கதை, குருக்குளாஞ்சி கதை, வெங்கலராசன் கதை, பலவேச சேர்வைக்காரன் கதை, முத்தாரம்மன் கதை, தடிவீரசுவாமி கதை, வன்னியராயன் கதை, அரவமுத்து வீரன் கதை, அழகன் பெருமாள் கதை என்ற பத்துக் கதைப்பாடற் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிட்ட இவர், பதினோராம் கதைப்பாடல் பதிப்பாக இந்நூலைச் சிறந்த முறையில் பதிப்பித்துள்ளமைக்காகப் பாராட்டுகிறேன்; மேலும் பல நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கு ஆக்கம் சேர்க்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலினை ஒளியச்சுக் கோப்புச் செய்த நிறுவனக் கணிப்பொறி உதவியாளர் திருமதி பி.கௌசல்யாவிற்கும், இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த பவர்மேன் அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை
08-05-2003

இயக்குநர்

# நன்றியுரை

முத்தமிழ்க் காப்பியம், தேசியக் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்று போற்றிப் புகழப்படுவது சிலப்பதிகாரக் காப்பியம். இப்பெருங் காப்பியம் தோன்றுவதற்குக் காரணிகளாக அமைந்தவை நாட்டுப்புறக் கதைப்பாடல் வடிவங்கள் என்ற கருத்து அறிஞர்களிடையே காணப்படுகின்றது. நாட்டுப்புற மக்களிடையே வழங்கி வந்த கோவலன்-கண்ணகி கதை, தக்காராகிய இளங்கோவடிகளால் சிலப்பதிகாரம் என்ற காப்பியமாக எழுதப்பட்டது; தமிழன்னையின் திருப்பாதச் சிலம்பாக அணிவிக்கப் பெற்று அழகும் பெற்றது என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

"சேரநாட்டு இளவல்" என்று கருதப்படும் இளங்கோவடிகளால் யாக்கப்பெற்ற சிலப்பதிகாரப் பிரதி ஒன்று கூடச் சேரநாட்டு மண்ணிலுள்ள கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் காணப்படவில்லை என்பது மிகுந்த வியப்பைத் தரும் உண்மையாகும். இச்சுவடி நூலகத்திலுள்ள "கோவலன் கதை" என்ற நாட்டுப்புறக் கதைப்பாடல் சுவடியைப் படித்துப் பார்க்கும் வாய்ப்பு *1980-1984* இல் எனக்கு வாய்த்தது. அந்நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளுக்கு விவர அட்டவணை தயாரிக்கும் பணி, முக்கியச் சுவடிகளைப் படியெடுக்கும் பணி ஆகியவற்றைச் செய்யும் அரிய வாய்ப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் எனக்கு அளித்தது. அப்பொழுது கோவலன் கதைச் சுவடியை முழுவதுமாகப் படித்துப் பார்க்க நேரிட்டது. ஆங்காங்கு மலையாள, தென்மாவட்ட வழக்குச் சொற்கள் கலந்து,எளிய, இனிய நடையில், இதுவரை வெளிவந்துள்ள கோவலன்-கண்ணகி கதைகளினின்றும் மாறுபட்டுக் காணப்பட்ட இக்கதைப்பாடல் மனங்கவருவதாக அமைந்திருந்தது.

இச்சுவடியைப் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தில் *13-4-1999* அன்று இச்சுவடியின் நிழற்படப் பிரதியை நிறுவனம் மூலமாகப் பெற்றேன். இடையில் இதே நூலகத்திலிருந்து பெறப்பட்ட வரலாற்றுக் கதைப்பாடலான "அழகன் பெருமாள் கதை" என்ற சுவடியைப் பதிப்பிக்கும் பணியை மேற்கொண்டிருந்தேன். அடுத்ததாகப் பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுக் கோவலன் கதை என்ற இச்சுவடி பதிப்பித்து வெளியிடப்படுவதில் பெருமகிழ்வடைகின்றேன் இச்சுவடியை நன்முறையில் நிழற்படப் பிரதியெடுத்து அனுப்பி வைத்த, கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலக இயக்குநர் அவர்களுக்கு இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சுவடியைப் பதிப்புக்கு எடுத்துக் கொண்டு செய்து தருமாறு அன்புக் கட்டளையிட்ட நிறுவன முன்னாள் இயக்குநர் முனைவர் ச.சு.இராமர் இளங்கோ அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி.

இந்த நூலை வெளியிட அனுமதி அளித்த பதிப்புக் குழுவுக்கு நன்றி.

நாளும் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தராய்த் தமிழ் வளர்ச்சியில் பேரார்வம் கொண்டு செயலாற்றி வருபவரும், பைந்தமிழ் நூல்களை வெளியிடாத நாட்களெல்லாம் பிறவா நாட்களே என்ற கொள்கையுடையவராய்க் குறுகிய காலத்துக்குள் நிறைய நூல்களை, நிறைவுடைய நூல்களை வெளியிட்டு வருபவரும்,

**'என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே'**

என்ற ஏற்றமிகு தமிழ் மந்திரத்தின் இலக்கணமாய்த் திகழ்பவரும் ஆகிய எமது நிறுவன இயக்குநர் முனைவர் சா.கிருட்டினமூர்த்தி அவர்கள் இந்நூல் வெளிவர முக்கியக் காரணமாக அமைந்தவராவார். இச்சுவடிப் பதிப்புப் பணி பல்லாற்றானும் சிறப்புற்றுத் திகழ அனைத்து ஏற்பாடுகளையும் செய்தளித்து, விரைவுபடுத்தி, ஆக்கமும், ஊக்கமும் நல்கிய இயக்குநர் அவர்களுக்கு உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலை முழுமையாகப் படித்துப் பார்த்துப் பதிப்புச் செம்மைக்கு உதவிய சுவடிப் பேரறிஞரும் எனக்குச் சுவடியியலைப் பயிற்றுவித்த நல்லாசானுமாகிய முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

நூலின் மெய்ப்புத் திருத்தத்தில் உதவி புரிந்த நிறுவன ஆய்வு மாணவி திருமதி. பூரணலதா குமரன் அவர்களுக்கு நன்றி.

இந்நூலை நன்முறையில் ஒளி அச்சுக் கோப்புச் செய்தளித்த நிறுவனக் கணிப்பொறியாளர் திருமதி. கௌசல்யாவுக்கு நன்றி.

இந்நூல் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி.

**முனைவர் சூ.நிர்மலா தேவி**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்பாசிரியர் முன்னுரை | 1 |
| 2. | நூலாராய்ச்சி | 10 |
| 3. | நூல் | 80 |
| 4. | அருஞ்சொற் பொருள் விளக்கம் | 191 |
| 5. | துணை நூல்கள் | 197 |
| 6. | சிறப்புச் சொல்லகராதி | 198 |

# பதிப்பாசிரியர் முன்னுரை

திருவனந்தபுரம், கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள சுமார் 5000 சுவடிகளுள் பெரும் பான்மையானவை சித்தமருத்துவச் சுவடிகள். அதற்கு அடுத்த இடத்தைக் கதைப்பாடற் சுவடிகள் பெற்றுள்ளன. இந்நூலகத்திலுள்ள கதைப்பாடற் சுவடிகளுள் சின்னத்தம்பி கதை, குருக்குளாஞ்சி கதை, தடிவீர சுவாமி கதை, வன்னியராயன் கதை, அழகன் பெருமாள் கதைப்பாடல் என்ற 5 சுவடிகளை ஏற்கெனவே பதிப்பித்து வெளியிட்டுள்ளேன். தற்போது "கோவலன் கதை" என்னும் நாட்டுப்புறக் கதைப்பாடல் சுவடி பதிப்பித்து வெளியிடப்படுகின்றது.

## கோவலன் கதை

கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் கோவலன் கதைச் சுவடிகள் இரண்டு உள்ளன. 6305, 6718-e என்ற எண்களுள்ள இச்சுவடிகளுள் முந்தையது முழுமையானது. பிந்தையது 14 ஓலைகளை மட்டுமே கொண்ட குறைச்சுவடி. மேலும் முந்தையதினும் வேறுபட்டது ஆனதால் ஒப்பீடு செய்யவும் இக்குறைச்சுவடி உதவவில்லை.

91 இதழ்களை உடைய முழுமைப் பிரதி சிறு சிதைவுகளுடனும், எழுத்துத் தெளிவுடனும் காணப்படுகின்றது.

## பதிப்பிக்கக் காரணம்

புகழேந்திப் புலவரால் பாடப் பெற்றது என்று கருதப்பெறும் "கோவலன் கதை" வாய்மொழியாகவும் ஏட்டுச் சுவடிகளிலும் இருந்து பின் அச்சாகியிருக்கலாம் என்று வையாபுரிப்பிள்ளை அவர்கள் கருதுவார் (இலக்கிய மணிமாலை, பக்:127). "கோவலன் கர்ணகை கதை" என்ற ஒன்றும் ஏட்டுச் சுவடியிலிருந்து அச்சாகியுள்ளது. பதிப்பித்தவர் டாக்டர் தி. நடராசன் அவர்கள்

ஆவார். ஏட்டுச் சுவடியிலிருந்து ஏற்கெனவே இவ்விரு கதைப் பாடல்களும் அச்சாகியிருக்க, மூன்றாவதாக இந்தக் "கோவலன் கதை"யையும் பதிப்பித்து அச்சேற்றுவதற்கு இதன் கதைவேறுபாடு முக்கியக் காரணமாகும். இதுவரை அச்சில் வெளிவராத இச்சுவடி பதிப்பித்து வெளிக் கொணரப்பெறுகிறது.

## சுவடியின் புற அமைப்பு

'6305' என்னும் எண்ணுள்ள "கோவலன் கதை" என்னும் இச்சுவடி 91 இதழ்களைக் கொண்டுள்ளது. 40.9 x 3.5 செமீட்டர் நீள, அகலம் உடையது. சிறு சிதைவுகளுடன் காணப்படுகின்றது. சில இதழ்களின் ஓரங்கள் முறிவுபட்டுள்ளன. இடையிடையே பூச்சியரிப்புகளும் காணப்படுகின்றன. ஓர் ஓலையில் இரு துளைகள் இடப்பட்டு நூல் கோர்த்து மேற்புறம், கீழ்ப்புறம் மரச்சட்டங்கள் இணைத்துக் கட்டப்பட்டுள்ளது.

## சுவடியின் அக அமைப்பு

எழுதுமுறை - ஓர் ஓலை இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு பக்கத்துக்கு 7 முதல் 8 வரிகள் என்னும் கணக்கில் ஓலையின் ஒரு பக்கத்தில் 14 முதல் 16 வரிகள் வரை எழுதப்பட்டுள்ளது. வரி நேராக்கலுக்காக வரியின் இறுதி எழுத்து இடம் விட்டுத் தனித்து எழுதப்பட்டுள்ளது. விட்ட எழுத்துகள் மேலே வரிப் பிளப்பில் எழுதப்பட்டுள்ளன.

## சுவடி எழுதியோர்

சுவடியின் முதலிலோ, இறுதியிலோ சுவடி எழுதப்பட்ட காலம், சுவடியை எழுதிய அல்லது படி எடுத்த ஆசிரியர் பெயர் குறிப்பிடுவது உண்டு. இச்சுவடியை எழுதிய ஆசிரியர் பெயர் எங்கும் குறிப்பிடப்பெறவில்லை. இச்சுவடியின் எழுத்தமைதியை வைத்து நோக்கும் பொழுது ஒரு சில இதழ்களில் மாறுபட்ட கையெழுத்து உள்ளது. எனவே வேறு ஒருவரும் அந்த ஒரு சில இதழ்களை எழுதியுள்ளார் என்பது மட்டும் வெளிப்படத் தெரிகின்றது.

**சான்று:** ஓலை 54, ஓலை மறுபுறம் 85.

## சுவடியின் காலம்

சுவடியின் முதல், இறுதி இதழ்களிலோ, இடையிலோ எங்கும் சுவடி எழுதப்பட்ட காலம் குறிப்பிடப்பெறவில்லை. ஆனால் சுவடியின் மேல் சட்டத்தில் சுவடி எண், சுவடித் தலைப்பு, கிரந்த

எண்ணிக்கை இவற்றுடன் M.E. 1048 என்ற குறிப்புகள் குறிக்கப்பெற்றுள்ளன. சுவடியின் காலம், முதல், இறுதி இதழ்களில் காணப்பட்டு அந்த ஓலை சிதைந்ததால் இவ்வாறு காலம் எழுதி வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுள்ளது. M.E. என்பது "மலையாள ஈரா" என்பதைக் குறிக்கிறது. அதாவது கொல்லம் ஆண்டாகும். கொல்லம் ஆண்டு 1048 என்பது கி.பி. 1873 ஆகும். இது சுவடி படி எடுக்கப்பட்ட காலமாகலாம். மூலச் சுவடி இதற்கும் முந்தைய காலகட்டத்தில் எழுதப்பட்டிருக்கக் கூடும். ஆக, இற்றைக்குச் சற்றேறக்குறைய 129 ஆண்டுகளுக்கு முன் இச்சுவடி எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

## எழுத்து முறை

சுவடிகளில் பொதுவாகக் காணப்படுகின்ற எழுத்து முறைப்படியே இச்சுவடியும் எழுதப்பட்டுள்ளது. அதாவது,

1. மெய்யெழுத்துகளுக்குப் புள்ளி இடாமை,

2. ஒற்றைக் கொம்பு(ெ) இரட்டைக்கொம்பு (ே) வேறுபாடின்றி எழுதுதல்,

3. ா-ர- இடையே மாறுபாடு இன்றி 'ா' என்றே எழுதுதல் என்ற முறைப்படி இச்சுவடி எழுதப்பட்டுள்ளது. இவற்றை மனத்திற்கொண்டு நாமே சரியான முறையில் படிக்க வேண்டியுள்ளது. மேலும் பல சுவடிகளிலும் காணப்படுகின்றவாறு;

ர-ற; ண-ந-ன ஆகிய எழுத்துகளும் முறையாக ஆளப்படவில்லை.

ல-ள-ழ என்ற எழுத்துகளும் முறை மாறி வந்துள்ளன. சரியான நிலையில் வைத்து நாம் படித்துக் கொள்ள வேண்டும்.

இவற்றுடன் இந்தச் சுவடி எழுதிய ஆசிரியருக்கென்று உரிய தனிப்பட்ட கையெழுத்து முறையாலும் சில எழுத்து வடிவங்கள் சிக்கலுடையனவாகவும் காணப்படுகின்றன. சான்றாக,

டி என்பது டு என்றும்

ஊ என்பது உா என்றும் எழுதப்பட்டிருப்பதைக் கூறலாம்.

## கூட்டெழுத்துகள்

சில இடங்களில் கூட்டெழுத்துகள் காணப்படுகின்றன. முடி(முட்டி) வன்னிதட்டான் (வன்னித்தட்டான்) லட்சுமிகும் (லட்சுமிக்கும்) கன்னகையு(கன்னகையும்) மாதேவியு(மாதேவியும்) மாதேவிகு(மாதேவிக்கு) ஆகுதய்யோ ஆக்குதய்யோ. கடவிழ்த்து (கட்டவிழ்த்து) என்ற சொற்களைச் சான்று காட்டலாம்.

## சுவடியில் பிழைகள்

மேலும் இச்சுவடி பிழைமலிந்ததாகவும் காணப்படுகின்றது. சுவடிகளில் பிழைகள் பல காரணங்களால் நிகழுகின்றன. இந்தச் சுவடியில் கீழ்க்காணுபவையால் பிழைகள் நேர்ந்துள்ளன.

1. எழுத்து விடுகை
2. எழுத்து மிகை
3. தேவையற்ற எழுத்துகள் இடல்
4. இருமுறை எழுதுதல்
5. இசையோடு பாடியது போல் எழுதுதல்
6. முதலில் வரக் கூடாத எழுத்தை எழுதுதல்
7. கவனமின்மை
8. மூலச் சுவடியின் எழுத்துத் தெளிவின்மை

ஆகியவற்றால் பிழைகள் நேர்ந்துள்ளன.

## எழுத்து விடுகை

எழுதிச் செல்லும் பொழுதே சொல்லின் இடையிலோ, கடையிலோ ஓர் எழுத்தை எழுதாமல் விட்டுவிடுகின்றனர். கவனக்குறைவு இதற்குக் காரணம். இச்சுவடியில் காணப்பட்ட எழுத்து விடுகைகள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றன. சரியான வடிவங்கள் அடைப்புகளுக்குள் உள்ளன.

1. அனுப்பிக் கொண்டாள் கெங்யரெ அப்போதே பயணமென்றாள் (கெங்கையரை)
2. வந்துநல்ல படுத்திருந்தான் சூரன் மாசாத்தா னரனையிலே (அரமனையிலே)

3. சீரான பாலனுக்குச் செல்பேர் தானுமிட்டார் (செல்லப்பேர்)

4. அரசாண்ட வெகுகாம் அப்போது தானே (அரசாண்டார்) (வெகுகாலம்)

5. அழகுபிச்சிக் கொழுந்தாலே யலங்கத்தான் பந்தலிலே (அலங்கரித்தான்)

6. சந்திரனோ எந்தனக்குத் தான் கொத்த பாக்கியமோ (கொடுத்த)

7. கோவில் விட்டே வீட்டி வந்தாள் கொம்பனையாள் தேவதாசி (வீட்டில்)

8. அஞ்சுநல்ல வயதுதனி அரங்கேத்திப் படிக்க வைத்தாள் (வயதுதனில்)

9. பறவைபோல் சுத்தியல்லோ பாய்ந்துநிற்பா மாதேவி (நிற்பாள்)

10. வேணதெல்லாம் தான்குடுத்தான் மிகக் கொடுத்தா திரவியத்தை (கொடுத்தான்)

11. அறுபதுமுழக் கமதை ஆகாசமாய்த் தான்நிறுத்தி (கம்பமதை)

12. தானதர்மம் பணியல்லோ தானிருந்தாள் மாதேவி (பண்ணியல்லோ)

13. காளியைப் போலக் கொரித்தாள் (கொக்கரித்தாள்)

14. வாரா பெண்ணாரும் (வாராளே)

15. ஆணகன் மேடையிலே (ஆணழகன்)

16. வெண்ணை நல்ல திட்டியல்லோ (திரட்டியல்லோ)

17. புகு மேலும் (புனுகு) கண்தில்லை (கண்டதில்லை)

19. அகுக்கழகனல்லோ (அழகுக்கழகல்லோ)

20. மீச்சிக்கே (மீனாச்சிக்கே)

21. கேட்டாடி (கேட்டாயடி)

22. சொக்கேளீரோ (சொல்லக் கேளீரோ)

23. ஆரைப்பழி கேட்டாடி (கேட்டாயடி)

24. வேங்கைத்தான் (வேங்கையைத்தான்)

25. தானடிதான் (தானடித்தான்)

26. சார்திலே (சார்வதிலே)

27. மியதொரு (மினியதொரு)

28. நினைக்கலுற்றா (நினைக்கலுற்றான்)

29. வைத்தே (வைத்தேன்)

30. கொடுபாவி (கொடும்பாவி)

31. பின்னும் வந்தா (பின்னும் வந்தாய்)

32. முத்ததே (முத்தத்தே)

33. சங்கர நயினார் கோவிலே (சங்கரநயினார் கோவிலிலே)

34. கொடுப்பாருமில்லை (கொடுப்பாராருமில்லை) என்றிவ்வாறு 34 இடங்களில் இச்சுவடியில் எழுத்து விடுகைகள் நேர்ந்துள்ளன. இவ்வாறான எழுத்து விடுகைகளால் நிகழ்ந்த பிழைகள் சரி செய்யப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

### எழுத்துமிகை

அதிகப்படியான எழுத்தாலும் பிழைகள் நேர்ந்துள்ளன.

**சான்று:-** 1. "கேவத (வேத) நல்ல சாஸ்திரங்கள் மிகப்படித்தாள் கன்னியுமே". 2. "களுழுவினுட (கழுவினுட) வலதுதுடை கட்டெறும்பு முட்டுடனே. என இரு இடங்களில் எழுத்துமிகைகள் அமைந்துள்ளன.

### தேவையற்ற எழுத்துகளை இடுதல்

சில சொற்களில் தேவையற்ற எழுத்துகள் இடப்பட்டுள்ளன. இவையும் நீக்கிப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

1. ஆட்டிவிய்க்கும் (ஆட்டுவிக்கும்)

2. கேள்கிறபோது (கேட்கிறபோது)

3. காண்ம்பதினி (காண்பதினி)

4. கேள்காள் (கேக்காள்)

5. வைய்த்தேன் (வைத்தேன்)

6. அன்ங்கையக்கண் மீனாட்சி (அங்கையக்கண்)

7. பெண்ங்கள் (பெண்கள்) என 7 இடங்களில் தேவையற்ற எழுத்துகள் அமைந்திருந்தன.

## இருமுறை எழுதியிருத்தல்

எழுதிய சொல்லே கவனக் குறைவாகத் தேவையில்லாமல் நாட்டுப்புற யாப்படிப்படையில் இருமுறை சில இடங்களில் வந்துள்ளது. இவையும் சரிசெய்யப்பட்டுப் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

1. முன்சாவடி பின்சாவடி பின்சாவடி
2. காவேரிப்பூம் பட்டணமும் பட்டணமுங்
3. என்று என்று சொன்னான்
4. நரியோரி காத்திருக்க நல்லநல்லதொரு கோவலர்க்கே

என்று 4 இடங்களில் வந்த சொல்லே திரும்ப வந்துள்ளது. கதைப்பாடலில் 18 வரிகள் திரும்ப வந்திருந்தன. அவையும் நீக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

## இசையோடு பாடியது போல் எழுதுதல்

இசையுடன் பாடியது போன்று இழுத்தமைந்த ஒலிக்குறிப்புப்பட எழுதியதால் கீழ்க்காணும் பிழைகள் நிகழ்ந்திருக்கலாம் என்று எண்ண இடமுள்ளது.

1. எண்ணமெல்லாங் மெண்ணிவிட்டான்
2. அழுதசத்தங் தான் கேட்டாள்
3. இருக்கமனம்ங் கூடலையே
4. சங்கரேசரையும்ங் தெண்டனிட்டாள்

எழுத்தில் வரும் பொழுது இத்தகு உச்சரிப்பு முறை பிழையானது என்பதால் இத்தகு பிழைகளும் களையப்பட்டுப் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

## முதலில் வரக் கூடாத எழுத்தை எழுதுதல்

தமிழில் தொடக்கத்தில் வரக்கூடாத எழுத்துகள் என்றுள்ளவை தொடக்கத்தில் வருமாறு அமைந்துள்ள

இடங்கள் சில இச்சுவடியில் காணப்படுகின்றன. அவையும் சரிசெய்யப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

1. "யேறிட்டுப் பார்த்தாளே யென்னசொன்னாள் மாதேவி"
2. "யிந்திரனைப் பொட்டகத்தில் யிருந்தடைத்து வைத்தாப்போல்"
3. "யிந்திரனைப் போலேயல்லோ யிருந்தாளே மாதேவி"
4. யென்று யென்று . . . . சொன்னான்
5. யிருந்தநாள் . . . . . .

என 5 இடங்களில் அமைந்திருந்தவை திருத்திப் பதிப்பிக்கப் பட்டுள்ளளன.

### கவனமின்மை

சில பிழைகள் கவனக்குறைவால் மட்டுமே நிகழ்வதுண்டு. அவற்றுக்குச் சான்றுகளாக, 1. கொடுப்பாரருமில்லை (கொடுப்பா ராருமில்லை)

1. ஆரை நினைதந்தாளே மளவத்த சிந்தையிலே (ஆரை நினைத்தாளே அளவத்த சிந்தையிலே)
2. ஆத்தினாள் மனதாக மன்புடனே கோவலனை (அன்புடனே)
3. போய்ப் பிழைப்பாய் தென்றிருந்தேன் (போய்ப் பிழைப்பாய் என்றிருந்தேன்)

என்பவற்றைக் கூறலாம்.

### மூலச்சுவடியின் எழுத்துத் தெளிவின்மை

எழுத்துத் தெளிவின்மை காரணமாகவும் சுவடியில் பிழைகள் நிகழ்ந்துள்ளன. தமிழ் எழுத்து வடிவ ஒற்றுமையும் இத்தகு பிழைகள் நிகழக் காரணம் எனலாம்.

தேவகன்னி லோலானாள் (போலானாள்)

மதுரையிமே பாண்டியனும் (மதுரையிலே)

கூத்துவனால் தானிருந்த கோவலவன் வணிகேசன் (கூத்துவனாய்)

ல-ப, ல-ம, ய்-ல் - என்ற எழுத்துகளின் வடிவ ஒற்றுமையால், எழுத்துத் தெளிவின்மையால் இப்பிழைகள் நேர்ந்துள்ளன. இவை சரிப்படுத்தப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சுவடியின் புற அமைப்பு, அக அமைப்பு எழுத்து வடிவம் புலனாகுமாறு ஓலையின் ஒருபக்கம் (76ஆம் ஓலை) கீழே தரப்பட்டுள்ளது.



### யாப்பமைதி

முழுக்கவும் நாட்டுப்புறப்பாடல் அமைப்பில் இக்கதைப்பாடல் பாடப்பட்டுள்ளது. பொதுவாக இவ்வாறான கதைப்பாடல்களின் இடையிடையே வரும் விருத்தப்பாடல்கள் போலும் இக்கதைப்பாடலில் காணப்படவில்லை. ஆனால் ஆங்காங்கே வசனஅமைப்புகள் விரவிக் காணப்படுகின்றன. மேடையில் நடிக்கப்பட்ட நாடக அமைப்பின் கூறு அல்லது எச்சம் இது எனக் கூறலாம். நாட்டுப்புற யாப்பில் பல்வேறு ஓசை நயங்களுடன் இக்கதைப்பாடல் பாடப்பட்டுள்ளது. ஓசை வேறுபாடு உணர்த்த 'வேறு' என்ற குறிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. எளிமையான சொற்களால், இனிய ஓசையுடன் படிப்பார், கேட்பார் மனத்தைப் பிணிக்கும் வண்ணம் யாப்பமைதி அமைந்துள்ளது. "நன்ன நன்னா நான நன்னா நானான நானான" என்று மெட்டமைதியுடன் கதைப்பாடல் வரிகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களும் உள்ளன (சான்று: 296). சுவடியில் சீர் பிரித்து எழுதப்படவில்லை. பதிப்பில் பாடல்கள் சீர்பிரித்து வரி எண்கள் தரப்பட்டுள்ளன, சிறுதலைப்புகள் கொடுத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 2655 வரிகள் கொண்டதாக இக்கதைப்பாடல் உள்ளது.

### பாத்திரப் பெயரமைதி

கண்ணகி கன்னகை என்றே இக்கதைப்பாடல் முழுக்கவும் சுட்டப்படுகிறாள். எனவே நூலாராய்ச்சியிலும் கதைப்பாடல் குறித்த விளக்கங்கள் அமையுமிடத்து, கன்னகை என்று குறிப்பிட்டே விளக்கங்கள் தரப்படுகின்றன.

முனைவர் சூ.நிர்மலாதேவி

# நூலாராய்ச்சி

**"அரைசியல் பிழைத்தோர்க் கறம்கூற் றாவதும்**
**உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்**
**ஊழ்வினை யுருத்துவந் தூட்டும் என்பதூஉம்"**

**(சிலம்பு)**

என்னும் கருத்துகளை மையமாக வைத்து இளங்கோவடி களால் இயற்றப்பட்டது சிலப்பதிகாரம். கி.பி. 2ஆம் நூற்றாண்டு இதன் காலம் என்பது பெரும்பாலான அறிஞர்கள் கருத்து. சிலப்பதிகாரக் காவியம் இயற்றப்படுவதற்கு முன்பு நாட்டார் மத்தியில் இக்கதை வழங்கி வந்தது என்ற ஒரு கருத்தும் உள்ளது. சிலப்பதிகாரம் தோன்றிய பின்னர்ச் சிலப்பதிகாரக் கதை நாட்டுப்புறப் பாடல் நடையில் பல வடிவங்களில் பாடப் பெற்றது என்ற கருத்தும் உள்ளது. நாட்டுப்புறப்பாடல் வடிவில் சிலப்பதிகாரக்கதை 18ஆம் நூற்றாண்டுக்குப்பின் பலவடிவங்களில் பாடப்பட்டுள்ளது. இவற்றில் குறிப்பிடத்தக்கவையாகக் கோவலன் கதை, கோவிலன் கதை, கோவலன் கர்ணகை கதை, வட்டப்பாறையில் வதைபட்ட கோவலன்-கன்னகி நாடகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் இதுவரை வெளிவராத 'கோவலன் கதை' என்ற நாட்டுப் புறக் கதைப்பாடல் சுவடி பதிப்பித்து வெளிக் கொணரப் பெறுகின்றது.

**கோவலன் கதைச்சுவடி**

"கோவலன் கதை" என்ற தலைப்பிட்டு, 6305 என்ற சுவடி எண்ணுடன் 91 இதழ்களுடன், கி.பி. 1873-இல் எழுதப்பட்டதாகக் குறிக்கப்பெற்றுள்ள இச்சுவடி திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் காணப்படுகின்றது. இச்சுவடியின் நிழற்படப் படி பெற்று இச்சுவடி பதிப்பிக்கப் பெறுகின்றது.

## கோவலன்கதை–கதைச்சுருக்கம்

அழகாபுரிப் பட்டணத்தை ஆண்ட சோழமன்னன் வேளையில்லா வேளையில் வெள்ளம் வரக் கண்டு காவிரி நதிக்குக் கரை கட்டினான். கரிகாற்சோழன் காலத்தில் காவிரி நதியுடைய காவிரிப்பூம் பட்டினம் செழிப்படையக் கல்லணை கட்டத் தீர்மானிக்கப்பட்டது. அணை கட்டும் போது ஊற்றுநீர் பெருக்கெடுக்க, சோழ மன்னன் மனைவி சுந்தரி என்பாளுடைய கற்பின் வலிமைக்குக் காவிரிப் பெண்ணாள் கட்டுப்பட அணைகட்டி முடிக்கப்பட்டது. இவ்வாறு அணைகட்டும் பணியைத் தன் சிரமேற் கொண்டு மாசாத்தான் முடித்து வைக்கிறான். மகிழ்ந்த மன்னன் தளகர்த்தனாக அவனை நியமித்து மகிழ்கிறான். மாசாத்தான் அரண்மனையில் திருட்டு நடக்கச் சூரன் என்பானை ஒற்றன் என்று சந்தேகித்து அவனைக் கொல்லக் காரணமாகின்றான் மாசாத்தான். இக்கொலைப் பழி தீர அன்னதானமும் அளிக்கிறான். இதன்பின் மாசாத்தான் மனைவி வண்ணமாலைக்கு ஆண்மகவு பிறக்கப் பாராட்டிச் சீராட்டி வளர்க்கின்றனர். சோழநாட்டில் இவ்வாறு நடக்கப் பாண்டி நாட்டில் கொடுங்கோலாட்சி நடக்கின்றது. எனவே மதுரையை அழிக்கக் காளி கன்னகையாக மன்னன் மனைவி கொப்புலிங்கி வயிற்றில் அவதாரமெடுக்கிறாள். குழந்தையால் மதுரை அழியும் என்று பெட்டிக்குள் வைத்து வைகையில் விடுகின்றான் பாண்டிய மன்னன். வணிகத்துக்கு வந்த மாசாத்தானும், வண்ணமாலைச் செட்டியும் பெட்டியைக் கண்டெடுக்கின்றனர். குழந்தையை வண்ணமாலைச் செட்டி பிள்ளையில்லா மனைவியிடம் தந்து அகமகிழ்ந்து வளர்க்கின்றனர். பருவம் அடையும் முன்பே கோவலன்–கன்னகை திருமணம் நடக்கின்றது. திருக்கடையூர் தேவரடியாளுக்கு மகாதேவன் அருளால் மாதேவி பிறக்கின்றாள். உரிய வயதில் கலைகளும், கழைக்கூத்தும் மாதேவி கற்கிறாள். பருவம் அடைய, குலத் தொழில் செய்யுமாறு தாய் வற்புறுத்த, உரிய காலமும், எனக்குரியவரும் வருவார் என மாதேவி கூறி மறுக்கிறாள். கன்னகை பருவமடைகிறாள்; சடங்கு செய்கின்றனர். காளி அம்சமாதலின் படுக்கப் பாய் போட்டறியாதவளாகக் கன்னகை இருக்கிறாள்.

மாதேவியின் கழைக்கூத்துப் பார்க்கக் கோவலன் வர, மாதேவி சுழற்றி வீசிய மாலை அவன் கழுத்தில் விழ, உடன் அவள் இருப்பிடம் சென்று தங்குகிறான் கோவலன். கைப்

பொருளையெல்லாம் அவளிடம் இழந்த பின் கோவலனைத் துரத்தத் திட்டமிடுகிறாள் தாய்க்கிழவி. வசிய மருந்து வைத்து மாதேவி கோவலனை வெறுத்தொதுக்குமாறு செய்கிறாள். துரத்தப்பட்ட கோவலன் ஆற்றங்கரையில் மாதேவியைக் கண்டு சேலை பற்றி இழுக்கிறான். மாதேவியும், தாதியரும் கோவலனை ஆற்றில் தள்ளிவிட, கரை சேர்ந்த கோவலனைக் கண்ட கன்னகையின் தோழியர் வீட்டுக்கழைத்து வருகின்றனர். கோவலனும் கன்னகையும் மாதேவிக்குத் தரவேண்டிய கடனுக்காகச் சிலம்பு விற்று வணிகம் செய்ய மதுரை வருகின்றனர். மதுரை வண்டியூரில் ஆய்ச்சி வீட்டில் கன்னகையை அடைக்கலமாய் வைத்த கோவலன், சிலம்பை விற்க மதுரை நகர் வருகிறான். அரசியின் சிலம்பைத் தன் குஞ்சினுடைய பழிக்காகக் கருடன் கவர்ந்து செல்ல, வன்னித்தட்டான் காணாமல் போன சிலம்புக்கு என்ன பதில் சொல்வதென்று சிந்தித்திருந்தான்.

பள்ளிக்கூட வாத்தியாரிடம் கோவலன் சிலம்பைக் காட்டியதைப் பார்த்த வன்னித் தட்டானின் மகன், செய்தியைத் தன் தந்தைக்கு உரைக்க, கோவலனைஅரசியின் சிலம்பு திருடிய கள்வனென்று பாண்டியன்முன் நிறுத்துகிறான் வன்னித்தட்டான். உறுதி செய்து கொள்ள அரசியிடம் கோவலனைப் பாண்டியன் அனுப்ப, அரசி கோவலனின் கைச் சிலம்பு தன் மகள் கன்னகையின் கால் சிலம்பு என்பதறிந்து கோவலனுக்கு உணவிட்டு, கைச் செலவுக்குப் பொருளும் தந்தனுப்புகிறாள். கண்ட வன்னித்தட்டான் கோவலனின் அழகில் அரசி மயங்கி விட்டதாகப் பாண்டியனிடம் பழி கூறுகிறான். இதன்பின் பாம்புச் சத்தியம், மழுச் சத்தியம், வேங்கைச் சத்தியம், ஆனைச் சத்தியம் என்று அனைத்துச் சத்தியமும் செய்து தான் குற்றமற்றவன் என்று கோவலன் நிரூபிக்கிறான். என்றாலும் வன்னித்தட்டானின் சூழ்ச்சியால் கோவலனை வெட்டிக்கொல்ல ஆணை பிறப்பிக்கிறான் அரசன். மழுவரசனின் மனைவியின் வேண்டுகோள், மழுவரசனின் இரக்கம், சொக்கர்-மீனாட்சியின் அறிவுரை அனைத்தையும் மீறிக் கோவலனின் கொலை நிகழ்ச்சி நடந்தேறி விடுகின்றது.

கோவலன்-கன்னகையின் மணவிழாவின் போது மங்கிலியச் செப்பில் வைத்த மல்லிகை மலர் வாடுகின்றது. கன்னகையும் தீக்கனவு காணுகின்றாள். மோர்விற்கச் சென்ற இடைச்சி கோவலனின் கொலைச் செய்தியை அறிகிறாள். வந்து கன்னகையிடம் கூறக் கன்னகை பழி கேட்கப் புறப்படுகிறாள்.

மதுரை மக்கள் சாட்சியமளிக்கின்றனர். சொக்கர்-மீனாட்சியிடம் முறையிட்டுக் கோவலனை உயிர்ப்பிக்கப் பொன்னூசி, பொற்சரடு, பொற்பிரம்பு பெறுகின்றாள். கோவலனின் வாய்வழி, நடந்தவற்றை அறிகிறாள். மாதேவிக்குச் செய்தியனுப்புகிறாள். மாதேவி கோவலனுடன் உடன்கட்டையேறுகிறாள். கன்னகை பாண்டியனிடம் உண்மையை நிலைநிறுத்தி, அவனைக் கொன்று, குடல் பிடுங்கி மாலையிடுகின்றாள். சிலம்பைச் சுழற்றி எறிந்தும், மார்பகத்தைத் திருகி எறிந்தும் மதுரையை எரியூட்டுகின்றாள். ஒருவன் பழிக்காக ஒன்பது பழிவாங்கி, மலையாளம் வந்து பகவதியாய் நிலை கொள்வதாகக் கதை முடிவடைகின்றது.

## சிலம்பினின்றும் மாறுபட்ட நிகழ்ச்சி அமைப்புகள்

'வழிவழிச் சிலம்பு' (டாக்டர் சரளா இராசகோபாலன்) என்ற நூலில் பதிப்பிக்கப்படுகின்ற கோவலன் கதைப்பாடற் சுவடி பற்றிய ஆய்வுக்குறிப்புகள் காணப்படுகின்றன (பக். 199-243). இதில் சிலப்பதிகாரக் கதையினின்றும் இக்கதைப்பாடற் கதையமைப்பு எத்தகைய வகைகளிலெல்லாம் மாறுபட்டு அமைந்துள்ளது என்று விவரிக்கப்பட்டுள்ளது (பக். 234-237).

அக்குறிப்புகளின் சுருக்கம் வருமாறு:

1. மாநாய்கனின் பெயர் வண்ணமாலைச் செட்டி
2. மாசாத்தான் காவிரி அணைகட்ட மன்னனுக்கே பெரும் பொருள் தரும் செல்வந்தன்.
3. கோவலன் மாதேவியின் வீட்டில் உள்ளபோது மாசாத்தானும் மனைவியும் இறத்தல்.
4. மாசாத்தானின் மனைவி வண்ணமாலை
5. மாசாத்தான் சூரன் என்பானைக் கள்வன் எனக் கொன்ற பாவம், மகன் கோவலன் தலையில் விடிகின்றது.
6. மாதேவி கழைக் கூத்தாடுதல்.
7. கோவலன் மாதேவியின் கூத்துப் பார்த்தல்.
8. மாதேவி கோவலன் தனக்குக் கொடுக்க வேண்டிய பொருட்களைப் பட்டியலிடுதல்.
9. கோவலனை மாதேவி ஆற்றில் பிடித்துத்தள்ளப் பிரிவு நேர்தல்.

10. கோவலனுடன் மாதேவி உடன்கட்டை ஏறுதல்.

11. சிலம்பை உடைக்கத் தீப்பொறி பறந்து மதுரை தீப்பற்றுதல்.

12. மாதேவியின் கடனை அடைக்கவே சிலம்பு விற்க மதுரை வருதல். புகாரில் சிலம்பை மதிப்பிட முடியாததால் மதுரை வந்தனர்.

13. பாண்டியர் கொடுங்கோலாட்சி நடத்துதல்.

என்னும் வேறுபாடுகள் "வழிவழிச்சிலம்பு" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுடன் கீழ்க்காணும் வேறுபாடுகளையும் இச்சுவடிக் கதைப்பாடலில் காணலாம். (தொடர்ச்சியான வரிசை எண்கள் தரப்பட்டுள்ளன)

14. கோவலனுக்கும் கன்னகைக்கும் குழந்தைமையிலேயே திருமணம் நடந்தது.

15. மாதேவி வீசிய மாலை கோவலன் கழுத்தில் விழுந்ததால் மாதேவி-கோவலன் உறவு ஏற்பட்டது.

16. கன்னகை காளியின் அவதாரம்.

17. சோழனின் தளகர்த்தனாக மாசாத்தான் இருந்தான்.

18. சூரன் கொலைக்கு மாசாத்தான் காரணமாகின்றான். மாசாத்தான் செய்தது மகன் கோவலன் கொலையாக முடிகின்றது.

19. கோவலன்-கன்னகை இல்லற இன்ப நுகர்வு இல்லை. கோவலன் மாதேவியிடம் சென்றதற்கு இதுவும் ஒரு காரணம் எனக் கருதக் கதைப்பாடல் இடம் தருகின்றது.

20. கன்னகைக்குத் தந்தையும், தாயும் பாண்டியனும், பாண்டியனின் மனைவி கொப்புலிங்கியும் ஆவர். கொப்புலிங்கி கன்னகை, கோவலனை மகள், மருமகன் என அடையாளம் கண்டறிந்ததாகவும் உள்ளது.

21. கோவலன் உயிர்த்தெழ மீனாட்சி உதவுதல். மீனாட்சி தந்த ஊசி, நூல் வைத்துத் தைக்கக் கோவலன் உயிர் பெற்றதாக உள்ளது. சிலம்பில் கண்ணகி கோவலனைத் தழுவிக் கொள்ள உயிர் பெற்றதாக அமைந்துள்ளது.

22. பாண்டியன் கன்னகையைத் தவறான உறவு கொண்டாடுதல். இது மதுரை எரிப்புக்கு முக்கியக் காரணமாதல்.

23. கன்னகை பகவதித் தெய்வமாக நிலை கொள்ளுதல்.

24. கோவலன் மாதேவி வீட்டில் உள்ளபோது, மாசாத்தானும் மனைவி வண்ணமாலையும் இறந்தனர்.

25. கோவலன் மாதேவிக்கு எப்படியெல்லாம் என்னவெல்லாம் வாங்கிக் கொடுத்துப் பொருள் இழந்தான் என்பது விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

26. சிலம்பில் பாண்டிமாதேவி கனவு காண்பது மழுவரசன் மனைவி கனவு கண்டதாக இக்கதைப்பாடலில் மாற்றம் பெற்றுள்ளது.

27. கன்னகையும் கனவு கண்டதாக நிகழ்ச்சி அமைக்கப் பட்டுள்ளது.

28. சிலம்பில் கண்ணகியை உடன் வர வேண்டும் என்று கூறிக் கோவலன் மதுரைக்கு அழைத்துச் சென்றதாக உள்ளது இக்கதைப்பாடலில் உடன் வரலாகாது என்று கோவலன் தடுத்தும், கன்னகை உடன் வருவேன் எனக் கூறிச் சென்றதாக மாற்றம் பெற்றுள்ளது.

29. கன்னகை மலைநாடு வந்த வழி வேறுபாடாக அமைந்துள்ளது.

30. சிலம்பில் உள்ள சமணப் பாத்திரத்துக்கு (கவுந்திஅடிகள்) சமணக் கருத்துக்கு மாற்றுப் போன்று சைவப் பாத்திரமாக, சைவ சமயக் கருத்துக்கு வலுச் சேர்க்கும் நிகழ்ச்சிகளாகச் சொக்கர்-மீனாட்சி பாத்திரப்படைப்பு அமைந்துள்ளது.

31. கோவலன் கொலைக்குச் சாட்சி வணிகர், மதுரை நகர மக்களே. சிலம்பிலோ காய்கதிர்ச் செல்வன்.

32. இயற்கையோடொட்டிய நிகழ்ச்சிகள் மிகுதி. சிலம்பில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் மிகுதி. **சான்று:**

1. மோகினி தோன்றுதல். 2. காய்கதிர்ச் செல்வனிடம் கேட்க, அவன் பதில் தருதல். 3. அக்கினிதேவன் தோன்றிப் பேசுதல் 4. மதுராபுரித் தெய்வம் பேசுதல் எனப் பட்டியல் நீளும்.

33. மதுரைக் கோட்டைக் கதவை வீழச் செய்து கன்னகை உட்புகுந்ததாகக் கதைப்பாடல் காட்டுகின்றது. சிலம்பில் இல்லை.

34. பாண்டியனைக் கொன்று குடலை மாலையாகப் போட்டுக் கொண்டதாகவும் கதைப்பாடல் கூறுகின்றது. சிலம்பில் இந்நிகழ்ச்சி இல்லை.

முக்கியமான இத்தகு வேறுபாடுகளுடன் உட்புகுந்து நோக்கின் பல சிறுசிறு வேறுபாடுகளையும் காணமுடியும்.

## கதைப்பாடல் காட்டும் முக்கிய நிகழ்ச்சிகள்

இக்கதைப்பாடலில் அமைந்துள்ள நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கீழ்க்கண்டவாறு கூறலாம். அடைப்புக்குள், செய்தி அமைந்துள்ள வரி எண்கள் தரப்படுகின்றன.

1. ஆனைமுகன், சத்தி கெவுமாரி, சரசுவதி வணக்கங்கள் முதற்கண் அமைந்துள்ளன (1-9).
2. காவிரி நதியை ஆழமாக வெட்டிக் கரை கட்டினார்கள் (15-18).
3. கரிகாற்சோழமன்னன் ஆட்சியில் காவிரியில் கல்லணை கட்டப்பட்டது. இதில் கோவலன் தந்தை மாசாத்தான் முக்கியப் பங்கு வகித்தான் (49-51).
4. அணைகட்ட நரபலி தந்தார்கள் (119).
5. கரிகாற்சோழனின் மனைவி பெயர் சுந்தரி (102,104,112,115,129).
6. சோழநாட்டின் தலைநகரம் அழகாபுரிப் பட்டணம் (19,108).
7. கற்புக்கரசிகளுக்கு இயற்கை கட்டுப்படும் (116,126,131).
8. மாசாத்தான் கரிகாற் சோழமன்னனின் மந்திரி, தளபதியானான் (141,142).
9. சோழமன்னனின் அடப்பக்காரன் சூரன் என்பானைக் கள்வனெனக்கருதி, மாசாத்தான் கொன்று பழி சேர்த்துக் கொண்டான்.
10. கோவலன் கல்வி, ஆயுத, மந்திரப் பயற்சி பெற்றான். பன்னிரு வயதில் இப்பயிற்சிகளை முடித்தான் (240-251).
11. கோவலன் காலத்தில் பாண்டிய நாட்டில் கொடுங்கோலாட்சி நடந்தது (255-285) "கொடும்பாவிப் பாண்டியன்" (1675) என்று கதைப்பாடல் ஆசிரியர் கூற்றாகவே அமைந்துள்ளது.
12. 'தீமையை அழிக்கத் தெய்வம் பிறப்பெடுக்கும்' என்றபடி காளியே கன்னகையாகப் பிறந்ததாகக் கூறப்பட்டுள்ளது (286-291).
13. மாதேவி பிறப்பு (295).

14. கன்னகை பிறப்பு (304).

15. கடல் வணிகம் சிறப்புற்றிருந்தது (345-349).

16. இதிகாசக் காலத்திலேயே (மகாபாரதம்) குழந்தையைப் பெட்டியில் வைத்து விடுதல் போன்று இக்கதைப் பாடலிலும் பிறந்த குழந்தை கன்னகையைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டனர் (322-366).

17. கன்னகை, மாதேவி என்ற பெயர்கள் காரணப் பெயர்கள். பக்:18.

18. பெண்களுக்குக் கல்விப் பயிற்சி கிடையாது (452-455).

19. மணவிழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தன (380-424) மந்திரம் ஓதி மணம் முடித்தனர் (405).

20. மாதேவி நாட்டியம், கழைக்கூத்து, டொம்பக் கூத்து ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவளாக இருந்தாள் (452-477).

21. குழந்தைத் திருமண முறை வழக்கிலிருந்தது. திருமணத்தின் பின்னரே கன்னகை பருவமெய்தினாள் (551-553).

22. தாய்க் கிழவியை மாதேவி வெளித்தள்ளியதால் மாதேவிக்குத் தாய்க்கிழவி இருமுறை வசிய மருந்து வைத்தாள். மாதேவி கோவலனை வெறுக்குமாறு செய்தாள். இவ்வாறு நிகழ்ச்சிகள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக உள்ளன. வசிய மருந்து தயாரித்த முறைகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன (704-733).

23. தொலைவுப் பயணத்தின் போதும் அணிகலன்கள் அணிந்து சென்றனர் (1046).

24. இக்கதைப்பாடலில் தட்டானின் அதிகாரமே பாண்டியனின் அதிகாரத்தை விடவும் கொடி கட்டிப் பறக்கிறது. வன்னித் தட்டான் பேச்சை இறுதிவரை தட்டாமலிருப்பவனாகப் பாண்டிய மன்னன் படைக்கப்பட்டுள்ளான். மன்னனையே அதிகாரம் செய்பவனாக (1565) வசைபாடுபவனாக (1665, 1824, 1825, 1841) வன்னித்தட்டானின் பாத்திரப் படைப்பு அமைந்துள்ளது.

25. சத்தியம் செய்து உண்மையை நிலைநிறுத்துதல் மன்னன் சபையில் வழக்காயிருந்தது. நேர்மையாய், உண்மையாய் நடப்பவரைப் பாம்பு, வேங்கை, யானை, ஆகியவை எதுவும்

செய்யாது என்ற நம்பிக்கை அடிப்படையில் இவ்வழக்கம் இருந்திருக்கிறது (1374-1630).

26. கோவலனின் அழகு 1636-1643, 1747-1750, 1791-1793 ஆம் வரிகளில் விவரிக்கப்பட்டுள்ளது. பாண்டி மாதேவியும் கோவலனின் அழகில் மயங்கி விட்டாள் எனவும், மயங்கிடுவாள் எனவும் கூறப்பட்டுள்ளது (1667).

27. கொலைப்படுமுன் கோவலன் சாட்சி வைத்துச் சென்றான். மனித சாட்சி, (1710, 1775-1779) தெய்வசாட்சிகளாக (1719-1734) இது இருந்தது. கோவலன் கொலைப்பட்ட பின்னர் கன்னகை இந்தச் சாட்சிகளைக் கேட்டு உண்மையை உணர்ந்து கொண்டதாகவும் வந்துள்ளது (2275-2284).

28. எவ்வெவற்றுக்கு அரச தண்டனை உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது (1722-1724).

29. கோவலனும் கன்னகையும் தங்களுக்கு நேர்ந்த பெருந்துன்பம் குறித்து மதுரைச் சொக்கர், மீனாட்சியிடம் முறையிடுவதாக உள்ளது. கோவலன் முறையீடு (1900-1905). கன்னகை முறையீடு (2289-2295). கன்னகை மதுரை நகருக்குள் நுழைய இயலாதபடி கோட்டைக் கதவு சாத்தியிருக்க, கன்னகை சிவனை நினைந்து வழிபடக் கதவு திறந்ததாக உள்ளது. இதே கன்னகை இறைவியையே ஏசி வாதிடல் என முரணாகவும் உள்ளது (2319-2325). "பிரமனுந்தான்சாகானோ அவன் பெண்டாட்டி தாலி அறாதோ" (2383) என்று கன்னகை தன் தலைவிதியை நிர்ணயித்த பிரமனையும் சபித்தாள்.

30. பத்தினியை நினைக்கத் தீமை அகன்று விடும் (2391), கற்புக்கரசியால் காப்பாற்ற முடியும் (2526-2527), கற்பினால் இயற்கை, இறைச் சக்தியை வெல்ல முடியும் (117-125) என்ற கருத்துகள் கதைப்பாடலில் ஆங்காங்கே வலியுறுத்திக் கூறும் நிகழ்ச்சிச் சித்திரங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

31. செய்தி அனுப்பும் போது ஓலையில் எழுதி அனுப்பினர். ஓலையில் உள்ளோலை, சுருட்டோலை என்ற வகைபாடுகள் இருந்தன (2407-2409).

32. கன்னகை, மாதேவிக்கிடையே சக்களத்திச் சண்டை நடந்தது. காட்டில் வசித்த முனி இருவரையும் சமாதானம் செய்து வைத்தார் (2440-2447).

33. கன்னகை பழிவாங்கப் புறப்பட்ட கோலம் விவரிக்கப் பட்டுள்ளது (2471-2475).

34 தீப்பற்றிய விதம் மிகப் பொருத்தமானதாக விவரிக்கப்பட்டுள்ளது (2561-2570).

35. கன்னகை பழி தீர்த்துக் கொண்டமை 2571-2584 ஆம் வரிகளில் மிக உக்கிரமாக விவரிக்கப்பட்டுள்ளது.

36. கன்னகையாய் அவதரித்த காளி இறுதியில் பகவதியாய் நிலை கொண்டாள் (2602-2605), (2642). மாகாளியின் சொரூபம் கன்னகை என்பது கதைப்பாடலில் ஆங்காங்கே தெளிவு படுத்தப்பட்டுள்ளது (2627, 2628, 2646).

## கதைப்பாடல் காட்டும் முக்கிய வரலாற்றுச் செய்திகள்

இக்கதைப்பாடலில் பல வரலாற்றுக் குறிப்புகள் ஆங்காங்கே பரவிக் கிடக்கின்றன.

### கரிகாலன் கட்டிய காவிரி அணை

கரிகாற் சோழமன்னன் காவிரியில் கல்லணை கட்டினான் என்பது வரலாற்றுச் செய்தி. இக்கதைப் பாடலில் கரிகால் சோழமன்னன் "கையார்ச் சோழமன்னன்" (49) என்று பேச்சு வழக்கில் குறிப்பிடப்படுகின்றான். காவிரியில் அணைகட்டியவன் இந்தக் கரிகால் சோழன் என்றும், இந்த அணை கட்ட ஆலோசனையும், பெரும் பொருளுதவியும் நல்கியவன் கோவலன் தந்தை மாசாத்தான் என்றும் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது (36-50)

### கரிகாலனின் மந்திரி, தளபதி–மாசாத்தான்

அணைகட்டித் தந்ததால் மன்னன் மகிழ்ச்சியடைந்து மாசாத்தானைத் தன் மதிமந்திரியாகவும் மற்றும் தளபதியாகவும் நியமித்தான் என்று கதைப்பாடல் கூறுகின்றது.

"வாசமுள்ள மாசாத்தான் **நம்மந்திரியாய்த்** தானிரென்றான்
தன்மையுள்ள மாசாத்தான் எமக்குத் **தளகர்த்தனா**
யிருமென்றான் **(141-142)**

என்றமைகிறது.

### கதைப்பாடற்காலம்

மாசாத்தான் காலத்தில் கரிகாலன் கல்லணை கட்டினான், கரிகாலனின் மந்திரியாகவும், தளகர்த்தனாகவும் மாசாத்தான்

இருந்தான். இந்த மாசாத்தானின் புதல்வனே கோவலன் என்ற போக்கில் கதைப்பாடல் அமைந்துள்ளதால் சிலப்பதிகாரக்கதை நடந்த காலத்தைக் கரிகாற் சோழமன்னன் காலமாகக் கதைப்பாடல் காட்டுகின்றது. "கண்ணகி வழக்குரை" (பதிப். வி.சி. கந்தையா பிள்ளை) என்ற ஈழத்து நூலிலும் கதை நடந்த காலமாகக் கரிகாற் பெருவளத்தானின் காலம் காட்டப்பட்டுள்ளது இவண் குறிக்கத்தக்கது.

"ஒருமுலை யிழந்த திருமாவுண்ணி" என்று நற்றிணையில் குறிப்பிடப்படுபவள் கண்ணகி என்பது அறிஞர்கள் கருத்தாக இருப்பதனாலும், சங்க இலக்கியக் காலம் தொட்டே கண்ணகி கதை மக்களிடையே வழங்கி வந்து, பின்னர் இளங்கோவடிகள் என்ற தக்க புலவரால் சிலப்பதிகாரம் என்ற தனிப் பெருங் காப்பியமாகப் படைக்கப்பட்டது என்பதும் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதினால் இக்கதைப் பாடல் காட்டும் காலம் கேள்விக் குறியாக நிற்கின்றது. சோணாட்டுக்குப் பெருமை சேர்ப்பது காவிரியாறு. காவிரியாற்றின் பெருமை கல்லணையில் நிற்கிறது. இத்தகு சோழநாட்டில் நடந்த கதையில் கல்லணை கட்டிய நிகழ்ச்சியும், அணையைக் கட்டிய கரிகால் மன்னனும் முக்கியத்துவம் உடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்ற அளவில் கதைப்பாடல் நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கூறலாம்.

### காவிரிப்பூம்பட்டின வளம்

''சோணாடு சோறுடைத்து'' என்பதற்கேற்பக் காவிரிப்பூம்பட்டினம் வளம்மிக்கதாக இருந்தது என்று இக்கதைப்பாடல் காட்டுகிறது.

**"கருந்தாழை பூச்சொரியும் காவேரிப்பூம் பட்டணமாம்**
**காசுகொண்டே மடையடைக்கும் காவேரிப்பூம் பட்டணமாம்"**

என்று இரு இடங்களில் இதே தொடர்களால் காவிரிப்பூம் பட்டினம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. (342-343, 1081-1082).

### வண்டியூர் வளம்

காவிரிப்பூம் பட்டினத்தை விடவும் மதுரை மாநகரம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளே கதைப்பாடலில் மிகுந்து காணப்படுகின்றன. "வாழைக்குலை சாய்ந்திடுமாம்-நானிருக்கும்-வண்டியூருப் பட்டணமாம்" (1058) என்று, மதுரை வண்டியூரின் வளம் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது. மதுரை நகர்க்

கோட்டைக்கு வெளியே அமைந்திருந்த வண்டியூர் தனி ஒரு ஊராக இருந்தது. கன்னகை-கோவலனுக்கு அடைக்கலம் அளித்த ஆய்ச்சி வண்டியூரில் தங்கியிருந்தாள் (1058). 'வாராளே கன்னகையாள் வண்டியூரு தான்கடந்தாள்' (2153) என்கிறது கதைப்பாடல்.

## மதுரை மாநகரம்

மதுரை என்ற ஊர்ப் பெயர் மதுரை, மதிரை என்று பல வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1899, 2156, 2215, 2223, 2238, 2240, 2295, 2380, 2477, 2480, 2610 ஆம் வரிகளைச் சான்று காட்டலாம்.

'மருதை' என 2509 ஆம் வரியில் குறிக்கப்பெற்றுள்ளது. இதே மதுரை நகர் தென்மதுரை என்றும் (2248, 2303, 2328) வடமதுரை என்றும் (2228, 2485) சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது.

நகரைச் சுற்றிக் கோட்டை அமைந்திருந்தது. தெக்குக் கோட்டை, வடக்குக் கோட்டை வாசல்களும் நாலுகோட்டை வாசல்களும் இக்கதைப் பாடலில் குறிப்பிடப்படுகின்றன.

தெக்குக் கோட்டை வாசல் 1866, 1922, 1923, 2296, 2611 ஆம் வரிகளிலும், தெக்குக்கோட்டை மடம் 2102 ஆம் வரியிலும் , வடக்கு கோட்டை வாசல் 2211, 2234, 2262, 2265 ஆம் வரிகளிலும்,

வடக்கு வாசல் 2217 ஆம் வரியிலும், நாலுகோட்டை வாசல் 2219, 2220, 2231 ஆம் வரிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## மாசித் தெரு

தெருக்களில் மாசித்தெரு இக்கதைப்பாடலில் குறிப்பிட்டுப் பல இடங்களில் பேசப்பட்டுள்ளது. 1611, 1633, 1634, 1686, 1739, 1740, 1758, 1762, 1776, 2476 ஆம் வரிகளில் மாசித் தெரு குறிக்கப்பட்டுள்ளது.

குறுக்குத்தெரு 1600 ஆம் வரியில் சுட்டப்பட்டுள்ளது.

## வைகைநதி–கிக்கிந்தாநதி

மதுரை நகரின் ஜீவ நதியாக, ஜீவநாடியாகத் திகழ்வது வைகை நதி. மழுவரசன் கோவலனை வெட்டக் கொண்டு சென்றபோது கோவலனுக்குத் தண்ணீர்த் தாகம் மீறுகிறது. கண்ட மீனாட்சி கோவலனின் தண்ணீர்த் தாகம் தீர்க்க வைகை நதியைத் திசை திருப்பி விட்டாள். அது கிக்கிந்தா நதி என்று பெயர் பெற்றது (1910-1926). வைகை நதியின் கிளைநதியான இது தற்போது எந்த நதி என்று விளங்கவில்லை.

நாகமலை

மதுரை நகரைச் சுற்றி யானைமலை, பசுமலை, நாகமலை போன்ற மலைகள் அமைந்துள்ளன. யானை, பசு, நாக வடிவில் யாகத்தினின்றும் தோன்றி மதுரை நகரை அழிக்க வந்த அசுரர்களை ஈசன் கொன்று நகரைக் காத்ததாகவும், அந்த அசுரர்கள் அன்னார் எடுத்து வந்த வடிவில் மலைகளாகச் சமைந்து விட்டனர் என்றும் புராணக் கதை புகல்கின்றது. யானை, பசு, நாக வடிவில் இம்மலைகள் காட்சி தருவதால் இப்பெயர்கள் இவற்றுக்குக் காரணப்பெயர்களாக அமைந்துள்ளன என்பது கண்கூடு.

இக்கதைப்பாடலில் 'நாகமலை' குறிப்பிடப்படுகின்றது (1249) வன்னித்தட்டான் காய வைத்த சிலம்பைத் தன் குஞ்சைக் கொன்றமைக்குப் பழிவாங்கக் கருடன் கவர்ந்து சென்றது. கருடன், தான் கவர்ந்த சிலம்பை நாகமலைச் சார்வதிலே நல்லதொரு புத்ததிலே தேவருக்குந் தெரியாமல் ஒளித்து வைத்தது என்ற குறிப்பைக் கதைப்பாடல் கொண்டுள்ளது.

கொம்பைக்காடு

கோவலன் ஒவ்வொரு சத்தியமும் செய்து, தான் குற்றமற்றவன் என்று நிரூபித்தபோது, வன்னித்தட்டான் கோவலனை மந்திர, தந்திரங்களில் வல்ல மாயக்காரன் என்றும், கொம்பைக்காட்டு மறவன், வேட்டைக்காட்டு மறவன் என்றும் ஏசிப் பேசுகின்றான். பிறரை ஏமாற்றுவதும், எத்திப் பிழைப்பதும் கொம்பைக் காட்டு மறவனுக்குக் கைவந்த கலை என்று தெரிகின்றது. கதைப்பாடலில் இரு இடங்களில் (1387-1388, 1570-1571)

"கொம்பைக்காட்டு மறவனய்யா கொல்லச்சொல்லும்
பாண்டியனே
வேட்டைக்காட்டு மறவனய்யா வெட்டச்சொல்லும்
பாண்டியனே"

என வந்துள்ளது.

வேங்கைச் சத்தியம் செய்யக் கொம்பைக் காட்டு மலைவேங்கையைக் கொண்டு வந்ததாகவும் கதைப்பாடல் கூறுகின்றது.

"குத்தமில்லை யென்றறிந்தே கொம்பைக்காட்டு மலைவேங்கை"
(1552)

என உள்ளது.

### அரசரடி

இன்றும் அரசரடி என்ற இடம் மதுரையில் உள்ளது. மதுரை நகரக் கோட்டைக்கதவை அடையும் முன் கன்னகை இந்த அரசரடி மரத்தடியில் வந்து நின்றதாக மூன்று இடங்களில் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது. அரசமரத்தடியில் நின்று அழுது கொண்டிருந்த கன்னகையைப் பார்ப்பான் ஒருவன் கண்டு அரசரிடம் அறிவிக்கிறான்.

"**ஆத்தங்கரை வீதிவிட்டு அரசமரத் தடியில் வந்தாள்**" *(2180)*

"**அரசடி மேட்டருகே யங்குநின்றே தானழுதாள்**" *(2197)*

"வைகைநதி **அரசடியில்** மங்கைநல்லாள் கன்னகையும்" *(2205)*

என அமைந்துள்ளது. சிலம்பு விற்க வந்த கோவலனும் மதுரை நகரில் அரசடியில் வந்து நின்றதை,

"**அரசடி மேட்டருகே** அங்கிருந்தான் கோவலவன்" *(1140)*

என்று கதைப்பாடல் தெரிவிக்கிறது.

ஆற்றங்கரையை ஒட்டி வீதியும் அரசமரத்தடியும் அமைந்திருந்தது என்பதும், அரசமரம் மேட்டுப் பகுதியில் இருந்தது என்பதும் கதைப்பாடல் காட்டும் குறிப்புகளாகும். அரசமரம் இருந்ததால் அரசடி என அழைக்கப்பட்டுத் தற்போதும் அரசரடி என்று இவ்விடம் வழங்கப்பட்டு வருதல் தெளிவாகின்றது.

### கல்தூண்

கல்தூண் என்ற இடம் இன்றும் மதுரையில் உள்ளது. இவ்விடத்தில் கோவலனை வன்னித்தட்டான் கட்டிவைத்தான் என்பதை,

"காப்பிட்டே தீபமிடுங் **கல்தூணின்** தன்னருகே
கருங்கல்லுத் **தூணோடே** கட்டலுற்றான் வன்னித்தட்டான்"
*(1313-1314)*

எனக் கதைப்பாடல் குறிப்பிடுகிறது.

### கன்னியாகுமரி

கன்னியாகுமரி இக்கதைப்பாடலில் "கன்னிமார் குமரி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சொக்கர் கன்னகையிடம்,

**"கன்னிமார் குமரிமுதல் கையெடுப்பா ருன்னையுந்தான்"**
**(2604)**

எனக் கூறியதாக உள்ளது. சிவனை மணம்புரிய உமையாள் கன்னியாகத் தவம் செய்ததால் அவ்விடம் கன்னியாகுமரி என ஆனதாகப் புராண வரலாறு உள்ளது. இப்பெயரின் மற்றொரு வடிவமாகக் கன்னிமார் குமரி என்பது இருந்திருக்கிறது என்பது தெளிவாகின்றது.

"முத்தாரம்மன் கதை" (பதிப்பு. சூ. நிர்மலாதேவி, உ.த.நி. வெளியீடு, 1993) என்ற நாட்டார் கதைப் பாடலிலும் கன்னிமா குமரி (வரி:1543) எனக் குறிக்கப்படுவது நோக்கத்தக்கது.

## கன்னகை கடந்த வழி – ஊர்ப் பெயர்கள்

கன்னகை மதுரையிலிருந்து மலையாளம் சென்று பகவதியாக நிலை கொள்கின்றாள். அவள் கடந்து வந்த ஊர்ப்பெயர்கள், இடப்பெயர்கள் கதைப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மதுரையின் தெக்குக் கோட்டை வாசல் வழி புறப்பட்டு, சிக்கந்தர்மலை, சாத்தூர், சங்கர நயினார் கோவில், குத்தாலம், ஆரியங்காவு, பாலக்காடு வழி மலையாள தேசம் வந்தாள் என்று கன்னகை வந்த வழி இக்கதைப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சிக்கந்தர் மலை

சிக்கந்தர்மலை, சிக்காந்தார் மலை, சிக்கிந்தர் மலை, சிக்கந்த மலை, சிக்கெந்தர் மலை, சிக்கந்தான் மலை, சிக்காந்தர் மலை என்று ஏழுவகையான உச்சரிப்புகளில் சிக்கந்தர் மலை என்ற ஒரு மலையும் அதைச் சுற்றியிருந்த காடும் கதைப்பாடலில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மலை குறிப்பிடப்பட்டுள்ள பாடல் வரிகள் கீழே தரப்படுகின்றன.

1. **"சிக்கந்தர் மலைச்சார்வில் கொக்கிருந்தான் பாளையமாம்"** **(1679)**
2. **"சிக்கந்தர் மலைபார்த்தே தெக்குக்கோட்டை வழிநடந்தான்"** **(1869)**
3. **"சிக்கந்தர்மலைக் காட்டுடே செட்டிமகன் தான்பார்த்தான்"** **(1882)**
4. **"தெக்கே முகம்பார்த்தாள் சிக்காந்தர் மலைபாத்தாள்"** **(1916)**

5. **"தெக்குக்கோட்டை வாசல்விட்டே சிக்கிந்தர் மலைகடந்தாள்"** *(2611)*

6. **"சிக்கந்த மலைக்காட்டில் கொக்கிருந்தான் பாளையமாம்"** *(2092)*

7. **"தெக்குக்கோட்டை வாசல்வந்தாள் சிக்கந்தர் மலைபார்த்தாள்** *(2114)*

8. **"தெக்குக்கோட்டை வாசல்வந்தாள் சிக்கெந்தர் மலை பார்த்தாள்** *(2348)*

9. **"சிக்கந்தர் மலைக்காடு தேடியல்லோ தான்போனாள்** *(2116)*

10. **"சிக்கந்தான் மலைங்காட்டில் செட்டியைத்தான் வெட்டச் சொன்னான்** *(2130)*

11. **"சிக்கந்தர் மலைக்காட்டில் செட்டியைத்தான் வெட்டி விட்டான்"** *(2281)*

12. **"திருடிவந்த கள்ளனைத்தான் சிக்கிந்தர் மலைக்காட்டில் வெட்டச்சொன்னான் செட்டியைத்தான் வீரமுள்ள மழுவாலே"** *(2523-2524)*

என அமைந்துள்ளன. இப்பாடல் வரிகளிலிருந்து,

1. சிக்கந்தர் மலை தெக்குக் கோட்டை வாசல் வழியாக வந்தால் அடையக் கூடியதாக இருந்தது.
2. சிக்கந்தர் மலைச்சார்பில் கொக்கிருந்தான் பாளையம் என்ற இடம் இருந்தது.
3. சிக்கந்தர் மலை காடடர்ந்த இடமாக இருந்தது.
4. சிக்கந்தர் மலைக் காட்டில்தான் செட்டிமகன் கோவலன் வெட்டப்பட்டான்.
5. மதுரைக்குத் தெற்கே இம்மலையும், காட்டுப் பகுதியும் அமைந்திருந்தன என்ற செய்திகள் புலனாகின்றன. இன்று இந்த இடம் இரயில்வே தண்டவாளம் இறங்கு முகத்தில் "கோவலன் பொட்டல்" என்ற இடமாகக் காணப்படுகின்றது.

## கிக்கிந்தா நதி

வெட்டக் கொண்டு செல்லும் போது கோவலனுக்குத் தண்ணீர்த் தகை மிக, மீனாட்சி வைகைநதியைக் கீறிவிட, அது கிக்கிந்தா நதியானது. சிக்கந்தர் மலைப்பகுதியில் இது இருந்தது.

"கிறிவிட்டாள் மீனாட்சி கிக்கிந்தா நதியாச்சே
கிக்கிந்தா நதிதனிலே கிட்டியங்கே தானஞ்செய்தார்"
(1926-1927)

எனப் பாடல் வரிகள் அமைந்துள்ளன. தற்போது இத்தகு நதி எதுவும் இப்பகுதியில் இல்லை. இது கதையில் காட்டப்பட்ட கற்பனை நதியா என்பதும் சிந்திக்கத்தக்கது.

## இயற்கை இகந்த நிகழ்ச்சிகள்

இயற்கையில் நடக்க இயலாத நிகழ்ச்சிகளை, நடந்ததாகப் படைத்துக் காட்டுவது இயற்கை இகந்த நிகழ்ச்சிகளுள் அடக்கப்படும். இனிமை சேர்க்கும் ஓர் அங்கமாகவே இத்தகு நிகழ்ச்சிகள் பல்வேறு இலக்கிய வகைகளிலும் படைக்கப் பட்டுள்ளன. காவியங்களில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் இடம் பெறுதல் எனபது காப்பிய இலக்கணமாகவே திகழ்கின்றது. கோவலன்-கன்னகை கதையமைப்புக்குத் தக இக்கதைப் பாடலிலும் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் சில இடம் பெற்றுள்ளன . அவற்றைக் கீழே காணலாம்.

1. மகாதேவராகிய சிவபிரானின் அருளால் பிறந்த மகாதேவியாகிய மாதேவி, பிறந்த பொழுதே கழுத்தில் பொன்மாலை சுற்றியிருக்கப் பிறந்தாள். ஆனால் இந்தப் பொன்மாலை பெற்றவர், வளர்த்தவர்களுடன் பிறர் எவர் கண்ணுக்கும் தெரியாது என்று கதைப்பாடல் விளக்குகின்றது (442-447). இயற்கையில் நடக்க இயலாத இந்த நிகழ்ச்சி கதைச் சுவைக்காக இணைக்கப்பட்டுள்ளது.

2. மாதேவி கழைக்கூத்தாடிய பின் இந்தப் பொன்மாலையைச் சுழற்றி வீசி விடுகிறாள். தனக்குரிய மணவாளனை இம்முறையில் மாதேவி தேர்ந்தெடுக்க முனைகிறாள். சுழற்றிவிட்ட மாலை தங்கள் கழுத்தில் விழாதோ என்று சேரன், சோழன், பாண்டியன், மந்திரிமார், காரியக்காரர் மற்றும் காவிரிப் பூம்பட்டினத்திலுள்ள மக்கள் ஆகிய அனைவரும் ஏங்கி இருந்த பொழுது, யார் கழுத்தில் விழலாம் என்று சுற்றிப்பார்த்துக் கோவலன் கழுத்தில் விழுந்தது மாலை. சுற்றிப் பார்த்ததாகக் கதைப்பாடல் கூறுவது (596) இயற்கை இகந்த நிகழ்ச்சி ஆகும்.

3. சொக்கர்-மீனாட்சி பாத்திரப்படைப்புகள் (1141-1148, 2316-2343) இயற்கை இகந்த நிகழ்ச்சியாக இக்கதைப் பாடலில் அமைந்துள்ளன. இவர்கள் தங்களுக்குள் உரையாடுகின்றனர்;

கோவலன்-கன்னகையுடனும் உரையாடுகின்றனர்; சாதாரண மனிதர்களாக ஆண்டியாகக் குறத்தியாக வேடமிட்டு வருகின்றனர். அதே போது தெய்வநிலையில் நின்று தெய்வசக்தியோடு தாகம் தீர்க்க நதியை உருவாக்குதல், உயிரோடு எழுப்பப் பொன்னூசி, பொற்சரடு தரவும் செய்கின்றனர். இத்தகு இயற்கை இகந்த நிகழ்ச்சிகளாக, அதீத, அற்புத நிகழ்ச்சிகளாகச் சொக்கர்-மீனாட்சி பாத்திரப்படைப்புகள் இக்கதைப்பாடலில் படைக்கப் பட்டுள்ளன.

4. கோவலன் கன்னகையின் கால்சிலம்பைப் பாண்டிமாதேவி கொப்புலிங்கியின் கையில் கொடுத்தவுடன், தன் மகள் சிலம்பு என்று அவள் அறிந்து கொண்டமை (1322-1329)

5. சிவனை நினைந்து கன்னகை தேவ கன்னியாதல் (2175-2176)

6. கருடன் தான் சிலம்பு கவர்ந்து சென்று ஒளித்து வைத்துள்ள காரணமும், விவரமும் கூறுதல் போன்ற கருடன்-கன்னகை உரையாடல்கள் (2181-2195)

7. கோவலனை உயிர்ப்பிக்க மீனாட்சி பொன்னூசி, பொற்சரடு தருதல் (2337-2338)

8. பொன்னூசி, பொற்சரடு மூலம் கன்னகை தன் கணவன் கோவலனை உயிரோடு எழுப்புதல், பலியான கோவலன் பேசுதல் (2368-2373)

9. நூல் உருவக் கோவலன் உயிர்பிரிதல் (2401-2406)

என்பன இக்கதைப்பாடலில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன.

## பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள்

இக்கதைப்பாடல் மூலம் மக்களிடையே இருந்த பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் எவ்வெவை என்பது புலனாகின்றது. அவையாவன :

1. மாசாத்தான் சூரன் என்பானைக் கள்வன் எனக்கருதிக் கொன்று விடுகிறான். இதனால் வீண் பழிபாவத்துக்கு ஆளாகின்றான். இப்பாவம் தொலைக்க என்ன செய்ய வேண்டும் என்று வேதியர்களைக் கலந்தாலோசிக்கிறான். வேதியப்பார்ப்பார், 'ஆயிரம் பார்ப்பாருக்கு அன்னமிடப்

பாவம் தொலையும்' என்று ஆலோசனை கூற, மாசாத்தானும் அன்னதானத்துடன் வஸ்திர தானமும், சொர்ண தானமும் செய்ததாகக் கதைப்பாடல் விளக்குகின்றது. (220-225) செய்த பாவம் பார்ப்பாருக்குத் தானமிடப் போகும் என்ற நம்பிக்கையடிப்படையில் இவ்வழக்கம் மக்களிடையே பரவியிருந்தது என்பது தெரிகின்றது.

2. வாழ்க்கையில் நல்ல நிகழ்ச்சி ஏதாவது நடக்கும் பொழுதும் வேதியர்க்குத் தானம் செய்கின்றனர். மாசாத்தானின் மனையாட்டி வண்ணமாலை நிறை கர்ப்பமடைந்து குழந்தைப் பேறடைகின்றாள். மகிழ்ந்த மாசாத்தான், வேதியர்களுக்கு மிகுந்த திரவியத்தை வாரிக் கொடுக்கிறான். அரதேசி, பரதேசிகளுக்கு அன்ன, சொர்ணத்தைத் தானமாகக் கொடுக்கிறான் (231-233).

3. குழந்தை பிறந்தவுடன் நேரம் கணிக்கும் வழக்கமிருந்தது. மாசாத்தானுக்குக் கோவலன் பிறந்தவுடன் நேரம் கணிக்கப்படுகிறது.

**"நலம்பார்த்தான் மாசாத்தான் லக்கனமே தான்பார்த்தான்**
**(234)**

எனக் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது.

பாண்டிமாதேவி கொப்புலிங்கி வயிற்றில், காளி கன்னகையாக அவதரிக்கிறாள். குழந்தை பிறந்தவுடன் வேதியர்களைப் பாண்டிய மன்னன் அழைத்து நேரம் கணிக்கிறான். வேதியர்கள்,

**"நாளுமொரு நச்சத்திரமும் லக்கனமும் பாத்தல்லவோ**
**அறிக்கையிட்டார் பாண்டியர்க்கே ஆனதொரு வேதியர்கள்**
**மங்கையரைப் பெத்தெடுத்த மாதாவுக்கே ஆகாதென்றார்**
**பெத்தெடுக்கும் ராசாவே தங்களுக்கு மாகாதென்றார்**
**உத்தார் உறைமுறைக்கு மொருத்தருக்கு மாகாதென்றார்"**
**(311-315)**

மேலும், இக்குழந்தை மூன்றே முக்கால் நாழிகை உயிரோடு இருந்தால் நாடே ரணகளமாகும் என்றும், மதுரைப் பட்டணமும் சுட்டுக் கெட்டு வெட்டையாகப் போகும் என்றும் தெய்வப் பிராமணர்கள் சொல்கிறார்கள். உடன் மந்திராலோசனை நடக்கிறது. பஞ்சாங்கம் பொய்க்காது பலிக்கும் என்று மந்திரிமார்கள் எடுத்துச் சொல்கிறார்கள். குழந்தை பெட்டியில் வைக்கப்பட்டு வைகையில் விடப்படுகிறது.

அந்தணர்கள் சொன்ன சோதிடக் கணிப்புக்கு மக்களிலிருந்து மன்னர் வரை பெருமதிப்பு இருந்தது தெளிவாகின்றது.

4. அரசுத் தொடர்புடையவர்கள் தம் வீட்டு முக்கிய நிகழ்ச்சிகளை அரசருக்கு அறிவித்தல் உண்டு

**"கன்னகைக்குங் கோவலர்க்குங் கலியாணஞ் செய்யவென்றே**
**நாள்செய்தே முகிழ்த்தமிட்டு நல்லதொரு கோவலர்க்கு**
**சோழராசா சமுகத்திலே சொல்லலுற்றான் மாசாத்தான்"**
***(384-386)***

என்று கதைப்பாடல் குறிப்பிடுகின்றது.

5. பெண்கள் பூப்பெய்தியபோது செய்த சடங்குகள் பல இக்கதைப் பாடலில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. பன்னிரு வயதில் மாதேவி பக்குவமடைகிறாள். நாள் முகூர்த்தம், லக்கனம் பார்த்துப் பந்தலிட்டுச் சடங்கு செய்யத் தொடங்குகின்றனர். வேதியர்கள் ஓமம் செய்து மந்திரம் ஓதுகின்றனர். சடங்கு செய்து மாதேவிக்குத் தலைக்குத் தண்ணீர் வார்க்கின்றனர். மகாதேவர் சன்னதியில் மாவிளக்கு வைத்துப் பார்க்கின்றனர். வேதியர்களுக்குத் தானம் தருகின்றனர். அண்ணாவி நட்டுவனார்க்கு ஆடையாபரணம் அளிக்கின்றனர். பிற தான தர்மங்களும் தரப்படுகின்றன. பூப்புச் சடங்கன்று செய்த செயல்களாக, சடங்கு முறைகளாக மேற்கண்டவை கதைப்பாடலில் விளக்கப்பட்டுள்ளன (478-488).

6. தாசியர் வளமை என்ன என்பது கதைப் பாடலில் 492-510 ஆம் வரிகளில் விவரிக்கப்பட்டுள்ளது. மாதேவி பூப்பெய்தியவுடன் அவளுக்கு ஏற்ற மணவாளனைத் தேர்ந்தெடுத்துப் பொருள் ஈட்டுமாறு தாய்க்கிழவி வற்புறுத்துகின்றாள். மாதேவிக்குக் கலைகள் கற்றுக் கொடுத்துப் பொருள் அனைத்தையும் இழந்து விட்டதாகவும், தான் முதுமை அடைந்து விட்டதால் தன்னைத்தேடி எந்தக் கணவன்மார்களும் வருவதுமில்லை எனவும் புலம்புகிறாள்[1].

---

1. "வித்தைநல்ல படிக்கவல்லோ வீட்டிலுள்ள உடமைவித்தேன்.
நாட்டியங்கள் படிக்கவல்லோ நகையளெல்லாம் வித்துவிட்டேன்
-என்
கணவன்மார் வரவுமில்லை-என்-கையிலொரு காசுமில்லை"
(494-496)

அதற்கு மாதேவி தனக்கேற்ற அழகுள்ள மன்னவன் வரும்போது அவனிடமிருந்து செல்வம்பெற்றுத் தருவதாகச் சமாதானம் சொல்கிறாள்[2]. (492-510) இவற்றின்மூலம் தாசியர் வளமை இன்னதென்பது தெற்றெனப் புலனாகின்றது.

7. இசைக்கருவிகள் முழங்கப் பந்தக்கால் நாட்டிக் காப்புக் கட்டி வேதியர் முன்னிலையில் ஓமகுண்டம் வளர்த்து மந்திரம் ஓதித் திருமணங்கள் நடக்கின்றன. கோவலன்-கன்னகை திருமணம் இவ்வாறே நடக்கின்றது.. திருமாங்கல்யம் கட்டியதும், மங்கலியச் செப்பில் மல்லிகைப்பூவை வைத்து வேதியர்கள் தருவது வழக்கமாயிருந்திருக்கலாம். வேதியர்கள் கன்னகை கையில் மல்லிகை மலர் நிறைத்த மங்கிலியச் செப்பைத் தருகிறார்கள். மல்லிகை மலர் வாடினால் மன்னவன் கோவலர்க்குத் தீங்கு வரும் அறிகுறி அது என்றும் கூறித் தருவதாகக் கதைப்பாடல் விளக்குகின்றது (390-425).

8. மாதேவி தன் கழுத்தில் கிடந்த பொன்மாலையைச் சுழற்றி வீச, அது கோவலன் கழுத்தில் விழ, அவனைத் தனக்குரியவனாகத் தேர்ந்தெடுத்ததாகக் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது (593-597) தாசியர் தமக்குரியவனைத் தேர்ந்தெடுக்கும் ஒரு வழக்க முறையாகவும் இது இருந்திருக்கலாம்.

9. பொடி அரிசி சமைத்துப் பரிமாறுவதை உயர்வானதாகக் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது. மதுரை மாநகருக்குக் கோவலன்-கன்னகை புறப்படும் முதல் நாள் கன்னகை தன் கணவனுக்குப் பொடி அரிசிச் சாதம் படைத்ததாகவும் (999-1000), மதுரையில் சிலம்பு விற்கப் போன போது, பள்ளிக்கூடத்து வாத்தியார் மனையில் வாத்தியார், கோவலனுக்கு பொடி அரிசிச்சாதம் சமைத்துப் படைக்குமாறு தன் மனைவியிடம் கூறுவதாகவும் கதைப்பாடல் கூறுகின்றது (1189). ஏலச்சம்பா அரிசி பொடி அரிசி வகை என்பதால் இவ்வகை அரிசியாக இது இருக்கக்

2. "அழகுள்ள மன்னவர்கள் ஆருமில்லை வையகத்தில்
எனக்கேத்த கணவரிடம் இருந்தல்லவோ உன்தனக்கே
வேணதெல்லாம் வரவழைத்து மிகத்தாரேன் திரவியத்தை
வீடெல்லாம் திரவியத்தை விரைத்து வைக்கேன் தாயாரே" (505-508)

கூடும். மாதேவி கோவலனுக்கு ஏலச்சம்பா அரிசியில் சாதம் படைத்ததாகக் குறிப்பு உள்ளதும் கவனிக்கத்தக்கது[3].

10. தீயசகுனங்கள் இன்னவை என்ற நம்பிக்கை மக்கள் மனத்தில் வேரூன்றியிருந்தது என்பதற்குச் சான்றாக, கோவலன் சிலம்பு விற்கப் புறப்பட்ட பொழுது ஏற்பட்ட தீச்சகுனங்களைக் காட்டலாம். கத்துங் காகம் இடம் பாய்தல், கரும் பூனை குறுக்காக ஓடுதல், ஒற்றைப் பார்ப்பான் எதிர் வருதல், நாகப்பாம்பு குறுக்கே படுத்திருத்தல் (1129-1136) ஆகியன தீய சகுனங்களாகக் கருதப்பட்டன. சகுனத்தடையை மீறிச் சென்ற கோவலன் கொலையுண்ணப்படுகின்றான் என்று கதையின் போக்கு அமைவதால் தீமை நடக்க இருப்பதை உணர்த்தும் அறிகுறிகளாக முன்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

11. ஆண்களிடையே முடி வளர்த்துக் கொண்டையிடும் பழக்கம் இருந்ததைக் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது. பொற் சிலம்பைக் கன்னமிட்ட கள்வனென்று கோவலனை வன்னித்தட்டான் கயிறு கொண்டு கட்டித் தெருவழியே இழுத்துச் செல்லும் போது கொண்டை பிடித்திழுத்ததாகக் குறிப்புக் காணப்படுகின்றது (1376).

12. தான் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப் பல்வேறு வகையான சத்தியங்கள் செய்தல் நாட்டில் நடைமுறையிலிருந்தது. கோவலன் பாம்புக்குடத்தில் கைவிடுகிறான். அவன் குற்றமற்றவன் என்பதால் பாம்பு கடிக்கவில்லை. மதயானை, மலைவேங்கையை ஏவும் போது, அவையும் அவனைக் கொல்லவில்லை. பழுக்கக் காய்ச்சிய மழுவைக் கைப்பிடித்தும் ஒன்றும் ஆகவில்லை. இவற்றின் மூலம் அவன் சிலம்பு திருடிய கள்வன் இல்லை என்று நிரூபணம் ஆனதாகக் கதைப்பாடல் விவரிக்கின்றது (1375-1623)

13. தவறான வழியில் தம் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பல்வேறு வழிகளில் கையூட்டு அளிக்கும் சமுதாயச் சீர்கேட்டையும் தீயபழக்கத்தையும் கதைப்பாடல் வெளிப்படுத்துகின்றது. கைவிட்டால் எடுக்க இயலாத

---

3. "ஏலச்சம்பா அரிசிகொண்டே எடுத்துமங்கே சமைக்கலுற்றாள்" (616)

"ஏலச்சம்பா அரிசிகொண்டு எடுத்தங்கே சமைக்கலுற்றாள் (657)

*பாம்புக்குடம், மதமூட்டப்பட்ட யானை, பட்டினி போடப்பட்ட மலைவேங்கை, கொதிக்கக் காய்ச்சிய பாரமழு தந்தவர்களுக்கு இன்னின்ன தருவேன் என்று வன்னித்தட்டான் கூறுவது தக்க சான்றாகின்றது. மேற்குறிப்பிட்டவற்றைத் தருகின்றவர்களுக்கும், அவர்களின் மனைவி, பிள்ளைகளுக்குமுரிய பொருள்களைத் தருவதாக வன்னித்தட்டான் உறுதி கூறுகிறான் (1404-1410)[4], 1478-1480, 1523-1525, 1589-1590).*

14. *கொலைத் தண்டனை பெற்ற குற்றவாளியை வெட்டக் கொண்டு செல்லும் முன்பு வெட்டப்போகும் செய்தியை நகரில் தமுக்கடித்து அறிவித்தல் வழக்கமாயிருந்தது. கோவலனை வெட்டக் கொண்டு செல்லும் முன்பு கயிறு கொண்டு கட்டித் தெருக்கள் வழியே நடத்தி வந்து வெட்டப்போகும் செய்தியைத் தமுக்கடித்து அறிவித்தமை இவ்வழக்கத்தை உறுதிப்படுத்துகின்றது (1691-1695)[5].*

15. *வெட்டிவிட்ட பிறகும் கொலைத் தண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தியை நகரில் தமுக்கடித்து அறிவித்துள்ளனர். “வெட்டுப்பட்டான் செட்டியென்றே மதுரை வீதியிலே பேசாமல் தமுக்கடிக்கச் சொல்லுமிப்போ தென்மதுரை வீதியெல்லாம்” என்று வன்னித்தட்டான் கூற, பாண்டிய மன்னனும் தமுக்கடிக்க விடை கொடுத்த செய்தியைக் கதைப்பாடல் இயம்புகின்றது (2030-2033).*

16. *உரியவன் இறந்தவுடன் உடன்கட்டையேறும் பழக்கம் இருந்தது. கோவலன் இறந்ததும் கோவலன் பழிக்காக மதுரைப் பாண்டியனைப் பழிவாங்குவாயாக என்று*

---

4. *“தலைக்குநல்ல மகுடந்தாரேன் சந்திரகாவிச் சேலைதாரேன்*
*பெண்டாட்டி கொண்டைக்கல்லோ குப்பித்தொங்கல்*
*தாரேனென்றான்.*
*பெத்தநல்ல மகனார்க்கே- கொத்து-முத்துவடம் போடுகிறேன்*
*அத்தரொக்க மொருமுடிப்பா யாயிரம்பொன் தாரேனென்றான்”*

5. *கம்பிளிக் கயறு கொண்டே கட்டலுற்றார் கோவலனை*
*களவாண்ட கள்ளனைப்போல் கயறுகொண்டு கட்டலுற்றார்*
*தமுக்கடிக்கச் சொல்லியல்லோ தள்ளிவந்தார் கோவலனை*
*வெட்டச்சொன்ன சொல்கேட்டான் விறல்வணிகன் கோவலவன்*
*அடித்து விழுந்தானே-கோவலவன்-அநியாய மென்றழுதான்.*

கன்னகையிடம் கூறிய மாதேவி, கோவலன் சிதையில் ஏறி விழுந்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டதைக் கதைப்பாடலின் 2451-2464 ஆம் வரிகள் தெளிவு படுத்துகின்றன. சமுதாயத்திலிருந்த உடன்கட்டையேறும் வழக்கத்தைக் கதைப்பாடல் இவ்வாறு பிரதிபலிக்கிறது எனலாம்.

17. கோவலன், மாதேவி எரியூட்டப்பட்டபின் கன்னகை, அக்கினி சுற்றி, அங்கமெல்லாம் கூட்டி, முந்தியை விரித்துச் சிந்தாமல் வாரி, மலங்காட்டு வழியாக மதுரைவந்து வைகை நதியில் வாரி வந்த அங்கமெல்லாம் போட்டுக் கரைக்கிறாள் (2465-2469). இது 'அங்கங் கரைத்தல்' என்ற வழக்கத்தின் அடிப்படையில் அமைந்த நிகழ்ச்சியாகும்.

18. கன்னகை தன் கணவன் ஒருவன் பழிக்காக ஒன்பது பழிவாங்கப் புறப்பட்டு வருகின்றாள். பாண்டியன் முன் கருடன் கவர்ந்து சென்ற சிலம்பைப் போட்டுப் பழிகேட்கிறாள். பழிகேட்கிறாள் கன்னகையென்று தன் பத்தினியாள் கொப்புலிங்கியிடம் பதறிச் சொல்கிறான் பாண்டியன். 'மன்னனைப் பழிவாங்காதே நான் உன் மாதா' என்று முந்தி ஏந்தி மாங்கல்யப் பிச்சை கேட்கிறாள் பாண்டிமாதேவி கொப்புலிங்கி (2538-2546). முந்தி ஏந்தி மடிப்பிச்சை கேட்கும் வழக்கத்தை அடியொற்றியதாக இந்நிகழ்ச்சி அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

19. அழகாக இருப்பவர்கள் மீது கண் திருஷ்டி படும் என்று நம்பினார்கள். மாதேவியின் கழைக்கூத்துப் பார்க்கக் கோவலனைப் போகவிடாது தடுத்த அவனுடைய தாயின் கூற்றுகள் இதை உறுதிப்படுத்துகின்றன. (574-576)

## உவமை, உருவகங்கள்

இலக்கியச் சுவைபயக்கும் உவமைகளும், உருவகங்களும் இக்கதைப்பாடலிலும் அமைந்து பாடலுக்கு மேலும் நயம் சேர்த்துள்ளன. மிக எளிமையான, எளிதில் புரிந்து இன்புறத்தக்க, சொல்லவந்த பொருளை மேலும் தெளிவுபடுத்துவதாக மரபு வழிப்பட்டவையாக உவமைகள் அமைந்துள்ளன.

1. "உலைவாய் மெழுகதுபோல் உருகினான் சோழபிரான்" (80)
2. "பறவைபோல் சுத்தியல்லோ பாய்ந்துநிற்பாள் மாதேவி" (472)

3. "வித்தைக்கு மாதேவி விநாயகரைப் போலேயல்லோ" (477)

4. "அன்னம்போல் நடையழகி அழகுள்ள கன்னகையாள்" (375)

5. "தெய்லோகக் கன்னியிலுந் தெய்வகன்னி போலானாள்" (379)

6. "மழுவெடுத்தான் வணிகேசன் மாதளம்பூப் போலாச்சே" (1506)

போன்ற உவமைகள் அமைந்து சிறந்துள்ளன.

கோவலன் இறந்த செய்தியை ஆச்சியம்மை மூலமாக அறிந்து கொள்கிறாள் கன்னகையாள். நெஞ்சு வெடித்துச் சிதறும் துக்கத்தில் கன்னகை வாய்மொழியில் உருவகங்கள் தெறித்து விழுகின்றன. மறை பொருளின் மாற்றுருவமான இவ்வுருவகங்கள் துயரத்தை மிகுவிக்கும் ஊக்கிகளாகச் செயல்படுகின்றன. கணவனை இழந்த கன்னகை,

**"நான்- ஒத்தைநல்ல மரமானேன் ஒருமரத்தின் கொப்பானேன்**
**பட்டநல்ல மரமானே-னடியம்மா-பாழூர்ச் செக்கானேன்**
**பிஞ்சிலே மாலையிட்டேன் ஒருமைந்தன்முளைக்**
**கண்டனில்லை" (2166-2168)**

என்று தன்னை ஒற்றை மரமாகவும், ஒருமரத்தின் கொப்பாகவும், பட்டமரமாகவும், பாழூர்ச் செக்காகவும் உருவகித்துக் கூறியுள்ளது அவளின் வேதனை மிகும் மனத்தை வெளிக் காட்டுவதாக உள்ளது. இளவயதில் மணமுடித்ததைப் பிஞ்சிலே மாலையிட்டதாகவும் பிள்ளையின்மையை மைந்தன் முளைக் கண்டனில்லை எனவும் உருவகமாக்கியுள்ள கதைப்பாடல் கவிஞர் திறம் போற்றத்தக்கது.

தனக்கே உரிய கோவலனைத் தான் அடையாமல் மாதேவி அடைந்து, பயனும் இன்பமும் உற்றதையும் கன்னகை பல உருவகங்கள் வழி வெளிப்படுத்துதல் வேதனை, துக்கத்தின் உச்சகட்டமாக உள்ளது. அவ்வுருவகங்கள்:

**"எருது கொண்டேன் கன்னகைநான் உழுதுகொண்டாள் மாதேவி**
**பசுக்கொண்டேன் கன்னகைநான் பால்குடித்தாள் மாதேவி**
**தோட்டம் போட்டேன் கன்னகைநான் பூமுடித்தாள் மாதேவி"**
**(2170-2172)**

## கதைப்பாடல் மரபுகள் - உத்திகள்

கதைப்பாடல்களுக்கென்று சில மரபுகள் உண்டு. ஒவ்வொரு கதைப்பாடலிலும் இந்த மரபுகள் முறையாகப் பின்பற்றப்

பட்டுள்ளன. இத்தகு மரபுகளுடன் கூடியதாக இக் கதைப்பாடலும் இயற்றப்பட்டுள்ளது. பிறப்பு, பெயர்க்காரணம் கூறுதல், வளர்ப்பு, திருமணம், கடந்த இடப்பெயர்கள் கூறுதல், மரணம், பழிவாங்கல், தெய்வமாதல் என்னும் அமைப்புகள் கதைப்பாடல் மரபொட்டி அமையும் நிகழ்ச்சிகளாகும். இத்தகு அமைப்புகளைக் கொண்டதாக இக்கதைப்பாடலும் திகழ்கின்றது.

கோவலன், கன்னகை பிறப்புகள் பேசப்பட்டுள்ளன. கன்னகை, மாதேவி பிறப்புகள் தெய்வ அம்சம் பொருந்தியவையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கன்னகை காளியின் அவதாரமாகவும், மாதேவி மகாதேவர் அருளால் பிறந்ததாகவும் கதைப்பாடல் காட்டுகின்றது. (304, 440-441) குழந்தையை எடுத்துக் கன்னத்தோடு கன்னம் வைத்துக் கொஞ்சும் போது சிரித்ததால் கன்னகை என்று பெயரிட்டதாகவும் (வரி: 365-க்குப்பின் வரும் வசனப் பகுதி) மகாதேவர் அருளால் பிறந்ததால் மாதேவி என்று பெயரிட்டதாகவும் பெயர்க்காரணம் கூறப்படுகின்றது (440-441). இது பெயர்க்காரணம் கூறும் கதைப்பாடல் மரபுப்படி அமைந்த அமைப்பாகும்.

கடந்த இடப்பெயர்கள், ஊர்ப்பெயர்களை அடுக்கிக் கூறுதல் கதைப்பாடல் மரபு. அதன்படி கோவலனும் கன்னகையும், மதுரைநகர் நோக்கி வந்த வழிகளும், கன்னகை, மாதேவி படுகளம் வந்த நிகழ்ச்சிகளும் (2348-2354, 2421-2427) கன்னகை மலையாளம் நோக்கிப் புறப்பட்டுச் சென்ற போது கடந்த ஊர்ப்பெயர்களும் அடுக்கிக் கூறப்பட்டுள்ளன. காவிரிப் பூம்பட்டினம், கரந்தை மடம், திருச்சிராபுரம், காட்டேரி அச்சம்பட்டி, வலையனுடைய மலை, வைகைநதிக்கரை, மதுரை என்ற இத்தகு ஊர்களையும் இடங்களையும் கடந்து கோவலனும் கன்னகையும் காவிரிப்பூம்பட்டணத்திலிருந்து மதுரைநகர் வந்ததாக அமைந்துள்ள அமைப்பு கதைப்பாடல் மரபொட்டி அமைந்ததாகும் (1023-1043).

மதுரை, தெக்குக் கோட்டை வாசல், சிக்கந்தர் மலை, சாத்தூர், சங்கரநயினார் கோவில், குத்தாலம், ஆரியங்காவு ஆகிய இடங்கள் வழியாகக் கன்னகை மலையாளம் வந்து சேர்ந்ததாகக் கதைப்பாடல் கூறுகிறது (2610-2638) கதைப் பாத்திரம் கடந்து வந்த வழிகளை அடுக்கிக் கூறும் கதைப்பாடல் மரபுப்படி இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது.

கொலைக்குப் பழிவாங்குதலும், இறுதியில் தெய்வமாதலும் கதைப்பாடல் மரபுப்படி அமையும் நிகழ்ச்சிகள் ஆகும்.

இக்கதைப்பாடலில் கணவன் கொலைக்காகப் பாண்டியன் உள்ளிட்ட ஒன்பது பேரைப் பழிவாங்கி, மலையாளம் சென்று பகவதித் தெய்வமாக நிலை கொண்டமை காட்டப்பட்டுள்ளது. கன்னகை, “ஒருவன் பழிக்காக ஒன்பது பழிவாங்கிக் கோவலன் பழிக்காகக் குடல் பிடிங்கி மாலையிட்டாள்” (2578-2579) என உள்ள கதைப்பாடல் வரிகள் குறிப்பிடும் ஒன்பது பேரைப் பழி வாங்கிய எண்ணிக்கையும் சரியானதாகவே உள்ளது.

1. கொல்ல ஆணையிட்ட பாண்டிய மன்னன்
2. சிலம்பைத் திருடிய கள்வனென்று பழி சுமத்திய வன்னித்தட்டான்
3. சிலம்பொன்று கோவலனின் கையில் இருந்ததைப் பார்த்தேன் என்று கூறிய வன்னித்தட்டானின் மகன்
4. மழுச்சத்தியத்துக்காகப் பழுக்கக் காய்ச்சிய மழு அளித்த கொல்லன்
5. கையிட்டால் வாங்காத கனத்த குடம் செய்து தந்த குசவேளான்,
6. மதமூட்டிய யானை அளித்த மாவுத்தன்
7. கோவலனை வெட்டிக் கொன்ற மழுவரசன்
8. கையைவிட்டால் திரும்ப வெளியே எடுக்க முடியாத குடத்தினுள் இட நச்சுப்பாம்புகள் தந்த பாம்புச்சித்தன்
9. மலைவேங்கை அளித்த வேட்டைக்காரன்

என்னும் ஒன்பது பேர்களைக் கன்னகை பழிவாங்கியதாகக் கதைப்பாடல் கூறும் அமைப்பு கதைப்பாடல் மரபொட்டி அமைந்த அமைப்பாகும் (2571-2579). கன்னகை பழிவாங்கப் புறப்படும் பொழுதே காளியம்மன் போன்ற தோற்றத்துடன் வந்ததைக் கதைப்பாடல் காட்டுகின்றது. கன்னகை காளியின் அவதாரம் என்பதால் கன்னகை-கோவலனிடையே இல்லற இன்பநுகர்வில்லை என்பதையும் கதைப்பாடல் முன்பே காட்டி விடுகின்றது[6]. பழிவாங்கப் புறப்பட்ட கன்னகையின் கோலம்

6. “சடங்குசெய்த நாள்முதலாய்த் தானறியாள் கோவலனை
படுக்கப்பாய் போட்டறியாள் பத்தினியாள் கன்னகையும்
தாததுப்பாய் போட்டறியாள் சுகமறியான் கோவலனும்
கண்ணிலே கண்டதில்லை கன்னகையை வணிகேசன்” (557-560)

மஞ்சள் பாவாடை மடித்துடுத்துத் திருநீறணிந்து, வேப்பங்குழையைக் கையில் பிடித்தும், கக்கத்தில் இடுக்கியும், தலையை விரித்தும் வந்ததாகவும் காட்டுகின்றது (2471-2475). பழிவாங்கப் புறப்பட்ட போதே உக்கிரகாளியாகித் தெய்வமாக மாறிய கன்னகை பழிவாங்கிய பின், தென் தமிழ்நாடு நிலப்பகுதிகள் வழியே வந்து மலையாளம் அடைந்து, சொக்கர் சொன்னபடி பகவதியாய் நிலை கொள்கிறாள். கதைப்பாடல் மரபுப்படி இது அமைந்துள்ளது. அமைந்த தெய்வத்துக்கு ஊட்டுக் கொடுத்து வழிபாடு செய்வதும் கதைப்பாடல் மரபுப்படி நிகழ்ச்சியாக அமைந்துள்ளது (2646-2649).

இலக்கியத்துக்கு நயம் சேர்ப்பவையாக உத்திகள் அமைந்துள்ளன. பின்வருவனவற்றை முன்னுணர்த்தும் உத்திகள் பல இடங்களில் பின்பற்றப்பட்டுள்ளன. இவற்றுள் கனவு கண்டதாகக் கூறும் உத்தி பல இலக்கியங்களில் முக்கிய இடம் பெறுவது போலவே இக்கதைப்பாடலிலும் முக்கிய இடம் பெற்றுள்ளது. மழுவரசனின் மனைவி, கன்னகை ஆகிய இருவரும் தீக்கனவு காணுகின்றனர். கோவலன் கொலையுண்ணப் போவதால் நடக்க இருக்கும் துர்க்குறிகள் கனவாக வருகின்றன. சிலம்பில் பாண்டிமாதேவி கனவு கண்டதாக அமைவது, இக்கதைப்பாடலில் மழுவரசன் மனைவி கண்டதாக மாற்றம் பெற்றுள்ளது.

சந்திரர்க்கும் சூரியர்க்கும் சமுதாடு (வாள்) பாயவும் இந்திரனார் கையிலிருக்கும் எழுத்தாணி முறியவும் வடக்குக் கோட்டை வாசல் வழியாக வந்த பெண்ணொருத்தி ஒருவன் பழிக்காக ஒன்பது பழி வாங்கிடப் பாண்டிய மன்னனின் மார்பைப்பிளந்து பழிமாலை இட்டுக் கொண்டு, எஞ்சிய எட்டுப்பேரைப் பழிவாங்கிடத் தேடிடவும், மழுவரசன் மகன் மடிந்து போகவும், மழுவரசன் தலை அறுந்து மண்மேல் விழவும், மழுவரசன் மனைவியின் மங்கிலியம் அற்று விழவும், தென் மதுரைக் கோட்டை தீயாக எரியவும், வடமதுரைக் கோட்டை வனமாகப்போகவும் மழுவரசன் மனைவி கனவு கண்டதாக மழுவரசனிடம் கூறிக் கோவலனை வெட்ட வேண்டாமென்று மழு எடுத்துக் கொடுக்க மறுக்கிறாள் (1801-1811). இக்கனவில் கண்டவை அனைத்தும் கதையின் பிற் பகுதியில் நடப்பதால் பின் நடப்பதை முன்னுணர்த்தும் உத்தியாகக் கனவு பயன்படுத்தப் பட்டுள்ளது.

கோவலன் கொலையுண்டவுடன் கன்னகை தான் கனவு கண்டதாக ஆச்சியம்மையிடம் உரைக்கிறாள்.

**"முத்தத்தே நிற்குமந்த முருங்கைமரம் சாயக்கண்டேன்**
**வாசலிலே நிற்குமந்த வன்னிமரம் சாயக்கண்டேன்**
**ஏரிக்கரை யரச்சு யிடிந்துவிழவுங் கண்டேன்**
**பொல்லாத கனவுகண்டேன்-இந்தப்-பூமியிலே கேட்டறியேன்**
**திருக்கழுத்து மங்கிலியம்-மாமியத்தே-தெறித்து**
**விழவுங்கண்டேன்**
**உன்கழுத்து மங்கிலிய முருகிவிழக் கண்டேனான்**
***(2047-2052)***

என்று கூறிப்புலம்பி அழுகிறாள் கன்னகை. முருங்கை, வன்னி, அரசமரங்கள் முறிந்து விழுவதும், கழுத்து மாங்கல்யம் அறுந்து விழுவதும் துர்க்குறிகளாக மக்களால் கருதப்பட்டமை தெரிகின்றது. இத்துர்க் குறிகளுடன் கூடிய கனவால் தன் கணவனுக்கு ஏதோ நிகழ்ந்து விட்டது என்று நம்பி அஞ்சுகிறாள் கன்னகை.

திருமணத்தின் போது மல்லிகைப்பூ வைத்த செப்பைத் தந்து மல்லிகைப்பூ வாடினால் உன் கணவனுக்குத் திங்கு நிகழும் என்று வேதியர்கள் சொன்னதாகவும், அந்த மல்லிகைப்பூ வாடிவிட்டதால் கணவனுக்கு ஏதேனும் தீங்கு நிகழ்ந்திருக்கும் என்றும் கன்னகை அழுது புலம்பியதாகவும் கதைப்பாடலில் குறிப்பிடப்படுகின்றது[7]. கோவலனுக்குத் தீங்கு நிகழப்போகின்றது என்பதை முன்னுணர்த்தும் உத்தியாக மல்லிகைப்பூ வாடிய நிகழ்ச்சி படைக்கப்பட்டுள்ளது.

## மலையாளச் சொல்தாக்கம்

சேர நாட்டு இளவல் இளங்கோவடிகளால் செய்யப்பட்ட சிலப்பதிகாரப் பிரதி கேரளப்பல்கலைக் கழகச் சுவடி நூலகத்தில் ஒரு பிரதியேனும் இல்லை என்பது குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகும்.

---

7. "மங்கிலியச் செப்பதிலே மல்லிகைப்பூ வைத்தல்லவோ
மன்னவர்க்கே தீங்குவந்தால் இந்தமல்லிகைப்பூ வாடுமென்றே
கைக்கொடுத்தார் வேதியர்கள் கன்னகையாள் வாங்கலுற்றாள்"
*(418-420)*

"மன்னவர்க்கு மெந்தனுக்கும் மங்கிலியம் பூட்டையிலே
மன்னவர்க்கே தீங்குவந்தால் இந்த மல்லிகைப்பூ வாடு மென்றார்.
வாழ்த்தியே கைகொடுத்தார் மல்லிகைப்பூ வேதியரும்
மங்கிலியச் செப்பில்வைத்தேன் மல்லிகைபூசைசெய்தேன்
வாடாத மல்லிகைப்பூ வாடுதெடி யாச்சியம்மா
என்றுமே தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையும்" *(2054-2059)*

இந்நூலகத்திலிருந்த இந்தக் கோவலன் கதையுடன் மற்றுமொரு கோவலன் கதை (சுவடி எண்: 6718-e)14 இதழ்களுடன், 36 x 3.2 செ.மீட்டர் அளவுடன் குறைப்பிரதியாக உள்ளது. ஒப்பீட்டுக்கு இச்சுவடி உதவவில்லை. பதிப்பிக்கப் பட்டுள்ள கோவலன் கதையில் மலையாளச் சொல்தாக்கம் ஆங்காங்கு காணப்படுகின்றது. இதனை எழுதியவர் திருவாங்கூர் சமஸ்தானத்தில் அடங்கியிருந்த குமரிமாவட்டத்தையோ, மலையாள நாட்டையோ சார்ந்தவராக இருக்கலாம். இக்கதைப் பாடலில் (அடைப்புக்குள் தமிழ்ச் சொல் வடிவம் தரப்பட்டுள்ளது) காணப்படும் மலையாள, தென்மாவட்ட வழக்குச் சொற்களாவன :

1. வளவு (1069) (வளைவு, வீடும் அதன் சுற்றுப்புறமும்)
2. குன்னு (1056) (குன்று)
3. பிறாவு (709) (புறா)
4. விசாரம் (703) (விசாரித்தல்-நினைத்தல்)
5. கரும்பூச்சை (1129) (கரும்பூனை)
6. அப்பறத்தே (1128, 1690) (வெளியே)
7. மாறலுற்றான் (1141) (தள்ளலுற்றான்)
8. எவடம் (1177) (எவ்விடம்)
9. இவடம் (1186) (இவ்விடம்)
10. அவடம் (2089, 2123) (அவ்விடம்)
11. குஞ்சி (1216, 1219, 1221, 1222, 1224) (குஞ்சு)
12. சோரை (2017) (இரத்தம்)
13. பரதமானம் 2617 (பிரதமன்) (பாயாசம்)

இவை மலையாளச் சொற்கள்.

1. அழுகாள் (1663, 1664) (அழுகிறாள்)
2. கொடுக்கான் (1708) (கொடுக்கிறான்)
3. எப்பம் (2366) (எப்பொழுது)
4. கேட்காள் (2494) கேக்காள் (2526) (கேட்கிறாள்)

என்பன போன்றவை தென் மாவட்ட வழக்குச் சொற்கள். இவை போல்வன சேர்ந்து இக்கதைப்பாடலுக்கு இலக்கிய நயம் பயக்கின்றன. இக்கதைப்பாடல் மலையாள நாட்டை ஒட்டிய தென் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரால் படைக்கப் பட்டிருப்பதையும் உறுதி செய்கின்றன.

**புராணக் கதைகள்**

இக்கதைப்பாடலில் இலக்கியச் சுவையும், நயமும் மிகுமாறு இரண்டு புராணக்கதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கோவலன் சிலம்பு விற்க மதுரை நகரினுள் நுழைந்தான். அப்பொழுது, மதுரைப் பதியில் குடி கொண்டுள்ள மாமதுரைச் சொக்கர் கோவலனால் மதுரையம்பதிக்கு அழிவு வரும் என்று அறிந்தார். அவனைத் திருப்பி அனுப்ப ஆண்டி வடிவெடுத்து வந்தார் சொக்கர். இதற்கு முன்பும் பல்வேறு வடிவங்கள் எடுத்து வந்து திருவிளையாடல் புரிந்த சொக்கர், கோவலனைத் தடுத்தாட்கொள்ள ஆண்டியைப் போல் வேடமிட்டு வந்தார் என்று கூறுமிடத்துத் திருவிளையாடற் புராணக்கதை ஒன்று எடுத்தாளப்பட்டுள்ளது.

> **"வைகைநல்ல உடைப்பெடுத்தே வந்ததுக்கு மண்சொமந்தார்**
> **பிட்டுக்கே மண்சுமந்த பேரான சொக்கருமே**
> **மதுரைச்சொக்க ராண்டியைப்போல் வடிவெடுத்தா ரந்நேரம்"**
> **(1167-1169)**

என்பதே அக்கதை. ஏழை வந்திக்கிழவிக்காக இரக்கமுற்று மண்சுமந்து, வைகை உடைப்படைக்கும் கூலித் தொழிலாளியாக வந்த சிவபிரான், கோவலனின் பொருட்டும் இரக்கமுற்று, ஆண்டி வடிவெடுத்து வந்த கோலம் சித்திரிக்கப்பட்டுள்ளது.

கோவலன்-கன்னகையிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் மதுரை வண்டியூர் ஆச்சியம்மை, தான் குன்றெடுத்த நந்தகோபால வம்சத்தில் வந்தவள் என்று பெருமையுடன் கூறிக் கொள்ளுகிறாள். இந்திரனின் கோபத்தால் பெருமழை பெய்தபொழுது, ஆயர்குலத்தையும், கன்று, காலிகளையும் காப்பாற்றக் கோபாலர் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்துக் காத்தருளினார். அத்தகு ஆயர் வம்சத்தில் பிறந்தவள் என்று ஆச்சியம்மை கூறுவதால் ஆதரவற்று அடைக்கலம் கேட்டு வந்துள்ள கோவலன், கன்னகையையும் தான் கண்போன்று காப்பது நிச்சயம் என்பது உட்கருத்தாகலாம். திருமாலின் எத்தனையோ செயல்பாடுகள் இருக்க 'காத்தருள்தல்' என்பதை உள்ளடக்கிய மேற்கூறிய கதையை ஆசிரியர் பயன்படுத்தியது மிகப் பொருத்தமானதாக இவ்விடத்தில் அமைந்து சிறந்துள்ளது.

## யாப்பமைதி

எல்லா வகையான கதைப்பாடல்களையும் போலவே இக்கதைப்பாடலும் நாட்டுப்புறப் பாடல் வடிவில் அமைந்துள்ளது. பாடற் பொருண்மைக்கேற்ப நடையில் மாற்றம் ஏற்படுகின்றது என்பதை உணர்த்த 'வேறு' என்ற சிறுதலைப்புடன் பாடல் நடை மாறுவது உணர்த்தப்பட்டுள்ளது. பாடல்களுக்கு இடையே ஆங்காங்கு வசனமும் காணப்படுகின்றது. இத்தகு வசனங்கள் அவற்றுக்கு மேல் அமைந்த பாடலின் பொருளை வசனத்தில் விளக்குவதாக இல்லை. கதைத் தொடர்ச்சிக்குப் பயன்படுபவையாய் முன் அமைந்த பாடலில் சொல்லப் பட்டுள்ளதன் தொடர்ச்சியாகவே அமைதல் கண்கூடு. இத்தகு வசன அமைப்புகள் 18 இடங்களில் இக்கதைப் பாடலில் இடம் பெற்றுள்ளன. பாடலும், வசனமுமாக அமைந்த இக்கதைப் பாடல் நாடகவடிவில் நடிக்கப்பட்டிருக்கலாம் அல்லது நடிக்கத்தக்க வகையில் எழுதப்பட்ட முயற்சியாகவும் இருக்கலாம். பாடல்களின் எளிய சொற்களும், எளிய நடையும், இனிய ஓசையும் கற்போருக்கு எளிதில் விளக்கமுற்று இலக்கிய இன்பம் தருபவையாக உள்ளன.

## வசனங்கள் அமைந்துள்ள சூழல்

1. வேதியர்கள் பஞ்சாங்கம் கணித்துச் சொன்னவுடன் குழந்தையை யாது செய்யலாம் என்று பாண்டிய மன்னன் மந்திரிமாருடன் ஆலோசனை செய்ததாகச் சிறிய அளவிலான வசனம் இடம் பெற்றுள்ளது.

2. மாசாத்தான் குழந்தையைக் கண்டெடுத்து, மனைவி கையில் கொடுத்துக் காரணப்பெயர் வைக்கும் வரையிலான செய்திகள் வசனத்தில் உள்ளன. இது சற்றுப் பெரிய வசனம்.

3. மாலை தம் கழுத்தில் விழாதோ என்று அரசர்மாரும் ஏங்கியதாக அமைந்த மிகச்சிறிய வசனம்.

4. மாதேவியைச் சேர்ந்தபின் கோவலனின் கப்பல் வணிகம் நொடித்தது பற்றிய இரு வசனங்கள் சிறு இடைவெளிகளுக்கு இடையில் தொடர்ந்து அமைந்திருக்கின்றன.

5. கோவலன்-மாதேவி மனவேறுபாடுகளில் மிகுதியான வசனங்கள் இடம்பெற்றுள்ளன. இறுதியில் கோவலனை மாதவி ஆற்றில் தள்ளுவது வரை 9 வசன நடைகள் அமைந்துள்ளன.

அடுத்து அமையும் 14-ஆவது வசனமாக, கோவலன் மாதேவியிடம் தான் கடன்பட்டதைக் கன்னகையிடம் கூறுவதாக அமைந்துள்ளது.

15. கன்னகை காவிரிப்பூம் பட்டினத்தை விட்டு மதுரைக்குப் புறப்படும் பொழுது, தாதிமாரை நோக்கிச் சொல்வதாகச் சிறு வசனம் இடம் பெற்றுள்ளது.

16. வன்னித்தட்டான் பாண்டிய அரசியின் சிலம்பை விளக்கமிட்டுக் காய வைத்த செய்தி சிறு வசனமாக அமைந்துள்ளது.

17. 'பாம்புக் குடத்தில் மூன்று சிறு உருண்டைகளை இட்டு எடுக்கச் சொல்வாயாக' என்று வன்னித்தட்டான் பாண்டிய மன்னனிடம் கூறும் வசனம் பெரிதாக அமைந்துள்ளது.

18. கன்னகை தன் கணவன் கோவலன் கொண்டு வந்தது தன் கால்சிலம்பே என்று மன்னனிடம் நிரூபித்துக் காட்டிப் பழிகேட்டதாக உள்ள வசனம் இருப்பவற்றுள் பெரிதானதாக அமைந்துள்ளது. இதுவே இக்கதைப்பாடலில் இடம் பெற்றுள்ள இறுதி வசனமுமாக உள்ளது.

எளிய, இனிய, பேச்சு வழக்கு நடையுடன் கூடிய இவ்வசனங்கள் பாடல் நடையுடன் இயைந்து செல்லக் கூடியனவாய், பொருள் தொடர்ச்சி தருவனவாய், கதை விளக்கம் நல்குவனவாய் அமைந்து கதைப்பாடலுக்கு மெருகூட்டியுள்ளன.

## சில புதிய சொற்கள்

இக்கதைப்பாடலில் வேறுபிற இலக்கிய வகைகளில், கதைப்பாடல்களில் காணப்படாத சில புதிய சொற்கள் கையாளப்பட்டுள்ளன. அவற்றைக் கீழே காணலாம்.

### அக்கினியாள்

அக்கினி திசைத்தெய்வங்களுள் ஒன்று[8]. ஆண் தெய்வ வடிவில் இதன் தோற்றம் புராணங்களில் விளக்கப்பட்டுள்ளது[9]

---

8. அக்கினி தேவன் தவம் செய்து திக்குப்பாலகனானவன். தென் கிழக்கில் உள்ள தேஜோவதி இவனுடைய பட்டணமாகும். அபிதான சிந்தாமணி, பக்:8.

9. அக்கினி பகவான் விச்வாநரன் புத்திரன். பிரசாபதிக்குச் சாண்டிலியிடம் பிறந்தவன். வாகனம் ஆடு. பாரி சுவாகாதேவி. இவர்களுக்கு தக்ஷணாக்னி, கார்ஹபத்யம், ஆகவனியம் ஆகிய மூன்று குமாரர்கள் உண்டு. அபிதானசிந்தாமணி, பக்.10

பிற இலக்கியங்களும் அக்கினி பகவான், அக்கினிதேவன் என்று ஆண்பாலாகவே அக்கினித் தெய்வத்தைக் காண்கின்றன. இக்கதைப்பாடல் அக்கினியைப் பெண்பாலாகப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளமை ஒரு புதுமையாகவும் மரபு மாற்றமாகவும் உள்ளது. தேவதை ஆண், பெண் என்ற இருபாலருக்கும் பொதுப் பெயர் என்பதால் அக்கினியையும் ஒரு தேவதையாகக் கருதிப் பெண்பாலாக இக்கதைப்பாடல் ஆசிரியர் காட்டுகின்றாரா என்பது சிந்தித்தற்குரியது. ஓரிரு இடத்தில் இருந்திருந்தால் ஏடு படி எடுத்தவர் ன்-ள்- வடிவ ஒற்றுமையால் பிழையாக 'ள்' என்று கருதி எழுதியிருக்கலாம் எனக் கொள்ளலாம். ஆயின் 4 இடங்களில் "அக்கினியாள்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளமை ஏடு எழுதிய ஆசிரியர் தெரிந்தேதான் இவ்வாறு எழுதியுள்ளார் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

## அமைந்துள்ள இடங்கள்

1. "ஆயிரம் நெய்விளக்கு **அக்கினியாள்** முன்னிருக்க (408)
2. "ஓமத்தி ல**க்கினியாள்** உத்தமியாள் தானறிய" (412)
3. "**அக்கினியாள்** தேவியல்லோ அருகுவந்தாள்
   மழுவதிலோ" (1487)
4. "உத்தமியை நினைக்கையிலே **உள்ளானா ளக்கினியும்**"
   (1504)

என்பன அவை. அக்கினிதேவி என்றும் வந்திருத்தல் அக்கினியைப் பெண் பாலாக இவ்வாசிரியர் கருதி எழுதியுள்ளமையை வெளிப் படுத்துகின்றது.

## தேன்மொழியான்

தேன்மொழி, தேன்மொழியாள் என்று பெண்ணைக் குறிப்பதே இலக்கிய மரபு. இயற்கையிலேயே மென்மையான இன் குரலுடையவர்களாகப் பெண்கள் இருக்கின்றனர். அன்னார் வாயிலூறிய நீரும் பாலொடு தேன் கலந்தது போன்றது என்று குறள் கூறுகின்றது[10] மாறாக இக்கதைப்பாடலில் 'தேன் மொழியான்' என்று ஆண் மகனைக் குறிப்பதாக மரபுமாறி வந்துள்ளது. இரு இடங்களில் கோவலனைக் குறிப்பதாகத் 'தேன்

---

10. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
    வாலெயி றூறிய நீர் - குறள் (1121)

மொழியான்' என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. இக்கதைப்பாடல் ஆசிரியர் மரபு மாற்றம் செய்வதிலும், புதிய சொல்லாக்கம் செய்வதிலும் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்என்பதை இத்தகு சொல் ஆளுகைகள் தெளிவுபடுத்துகின்றன.

சிலம்பை விற்றுத்தருமாறு கேட்ட கோவலனை நோக்கிப் பள்ளிக்கூட வாத்தியார் கூறியதாக,

**"சித்திரம்போற் சிலையழகா தேன்மொழியான் கோவலவன்"** ***(1197)***

என்ற தொடரும், கோவலன் குற்றமற்றவன், தான் பெற்றமகளான கன்னகையின் கணவன் என்று கோவலன் கைச்சிலம்பால் உண்மை உணர்ந்த பாண்டிமாதேவி கொப்புலிங்கி கோவலனைப் பற்றிக் கூறுவதாக,

"சித்திரச் சிலையழகன் **தேன்மொழியான்" *(1363)*** என்ற தொடரும் கதைப்பாடலில் இடம்பெறுகின்றன.

### சோதிகிளி

பெண்களைக் 'கிளி' என்றலும் பெண்கள் மொழியினைக் கிளிப்பேச்சுடன் ஒப்பிடலும் இலக்கிய மரபு. பெண்ணை வளர்த்துத் தகுதியற்றவனுக்கு மணமுடித்தலைக் 'கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்தாற் போல' என்று உலக வழக்கிலும் பெண்ணைக் கிளி என்று கூறுதலும் மரபாக உள்ளது. இத்தகு இலக்கிய வழக்கு, உலக வழக்கு மரபுகளை மீறி இக்கதைப்பாடல் ஆசிரியர், 'சோதிகிளி வாய்திறந்து பேசியது போன்று' என்ற உவமையை ஆணுக்குக் கையாண்டு மரபு மாற்றம் செய்துள்ளார்.

**"சொல்லலுற்றான் கோவலவன் சோதிகிளி வாய்திறந்தே" *(1350)***

என ஆண்டுள்ள புதுமையைக் காணலாம்.

### பத்தினியான்

பத்தினி, பத்தினிப் பெண், பத்தினித் தெய்வம், பத்தினியாள் என்ற பெயர் வடிவங்களும், பத்தினித்தனம், பத்தினித் தன்மை, பத்தினிக் குணம் என்ற சொல்லாட்சிகளும் பெண்ணுடனும், பெண் தன்மையுடனும் தொடர்புடையதாக இலக்கிய வழக்கு, உலக வழக்கு மரபுகளுடன் பயின்று வந்துள்ளன. கற்புடன் தொடர்புடையதாக இச்சொல் காணப்படுவதாலும், கற்பு பெண்களுக்கே உரியது என்ற பழம் மனப்பான்மையாலும்

'பத்தினி' என்பது பெண்களுடன் தொடர்புடைய, பெண்களை மட்டுமே குறிக்கும் சொல்லாகத் திகழ்ந்து வந்தது; வருகிறது. பத்தினி என்பதற்கு மனைவி, கற்புடையாட்டி என்று தமிழ் அகராதியும் இச்சொல்லைப் பெண்ணுடன் தொடர்புபடுத்தியே பொருள் கூறுகிறது. மரபு மீறலாக இக்கதைப்பாடல் ஆசிரியர் பத்தினியான் என்று ஆண்பாலுக்கு உரியதாகக் குறிப்பிடும் புதுமையை இக்கதைப் பாடலில் செய்துள்ளார். இதன் மூலம் பத்தினித் தன்மை அல்லது கற்புநிலை பெண், ஆண் என்ற இருபாலருக்கும் உரியது என்ற பொது நோக்குக் கொண்டவர் என்பதும் தெரிகின்றது. பத்தினியின் கணவன் 'பத்தினியான்' என்று பொருள்படவும் இவ்வாறு கூறினாரோ என்பதும் சிந்தித்தற்குரியது.

1. "படத்தி லெழுதிவிட்ட **பத்தினியான்** கோவலர்க்கே" *(1364)*

2. "பாண்டியனுஞ் சொல்லலுற்றான் **பத்தினியான்** கோவலர்க்கே" *(1573)*

3. "பசிதாக மாகியல்லோ **பத்தினியான்** கோவலவன்" *(1918)*

என்று மூன்று இடங்களில் பத்தினியான் என்ற சொல் ஆண்பாலுக்கு அமைந்த புதுமையைக் காண முடிகின்றது.

### ஏந்திழையான்

'ஏந்திழை' என்பதற்கு 'அழகிய ஆபரணம்' என்று பொருள். அழகிய ஆபரணத்தை அணிந்த பெண்ணுக்கு இது ஆகி வந்து 'ஏந்திழை' என்பது 'பெண்' என்ற பொருள்படவும் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. தமிழ் அகராதியும் 'ஏந்திழை' என்பதற்கு 'அழகிய ஆபரணம்', 'பெண்' என்று பொருள் தருகின்றது. இலக்கிய மரபு மாற்றமாக 'ஏந்திழையான்' என்று ஆண் மகனைக் குறிப்பதாக இக்கதைப்பாடல் சுமார் 10 இடங்களில் ஆண்டுள்ள புதுமையைக் காண முடிகின்றது. பண்டு ஆண்களும் அழகிய ஆபரணங்களை அணிதல் வழக்கமாக இருந்தது என்றாலும் ஏந்திழை என்பது பெண்ணை மட்டுமே குறிப்பதாக ஆளுதல் மரபாகவே பின்பற்றப்பட்டு வந்தமை கண்கூடு. இக்கதைப்பாடலில் 'ஏந்திழையான்' எனக் கோவலனைக் குறிப்பதாக மரபு மாற்றம் நிகழ்ந்துள்ளது.

"எதிர்த்துவிட்டா னாண்டிமுன்னே **ஏந்திழையான்** கோவலவன்" *(1185)*

"என்றுசொல்லி வர்த்தகனா **ரேந்திழையான்** கைக்கொடுத்தான் *(1156)*

"என்றுசொல்லித் தானழுதான் **ஏந்திழையான்** கோவலவன்"
***(1712, 1735, 1784, 1881, 1891, 1905)***

இத் தொடர் ஆறு இடங்களிலும்,

"என்று சொல்லித் தானிருந்தான் **ஏந்திழையான்** கோவலவன்
*(1982)*

"இருபிளவாய்த் தான்விழுந்தான் **ஏந்திழையான்** கோவலவன்
*(2016)*

என்றும் ஆக மொத்தம் 10 இடங்களில் 'ஏந்திழையான்' என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. மரபுமீறிப் புதிய சொற்களை ஆளுவதில் இக்கதைப்பாடலாசிரியர் பெரு விருப்புடையவர் என்பது மேற்கூறிய சொல்லாளுமைகளால் தெளிவாகின்றது.

### கதைப்பாடலில் காணும் சில நிகழ்ச்சிகளின் விளக்கம்

இக்கதைப்பாடலில் காணும் சில நிகழ்ச்சிகள், குறிப்பிட்டு விளக்கிக் கூறும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. கதைப்பாடலின் போக்குக்கும் திருப்பத்துக்கும், விரிவுக்கும் இத்தகு நிகழ்ச்சிகள் காரணமாகவும் அமைந்துள்ளன. இவற்றை விரிவாகக் கீழே காணலாம்.

#### காவிரியில் கல்லணை கட்டுதல்

கோவலன் கண்ணகி கதை கூறும் மற்ற எந்தக் கதைப்பாடல்களிலும் காணப்படாத இந்த நிகழ்ச்சியே கதையைத் துவக்கி வைக்கிறது. காவிரிப் பூம்பட்டினத்துக்குச் சிறப்புச் சேர்ப்பது காவிரியாறு. காவிரியாற்றுக்குச் சிறப்புச் சேர்ப்பது அதில் கட்டப்பட்டுள்ள கல்லணை. காவிரியின் இந்தக்கல்லணை எப்பொழுது, யாரால், எவ்வாறு கட்டப்பட்டது என்பதைக் கதைப்பாடல் விரிவாகப் பேசுகின்றது. 10 முதல் 140 வரிகள் வரை அதாவது சுமார் 130 வரிகளில் கல்லணை கட்டிய நிகழ்ச்சிகள் கதைப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ளன.

கையார்ச் சோழன் (49) என்று கதைப்பாடல் குறிப்பிடும் கரிகாற்சோழன் காலத்தில் கல்லணை கட்டப்பட்டது என்று கதைப்பாடல் கூறுகின்றது. கல்லணை கட்டிய கரிகாற்சோழன் காலத்தில் கோவலனின் தந்தை மாசாத்தான் மாபெரும் வணிகனாகத் திகழ்ந்தான்; பெருஞ் செலவந்தனாகவும் இருந்தான். மாசாத்தான், கல்லணை கட்டியதில் பெரும்பங்கு வகித்தான் என்றும், அணைகட்டும் பொழுது நீரூற்றுப் பெருகித் தடை

ஏற்பட, அத்தடை நீங்கக் கற்புக்கரசியால்தான் இயலும் என்று தக்க ஆலோசனையும் கூறினான் என்றும் கதைப்பாடல் தெரிவிக்கின்றது. நீரூற்று நிற்காவிடின் தன்னை மாய்த்துக் கொள்ள இருந்த சோழமன்னன் மனைவி சுந்தரியின் கற்புத்திறத்துக்கு அஞ்சிய காவிரித்தாய் ஊற்றடைத்துக் கொள்ள, தடையின்றிக் கல்லணை கட்டப்பட்டது என்கிறது கதைப்பாடல். அணைகட்டி முடித்தபின், கட்டிய மாசாத்தானைக் கரிகாற் சோழமன்னன் பாராட்டிப் பரிசுகளும், விருதுகளும் வழங்கியதுடன், தன் மந்திரியாகவும், தளகர்த்தனாகவும் அமர்த்திக் கொண்டதாகவும் கதை நிகழ்ச்சி அமைந்துள்ளது[11].

காவிரியில் கல்லணை கட்டிய இந்த நிகழ்ச்சி அமைப்பின் மூலம் கோவலன்-கண்ணகி கதை நடந்த காலத்தைக் கரிகாற்சோழ மன்னன் காலத்துக்குக் கதைப்பாடல் கொண்டு செல்கின்றது.

## பாண்டியரின் கொடுங்கோலாட்சி

கன்னகை மதுரையை எரித்து அழிக்கப் பாண்டியரின் கொடுங்கோலாட்சி ஒரு முக்கியக் காரணம் என்று கதைப்பாடல் காட்டுகின்றது. கள்வனென்று கோவலனைக் கொலை செய்ததால் மட்டும் மதுரையைக் கன்னகை எரிக்கவில்லை ; பாண்டியனின் தீய ஆட்சியும், தீப்பற்றி மதுரை நகர் எரிந்து சாம்பலாகக் காரணம் என்று ஒரு புதிய காரணத்தைக் கதைப்பாடல் காட்டுகின்றது. இதுவும் பிற கோவலன்-கண்ணகி கதைப்பாடல்களில் காணப்படாத ஒரு காரணம் என்பதால் இக்கதைப்பாடல் தனித்துவம் பெற்றதாக அமைந்துள்ளது எனலாம்.

பாண்டியரின் கொடுங்கோலாட்சியை முடிவுக்குக் கொண்டுவரத் தேவராசன் விருப்பப்படி காளியே கன்னகையாக அவதரித்தாள். மதுரைப் பாண்டிய மன்னன் தேவி கொப்புலிங்கி வயிற்றில் மகவாகத் தோன்றினாள் என்கிறது கதைப்பாடல். கலியுகத்துப் பாண்டியர்க்குக் காலம் முடிவுறும் பொழுது அதர்மம் தழைத்து அக்கிரமம் செய்யத் தொடங்கி னார்கள். பாவம், பழி செய்யலுற்றார்கள் பாண்டிய மன்னர்கள்.

---

11. "மாசாத்தான் செட்டியுந்தான் வரிசைபெற்றான் சோழனிடம்
சோழனுந்தான் மனமகிழ்ந்து சொல்லலுற்றான் செய்தியளை
வாசமுள்ள மாசாத்தான் நம்மந்திரியாய்த் தானிரென்றான்
தன்மையுள்ள மாசாத்தான் எமக்குத் தளகர்த்தனா
யிருமென்றான் (139-142)

பாம்படித்தே வழக்கிட்டார்கள் பழிகாரப் பாண்டியர்கள். கொம்படித்தே வழக்கிட்டார்கள் கொடும்பாவிப் பாண்டியர்கள் (270-279).

கொடிய பாண்டியர்களின் மதுரையிலா சிலம்பு விற்க வந்தாய்? என்று கேட்டு, கோவலன்-கன்னகைக்கு அடைக்கலம் தந்த ஆச்சியம்மையும் பாண்டியரின் கொடுங் கோலாட்சியைத் தான் வசிக்கும் தாய்நாடு என்றும் கருதாமல் விமர்சிக்கிறாள்[12]. மொத்தத்தில் கன்னகை மதுரையை எரித்தது நியாயமே என்ற கருத்துக்கு வலுச் சேர்ப்பதாகக் கதை நிகழ்ச்சிகள் இக்கதைப்பாடலில் படைக்கப்பட்டுள்ளன எனலாம்.

## குழந்தையை ஆற்றிலிடுதல்

பெற்ற குழந்தையைத் தவிர்க்க முடியாத காரணங்களால் ஆற்றில் விட்டுவிடுவதை மாபெரும் இதிகாசமான மகாபாரதத்திலேயே காணலாம். மந்திர உச்சாடனத்தால் சூரிய பகவானை நேரில் வருமாறு குந்தி அழைக்க, மணமாகாமலே தாயாகி விடுகிறாள் குந்திதேவி. உடன் குழந்தையைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டு விட்டதாக மகாபாரதம் கூறுகிறது. இக்கதைப்பாடலிலும் காளியே கன்னகையாகப் பிறந்து அவதரித்தவுடன் பஞ்சாங்கம் பார்த்த வேதியர்கள் குழந்தையால் பெற்றோருக்கும், உற்றார், உறவினருக்கும், நாட்டுக்கும் பெருங்கேடு சூழும் என்று உரைத்ததாகவும்,[13] உடன் மன்னன் மந்திராலோசனை நடத்தி, குழந்தையைப் பெட்டியில் வைத்து

12. "பேச்சிட்டே வழக்கிடுவார் பெரும்பாவிப் பாண்டியர்கள்
கொம்படித்தே வழக்கிடுவார் கொடும்பாவிப் பாண்டியர்கள்
பாம்படித்தே வழக்கிடுவார் பழிகாரப் பாண்டியர்கள்
மாபாவி மதுரையிலே வாணிபமே செய்யயிலே
தீபாவிச் செட்டிமக்கள் செப்பிடுவார் பாண்டியர்க்கே
கள்ளனென்றே கட்டச்சொல்வார் கனமதுரைப் பாண்டியர்கள்
கொல்லச்சொல்வான் பாண்டியனுங் கோவலரே யிப்போது"
(1097-1103)

13. "நாளுமொரு நச்சத்திரமும் லக்கனமும் பார்த்தல்லவோ
அறிக்கையிட்டார் பாண்டியர்க்கே ஆனதொரு வேதியர்கள்.
மங்கையரைப் பெத்தெடுத்த மாதாவுக்கே ஆகாதென்றார்
பெத்தெடுக்கும் ராசாவே தங்களுக்கு மாகாதென்றார்
உத்தார் உறைமுறைக்கு மொருத்தருக்கு மாகாதென்றார்" (311-315)

ஆற்றில் புதைத்ததாகவும் கதை நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன[14]. ஆற்றில் வெள்ளம் வந்து பெட்டியை எழுப்ப, பெட்டி மிதந்து செல்வதைக் கண்ட மாசாத்தானும், வண்ணமாலைச் செட்டியும் குழந்தையைக் கண்டெடுத்துப் பிள்ளையில்லாத வண்ணமாலைச் செட்டி கன்னகையென்று பெயர் சூட்டிக் குழந்தையை வளர்ப்பதாகக் கதைப்போக்கு அமைந்துள்ளது.

## பருவமடைதல், திருமணச் சடங்குகள்

பெண் பருவமடைந்தவுடன் செய்த சடங்குகளைக் கதைப்பாடல் விரிவாகக் கூறுகின்றது. மாதேவி, கன்னகை பருவமடைதற் சடங்குகள் கதைப்பாடல் எழுந்த கால கட்டத்தில் சமுதாயத்தில் இருந்த பருவமடைதற் சடங்குகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் தோன்றுகின்றன எனலாம்.

மாதேவி பன்னிரு வயதில் பருவம் எய்தினாள். உடன் நாள், முகூர்த்தம், லக்கனம் பார்த்தார்கள்; பந்தலிட்டுச் சடங்கு செய்தார்கள்; ஓமம் வளர்த்து வேதியர்கள் மந்திரம் ஓதினார்கள்; சடங்குகள் செய்து மாதேவிக்குத் தலையில் தண்ணீர் வார்த்தனர்; மகாதேவர் சந்நிதியில் மாவிளக்குப் பார்த்தனர்; வேதியர்க்குத் தானம் அளித்தனர்; அண்ணாவி நட்டுவனார்க்கு ஆடையாபரணம் தந்தனர். வித்தை கற்றுக் கொடுத்தவர்களுக்கு வேண்டியதெல்லாம் கொடுத்தனர். மேலும் பல தானதர்மங்களும் செய்தனர் என்று பருவமடைதற் சடங்குகள் விவரிக்கப் பட்டுள்ளன (478-488).

கோவலன்-கன்னகை திருமணச் சடங்குகள் விவரிக்கப் பட்டுள்ளதன் மூலம் கதைப்பாடற் கால மணமுறைச் சடங்குகளை அறிந்து கொள்ள முடிகின்றது. குழந்தைப் பருவத்திலேயே கோவலன்-கன்னகை திருமணம் நடந்தது. குழந்தைத் திருமணச் சட்டம் கி.பி. 1930இல் இயற்றப்பட்டது இதனால் இக்கதைப்பாடல் 1930-க்கு முன்னர் குழந்தை மணம் நடைமுறையில் இருந்த கால கட்டத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. திருமணத்தின் பின்னரே கன்னகை பருவமடைந்ததாகக் கதைப்பாடல் கூறுகின்றது.

14. பொன்னாலே பொட்டகத்தைப் போதரவா யுண்டுபண்ணி
பொட்டகத்துக் குள்ளேநல்ல பெண்கொடியை வைத்தல்லவோ
பூட்டுமிட்டுக் கயிறுகட்டிப் பொன்னரக்கு மேல்போட்டு
வைகைதனில் மணல்தோண்டி வைத்திடுங்கோ பொட்டகத்தை"
(322-325)

மணம் செய்ய முடிவெடுத்து நாளும் முகூர்த்தமும் குறித்தனர். நானூறு பார்ப்பார்கள் நாள் குறித்தனர். முந்நூறு பார்ப்பார்கள் முகூர்த்தம் குறித்தனர். முதற்காரியமாக மணச் செய்தியைச் சோழ அரசனுக்கு அறிவித்தனர். மணவறை அலங்கரிப்பு விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. பெருவணிகர் மக்களின் மணவறை அலங்கரிப்பு அன்னாரின் செல்வச் செழிப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது[15]. தம்பட்டம், பேரிகை, தவிலோசை முழங்கின. துந்துமி வாத்தியங்கள் வெகுதூரம் வரை கேட்டன. விக்கினர்க்கும், லட்சுமிக்கும் காப்புக் கட்டிச் சடங்கு செய்தனர். ஓமகுண்டம் வளர்த்து மந்திரம் ஓதினர். முளைப்பாரியை முன்னே வைத்தனர். அம்மி போட்டு அரசாணி கட்டினர். ஆயிரம் நெய்விளக்குகளை ஏற்றி வைத்தனர். அக்கினியின் முன்னர் நாலு வேதம், ஆறு சாத்திரங்களை முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும் அறியுமாறு ஓதி, மாங்கல்யச் செப்பெடுத்து வேதியர்கள் வாழ்த்துக் கூறினர். பின் மாங்கல்யத்தைக் கோவலன் கையிற் கொடுத்துக் கன்னகையின் கழுத்தில் கட்டச் செய்தனர். பின்னர் அந்த மாங்கல்யச் செப்பில் மல்லிகைப்பூவை வைத்துக் கணவனுக்குத் தீங்கு வரும் பொழுது மல்லிகைப்பூ வாடிவிடும் என்று கூறிக் கன்னகையின் கையில் கொடுத்தனர். பின்னர் காப்பறுத்துச் சடங்கு செய்தனர். ஏழுநாட்கள் உரிய சடங்குகளைச் செய்தனர். இவ்வாறாக உள்ள மண நிகழ்ச்சிகளைக் கதைப்பாடல் விவரித்துள்ளதன் மூலம் கதைப்பாடல் எழுந்த கால கட்டத்தைய திருமண நிகழ்ச்சிகளையும், சடங்கு முறைகளையும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

## பரத்தமைச் சூழல்

சிலம்பு காட்டும் பரத்தமைச் சூழலுக்கும், இக்கதைப்பாடல் காட்டும் சூழலுக்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுகின்றது. ஒரேஒரு ஒற்றுமை என்னவெனில் மாதேவி பிற ஆடவருடனான தொடர்பின்றிக் கோவலன் ஒருவனுடன் மட்டுமே வாழ்ந்ததாகக் காட்டுவதுதான் என்று கூறலாம்.

---

*15.* "மாணிக்கக் கால்நாட்டி வயிரவளை தான்பரப்பி
அட்டகோணக் கால்நாட்டி ஆகாசப் பந்தலிட்டு
பவளநல்ல கால்நாட்டிப் பந்தலிட்டான் மாசாத்தான்
வயிரச்சல்லி பவளச்சல்லி மணவறையில் அலங்கரித்து
முத்துநல்ல சல்லிகொண்டு முகப்பிலேதான் கட்டலுற்றார்
அழகுபிச்சிக் கொழுந்தாலே யலங்கரித்தான் பந்தலிலே" *(390-395)*

கதைப்பாடல் காட்டும் பரத்தமைச் சூழல் இக்கதைப்பாடல் எழுந்த காலகட்டத்தில் சமுதாயத்தில் நிலவியிருந்த பரத்தமைச் சூழலைப் படம் பிடித்துக் காட்டும் ஓர் அமைப்பு என்று உறுதியாகக் கூறமுடியும். இக்கதைப்பாடல் காட்டும் பரத்தமையின் முக்கிய கூறுகளைக் கீழ்க்காணுமாறு குறிப்புகளாகத் தரலாம்.

1. பரத்தையர், சமூகத்தின் புரையோடிப் போன ஓர் அங்கமாகத் திகழ்ந்தனர்.
2. பருவமடைந்த ஒரு பரத்தை உடலை மூலதனமாக்கிப் பொருளீட்ட வற்புறுத்தப்பட்டாள்.
3. பரத்தையர்களுக்குக் கலைப்பயிற்சிகள் கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டன.
4. பரத்தையர் தாங்கள் கற்ற கலைகளைத் தெருக்களில் ஆடினர்.
5. இவர்களின் கலைகளைக் காணப் பல்வேறுபட்ட ஆடவர்களும் குழுமுதல் உண்டு.
6. தனக்குரியவனைப் பரத்தையர் தன் விருப்பப்படி தேர்வு செய்து கொள்ளும் உரிமை இருந்தது.
7. தம் மனங் கவர்ந்த மணவாளனைத் தன் மனைக்கு அழைத்துச் சென்று கணவன் போன்று வைத்து வாழ்ந்தனர்.
8. ஒரு நாளைக்கு இத்தனை பொன்பணம் தந்துவிட வேண்டும் என்று உறுதி வாங்கிக் கொள்ளுதலும் உண்டு[16].
9. ஆடவரைத் தங்கள் வசப்படுத்தி வைத்திருக்க வசிய மருந்து வைக்கும் வழக்கம் இருந்தது.
10. பொருளில்லா ஆடவனை வீட்டினின்றும் அடித்துத் துரத்தி விடுவர்[17].

என்ற இத்தகு நிலைகளைக் கதைப்பாடல் காட்டுகின்றது.

---

16. மாதேவி சொல்லுகிறேன் மன்னவரே கோவலரே நித்தம் ஆயிரத்தெண்கழஞ்சி பொன்னு மொருநாளைக் கஞ்ஞூறு சேலைகளும் தாய்தந்தை உறமுறைக்குத் தலைக்கெண்ணையும் படிச்செலவும் கொண்டு வந்தீரானால் கோவலரே வாருமென்றாள் இல்லையென்றால் போமென்றாள் (வரி: 675க்குப் பின்வரும் வசனம்)

17. "சவுக்கால்கட்டி யடிக்கச்சொன்னாள் மாதேவி தாய்க்கிழவி தீவினையால்
சீறினாள் மாதேவி சினத்துவிட்டாள் கோவலனை
சவுக்கா லடியும்பட்டான் தானழுதான் கோவலவன் (776-778)

## குழந்தை மணம்

பருவம் எய்திய பின்னரே கோவலன்-கன்னகை திருமண நிகழ்ச்சி நடைபெற்றதாகச் சிலம்பு காட்டுகின்றது. ஆனால் இக்கதைப் பாடலில் கன்னகை பருவம் எய்தா முன்னமே கோவலனுடன் மணமேடை ஏறியதாக நிகழ்ச்சிகள் காட்டப்பட்டுள்ளன. கன்னகை பத்து வயதாக இருந்தபொழுது நாள் குறிப்பிட்டு முகூர்த்தம் நடத்தப்பட்டது[18]. மணம் முடித்த இரண்டு ஆண்டுகள் கழித்துப் பன்னிரு வயதில் கன்னகை பருவம் எய்தினாள் என்கிறது கதைப்பாடல்.[19] அப்போது பதினாறு வயதுடையவனாகக் கோவலன் இருந்தான்[20]. குழந்தைப் பருவத்திலேயே, குறிப்பாகப் பெண் பருவமடையும் முன்னரே மணம் செய்து வைத்தல் சமுதாய நிலையாக இருந்தது. இந்நிலையே கதைப்பாடலிலும் பிரதிபலித்துள்ளது எனலாம்.

## வசிய மருந்து வைத்தல்

தான் எண்ணியதைச் சாதிக்கப் பிறரைத்தன் வசப்படுத்த வசிய மருந்து வைக்கும் பழக்கம் இருந்தது. இக்கதைப்பாடல், கேரள எல்லையை ஒட்டிய தென் மாவட்டங்களான நெல்லை, கன்னியாகுமரிப் பகுதிகளிலிருந்து திருவனந்தபுரம் கேரளப்பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் அடைக்கலமாகியுள்ளது. மந்திரம், மாந்திரீகம், வசியம், வசிய மருந்துத் தயாரிப்புகளுக்குப் பெயர் பெற்ற மலையாள எல்லைப் பகுதிகளிலிருந்தவரால் இச்சுவடி இயற்றப்பட்டிருப்பதால் வசியமருந்து தயாரிக்கும் முறைகள் மிக விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு கோவலன், கண்ணகி கதைப்பாடற் சுவடிகள் எவற்றிலும் காணப்படாத ஒரு சிறப்பமைப்பு என்று கூறலாம். வசியமருந்து தயாரிக்கும்

---

18. "பத்துநல்ல வயதானாள் பத்தினியாள் கன்னகையும்

. . . . . . . . . . . . .

கன்னகைக்குங் கோவலர்க்குங் கலியாணஞ் செய்யவென்றே
நாள்செய்தே முகிழ்த்தமிட்டு நல்லதொரு கோவலர்க்கு" *(376-385)*

19. "பன்னிரண்டு வயதானாள் பத்தினியாள் கன்னகையும்
திரண்டிருந்தாள் கன்னகையும் தேன்மொழியா ளிப்போது"
*(552-553)*

20. "மாசாத்தான் செட்டிமகன் வணிகேசன் கோவலவன்
பதினாறு வயதானான் பக்குவமோ தானானான்" *(549-550)*

முறைகளையும், வசியமருந்தின் வேகம் எத்தகையது என்பதையும், அன்னார் நடந்து கொள்ளும் முறைமைகளையும் இப்பகுதிகள் தெளிவாக விளக்குகின்றன.

## வசிய மருந்து தயாரித்த முறை

மாதேவியின் மனத்தை மாற்ற, கோவலனிடமிருந்து அவளைப் பிரித்தெடுக்க, கோவலன் மீது மாதேவி காட்டிய அன்பையும், பற்றையும், பரிவையும் சிதைக்க, மாதேவியின் அன்னையான தாய்க்கிழவி வசிய மருந்து தயாரித்தாள். வசிய மருந்து எவ்விதம் தயாரிக்கப்பட்டது என்பதற்கு இந்நூலிலுள்ள அகச்சான்றாகக் கீழ்க்காணும் பகுதியைக் கருதலாம்.

தாய்க்கிழவி மலையிலுள்ள பச்சிலைகளை யெல்லாம் வரவழைத்தாள். தலை மண்டைப்பித்து, சாரைப் பாம்பின் கரு, நல்லபாம்பின் கரு, நரிப்பித்து, நரி நகம், கழுகின் வலது தொடை, கட்டெறும்பு முட்டு, பச்சைப்பாம்பின் தலைவால், புறாவின் முட்டை, பச்சநாவிக் கொட்டை, பாசாணம், நரைபல்லி முட்டை, நாரையின் வலதுகண், கலைமானின் தலை மூளை, காட்டெருமைச் சவ்வு, கொடுவேலிவேர், நாயுருவி வேர், குறுந்தொட்டி வேர், செந்தட்டிவேர், செவ்வதலிக் கிழங்கு, காட்டிலுள்ள பச்சிலை, கண்ணுப்பிள்ளைவேர் மற்றும் கடைச் சரக்குகளைக் கூட்டி வசிய மருந்து தயாரித்தாள் (705-716) என உள்ளது.

இவற்றையெல்லாம் வைத்து வசிய மருந்து தயாரிப்பார்களா? அம்மருந்து உண்டவர்கள் மனவேறுபாட்டுடன் நடந்து கொள்வார்களா? அச்ச மூட்டுவதற்காக இத்தகு மருந்து செய்முறைகள் இவ்விதம் கூறப்பட்டுள்ளனவா? என்பவை ஆய்வின்முன் நிற்கும் கேள்விகளாகும்.

என்றாலும் இவ்வசிய மருந்து பட்ட தட்டைத் தொட்ட மாதேவி மன வேறுபாட்டுடன் கோவலனிடம் நடந்து கொண்டதைக் கதைப்பாடல் விவரிக்கின்றது (734-755). மருந்தின் வேகம் தணிந்தவுடன் மாதேவி கோவலனைத் திரும்பவும் மனையில் சேர்த்துக் கொண்ட பொழுது, தாய்க்கிழவி திரும்பவும் மாதேவிக்கு வசிய மருந்திடுகிறாள். திரும்பவும் மாதேவி கோவலனிடம் மனவேறுபாட்டுடன் நடந்து, ஆற்றில்தள்ளிக் கொல்லவும் துணிந்ததாகக் கதைப்பாடல் காட்டுகின்றது (769-886).

கானல் வரியால் பிரிவு நேர்ந்ததாகச் சிலம்பு கூற, இக்கதைப் பாடலிலோ வசியமருந்து காரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

### மதுரைப் பயணத்துக்கான காரணம்

கோவலனும் கன்னகையும் மதுரைக்குப் புறப்பட்டதற்கான காரணத்தைச் சிலம்பு கீழ்க்காணுமாறு குறிப்பிட்டுள்ளது.

**“சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்**
**குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த**
**இலம்பாடு நாணுத் தரும் . . . . .”[21]**

என்று கோவலன் கூறியதாக அமைந்துள்ளது. எனவே இழந்த பொருளைமீட்டு வாணிபம் செய்ய மதுரை சென்றதாகச் சிலம்பு மதுரைப் பயணத்துக்கான காரணத்தைக் குறிப்பிடுகின்றது. இக்கதைப்பாடலில் கோவலன் கன்னகையிடம் ‘மாதேவி மீது கொண்ட ஆசையினால் வீட்டில் வைத்திருந்த உடைமைகள் எல்லாவற்றையும் கப்பல்திரவியம், கனத்த ஆபரணங்கள் ஆகிய அனைத்தையும் வேசைக்குக் கொடுத்துவிட்டேன். இன்னமும் ஒரு மத்தளப் பணமும் ஒரு மரக்கால் பணமும் ஒருவருடம், ஆறுமாதத்திற்குள் கொடுத்துவிடுகிறேன் என்று மதுரைச் சொக்கர் மீது ஆணைவைத்து வந்துள்ளேன்’ என்று கூறியதாக உள்ளது (966-968, அடுத்துவரும் வசனமும்).

மாதேவியிடம் செல்வத்தை இழந்தாலும், கடனை அடைக்க வேண்டிய கட்டாயச் சூழல் காரணமாகவும் பொருள் ஈட்ட வேண்டிய தேவை கோவலனுக்கு ஏற்பட்டது. சிலம்பைக் காவிரிப்பூம்பட்டினத்தில் மதிப்பிட முடியாததால் மதுரைக்குப் பயணப்பட்டனர் என்றும் கதைப்பாடல் மதுரைப் பயணம் மேற்கொண்டதற்குப் புதிய காரணத்தைக் கூறுகின்றது[22]

### சொக்கர், மீனாட்சி–ஆண்டி, குறத்தி வேடங்கள்

இந்தச் சுவடியை எழுதிய நூலாசிரியர் மதுரைச் சொக்கர், மீனாட்சி மீது மிகுந்த பக்திகொண்ட சைவசமயப் பற்றாளராகத் திகழ்ந்திருக்க வேண்டும். இதற்கு இச்சுவடியிலேயே அகச் சான்றுகள் உள்ளன.

---

21. சிலப்பதிகாரம், உவே. சா. பதிப்பு, (1844), கனாத் திறமுரைத்த காதை, வரி : 69-71.

22. “வாங்கினான் பொற்சிலம்பை வணிகேசன் கோவலவன்
காவேரிப்பூம் பட்டணத்தே கனத்தசெட்டி கைக்கொடுத்தான்
விலைமதிக்கக் கூடலையே வீரமுள்ள பொற்சிலம்பை
என்றுசொன்னார் செட்டிமன்னர் ஏற்றமுள்ள கோவலர்க்கே
கன்னகைக்குச் சொல்லலுற்றான் கட்டழகன் கோவலவன்
வடமதுரைப் பட்டணத்தே வர்த்தவர்கள் கடைதனிலே
வித்துக் கொடுப்பேனான் வேசைமகள் கடன்தீர” (988-994)

**கோவலன், கோவலவன்** என்று கதைப்பாடல் குறிப்பிடும் கதைத் தலைவனின் பெயர் **கோபாலன்** என்ற கண்ணன் பெயரினின்று வந்திருக்கலாம். பேச்சு வழக்கில் கோபாலன் என்ற சொல் **கோவாலு, கோவாலன்** என்று இன்றும் பேச்சு வழக்கில் அழைக்கப்பட்டு வருதல் கண்கூடு. அவ்வாறாயின் கோவலன் வைணவ மரபில் வந்தவனாயிருத்தல் வேண்டும். ஆனால் சிலம்பில் அவன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவன் என்பதற்கான குறிப்பு எதுவும் காணப்படவில்லை. புகாரை விட்டு நீங்கியபொழுது, பல கோட்டங்களுக்கும் சென்று பல கடவுளரையும் வணங்கிய பொது நிலையே காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சுவடி ஆசிரியர் கோவலன் மதுரைச் சொக்கர் மீது பக்தியும், நம்பிக்கையும் கொண்டதாகக் காட்டுகிறார். ஆசிரியர் தாம் கொண்டிருந்த பக்தியைத் தம் கதைப் பாத்திரத்தின் மீது ஏற்றிக் கூறியுள்ளார் என்றே இதனைக் கருத வேண்டியுள்ளது.

கோவலன் மாதேவியிடம் கடன்பட்டுக் கன்னகையிடம் திரும்பினான். கன்னகையிடம் தன் நிலை கூறிப் புலம்பினான். “கும்ம கும்மலாகக் குவிந்த திரவியம் போக ஒரு மத்தளப் பணமும் ஒரு மரக்கால் பணமும் ஒரு வரிடம் ஆறு மாத்தையில் குடுக்குறேன் என்று **மருதைச் சொக்கர் மீது ஆணையிட்டதின்** பிறகு வந்தேனே கன்னகையே ” (வரி 968-க்குப்பின் உள்ள வசனம்) என்பது அப்புலம்பல் மொழி. காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள கோவலன் மதுரைச் சொக்கர் மீது ஆணையிட்டு ஒரு வருடம், ஆறு மாதத்தில் கடனைத் தந்து விடுவதாகக் கூறினான். இது, நூலாசிரியர் மதுரைச் சொக்கர் மீது கொண்ட பக்தியைப் புலப்படுத்துகிறது. கோவலன் மதுரைச் சொக்கர் மீது பக்தி வைத்திருந்தான் என்று நேரடிப் பொருள் காணுதல் தவறானதாகவே அமையும்.

ஆசிரியர் தன் கதைப்பாடலில் மதுரைச் சொக்கர்-மீனாட்சியைக் கதைப்பாத்திரமாகவே படைத்து உலவவிட்டுள்ள தன்மையையும் காணமுடிகின்றது.

சிலம்பு விற்க மதுரை நகருக்குள் நுழைய எண்ணுகிறான் கோவலன். அவன் பொருட்டு மதுரை நகர் எரியும் என்பதால் அவனைத் தடுத்துத் திருப்பி அனுப்ப மதுரைச் சொக்கர் ஆவன செய்கிறார். தானே ஓர் ஆண்டி போன்று வேடமிட்டுக்கொண்டு வந்து தடுத்துப் பேசுகிறார். சொக்கர் ஆண்டி வேடம் பூண்ட கோலம்,

**"சடைதுலங்க முடிதுவளச் சாத்திவிட்டார் வெண்ணீத்தால்**
**ஒட்டியாணம் ருத்திராச்சி ஒருகாலே தானணிந்தார்**
**கமண்டலமும் பொற்பிரம்பும் கைப்பிடித்த தொன்றுக்கம்பும்**
**சுரைக்குடுக்கை தோள்போட்டார் சுருக்குப்பையைத்**
**தோள்போட்டார்**
**கஞ்சாநல்ல குடுக்கையல்லோ கையெடுத்தார் சொக்கருமே**
**கோல்கொண்ட சொக்கருமே கோவில்விட்டு வெளியானார்"**
**(1170-1175)**

என அமைகிறது. சுவடி எழுதப்பட்ட காலகட்டத்தில் ஆண்டிகளின் கோலப் பொலிவையே சொக்கரின் ஆண்டி வேடம் காட்டுகிறது.

எதிர்ப்பட்ட கோவலனிடம் ஆண்டிச் சொக்கர்,

**"பழிகொடுக்கப் போகாதே பாண்டியனார் மதுரையிலே**
**வந்தவழி போய்ப்பிழைநீ வணிகேசா கோவலவா"**
**(1178-1179)**

என்று அறிவுரை கூறினார். கோவலனோ, கஞ்சாக் குடிமயக்கம் தலைக்கேறியதோ என்றும், பைத்தியமோ, பறிக்க வந்த கள்ளனோ என்றும் கூறி ஆண்டியின் கம்பைப்பிடுங்கிக் கமண்டலம், சுரைக்குடுக்கை, கஞ்சாக்குடுக்கை ஆகியவற்றையெல்லாம் அடித்துடைத்து, அவரையும் அடித்தான் அடி பொறுக்க முடியாமல் ஆண்டிச் சொக்கர் ஓடிவிட்டார் (1183-1190) என்று கதைப்பாடல் ஆசிரியர் அமைத்துள்ள இக்காட்சிகள் நகைப்பை விளைவிப்பனவாகவும், நம்ப இயலாதனவாகவும் உள்ளன. ஆனால் ஆசிரியர் மதுரைச் சொக்கர் மீது கொண்ட பக்தியையும், பற்றையும் வெளிப்படுத்தும் நிகழ்ச்சியாக இது அமைந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சொக்கர் ஆண்டி வடிவெடுத்து வந்து கோவலனுக்குப் புத்தி கூறியும் கேட்காத அவனிடம் அடி வாங்கிக் கொண்டு வந்தார். அதன்பின் மீனாட்சியிடம் நடந்ததை அறிவித்தார் சொக்கர். உடனே மீனாட்சி குறத்தி வடிவம் எடுத்துக் கொண்டு கோவலனுக்குப்புத்தி சொல்லி அவனை மதுரை நகருக்குள் நுழையாமல் தடுக்கப் புறப்பட்டாள் இவ்வாறு ஆசிரியர் மீனாட்சியையும் தன் கதைப்பாடலில் ஒரு பாத்திரமாகப் படைத்து உலவவிட்டுத் தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார். மீனாட்சி கொண்ட குறத்திவடிவம்,

**"கரியமணிப் பாசியல்லோ கழுத்திலிட்டாள் கட்டுவடம்**
**காதிலே தோடணிந்தாள் கனத்தநெத்திச் சுட்டியிட்டாள்**
**கோதிநல்ல குழல்சொருகிக் குப்பித்தொங்கல் மேல்போட்டாள்**
**மார்மேலே வடமுங்கட்டி வர்ணநல்ல துயிலுடுத்தாள்**
**குறத்தியைப்போல் வேசங்கொண்டாள் கொம்பனையாள்**
**மீனாட்சி" (1124-1128)**

என அமைந்துள்ளது. குறத்தி குறிசொல்லுவது போன்று, நடக்க இருக்கும் ஆபத்தை எடுத்துரைத்து அறிவுரை சொன்னாள் மீனாட்சி.[23] ஆனால் கோவலனோ அவள் கொண்டுவந்த கூடையைப்பிடுங்கிக் கூன் முதுகில் அடித்து விரட்டினான்.

கதைப்பாத்திரங்களுடன் பாத்திரமாகப் பிற கதைப் பாத்திரங்களுடன் உரையாடுபவர்களாக, கதைநிகழ்ச்சியில் பங்கெடுப்பவர்களாக, கதைப் போக்குக்கும், நிகழ்ச்சி மாற்றங்களுக்கும் காரணமானவர்களாகச் சொக்கர், மீனாட்சி பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன.

கோவலன் மாண்ட செய்தியறிந்த கன்னகை, சொக்கர்-மீனாட்சி கோயில் சென்று தவம் செய்தாள். தவ அக்கினியைப் பொறுக்க இயலாத சொக்கர், மீனாட்சியிடம் சொல்ல, மீனாட்சி கன்னகையின் முன் தோன்றினாள். கன்னகை மீனாட்சியிடம் கடும் வாதம் செய்தாள். மீனாட்சியை எரித்து விடுவதாகவும் மிரட்டுவதாகவும் அமைந்துள்ளன பாடல் வரிகள்.

**"என்கழுத்து யிருந்தாப்போ லுன்கழுத்து மிராதோமீனாட்சி**
**என்கணவன் மாண்டாப்போ லுன்கணவன் மாளாரோ**
**மன்னவனார் கணவனைத்தான் வரவழைநீ கோவலனை**
**அல்லவென்றால் மீனாட்சி யக்கினியா யெரிப்பேன்நான்"**
**(2322-2325)**

உடன் மீனாட்சி கன்னகையிடம், 'செத்தவன் பிழைப்பதுண்டோ தென்மதுரைப் பட்டணத்தே' (2328) என்று கூறிச் சொக்கரும்,

23. "சொல்லுகிறேன் கோவலவா சோதினையள் உள்ளதெல்லாம்
பொற்சிலம்பு கொண்டல்லவோ-யிந்தப்-பொன்மதுரை
விக்கவந்தாய்
வர்ணமணிச் சிலம்புகொண்டே-யிந்த-வடமதுரை விக்கவந்தாய்
கள்ளனென்றே பிடிப்பார்கள் கனமதுரைப் பாண்டியர்கள்
பழிகொடுக்க வந்தாயோ பாண்டியன்தன் மதுரையிலே
வந்தவழி போய்ப்பிழைநீ வணிகேசா கோவலவா" (1131-1136)

தானும் ஆண்டி, குறத்தி வேடங்கள் பூண்டு வந்து கோவலனுக்கு அறிவுரை கூறி மதுரை நகருக்குள் அவன் நுழைவதைத் தடுத்ததையும், அதைக் கேளாமல் மதுரைநகர் நுழைந்து அவன் களவுப் பழி ஏற்றுக் கொலைக்களப் பட்டதையும் கன்னகைக்கு எடுத்துரைத்தாள் மீனாட்சி. மூன்றே முக்கால் நாழிகை கோவலன் திரும்ப உயிருடன் எழுந்து பேசுவதற்குச் சொக்கரிடம் வரம் பெற்று வந்து அவ்வரத்தைக் கன்னகைக்கு மீனாட்சி அளித்தாள். உயிருடன் எழுப்பப் பொன்னூசி, பொற்சரடு, பொற்பிரம்பு, கமண்டலநீர் ஆகியவற்றை அளித்தாள் *(2328-2338)*. இவ்வாறு பிற கதைப்பாத்திரத்துடன் உரையாடும் ஒரு பாத்திரமாகத் தெய்வப் பாத்திரங்களைப் படைத்துக் காட்டியுள்ளதற்குக் கதைப் பாடலாசிரியர் சொக்கர்-மீனாட்சி மீது கொண்ட அளவிறந்த பக்தியும் பற்றும் காரணம் எனலாம்.

கோவலன் கொலையுண்ணப்படுவதற்கு முன் தாகத்தால் வருத்தமடைந்த பொழுது சொக்கரின் ஆணைப்படி மீனாட்சி வைகைநதியைத் திருப்பிவிட்டுத் தாகம் தீர்த்தாள். அந்நதி 'கிக்கிந்தா நதி' என்று பெயர் பெற்றுப் பாவமெல்லாம் தீர்க்கும் பாக்கியமுடைய புண்ணிய நதியாகத் திகழ்ந்ததாகப் புராணங்கள் கூறுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது *(1922-1930)*.

இவ்வாறு சொக்கர்-மீனாட்சி பாத்திரப்படைப்புகள் கதைநிகழ்ச்சிகளை வளர்க்கவும் கதைப் போக்கை மாற்றவும் திருப்பவும் வல்ல பாத்திரப்படைப்புகளாகச் சிறப்புறத் திகழ்கின்றன.

**சத்தியங்கள் செய்தல்**

குற்றவாளி என்று பிடிக்கப்பட்டவர், தாம் குற்றமற்றவர் என்று நிரூபிக்கச் சத்தியம் செய்யும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. இந்த வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிலம்பில் இல்லாத, 'கோவலன் சத்தியங்கள் செய்தல்' என்ற நிகழ்ச்சி இக்கதைப்பாடலில் இணைக்கப்பட்டுள்ளது எனலாம். கோவலன் சிலம்பைத் திருடவில்லை என்பதைப் பாண்டிமாதேவி கூறியனுப்பிய பின் பாண்டிய மன்னன் கோவலனை விடுவித்து விட எண்ணினான். ஆனால் வன்னித்தட்டானோ விடாப்பிடியாகச் சத்தியங்கள் செய்து குற்றமற்றவன் என்று நிரூபித்த பின் விடலாம் என்று கூறினான். அதன்படி பாம்புச் சத்தியம், மழுச்சத்தியம், வேங்கைச் சத்தியம், ஆனைச்சத்தியம் ஆகிய நான்கு சத்தியங்கள் செய்யவும் வன்னித்தட்டான் ஏற்பாடுகள் செய்தான்.

### பாம்புச் சத்தியம் செய்தல்

குடத்தினுள் கொடிய நாகப்பாம்புகளைப் போட்டு அக்குடத்தினுள் வெள்ளியுருண்டை, தங்க உருண்டை, பொன் னுருண்டை ஆகியவற்றைப் போட்டுப் பாம்பிடம் கடிபடாமல் அவ்வுருண்டைகளை வெளியே எடுத்தல் பாம்புச் சத்தியம் செய்தலாகும். பாம்பு கடித்து விட்டால் அவன் குற்றவாளி என்று தீர்மானிக்கப்படும். வன்னித்தட்டான், தானே நேரடியாகக் குயவனிடம் சென்று அவனுக்குக் கையூட்டுத் தந்து, கைவிட்டால் வெளியே எடுக்கமுடியாத குடம் செய்து வாங்கினான். பாம்புப் பிடாரனுக்கும் கையூட்டுத் தருவதாய் வாக்களித்துக் கொடிய பாம்புகளைப் பெற்று வந்தான் (1398-1435). கற்பரசி கன்னகையை மனத்தில் நினைத்துக் கொண்டு கோவலன் பாம்புக் குடத்தில் கைவிட்டுப் பாரஉருண்டைகளை எடுத்தான். செந்நாகப் பாம்பு செங்கழுநீர்ப் பூவாக ஆனது; கருநாகப் பாம்பு கட்டி மாலையானது என்கிறது கதைப்பாடல் (1449-1455).

### மழுச்சத்தியம் செய்தல்

பாம்புச் சத்தியத்தில் கோவலன், தான் குற்றமற்றவன் என்று நிரூபித்து விட்டவுடன் அவனை மழுச் சத்தியம் செய்ய வைக்குமாறு வன்னித்தட்டான் வற்புறுத்தினான்; மன்னனும் ஆணையிட்டான். கன்னகையை மனத்தில் எண்ணிக் கொண்டு கோவலன் கொதிக்கக் காய்ச்சிய மழுவைக் கையிலெடுத்து மழுச்சத்தியத்திலும் தான் நிரபராதி என்பதை நிரூபித்தான்.

### வேங்கை, யானைச் சத்தியங்கள் செய்தல்

வேட்டைக்காரரிடம் நாகமலையில் பதினாறடி வேங்கையைப் பிடித்து வருமாறு வன்னித்தட்டான் ஏற்பாடு செய்தான். இதற்குக் கையூட்டாகப் பாம்புப்பிடாரன், குயவன், மழுவைத் துருத்தியிட்டவனுக்குத் தந்தது போன்று வேட்டைக்காரன் தலைக்கு மகுடமும் மனைவிக்குச் சந்திரகாவிச் சேலையும், கொண்டைக்குப் பொன்குப்பியும், காரியத்தை முடித்துத் தந்தால் ஆயிரம் பொன்னும் தருவதாக வன்னித்தட்டான் கூறினான். பிடிபட்ட வேங்கையைப் பத்தையத்தில் அடைத்துக் கொண்டு வந்தனர். செவ்வேங்கைப் பத்தையத்தில் கோவலனைப் போடச் சொன்னார்கள். பத்தினி கன்னகையை மனத்தில் எண்ணிக் கொண்டிருந்த கோவலனை வேங்கை எதுவும் செய்யவில்லை.

அடுத்ததாக, மதங்கொண்ட யானையைவிட்டுக் கோவலனைக் கொல்ல ஏற்பாடு செய்து பாண்டியனிடம் அனுமதியும் பெற்றான் வன்னித்தட்டான். யானைக்கு மதமூட்டிய விதம் அக்கால வழக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**“ஆனைக்கே மதமேத்த அஞ்சுதுலாங் கஞ்சாயிலை**
**வேணுமென்றான்**
**முன்னூறுதுலா மாதளம்பூ முன்னூறுகுத்தி சாராயம்**
**வேணுமென்றான்**
**ஆறுசேர் மாசியமும் நூறுகட்டுப் புகயிலையும்**
**கடைச்சரக்கு கூட்டியல்லோ கவளமிட்டான் ஆனைக்குத்தான்”**
***(1592-1595)***

என அமைந்துள்ளது.

மாவுத்தனைக் கொன்று விட்டு மதம் பிடித்துவரும் யானையின் முன், பத்தினி கன்னகையை நினைத்துக் கொண்டு கோவலன் நிற்க, ஞானக்கண் கொண்டு பார்த்த யானை இத்தகு இழிசெயலுக்குக் காரணமான வன்னித்தட்டானைக் கொல்லத் துரத்தியது. அவன் அகழியில் சென்று விழுந்தான். இவ்வாறு அனைத்துச் சத்தியங்களிலும் கன்னகையை எண்ணிக் கொண்டு கோவலன் வென்று, தான் நிரபராதி என்பதை நிரூபித்தான். இத்தகு சத்தியங்கள் செய்த முறை கதைப்பாடல் எழுந்த காலகட்டத்தில் இருந்த நடைமுறை வழக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது எனலாம். குற்றமற்றவனுக்கு நெருப்பாகிய இயற்கைச் சக்தியும், பாம்பு, வேங்கை, யானை ஆகிய ஐந்தறிவு உயிரினங்களும் தீங்கு விளைவிக்காது என்ற, மக்கள் மத்தியில் இருந்த நம்பிக்கையின் அடிப்படையில் இத்தகு சத்தியங்கள் செய்கின்ற வழக்கங்கள் அமைந்திருக்க வேண்டும்.

**மாதேவி-உடன் கட்டை ஏறல்**

கோவலனின் படுகளத்தைக் கன்னகையாள் கண்டாள். மீனாட்சி அளித்த பொன்னூசி, பொற்சரடு, பொற்பிரம்பு, கமண்டலநீர் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கோவலனை உயிருடன் எழுப்பினாள். ‘மாதேவியோ ? கன்னகையோ ? வந்தது யார்?’ என்று கேட்டுக் கொண்டே கோவலன் எழுந்தான். ‘மாதேவி ஆசையின்னம் மறக்கலையோ கோவலவா’ என்று கேட்டு வருந்தினாள். நடந்த நிகழ்வுகளைக் கோவலன் வாய்மொழி மூலமும் அறிந்த கன்னகை பழிவாங்க வீறு கொண்டாள். மூன்றே

முக்கால் நாழிகையில் கோவலன் திரும்ப இறந்ததும் அவனை அடக்கம் செய்வதன் முன் மாதேவிக்கு ஓலையில் காக்கை மூலமாகச் செய்தியனுப்பினாள் கன்னகை. செய்தியறிந்த மாதேவி படுகளம் வந்தாள். கோவலன் இறந்ததற்குக் காரணம் மாதேவி என்று கன்னகையும், கன்னகைதான் என்று மாதேவியும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிச் சககிழத்திச் சண்டையிட்டனர். காட்டில் வாழ்ந்த முனிவர் சமாதானம் செய்து வைத்தார். பின் விறகுகள் சேகரித்து நெருப்பு மூட்டிச் சிதைக்குத் தீ மூட்டினர். கன்னகையைப் பழிவாங்குமாறு கூறிவிட்டு மாதேவி உடன்கட்டை ஏறினாள். மாதேவியின் உடன்கட்டையேறல் நிகழ்ச்சி அக்கால வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கதைப்பாடலில் இடம் பெற்றுள்ளது எனலாம். மனைவி என்ற நிலையை அடையாத மாதேவி உடன்கட்டை ஏறினாள் என்பது நெருடலாக உள்ளது. குழந்தை பெற்ற பெண்டிர் உடன்கட்டை ஏறுதல் இல்லை. மாதேவி குழந்தை பெற்ற செய்தி கதைப்பாடலில் கூறப்படவில்லை ஆதலால் அவள் உடன்கட்டை ஏறினாள் என்று அவள் கதை முடிக்கப்பட்டுள்ளது என்று கூறலாம்.

## கற்புச் சிறப்பு

"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்பது சிலப்பதிகாரம் வெளிப்படுத்தும் ஒரு முக்கியக் கருத்தாகும். பத்தினிப் பெண்ணுக்குச் சிறப்பு கற்புடைமையால் ஏற்படுவதாகும். கற்பின் சிறப்பையும், மாண்பையும், பெருமையையும் சிறப்பித்துக்கூறும் பல நிகழ்ச்சிகளை இக்கதைப்பாடலும் உட்கொண்டுள்ளது.

## கற்பரசிகளுக்கு இயற்கை கட்டுப்படும்

காவிரி அணை கட்டுவதற்காக வானம் தோண்டும் பொழுது, ஊற்றுநீர் பெருக்கெடுத்தது. ஊற்றுநீர் அடைக்கக் கற்புடைப் பெண்ணால்தான் இயலும் என்று மாசாத்தான் கூறினான்[24]. சோழநாட்டுப் பட்டத்தரசி சுந்தரியால்தான் ஊற்றுநீரை அடைக்க இயலும் என்று சுந்தரி வரவழைக்கப்பட்டாள். தான் உத்தம பத்தினியானால் ஊற்றுநீர் அடைபடவேண்டும் என்றும்,

---

24. "கருப்புநிலை நீதியினால்-கெங்கைக்-கல்நாட்ட வேணுமய்யா
ராசகற்பு நீதியினால்-கொள்ளிடங்-கல்நாட்ட வேணுமய்யா"
(83-84)

இல்லையெனில் நரபலியாகத் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறும், தன் கற்பும் கெங்காதேவி கற்பும் ஒவ்வாதோ என்றும் சுந்தரி கெங்காதேவியிடம் வாதிடுகிறாள். கற்புக்கரசி சுந்தரியை எதிர்க்கத் துணியாத கெங்காதேவி ஊற்று நீர் அடைத்தாள் என்கிறது கதைப்பாடல்[25]. கற்பரசிகளுக்கு இயற்கையும், தெய்வமும் கட்டுப்படும் என்ற கருத்தை மையமாகக் கொண்டு கதைப்பாடலில் இந்நிகழ்ச்சி அமைக்கப்பட்டுள்ளது. 'அணைகட்டும் முன் கற்பரசியை நரபலி கொடுத்தால் அணைகட்ட இயலும்; அணை உடையாமல் பல ஆண்டுகள் உறுதியாய் நிற்கும் என்ற நம்பிக்கை இருந்திருக்க வேண்டும். அணை கட்டும் முன் நரபலி தரும் வழக்கமும் இருந்திருக்க வேண்டும். இந்த அடிப்படைகளில் இந்நிகழ்ச்சி அமைக்கப் பட்டுள்ளது என்றும் கருத இடமுள்ளது.

## கற்பரசிகளுக்கு ஊர்வன, பறப்பன, விலங்குகளுடன் தெய்வமும் கட்டுப்படும்

கைவிட்டால் கையெடுக்க இயலாத குடத்தினுள் நச்சுப்பாம்புகளான கருநாகம், செந்நாகம், தெளிப்பாம்பு, மணிப்பாம்புகளை விட்டு அதனுள் வெள்ளி, தங்க உருண்டைகளையும் போட்டுக் கைவிட்டு எடுத்து, தான் குற்றமற்றவன் என்று நிரூபிக்குமாறு கோவலன் வற்புறுத்தப்பட்டான். கற்பரசி கன்னகையை எண்ணிக் கொண்டு கைவிட்டவுடன் பாம்புகள் கோவலனைக் கடிக்கவில்லை. அத்துடன் அவை செங்கழுநீர்ப் பூவாகவும், கட்டிமாலையாகவும் மாறி விட்டதாகவும் கதைப்பாடல் கூறுகின்றது (1449-1454). கற்பின் வலிமைக்கு ஊர்வன கட்டுப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் கற்பின் மேன்மையையும், சிறப்பையும் வலியுறுத்திக் காட்டவும் இந்நிகழ்ச்சி அமைக்கப்பட்டுள்ளது.

---

25. நான்-பத்தினியே யாமாகில்-சோழன்-பத்தாவும் ஆமாகில்
என்னையுந் தள்ளிவிட்டால் ஏத்துக்கோ பழியையென்றாள்
அப்போது கெங்கையரு மாச்சரியப் பட்டுநின்றாள்
உன்மேல் சாவேனென்று உத்தமியாள் தான்துணிந்தாள்
உன்கற்பு மென்கற்பு மொவ்வாதோ பாருமென்றாள்
அப்போது கெங்கையரு மாச்சரியப் பட்டுநின்றாள்
உன்னோடே தானெதிர்க்க உத்தமியே மாட்டேனென்றாள்
உத்தமியாள் கெங்கையம்மை ஊத்துநீ ரடைத்து விட்டாள்"
(117-125)

கோவலன் இறந்த செய்தியறிந்து கன்னகை வைகைநதி கடந்து மதுரை நகர் நோக்கி வரும் பொழுது கெருடன், தன் மதலையைக் கொன்ற பழிவாங்கவே, வன்னித்தட்டான் விளக்கமிட்டுக் காயவைத்த பாண்டிமாதேவி கொப்புலிங்கியின் சிலம்பைக் கவர்ந்து சென்று, நாகமலைப்புற்றில் ஒளித்து வைத்துள்ளதாகவும், தக்க தருணத்தில் அச்சிலம்பைத் திரும்ப வந்து ஒப்படைப்பதாகவும் குஞ்சைக் கொன்ற வன்னித்தட்டான் மகனைப் பழிவாங்கும்படியும் கன்னகையிடம் கூறுகின்றது (2181-2195). கெருடன் கன்னகையிடம் உரையாடிய இந்நிகழ்ச்சி கற்பரசிக்குப் பறவையும் துணைபுரியும் என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்து, கற்பின் வலிமையை எடுத்துக் காட்டுகின்றது.

கோவலன் வேங்கைச் சத்தியம், யானைச் சத்தியம் செய்தலுக்கு உட்படுத்தப்பட்டான்; வேங்கைப்பத்தயத்தில் நுழைந்து வெளிவருமாறு பணிக்கப்பட்டான்; கயிற்றால் கட்டி வேங்கைக் காலின் முன்னே கோவலனைத் தள்ளி விட்டான் வன்னித்தட்டான். அப்போது கோவலன் கன்னகையை நினைத்தான். பத்தினியை நினைத்துக் கொண்டு பத்தயத்தில் நுழைந்தான் கோவலன்.

> **"ஞானக்கண் கொண்டுதய்யோ நல்லமலை வேங்கையுந்தான்**
> **குத்தமில்லை யென்றறிந்தே கொம்பைக்காட்டு மலைவேங்கை**
> **அத்துதய்யோ கயத்தையல்லோ அச்சிணமே**
> **வெளியானான்"** **(1551-1553)**

என்று காட்சி விவரிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்றே யானைச் சத்தியம் செய்யும் பொழுதும், கன்னகையைக் கோவலன் மனத்தில் நினைத்தான். யானை ஞானக் கண்கொண்டு பார்த்துக் குற்றமற்றவன் கோவலன் என்றறிந்து, வன்னித்தட்டானைக் கொல்லத் துரத்தியது (1618-1622). விலங்குகளும் கற்பரசிக்குக் கட்டுப்படும் என்று வலியுறுத்துவதாக இத்தகு நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. கற்பின் வலிமையையும், பெருமையையும் எடுத்துக்காட்டும் இத்தகு நிகழ்ச்சிகள், 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்' என்ற கொள்கையை உடன்பாடாகக் கொண்டு இக்கதைப் பாடலும் கற்பை உயர்த்திக் காட்டுவதற்குப் பயன்படுத்தியுள்ளது எனலாம்.

கற்பரசிகளுக்குத் தெய்வமும் ஏவல்புரியும் என்பதற்கேற்பக் கன்னகையின் தவத்தீயால் தாக்குண்டு சொக்கர் துயருற்றதாகவும்,

அதுகண்ட மீனாட்சி கேட்கும் வரம் தருவதாக வாக்களித்து, அதன்படி கோவலனை உயிர்ப்பிக்கப் பொன்னூசி, பொற்சரடு, கமண்டல நீர் அளித்ததாகவும் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

## சோதிட, வேதியர்களின் பங்கு

சோதிடத்தையும், சோதிடர்களையும் மிகுதியும் சார்ந்தவர்களாக மன்னனும், மக்களும் இருந்தனர். குழந்தை பிறத்தல், பருவமுறல், மணம் செய்தல் போன்ற நற்காரியங்களின் போதும், கொலைப்பழி போன்ற தீயகாரியங்களின் போதும் சோதிடம் பார்த்து அதன்படியே செயல்பட்டனர். சமுதாயத்தைச் சோதிட நம்பிக்கை 'சிக்' கெனப் பற்றியிருந்தது என்பதற்குப் பல நிகழ்ச்சிகளைச் சான்றாகக் காட்டலாம்.

கன்னகை பிறந்தவுடன் பாண்டிய மன்னன் தன் மகளின் பிறந்த நேரத்தைக் கணிக்குமாறு சோதிடர்களிடம் கூறினான். ஐந்து வேதியர்கள் நேரம் கணித்துப் பார்த்தனர். குழந்தை பிறந்த நேரப்படி,

1. பெற்றெடுத்த தாயார்க்கு ஆகாது,
2. தந்தைக்கும் ஆகாது,
3. உற்றார், உறவுமுறையினருக்கு ஆகாது,
4. குழந்தை மூன்றே முக்கால் நாழிகை உயிருடன் பிழைத்து இருந்தால், நாடு முழுவதும் இரணகளமாகி அனைவரும் செத்து மடிவர் என்றும், மதுரைப் பட்டணமும் தீயில் பொசுங்கி அழிந்துவிடும்

என்றும் தெய்வப் பிராமணர்கள் கூறினர். உடன், பாண்டிய மன்னன் மந்திரிமார்களுடன் ஆலோசனை நடத்திக் குழந்தையைப் பெட்டியில் வைத்து வைகை ஆற்றில் புதைத்து விட்டான் (309-315 அடுத்துள்ள வசனமும்). எதிர்காலத்தில் நடக்க இருப்பதை அறிந்து சொல்பவர்கள் சோதிடர்கள் என்ற நம்பிக்கை ஆழமாக ஊடுருவியிருந்ததால் அன்னாரின் வாக்குப்படியே அரசனும் நடந்தான். ஆக, அடுத்து நடக்க இருப்பதை நிர்ணயிப்பவர்களாகச் சோதிடர்கள் திகழ்ந்தனர். குழந்தை மதுரை மாநகரிலேயே இருக்கக் கூடாது என்று ஆற்றில் புதைக்கப்பட்டது.

பெண் பருவமடைந்த பொழுது, சடங்கு முறைகளையும் நன்னேரம் பார்த்து நடத்தி வைத்தனர். மாதேவி பருவமடைந்த

பொழுது நாளும் முகூர்த்தமும், லக்கனமும் பார்த்துப் பந்தலிட்டுச் சடங்குகள் செய்தனர். (480-481)

மணச் சடங்குகளையும் நேரம் பார்த்துச் செய்தனர். கோவலன்- கன்னகை திருமணத்தின் போது நாள் தேர்ந்தெடுத்து, முகூர்த்தம் குறித்து மணவினைகளை நடத்தினர் (385).

இவ்வாறு நற்காரியங்களின் போது சோதிடம் பார்த்தது போல, தீய காரியம் செய்த பொழுது அதற்குப் பரிகாரம் செய்வதற்கும் சோதிடர்களாகிய பார்ப்பனர்களை அணுகிக் கேட்டனர். மாசாத்தான் சூரன் என்பானைக் கள்வன் எனக் கருதி, சூரன் கொல்லப்படக் காரணமாக ஆனான். இதனால் நேர்ந்த பழி, பாவத்தைப் போக்க வேதியர்களை அழைத்துக் கேட்டான் மாசாத்தான்.

**"அப்போது பாப்பாரும்-பாவம்-அமுதிட்டால் போகுமென்றார்**
**ஆயிரம்பேர் பாப்பாருக்கு அமுதிட்டான் மாசாத்தான்**
**வஸ்திரதானம் சொர்ணதானம் மாசாத்தான் மிகக்**
**கொடுத்தான்"(223-225)**

செய்ய வேண்டிய காரியங்களை நிர்ணயிப்பவர்களாகப் பார்ப்பனர்களாகிய சோதிடர்கள் திகழ்ந்தனர்.

அடுத்து வர இருக்கும் தீமைக்கு முன்கூட்டியே அடையாளம் தருவதும் வேதியச் சோதிடர்களின் பணியாக இருந்தது. கோவலன்-கன்னகை திருமணத்தின் போது திருமணத்தைச் செய்து வைத்த அந்தணர்கள் திருமாங்கல்யச் செப்பில் மல்லிகைப்பூவை வைத்துக் கன்னகையின் கையில் கொடுத்தனர். அடுத்து வர இருக்கும் தீமையை மல்லிகைப்பூ மூலம் அறிய முடியும் என்று சொல்லியும் கொடுத்தனர். மன்னவர்க்கே தீங்கு வந்தால் இந்த மல்லிகைப்பூ வாடும் என்று அடையாளம் காட்டிக் கொடுத்தனர் (419). அதன்படி மதுரையில் கோவலன் சிலம்பு விற்கச் சென்றவுடன் மங்கிலயச் செப்பிலிருந்த மல்லிகைப்பூ வாடியது.[26] எதிர் வரும் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே அறிந்து

---

26. "மன்னவர்க்கு மெந்தனக்கும் மங்கிலியம் பூட்டையிலே
மன்னவர்க்கே தீங்குவந்தால்-இந்த-மல்லிகைப்பூ வாடுமென்றார்
வாழ்த்தியே கைக்கொடுத்தார் மல்லிகைப்பூ வேதியரும்
மங்கிலியச் செப்பில்வைத்தேன் மல்லிகைப் பூசைசெய்தேன்
வாடாத மல்லிகைப்பூ வாடுதெடி யாச்சியம்மா
என்றுமே தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையும்" (2054-2059)

சொல்லும் சோதிடர்களாக அந்தணர் இருந்ததையும் அவர்களின் கணிப்புப்படிதான் நல்லவை, கெட்டவை நடந்தன என்று மக்கள் நம்பியதையும் அறிய முடிகின்றது. ஆக, நாட்டு மன்னனாயினும் சரி, மக்களாயினும் சரி, நடக்கும், நடக்க இருக்கும் நன்மையாயினும் சரி, தீமையாயினும் சரி, அனைத்தையும் நிர்ணயிப்பவர்களாக, மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளுக்குக் காரணகர்த்தாக்களாகப் பார்ப்பனச் சோதிடர்கள் திகழ்ந்தனர். கதை எழுதப்பட்ட காலகட்டத்தில் இருந்த நாட்டு நடப்பைப் படம் பிடித்துக் காட்டுவதாக இத்தகு நிகழ்ச்சிகள் கதைப்பாடலில் இடம் பெற்றுள்ளன எனலாம்.

### வன்னித்தட்டானின் மிகு அதிகாரம்

பாண்டிய மன்னனை விடவும் மிகு அதிகாரம் உடையவனாகவும் மன்னனுக்கு ஆலோசனை கூறும் மந்திரி போன்றும், அடுத்து நடக்க இருப்பதைத் தீர்மானம் செய்து செயல்படுத்தி வைப்பவனாகவும் வன்னித் தட்டான் படைக்கப்பட்டுள்ளான்.

பாண்டிமாதேவி கொப்புலிங்கி, கோவலன் குற்றமற்றவன் என்று அவனை விடுவித்து அனுப்புமாறு கூறியனுப்பிய பின்னும், வன்னித்தட்டானின் பேச்சைக் கேட்டு, கோவலனைச் சத்தியங்கள் செய்ய வைக்க உடன்பட்டான் மன்னன். ஒவ்வொரு சத்தியத்தையும் செய்ய, முறை கேடான வழிகளை மிகத் துணிச்சலாகக் கையாண்டான் வன்னித்தட்டான். ஒவ்வொரு சத்தியத்திலும் கோவலன் தான் குற்றமற்றவன் என்று நிரூபித்த போதும், அடுத்தடுத்த சத்தியங்கள் செய்ய வைக்க மன்னனைத் தூண்டினான் வன்னித்தட்டான். கோவலனிடம் கொப்புலிங்கி மயங்கி விட்டாள்; அதனாலேயே விட்டுவிடக் கூறினாள் என்று பழி போட்டுப் பேசும் அளவிற்கு வன்னித்தட்டான் மன்னன் அவையில் பெரு அதிகாரம் வாய்ந்தவனாக இருந்தமை குறிக்கத் தக்கது[27].

---

27. "கோவலவன் முகம்பார்த்தாள் கொப்புலிங்கி வேறானாள்
காலசிலம்பைப் பாத்தல்லவோ கண்ணீரைச் சோரவிட்டாள்
தாதியர்க்கே சொல்லியல்லோ சாப்பாடு பண்ணுமென்றாள்
அத்தரொக்க மொருமுடிப்பாய் அஞ்ஞூறு பொன்னுஞ்சொன்னாள்
ஆசாரக் கள்ளனய்யா அழகான பாண்டியனே
மந்திரவாதி அய்யா மயக்கிவிட்டான் பெண்ணாரை" (1380-1385)

கோவலன் இறந்த செய்தியறிந்து கன்னகை வந்தாள். வந்த செய்தியைப் பார்ப்பான் ஒருவன் மன்னனுக்கு அறிவித்தான். யாது செய்யலாம் என்று மன்னன் திகைத்து நின்ற பொழுது வன்னித்தட்டான்,

**"மதிகெட்ட பாண்டியனே-நீங்கள்-மதுரையாளப்
போறையளோ
புத்திகெட்ட பாண்டியனே-நீங்கள்-புவியாளப்
போறையளோ" (2215-2216)**

என்று வசை பாடினான். மற்றும் சில இடங்களில் இதே சொற்களால் வசை பாடியதாகவும் காட்டப்பட்டுள்ளது (1824-1825, 1665-1666). அடுத்து, கன்னகையைத் தடுத்துத் திரும்பிப் போகச் செய்யும் வழி முறையையும் ஒரு மந்திரியைப் போலப் பாண்டிய மன்னனுக்குக் கூறுபவனாக வன்னித்தட்டான் காட்டப்பட்டுள்ளான். நான்கு வாசல் கதவையும் நன்றாக அடைத்துவிட்டு, நான்காயிரம் கிங்கிலிவரைக் காவல் வைக்க வேண்டும். வந்து நிற்கும் கன்னகையிடம்,

**"தாரமோ தங்கையோடி தனிமதுரைப் பாண்டியர்க்கே
தாரமென்று சொல்லிவிட்டால் தான்விடுவேன் வழியாக"
(2223-2224)**

என்று கேட்க வேண்டும் என்றான் வன்னித்தட்டான். அதைக் கேட்ட கன்னகை வந்த வழி போய் விடுவாள் என்று தவறான வழியும் கூறினான். அவன் கூற்றுப்படியே பாண்டிய மன்னனும் நடந்து கொண்டு, கன்னகையின் கனலுக்கும், கோபத்துக்கும் ஆளாகி, உயிரை இழந்து மதுரை நகர் அழிவுக்கும் காரணமாகி விடுகிறான்.

கோவலன் கொலைக்குப் பழிதர வேண்டும் என்று பாண்டியனிடம் கன்னகை கேட்ட பொழுது,

**"சீமையிலும் பாதி திரவியமோ தாரேனென்றும்
ஆனை குதிரையெல்லா மநேகமாய்த் தாரேனென்றும்"
(2496-2497)**

கூறுமாறு வன்னித்தட்டான் பாண்டியனைத் தூண்டி, பாண்டியன் மீது கன்னகை மேன்மேலும் மிகுகோபம் கொள்ளவும் காரணமாக அமைந்தான்.

ஆக, இத்தகு பல காட்சிகளிலும், நிகழ்ச்சிகளிலும் வன்னித்தட்டானின் மிகு அதிகாரமும் ஆலோசனையும்,

பாண்டியனையே வசைபாடும் போக்குகளும் கதைப்பாடலில் வெளிப்படப் படைக்கப்பட்டுள்ளன.

## கன்னகை சினத்துக்கு முதற் காரணம்

கோவலனைச் சிலம்பு திருடிய கள்வன் என்று ஆராயாமல் கொன்றதற்குப் பழிவாங்கவே கன்னகை உண்மையை நிலை நிறுத்திக் காட்டி, மிகுசினத்தால் மதுரை மாநகரையும் எரித்தாள் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. இக்கதைப்பாடல், கன்னகை கொண்ட மிகு சினத்துக்கு வேறு ஒரு புதிய காரணத்தைப் புகல்கின்றது. வன்னித்தட்டானின் ஆலோசனையின்படி கன்னகையைப் பாண்டிய மன்னனின் தாரம் (மனைவி) என்று கூறத் தூண்டினான் பாண்டிய மன்னன். கன்னகையின் மாசறு கற்புநிலையை இழிவுபடுத்தும் இத்தகு ஒரு தூண்டுதல் அவள் பாண்டிய மன்னனின் குடலைப் பிடுங்கி மாலையிடவும், மதுரையை எரியுண்ணச் செய்யவும் காரணமாகிறது. (2223-2225, 2248-2250). மன்னனை உயிருடன் விட்டு விடுமாறு கொப்புலிங்கி கன்னகையிடம் முந்தியேந்தி மடிப்பிச்சை கேட்டபொழுதும், கன்னகை தன்னைத் தாரமாக வரும்படி மன்னன் கேட்டான் என்பதை வெளிப்படுத்தித் தன் சினத்துக்குக் காரணமும், நியாயமும் கூறினாள்[28]. பெற்ற தாய் நான்தான் என்று கொப்புலிங்கி எடுத்துரைத்த போதும் கன்னகையின் மனம் இரங்கவில்லை[29]. பாண்டியனைக் கொன்று குடலைப்பிடுங்கி மாலையிட்டுக் குலவையிட்டாள் கன்னகை[30].

---

28. "பெண்டுக் கழைத்தானடி பெரும்பாவிப் பாண்டியனும்
பழிவாங்கிப் போவேனடி பத்தினியே கொப்புலிங்கி" (2551-2552)

29. "மங்கையரைப் பெற்றெடுத்த மாதாவல்லோ நானுனக்கு
கொங்கை சுரக்குதடி கொம்பனையாள் கன்னகையே
பாண்டியனே பிதாவல்லோ பத்தினியே மங்கையரே" (2541-2543)

30. "மேடைவிட்டே ஓடலுற்றான் வீரமுள்ள பாண்டியனும்
சீறியல்லோ பாண்டியனைச் சினத்தங்கே தான்பிடித்தாள்
மாரைப் பிளந்தலவோ மணிக்குடலைத் தான்பிடிங்கி
குடல்பிடிங்கி மாலையிட்டாள் கொம்பனையாள் கன்னகையும்"
(2570-2573)

## கன்னகையின் மதுரைநகர எரிப்பு

பாண்டிய மன்னனும், பாண்டிமாதேவியும் இறந்த பின்னும் சினம் தணியாத கன்னகை, தன் இடதுபக்க மார்பகத்தைத் திருகி எறியத் தீப்பற்றி மதுரை நகரம் எரிந்தது எனச் சிலம்பு கூறுகின்றது. இக்கதைப் பாடலோ பாண்டியனைப் பற்றி அவன் மார்பைப் பிளந்து மணிக் குடலைப் பிடுங்கிக் கன்னகை மாலையாகப் போட்டுக் கொண்டதாகவும், சிலம்பைச் சுழற்றி விட்ட பொழுது அது சிங்காசனத் தூவியின் மீது பட்டு உடைந்து, சிலம்பின் கருவியுண்டை தீப்பொறி போலாகித் தீப்பற்றிக் கொண்டது எனவும்[31], வலதுமுலையைச் திருகி எறிய வடமதுரை வனமானதாகவும், இடதுமுலையைத் திருகி எறிய, தென்மதுரை தீயாயெரிந்ததாகவும் கூறுகின்றது[32]. கோவலன் ஒருவன் பழிக்காக கோவலனின் இறப்புக்குக் காரணமான ஒன்பது பேரைப் பழிவாங்கினாள் கன்னகை என்றும் கதைப்பாடல் கூறுகின்றது.

பாண்டிய மன்னனின் குடலைப் பிடுங்கி மாலையிட்டபின், மன்னனுடன் சேர்த்து, வன்னித்தட்டான், கருடன் குஞ்சைக் கொன்று அதனால் கருடன் சிலம்பு கவர்ந்து சென்று ஒளித்து வைக்கக் காரணமான வன்னித்தட்டானின் மகன், கோவலன் சத்தியம் செய்ய, பழுக்கக் காய்ச்சிய மழு தந்த கொல்லன், கையிட்டால் வாங்காத கனத்த குடம் செய்தளித்த குசவேளான், மதமூட்டப்பட்ட யானை கொணர்ந்த ராவுத்தன், மன்னவன் ஆணைப்படி கோவலனை மழுவால் வெட்டிக் கொன்ற மழுவரசன், குடத்துக்குள் இடுவதற்குக் கொடிய நாகங்களை அளித்த பாம்புச்சித்தன், வேங்கைப்புலி தந்த வேட்டைக்காரன்

---

31. *"சுத்தினாள் கால்சிலம்பைச் சுழத்திவிட்டாள் தூவியின்மேல்*
*சிங்காசனத் தூவியின்மேலே-கால்-சிலம்புபட்டே*
*உடைந்துதய்யோ*
*சிலம்புடைந்த சத்தமல்லோ தீயிடிபோ லாச்சுதங்கே*
*சிலம்பில் கருவியுண்டை தீப்பொறிபோ லாச்சுதய்யோ*
*சிங்காசன மேடையெல்லாம் சீக்கரமெங்கு மெரிந்துவிழ*
*தீயா யெரியுதய்யோ சிங்காசன மேடையெல்லாம் (2563-2568)*

32. *"வலதுமுலை திருகிவிட்டாள் வடமதுரை வனமாச்சே*
*இடதுமுலை தான்திருகி யெறிந்துவிட்டாள் கன்னகையாள்*
*தீயா யெரியுதய்யோ தென்மதுரைக் கோட்டையெல்லாம்"*
*(2582-2584)*

ஆகிய ஒன்பது பேர்களைப் பழிவாங்கினாள் கன்னகையாள். ஒருவன் பழிக்காக ஒன்பது பழிவாங்கினாள் என்று கதைப்பாடல் குறிப்பிடுகின்றது *(2578)*

மார்பகத்தைத் திருகி எறிந்து கனலாய் எரித்த கன்னகையின் மார்பகத்தின் மீது ஆயர்குலத்தார் வெண்ணையை வீசி எறிந்து வெப்பம் தணித்ததையும் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது *(2585-2586)*. இன்றும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் இடம் பெற்றுள்ள கன்னகை சிலைக்கு மார்பில் வெண்ணை வீசும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை இணைத்து நோக்கலாம்.

## கன்னகை மலையாளம் சென்ற வழி

மதுரை நகர எரிப்பின் பின்னர் வைகைக்கரை வழியே நடந்து நெடுவேள் குன்றமாகிய திருச்செங்கோடு அடைந்தாள் எனச் சிலம்பு கூறுகிறது[33]. கீழ்த்திசை வாயிலில் கணவனொடு புகுந்து மேற்றிசைவாயில் வறியளாய்ப் புகுந்த கன்னகையைச் சிலம்பு காட்டுகின்றது. இக்கதைப்பாடலோ கன்னகை மேற்றிசை நோக்கிச் செல்லாமல் தமிழகத் தென்பகுதி வழியாகவே தென்முனை வரை வந்து அதன் பின் மேற்குப்பகுதிக்குத் திரும்பியதாகக் கூறுகிறது. எடுத்தவுடன் மலைப் பகுதியில் ஏறிச் செல்லாமல் நிலப்பகுதியில் தென்மாவட்ட ஊர்களைக் கடந்து வந்து மலையாளம் சென்றதாகக் கூறுகிறது.

வைகை நதியில் தீர்த்தமாடி விட்டு, மதுரைத் தெற்குக் கோட்டை வாசல் வழியாகச் சிக்கந்தர் மலையை அடைந்தாள். பின் சாத்தூர், சங்கரநயினார் கோயில், வழியாகக் குற்றாலம் வந்தாள். அடுத்து ஆரியங்காவுப் பாதை வழி மலையாளம் வந்தாள் *(2609-2638)*. பல சமூகக் கதைப்பாடல்களும் இவ்வாறு குற்றாலம் வழி ஆரியங்காவு அடைந்து ஆரியங்கா அய்யரை வணங்கித் தெய்வமாகியதை வெளிப்படுத்தும் மரபுவழிப் படியே இக்கதைப்பாடலும் கன்னகை கடந்து வந்த வழியை அமைத்துள்ளது எனலாம். அத்துடன் மேற்குப் பகுதி சென்று மலையில் ஏறினாள் என்பதை விடவும், மக்கள் வாழும் நிலப்பகுதிவழியே நடந்து தென்முனை அடைந்து மேற்கே திரும்பி மலையாளம் சென்றடைந்தாள் என்பது மிகவும் ஏற்புடையதாக உள்ளது.

---

*33. சிலப்பதிகாரம், கட்டுரைகாதை, வரி : 185-192.*

**கன்னகையின் தெய்வ நிலை**

கன்னகை மானிடப் பிறவியாகப் பிறந்து, தன் கற்புத்திறத்தால் உயர்ந்தோர் ஏத்தும் உரைசால் பத்தினியாக உயர்ந்ததைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது. வண்ணச் சீரடி மண்மகள் அறியாதவளாக இல்லத்தினுள் இருந்து வளர்ந்த ஒரு பெண், புகார் நகரைவிட்டு வெளியே வந்த உடனேயே மதுரையை அடைந்து விட்டோமா என்று கேட்ட அறியாமை உடைய ஒரு பெண், தன் கணவன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டவுடன் சீறிப் பொங்கி எழுந்து, அறிஞர் பலரும் வீற்றிருக்கும் அரசவைக்குப் போந்து நீதியை நிலைநாட்டிக் கணவனின் குற்றமற்ற தன்மையை நிரூபித்தாள். அக்காலச் சூழலுக்கேற்பப் பரத்தையரிடம் சென்ற கணவன் மீண்டு வரும் வரை இல்லத்தில் இருந்து பொறுமை காத்தாள். திரும்பி வந்தபின் இழந்த பொருளை மீட்டு மீண்டும் வாணிபத்தைத் தொடங்கத்தான் கால்சிலம்பைக் 'கொண்ம்' எனக் கொடுத்தாள். இவ்வாறு கன்னகையின் பண்பு வளர்ச்சிப் படிநிலைகள் சிலம்பில் காட்சிகள் தோறும் காட்டப்பட்டு, சாதாரண ஒரு மானுடப் பெண் மன்னனால் சிலையெடுத்துக் கோயில் அமைத்து வழிபடும் தெய்வப் பெண்ணாக உயர்ந்தது விளக்கப்பட்டுள்ளது.

இக்கதைப்பாடலோ கன்னகையின் பிறப்பிலேயே தெய்வத் தனமையைப் புகுத்தி விடுகின்றது. பாண்டியர்களின் கொடுங் கோலாட்சியை முடிவுக்குக் கொண்டுவர, காளியே கன்னகையாக அவதாரம் எடுத்தாள் என்கிறது. தெய்வாம்சம் ஆனதால்,

**"சடங்கு செய்த நாள்முதலாய்த் தானறியாள் கோவலனை**
**படுக்கப்பாய் போட்டறியாள் பத்தினியாள் கன்னகையும்**
**தூத்துப்பாய் போட்டறியாள் சுகமறியான் கோவலனும்"**
**(557-559)**

என்கிறது கதைப்பாடல். அதன்பின் ஒரு மானுடப் பெண்ணாகவே கன்னகை காட்டப்படுகின்றாள். கோவலன் இறப்பின் பின்னர் ஒரு தெய்வத் தன்மை உடைய பெண்ணாகக் கன்னகையை மீண்டும் காட்டுகின்றது கதைப்பாடல். சிவனை நினைந்து, சிவஞானம் கொண்டு தேவகன்னி போலானாள் (2175-2176). செந்தலைக் கெருடன் வந்து தன்குஞ்சைக் கொன்ற பாவத்துக்குச் சிலம்பைத் தானே எடுத்து ஒளித்து வைத்துள்ளதாகவும், கன்னகை நினைத்த போது வந்து சிலம்பைத் தருவதாகவும் கூறி மறைந்தது (2181-2195).

பறவையுடன் உரையாடிய கன்னகை, தெய்வங்களான மதுரைச் சொக்கர்-மீனாட்சியிடமும் உரையாடினாள்; வாதிட்டாள்; மன்றாடினாள் என்கிறது கதைப்பாடல் (2288-2325). தெய்வமான மீனாட்சியும் கன்னகையிடம் அருந்தவசை விட்டு இறங்குமாறு கெஞ்சினாள் என்றும் தெரிகிறது. (2316-2318)

கோவலன் பழிக்குப் பழிவாங்கப் பாண்டியன் அரண்மனை நோக்கிப் போகும் கன்னகை, தன் புறத் தோற்றத்திலும் காளி அம்மனாக மாறினாள்.

**"மஞ்சநல்ல பாவாடை மடித்துடுத்தா ளந்நேரம்**
**சிவனை நினைந்தாளே திருநீறணிந்தாள் தேகமெல்லாம்**
**கையிலே வேப்பங்குழை கக்கத்திலே தானிடிக்கி**
**வாராளே கன்னகையாள் மாசித்தெரு வீதிவந்தாள்"**
**(2471-2474)**

என்னும் அடிகளில் கன்னகை கொண்ட காளி அவதாரம் விளக்கப்பட்டுள்ளது. சிலம்பைச் சுழற்றி விட்டுத் தீப்பிடிக்க வைக்கும் உக்கிரம், மேடையை விட்டு ஓடும் பாண்டிய மன்னனைப் பிடித்து, மார்பைப் பிளந்து குடலை மாலையாகப் போட்டுக் கொள்ளும் கோலம், கோவலன் பலியானதற்குக் காரணமான மற்ற எண்மரையும் கொன்று குடல் பிடுங்கும் கோலங்கள் காளி அவதாரத்தின் முழு வீச்சாகவும் கன்னகை திகழ்ந்ததை வெளிப்படுத்துகின்றன. மதுரை எரிப்பின் பின்னர் ஆரியங்காவு வந்து ஆரியங்காவு அய்யரை வணங்கித் தெண்டனிட்டு அவர் கட்டளைப்படி மலையாள நாட்டில் அட்டூழியங்கள் செய்தாள் கன்னகை.

**"மாகாளி சுரூபங் கொண்டு மனுசரையும் பிடிக்கலுற்றாள்**
**ஆட்டையும் மாட்டையும் அடங்கலுமோ அழிக்கிறாளே"**
**(2639-2640)**

இதைக் கண்ட மன்னனும், மக்களும் காளியுட கோயிலுக்குக் காளியூட்டு நடத்திச், சுற்றிலுமுள்ள தேவதைகளுக்கும் ஊட்டுப்போட்டுக் கொடுத்தனர். அதன்பின்,

**"ஆல்போலே தான்தளுத்து அருகதுபோல் வேரூணி**
**மூங்கில்போ லன்னசுத்தம் முசியாமல் வாழ்ந்திருந்தார்"**
**(2651-2652)**

பிற கோவலன் கதைகள்-ஒப்பீடு

சிலப்பதிகாரக் கதையை மையமாகக் கொண்டு பலகதைகள் மக்கள் மத்தியில் கிளைத்திருக்கின்றன. இவை அனைத்தையும்

தொகுத்து ஆய்வு செய்து எழுதப்பட்ட நூல் 'வழிவழிச் சிலம்பு'[34] ஆகும். இந்நூல் சிலப்பதிகாரக் கதையை யொட்டி எழுந்த பிற இலக்கியங்களைக் கீழ்க்காணுமாறு வரிசைப் படுத்தியுள்ளது.

1. கோவிலன் கதை, 2. கண்ணகி வழக்குரை, 3. கோவலன்-கன்னகை கதை, 4. கோவலன் கதை 5. வைசிய புராணம் 6. கண்ணகி புரட்சிக் காப்பியம் 7. கண்ணகி 8. கோவல வெண்பா 9. பூம்புகார்ப் பத்தினி 10. சிலப்பதிகாரச் செம்பொருட் காவியம் 11. கண்ணகி வெண்பா 12. கண்ணகி கதை 13. கண்ணகிக்கும்மி 14. சிறுவர் சிலம்பு 15. சிலப்பதிகாரம் 16. விதியோ வீணையோ 17. மாதவி காவியம் 18. சிலம்பின் சிறுநகை 19. கோவலன் சரித்திரம் 20. வட்டப் பாறையில் வதைபட்ட கோவலன் கன்னகி நாடகம் 21.கோவலன் சரித்திரம் 22. சிலப்பதிகாரம் நாடகம் 23. சிலப்பதிகாரம் ஒரு நாடகம் 24. நாடகச் சிலம்பு 25. சிலம்புச் செல்வி 26. கல்சுமந்த கசடர் 27. இமயத்தில் நாம் 28. குடமலைத் தெய்வம் 29. கண்ணகியோ மாதவி 30. சித்திரப்பாவை ஆகிய 30 இலக்கியங்கள் முகிழ்த்திருக்கின்றன. நாட்டுப்புறப்பாடல், நாடகம், காவியம், கும்மி, கதை, வெண்பா, நாட்டிய நாடகம் என்ற பல்வேறுபட்ட இலக்கியவகைப் பரிணாமங்களோடு இவை திகழ்கின்றன. இவ்வரிசையில் நான்காவதாக இடம்பெற்றுள்ள 'கோவலன் கதை' என்பதே இங்குப் பதிப்பிக்கப் பெறும் சுவடிப் பொருளாகும்.

## வழி வழிச் சிலம்பில் இச்சுவடிப் பொருள்

சுவடியிலுள்ள செய்திகள் கீழ்க்காணும் சிறு தலைப்புகளில் விளக்கப் பெற்றுள்ளன.

1. கதையமைப்பு 2. இந்நூலின் சிறப்புகள் 3. சில மாற்றங்கள் 4.கோவலன் கதையும் புகழேந்தியின் கோவலன் கதையும் 5. சமுதாயக் கண்ணாடி 6. பரத்தமைச் சமுதாயம் 7. கற்புடைய மகளிர் 8.சகக் கழுத்திப் போராட்டம் 9. நாட்டுப் புறப் பாடலமைப்பு 10. நிறைவுரை என்ற பத்துத் தலைப்புகளின் கீழ் இச்சுவடியிலுள்ள செய்திகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**கதையமைப்பு** இடையிடை பாடல் வரிகளுடன் கூடிய மேற்கோள்களுடன் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. **இந்நூலின் சிறப்புகள்** என்ற சிறு தலைப்பின் கீழ் வேறெந்த நூலிலும் காணமுடியாத சில புதிய நிகழ்ச்சிகளாக 16 நிகழ்ச்சிகள்

---

34. ஆசிரியர் : டாக்டர் சரளா ராசகோபாலன், 1986.

தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. **சில மாற்றங்கள்** என்ற சிறு தலைப்பின் கீழ்ச் சிலப்பதிகாரக் கதையுடன் தொடர்புடையதாக ஆனால் சில மாற்றங்களுடையதாகப் பதினோரு நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அடுத்ததாகப் புகழேந்திப்புலவர் எழுதிய கோவலன் கதையை, இந்நூலாசிரியர் படித்திருக்கக் கூடும் என்பதற்கான ஒத்திசைவுகள் காணப்படுகின்றன என்று கூறி அத்தகு ஒப்புமை நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் **கோவலன் கதையும் புகழேந்தியின் கோவலன் கதையும்** என்ற சிறுதலைப்பின்கீழ்க் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. தொடர்ந்து **சமுதாயக் கண்ணாடி** என்ற சிறு தலைப்பினுள் சுவடியில் இடம்பெறும் சமுதாய நிலைகள் விளக்கப்பட்டுள்ளன. அடுத்து, **பரத்தமைச் சமுதாயம்** என்ற சிறு தலைப்பில் இச்சுவடி குறிப்பிடும் பரத்தமைச் சூழலும், **சக கழுத்திப் போராட்டம்** என்ற தலைப்பில் சுவடியில் கண்ணகி-மாதவிக்கிடையே நடந்த வாய்த்தகராறும் தனித்தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளன. இச்சுவடி முழுக்கவும் நாட்டுப்புறப் பாடலமைவில் பாடப்பட்டுள்ளமை இறுதிச் சிறுதலைப்பான **நாட்டுப்புறப் பாடலமைப்பு** என்பதன் கீழ் விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இச்சுவடிப் பொருளை முதன் முதலில் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமை இந்நூலினைச் சார்கிறது.

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கோவலன் கதைச் சுவடி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 'கோவலன் கதை' என்ற ஒரு சுவடி உள்ளது. இதன் கதையமைப்பு, கதைப்போக்கின் ஒப்புமை கருதி இச்சுவடி பற்றிய செய்திகள் இங்கு ஒப்பு நோக்கப் பெறுகின்றன.

### சுவடியின் புறஅமைப்பு

கட்டு எண்: 432, நூல் எண் 678 என்ற எண் கொண்டது இச்சுவடி. 21 x 3 செமீட்டர் நீள, அகலம் கொண்ட இச்சுவடியில் மொத்தம் 178 ஓலைகள் உள்ளன. பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள் வரை உள்ளன. முழுமையாக உள்ள இச்சுவடி அச்சாகவில்லை. 1994-இல் சுவடிப்பட்டய ஆய்வேடாக நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. வெ. சொக்கன் என்பவர் இவ்வாய்வேட்டை அளித்துள்ளார்.

௲௱௰௧ 1041 ஆம் ஆண்டு அப்பிய ஷ ஐப்பசி மாதம் உ௰அ௨ (28ஆம் தேதி) சனிக்கிழமை கூடின நச்செத்திரத்து பிச்சன் வாசிகன் கோபாலவன் கதை வேணும் செந்திலாதிபன்

துணை'' என்று ஏட்டின் தொடக்கத்தில், விநாயகர் காப்புப்பாடலை அடுத்துக் காணப்படுகின்றது. இது குறிப்பிட்ட இச்சுவடியை எழுதத் தொடங்கிய காலம் எனக் கருத இடமுள்ளது. **பிச்சன் வாசிகன்** என்பவர் இச்சுவடியை எழுதியவர் ஆகலாம். இச்சுவடியின் இறுதியில் கீழ்க் காணுமாறு ஒரு குறிப்பு காணப்படுகின்றது.  1043 ஆம் ஆண்டு தைய் (தைமாதம்) புதம் கிழமை (புதன் கிழமை) . . . . . . பூசமும் நச்சத்திரமும் கோவலன் கதை முகிந்தது முற்றும் என உள்ளதால் இச்சுவடி எழுத 2 ஆண்டு காலம் ஆகியுள்ளது என்பது தெரிய வருகின்றது.

இச்சுவடியின் ஓரங்கள் சிதைந்துள்ளன. ஆங்காங்கு பூச்சியரிப்புகள் உள்ளன. எழுத்துகள் தெளிவாக உள்ளன. ஏடெழுதியவரால் நிகழ்ந்த பிழைகளும் மலிந்துள்ளன. இந்தச் சுவடியும், பதிப்பிக்கின்ற கேரளப்பல்கலைக் கழகச் சுவடியும் ஒரே கதையமைப்புடையவையாகவும், வரி ஒற்றுமை மிகுதியாக அமைந்தவையாகவும் காணப்படுகின்றன. ஆனால் அதே போழ்து வரிவேறுபாடுகளும், சில நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகக் கூறுதல், அல்லது மாறுபட்டு விரிவாகக் கூறுதல், சில நிகழ்ச்சிகளைக் கூறாது விடுதல் அல்லது ஒன்றில் விரிவாகக் கூறாததை மற்றொன்றில் விரிவாகக் கூறுதல் என்ற நோக்குகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே இந்த இரு சுவடிகளும் ஒன்றினைப் பார்த்து ஒன்று படி எடுத்ததாகவோ ஒன்று மற்றொன்றின் வழி ஏடாகவோ இருக்க வழியில்லை. ஏதாயினும் ஒரு மூல ஏட்டினைப் பார்த்து இருவேறு பட்டவர்கள் தங்கள் சொந்த விருப்பின்படி வரிகளை மாற்றியும், திருத்தியும், சேர்த்தும், புதுக்கியும் எழுதிக் கொண்ட இருவேறுபட்ட சுவடிப்பிரதிகள் இவை எனக் கொள்ள இடமுள்ளது. இரு சுவடிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளுக்கான சான்றுகளைக் கீழ்க்காணுமாறு முறைப்படுத்தலாம்.

| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி | கேரளப் பல்கலைக் கழகச் சுவடி |
|---|---|
| 1. தொடக்கத்தில் விநாயகர் காப்புப் பாடல் உள்ளது. | 1. இல்லை |
| 2. 1041இல் தொடங்கியதாகத் தொடக்க இதழ் குறிப்பிடுகிறது 1043இல் முடித்ததாக இறுதியில் | 2. கொல்லம் ஆண்டு 1048 அதாவது கி.பி. 1873இல் எழுதப் பட்டதாகத் தொடக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| குறிப்பு உள்ளது. கிபி.இல் இது எத்தனையாவது ஆண்டு என்று தெரியவில்லை காரணம் சக, கலி, கொல்லம் ஆண்டுகள் உள்ள வற்றில் இது எந்த ஆண்டு என்று குறிப்பு இல்லை கொல்லம் ஆண்டாக இருந்தால் கி.பி. 1866இல் இச்சுவடி எழுதப்பட்டிருக்கக்கூடும் எனக் கருத இடமுள்ளது. | |
| 3. பிச்சன் வாசிகன் ஏடெழுதியவர் பெயர் என்று தெரிகின்றது. | 3. ஆசிரியர் பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. |
| 4. பாண்டிமாதேவி பெயரைக் கொக்கிலங்கி என்கிறது. | 4. கொப்புலிங்கி , எனக் குறிக்கிறது. |
| 5. கதைத் தலைவியைக் கண்ணகி என்கிறது. | 5. கன்னகை என்று கூறுகிறது. |
| 6. கதைப்பாடல் மொத்தம் 2678 வரிகள் கொண்டதாக உள்ளது. | 6. 2655 வரிகள் உள்ளன. |
| 7. கோபாலவன் கதை என்று தலைப்பு அமைந்துள்ளது. கதை இடையிலும் கோபாலன், கோபாலர் எனக் கதைத் தலைவன் குறிக்கப் பெறுகின்றான். | 7. கோவலன் கதை என்று சுட்டப்பெற்றுள்ளது. கதைப்பாடல் நெடுகிலும் கோவலன், கோவலவன் என்று குறிக்கப்பெறுகிறான். |
| 8. முழுக்கவும் தமிழ்ச் சொற்களால் எழுதப்பட்டுள்ள கதைப்பாடல். | 8. ஆங்காங்கு மலையாளச் சொற்கள் ஆளப்பட்டுள்ளன. |

இத்தகு மாறுபாடுகளுடன் கதையைச் சொல்லும் வரியமைப்புகளில் பல இடங்களில் வெவ்வேறு சொற்களை ஆண்டும் இரு சுவடிகளும் வேறுபாடு காட்டுகின்றன.

# கேரளப் பல்கலைக்கழகச் சுவடியான கோவலன் கதை-புகழேந்திப்புலவரின் கோவலன் கதை-ஒப்பீடு

பதிப்பிக்கப் பெறும் சுவடி புகழேந்திப் புலவரின் கோவலன் கதையிலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளது. இச்சுவடிக் கதையின் தனிச்சிறப்புகள் முன்பே விளக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் இரு சுவடிகளும் பெரும்பான்மை வேறுபாடுகளைக் கொண்டுள்ளமை புலப்படுகின்றது. இவ்விரு சுவடிகளுக்கிடையே சில இடங்களில் ஒற்றுமை காணப்படுகின்றது. இதன் மூலம் காலத்தால் முந்தைய புகழேந்தியின் கோவலன் கதையமைப்பை இச்சுவடி ஆசிரியர் அறிந்திருக்கக் கூடும் எனக் கருத இடமுள்ளது. இரண்டிலும் அமைந்துள்ள ஒரே விதமான கதை நிகழ்ச்சிகள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றன.[35]

1. பாண்டியன் மனைவி கொப்புலிங்கியின் வயிற்றில் கன்னகை பிறப்பதாகக் காட்டுதல்
2. கருடன் தட்டானைப் பழிவாங்கச் சிலம்பு கவர்ந்து சென்று புற்றிலிடுதல்
3. கோவலனைக் கண்டு கொப்புலிங்கி மயங்கியதாகத் தட்டான் கூறுதல்
4. கள்வன் என்பதைக் கண்டுபிடிக்கப் பாம்புக் குடத்தில் கைவிடுதல்
5. உலையில் கொதித்த மழுவைக் கையிலெடுத்தல்
6. யானையை மிதிக்க விடுதல்
7. மழுவரசனின் மனைவி தீக்கனாக் காணுதல்
8. கன்னகை பொன்னூசி, பொற்சரடு கொண்டு கோவலன் உடலைத் தைத்து எழுப்புதல்
9. கோவலனுடன் மாதேவி உடன்கட்டை ஏறுதல்
10. இருவருக்கும் கன்னகை கொள்ளி வைத்துக் குடமுடைத்தல்

---

35. கீழ் அமைந்துள்ள 13 கருத்துகளும் வழிவழிச்சிலம்பு (நூல்) பக்கம் 237-இல் இருந்து எடுக்கப்பட்டவை.

11. கன்னகை கருடனை நினைக்கக் கருடன் சிலம்பைக் கொண்டு வந்து போடுதல்

12. கன்னகையின் சினம் தணிய ஆய்ச்சியர் நகிலில் வெண்ணெயை அப்புதல்

13. சினம் ஆறிய கன்னகை அவர்களை வாழ்த்துதல் ஆகிய பகுதிகளைக் குறிக்கலாம்

கோவலன்-கண்ணகி வாழ்க்கையை மையமாகக் கொண்டு சிலப்பதிகாரம் காவியமாக எழுதப்படுவதற்கு முன்பே, அவர்கள் கதை நாட்டுப்புறப் புலவர்களால் கதைப்பாடலாகவும், சரித்திரமாகவும், நாடகமாகவும், வெண்பாவாகவும், கும்மியாகவும் வழங்கப்பட்டு வந்தன என்பது அறிஞர்கள் கருத்தாகும். சங்க இலக்கிய நற்றிணை காட்டும் 'ஒருமுலை இழந்த திருமாவுண்ணி' கண்ணகி தான் என்பதும் அறிஞர்களின் அறுதியிட்ட உறுதியான கருத்தாக உள்ளது. எனவே சங்க காலத்துக்கு முன்பே நடந்த கோவலன்-கண்ணகியின் சோக வரலாறு மக்கள் மத்தியில் மக்கள் இலக்கியமாகப் பல வடிவங்களில் வழங்கப்பட்டு வந்து, பின் கி.பி.2-இல் காப்பிய காலத்தில் தக்காராகிய இளங்கோவடிகளால் சிலப்பதிகாரம் எனும் பெருங்காப்பியமாக வடிக்கப்பட்டது என்பதும் தமிழறிஞர்களின் ஆணித்தரமான கருத்தாக உள்ளது. 'கற்புக்குக் கண்ணகி' என்று நிலைத்து விட்ட வழக்கு இன்றும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. காலங்காலமாகக் கருத்துகளும், எண்ணங்களும், சிந்தனைகளும், மனப்போக்குகளும் மாறிவரும் இக்காலச் சூழலிலும் கற்பரசி என்று கண்ணகி மக்களால் போற்றப்பட்டு வருகிறாள். கோவலன்-கண்ணகி கதை இன்றும் மேடை நாடகமாகவும், நாட்டிய நாடகம், திரைப்படமாகவும் மக்களிடையே வழங்கி வருதல் கண்கூடு. கண்ணகிக்கெனத் தனிக்கோயில்கள் பெருமளவில் தமிழகத்தில் காணப் படவில்லையெனினும், கண்ணகி ஏற்கெனவே இருந்த மாரியம்மனாகவும், காளியம்மனாகவும், கலந்து விட்டாள். சிலப்பதிகாரக் காலத்துக்கு முன்பே இது நடந்துவிட்டது. சிலம்பிலேயே கண்ணகி கோவலனுடன் மேலுலகம் புக்கபின், மக்களிடையே வெப்பும் குருவும் தோன்றி வருத்தியதாகவும் பொற்கொல்லனால் சூழ்ந்த வினை நீக்கப் பொற்கொல்லர்களைப் பலியிட்டபின், மழைபெய்து நாடு வளம் பெற்றதாகவும்

மக்களிடையே வெப்பும், குருவும் நீங்கி நலம் நேர்ந்ததாகவும் குறிப்புக் காணப்படுகின்றது. கோவலன்-கண்ணகி வாழ்க்கை அவர்கள் காலத்திய அரசியல், சமூக, கலை, பண்பாட்டு, பழக்கவழக்க, நம்பிக்கைகளின் சின்னம். தமிழர் பண்பாடு உலகில் நிலை நிற்கும் வரை, இவர்கள் வாழ்க்கையின் வரலாற்றைச் செப்பும் இலக்கிய வகைகள் அனைத்தும், மக்கள் மத்தியில் நின்று அன்னாரின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகத் திகழும் ஒளிவிளக்காகச் சுடர்விடும் என்பது உறுதி.

# கோவலன் கதை

## விநாயகர் வணக்கம்

சித்திதரும் விநாயகனே தெய்வக் குலக்கொழுந்தே
சத்தி[1] கணபதியே தையல்நல்லாள் புத்திரனே
வித்தைக்கு மூத்தவனே விநாயகனே முன்னடவாய்
பொரிகடலை பணியாரம் போதரவாயுண்ணும் ஐங்கரனே
அரிமருகா ஐங்கரத்தோன் ஆனைமுக வேதியனே

## சரசுவதி வணக்கம்

சத்திகெவு மாரியம்மா சரசுவதி முன்னடவாய்
புத்திவித்தை தருகிருந்து போதவரம் ஈந்தவரே
கோவலவன் கதைபாடக் கொம்பனையே முன்னடவாய்
கன்னகையாள் கதைபாடக் காரணியே முன்னடவாய்

## காவிரியாறு வெட்டுதல்

காவேரிப்பூம் பட்டணமாங் கனகமுடிச் சோழமன்னன்
சோழனென்று அப்போது துலங்குகின்ற தேசமதில்
வேளையில்லா வேளையிலே வெள்ளம்வரு தேசமதில்
மட்டில்லாச் சேனையுடன் வாழ்ந்திருந்தார் சோழபிரான்
கொள்ளிடத்தில் வெள்ளமதில் குலாவியங்கே வந்திடத்தில்
காவேரிதான் வெட்டவென்று காரியப்பேர்[2] தன்னைஎல்லாம்
வாவென் றருகழைத்து வாய்த்தகா வேரிவெட்டி
நாளு முகிழ்த்தமிட்டு[3] நல்லகா வேரியென்று
காவேரி தானும்வெட்டிக் கரைகண்டா ரம்மானை

## காவிரியில் கல்லணை கட்ட முடிவெடுத்தல்

அழகாபுரிப் பட்டணத்தை அரசாண்ட சோழபிரான்
காவேரிப்பூம் பட்டணமுங் கடைவீதியு முண்டாக்கிக்

குடிபடையு மேத்திவிச்சுக் கூடியர சாளயிலே
நீதியுள்ள சோழபிரான் நெடுங்காலம் ஆளயிலே
மீதியுள்ள மந்திரிமார் வந்திருந்தார் சோழனிடம்
மாசாத்தான் செட்டியுந்தான் மகாநோட்டம் பாத்துவந்தான்
வாசல்பிர தானிகளும் மற்றுமுள்ளோர் சூழ்ந்துநிற்க

தேசத்தி லுள்ளவர்கள் தெண்டனிட்டார் சோழனையும்
கொள்ளிடத்தில் கல்லணையாய்க் கூறுமென்றா ரப்போது
கோடித் திரவியத்தைக் குடுகுமென்றா ரதுஎடுக்க
அணைகட்டி வைத்தாக்கால் அரசுகிளை உண்டாகும்
கல்லக்கட்டி வைத்தாக்கால் அரசுகிளை யுண்டாகும்

இப்படியே மன்னவர்கள் சொன்னார்கள் சோழனுக்கு
மந்திரிமார் தன்னைஎல்லாம் வரவழைத்தான் சோழனுமே
தெண்டனிட்டு அடிபணிந்தார் செப்புமென்றார் செய்தியெல்லாம்

அப்போது சோழனுந்தா னதிசெயித்து யென்னசொல்வான்
கொள்ளிடத்தில் கல்லணையாய்த் திருமென்றார் மந்திரியை

மாசாத்தான் செட்டியைத்தான் வரவழைத்தான் சோழபிரான்
கோடிநல்ல திரவியத்தைக் குடுகுமென்றார் செட்டியைத்தான்
மதியுள்ள மந்திரிமார் வந்தார்கள் கொள்ளிடத்தில்
காவேரி யாத்தருகே வந்தார்கள் மந்திரிமார்
காவேரி கொள்ளிடமுங் கண்ணாலே பார்க்கையிலே

கொள்ளிடத்தி லேகலுங்கி[4] குறுக்கேதா னெடுத்தோமென்றால்
நில்லாது யென்றுசொல்லிச் சொன்னார்கள் சோழனுக்கு
அந்நேரஞ் சோழனுந்தா னதட்டினான் மந்திரியை
மதிகெட்ட மந்திரியே மன்னவன்முன் நில்லாதே
மதியுள்ள சோழனுக்கு மந்திரியோ எந்தனுக்கு

## மாசாத்தான் அணைகட்ட ஒப்புதலளித்தல்

அப்படியே சோழனிடம் அண்டையிலே மாசாத்தான்
செப்பமுள்ள மாசாத்தான் தெண்டனிட்டா னந்நேரம்

அய்யாசோழ ராசாவே-என்னை-ஆதரிக்குஞ் சோழமன்னா
கையார்ச் சோழமன்னா[5] கொள்ளிடத்தில் கலுங்குகட்டித் தாரேனெனக்
கொள்ளிடத்தில் கல்லணையாய்க் குறுக்கேஅணை போடுறேனென்றான்
சொன்னானே மாசாத்தான் சொல்கேட்டான் சோழமன்னன்
மாசாத்தான் செட்டிக்கு வரிசையிட்டான்[6] சோழனுந்தான்
வேண்டியதோர் வரிசைபெற்றான் விருது[7] பெற்றான் மாசாத்தான்

## மாசாத்தான் கல்லணை கட்டத் தொடங்குதல்

வரிசைபெற்றான் மாசாத்தான் வந்தானே கொள்ளிடத்தில்
சுத்திவந்து பார்த்துத்தானும் சோதித்தானே கொள்ளிடத்தை
கம்மாளன்[8] தனையழைத்தான் காவேரி தன்னருகே
கொள்ளிடத்தைத் தான்பார்த்துக் குறுக்கே முழமுமிட்டான்
பாறைகண்ட மட்டுமங்கே பார்த்தார்கள் கம்மாளர்
ஆசாரி மார்கள்வந்து அழகான மட்டமுமாய்
கொள்ளிடத்தில் வந்துநின்று குறுக்கேதான் வெட்டினார்கள்

## அணைகட்டலில் நேர்ந்த இடையூறு

வானம்வெட்டிப்[9] போடயிலே தண்ணீரா யூறுதய்யோ
பாத்தானே மாசாத்தான் பதறியேதான் மெய்மறந்து
சோழனிடம் வந்துநின்று சொல்லலுத்தான் மாசாத்தான்
சோழபிரான் தான்கேட்டுத் துடுக்கிட்டு மெய்மறந்து
வீரங்கெட்ட மன்னரைப்போல் மெய்சோர்ந்து ஏதுசொல்வான்
சாரங்கெட்டோம்[10] புத்திகெட்டோம் தன்கீர்த்தி தானும்கெட்டோம்
சூரங்[11]கெட்டோம் காவேரி தொடுத்துவிட்டோம் வெட்டவென்று
என்றுசொல்லிச் சோழபிரான் எண்ணினான் மனந்தனிலே
மந்திரிமார் காரியப்பேர் மற்றுமுள்ள பெரியோரும்

சேர வரவழைத்துச் சிக்கரத்தில் வந்தார்கள்
கொள்ளிடத்தில் வந்தார்கள் கொம்பனையான் சோழபிரான்
வானம்வெட்டிப் போடையிலே-ஊத்து[12]- வருகுதய்யோ ஆறாக
கண்டார்கள் வேதியர்கள் கனத்தமுடிச் சோழருக்குச்
சொன்னார்கள் கம்மாளர் சோழபிரான் மன்னருக்கு
கொள்ளிடத்தில் கால்நாட்டிக் குறுக்கேஅணை திரவென்றால்

மனுடருட புத்தியினால் வல்லமையா லாகாது
தேவர்கள் வந்தாலுங் கங்கைநிறுத்த மாட்டார்கள்
என்றுசொல்லிப் பெரியோர்க ளியம்பினார் சோழனுக்கு
அப்போது ராசமன்ன னறிவுகெட்டு மதிமயங்கி
உலைவாய் மெழுகதுபோல் உருகினான் சோழபிரான்

## மாசாத்தான் சொன்ன உத்தி

மதியுள்ள மாசாத்தான் வந்தானே மன்னனிடம்
சொல்லுகிறேன் கேளுமய்யா சொல்பெரிய ராசமன்னா
கருப்புநிலை[13] நீதியினால்-கெங்கைக்-கல்நாட்ட வேணுமய்யா
ராசகற்பு நீதியினால்-கொள்ளிடங் கல்நாட்ட வேணுமய்யா
என்றுமே சொன்னானே இன்பமுடன் மாசாத்தான்

## பட்டத்தரசி சுந்தரியிடம் அறிவித்தல்

அற்புதமாய்ச் சோழபிரான் அரண்மனையின் உள்புகுந்து
தாதியரை ஓடவிட்டுத் தானழைத்தான் தேவியரை
பட்டத்துத் தேவியர்தான் பக்கத்திலே வந்துநின்றாள்
பதறியே மேனியெல்லாம் பயந்துநின்றாள் சுந்தரியும்
சொன்னார் செய்தியெல்லாஞ் சோழனுந்தான் சுந்தரிக்கு

மன்னவனார் செய்தியெல்லா மகிழ்ந்திருந்து கேட்கலுற்றாள்
கணவனார் சொல்லையெல்லாம் காதிலே வாங்கலுற்றாள்

## சுந்தரியின் மனக்கொந்தளிப்பு

ஊழி விதிப்படியோ உடையவனா ரிட்டெழுத்தோ
மன்னவனார் சொற்படிக்கு மாயனுந்தான் எழுதினானோ
கணவனார் சொற்படிக்குக் காவேரிபோக எழுதினானோ

என்னைப்போலப் பெண்பிறப்பா ரிருக்கலையோ
ராச்சியத்தில்
கற்புநெறிப் பெண்களிலே கனபெண்கள் இருக்கலையோ
சூரியனை நானறியேன் சோழனுட தேவியுந்தான்
சந்திரனை நானறியேன் தண்ணீர்க் கரையறியேன்
எந்தனுட விதியிதுவோ ஈசனுட கற்பினையோ[14]
வந்தாளே மாளிகையில் வன்மையுள்ள சுந்தரியாள்

## சுந்தரி புறப்பாடு

தாதியரைத் தானழைத்தாள் தண்டியலை யேற்குமென்றாள்
முட்டாக்குத் தண்டியலை முன்னெடுத்து வையுமென்றாள்
பிறப்பட்டாள் சுந்தரியும் பொற்சிவிகை மீதேறி
முத்துக்குடை பவளக்குடை முன்னே பிடித்துவர
கட்டியம் தாதியர்கள் கனமாகக் கூறிவர
பதினெட்டு மேளவாச்சியமும் பண்பாய் முழங்கிவர
அழகாபுரிப் பட்டணமும் அரமனையுந் தான்கடந்து
கன்னல்[15]சென்னல்[16] கலகலெனக் காவேரிக்
கரையில்வந்தாள்

## கொள்ளிடக் காட்சி

கொள்ளிடத்தின் கரையருகே கொலுவிருந்தார்
சோழபிரான்
கூடாரந் தானதிலே கொலுவிருந்தான் சோழமன்னன்
அப்போது சுந்தரியாள் வந்தாளே கொள்ளிடத்தில்
சுத்திவரக் காவல்வைத்தார் சூழ்ந்துநின்றார் தாதியர்கள்
கொள்ளிடத்தில் வானம்வெட்டிக் குழியில்நீ ரெடுக்கிறதும்
கண்ணாலே கண்டாளே கட்டழகி சுந்தரியும்

## ஊற்றுநீர் அடைத்தல்

என்னசெய்வேன் மாதாவே என்னைப்பெத்த மாதாவே-நான்
பத்தினியே யாமாகில்-சோழன்-பத்தாவும்[17] ஆமாகில்
உத்தமியே கெங்கையரே ஊத்துநீ ரடையுமென்றாள்
என்னையுந் தள்ளிவிட்டால் ஏத்துக்கோ பழியையென்றாள்
அப்போது கெங்கையரு மாச்சரியப் பட்டுநின்றாள்

உன்மேல் சாவேனென்று உத்தமியாள் தான்துணிந்தாள்
உன்கற்பு மென்கற்பு மொவ்வாதோ பாருமென்றாள்
அப்போது கெங்கையரு மாச்சரியப் பட்டுநின்றாள்
உன்னோடே தானெதிர்க்க உத்தமியே மாட்டேனென்றாள்
உத்தமியாள் கெங்கையம்மை ஊைத்துநீ ரடைத்துவிட்டாள்

பத்தினியாள் கெங்கையரைப் பாத்தேதான் தெண்டனிட்டாள்
அனுப்பிக்கொண்டாள் கெங்கையரை அப்போதே
பயணமென்றாள்

## சுந்தரி அரண்மனைக்குத் திரும்புதல்

மூடாக்குத் தண்டியலை முன்னெடுத்து வையுமென்றாள்
தாதியர்கள் சூழ்ந்துவரத் தானடந்தாள் சுந்தரியும்
பட்டத்துத் தேவியம்மை பத்தினியாள் வாராளாம்
கற்புநிலைத் தேவியென்று கட்டியங்கள் கூறிநின்றார்
கட்டியங்கூறி வந்தார்கள் வரிசைதானும் பெத்தார்கள்

## கல்லணை கட்டுதல்

அஞ்ஞூறு முழந்தனிலே யடிப்படலந் தானும்வைத்தார்
மலைகளைப்போல் வெள்ளிகளை வைத்தார்கள்
கல்லணைக்கு
அளவத்த கல்லுகள் வெள்ளியா லணைதிர்த்தார்
காலும்[18]வெட்டி யேரிவெட்டிக் கன்னல்சென்னல்
விளையுதிப்போ

## அணை கட்டியவர்கள் வரிசை பெறுதல்

வேலைசெய்த கம்மாளன் மிகவரிசை தானும்பெற்றான்
அணைமுகித்த கம்மாளன் அன்னசொன்னம்[19]
தானும்பெற்றான்
மாசாத்தான் செட்டியுந்தான் வரிசைபெற்றான் சோழனிடம்
சோழனுந்தான் மனமகிழ்ந்து சொல்லலுற்றான்
செய்தியனை
வாசமுள்ள மாசாத்தான்-நம்-மந்திரியாய்த்
தானிரென்றான்

தன்மையுள்ள மாசாத்தான்-எமக்குத்-தளகர்த்தனா
யிருமென்றான்
வாழ்த்தி விடைகொடுத்தான் வரம்பெத்தான் மாசாத்தான்
மாசாத்தான் சோழனிடம் வாழ்ந்திருக்குங் காலமதில்
மாசாத்தா னரமனையில் வாழ்ந்திருக்குங் காலமதில்

## திருடனென்று பழி கூறிச் சூரனின் மரணத்துக்கு மாசாத்தான் காரணமாதல்

மாசாத்தா னரமனைக்கு வருவார்க ளெல்லோரும்
வாழும்நல் லரமனையில் வாழ்ந்திருக்குங் காலமதில்
சோழனுக்குக் கண்ணான சூரனென்ற அடப்பக்காரன்[20]
அரசருக்குக் கண்ணான அடப்பக்காரன் சூரனுந்தான்
மன்னருக்கு மன்னரைப்போல் வந்திருந்த சூரனையும்

அழகுள்ள சூரனுந்தான் அடப்பங்கட்டி வருகையிலே
மாசாத்தா னரமனைக்கு வந்துபோவான் சூரனுந்தான்
ஒருநாளைத் தினமதிலே ஒருச்சாமம் நேரமதில்
வந்துநல்ல படுத்திருந்தான்-சூரன்-மாசாத்தா னரமனையில்
மாசாத்தான் செட்டியாரும் மங்கையரும் படுத்திருக்க

காவேரிப்பூம் பட்டணத்தில் கள்ளர்வந்து அந்நேரம்
கருவேல நகையெல்லாங்[21] கன்னமிட்டு வெளியானார்
பொக்கிசத்துத் திரவியத்தைப் போயெடுத்தே வெளியானார்
அந்நேர வேளையிலே-மாசாத்தான்-அரமனையைப்
பார்க்கையிலே
கருவேல நகையெல்லாங் கன்னமிட்டே போயிருக்க
பாத்தானே மாசாத்தான் பதறியங்கே அதற்றலுற்றான்[22]
படுத்திருந்த சூரனுந்தான் பதறி யெழுந்திருந்தான்
கண்டானே மாசாத்தான் கள்ளனென்றான் சூரனையும்
நெடுநாளாய்ப் பாத்திருந்தாய் நீதானடா கள்ளனென்றே
கயறுகொண்டே கட்டலுற்றான் கள்ளனென்றே
யடித்தானே
அய்யோ சிவனேயென்று அழுதானே சூரனுந்தான்
களவுமோ செய்யலையே கன்னமிட யில்லையேநான்
களவுசெய்ய மாட்டேனய்யா கன்னமிடத் தெரியாதய்யா

அடித்தானே மாசாத்தான் அலறினான் சூரனுந்தான்
அடித்தல்லவோ மாசாத்தான் அரசரிடம்
கொண்டுவந்தான்

அப்போது சோழனுந்தா னதிசயித்துக் கேட்கலுற்றான்
சூரனுந்தா னிசமாகச் சொல்லலுற்றான் சோழருக்கு-நான்
களவுமே செய்யவில்லை கன்னமிட
யில்லையென்றான்-நான்
போயிருந்த தல்லாமல் பொன்களவு செய்யவில்லை-நான்
படுத்திருந்த தல்லாமல் பணங்களவு செய்யவில்லை

அறிக்கையிட்டான் சோழனுக்கு அன்பாகச் சூரனுந்தான்
இவன்களவு நிசமென்று இளப்பஞ்சொன்னான்[23]
மாசாத்தான்
களவுசெய்தான் கண்ணிலேதான் முழிப்பாரோ
சோழமன்னா
வீரமுள்ள கள்ளனென்றே வெட்டச்சொன்னான்
மாசாத்தான்

## அரசனின் ஆணை

அப்போது சூரனுந்தான் அறிக்கையிட்டான்
சோழனுக்கே

நான் களவுமே செய்யவில்லை கையில்மழுவு[24] மேந்துகிறேன்
மாசாத்தான் செட்டிக்கு மழுவேந்திக் குடுக்கவென்றான்
அப்போது மாசாத்தா னறிக்கையிட்டான்
சோழருக்கே-இவன்
மந்திரத்தால் கட்டியல்லோ மழுவெடுப்பான் கள்ளனிவன்
பச்சிலையில்[25] மருந்தாலே பாரமழு கையெடுப்பான்

மாசாத்தான் சொன்னமொழி மன்னவனும் கேட்கலுற்றான்
சோழனுந்தா னந்நேரம் சொல்லலுற்றான் தலையாரிக்கே[26]
வேடிக்கைக் கள்ளனிவன் வெட்டுங்கோ வாளாலே
களவாண்ட கள்ளனைத்தான் கையைரெண்டும்
வெட்டச்சொன்னான்

## சூரனின் மரணம்

அச்சணமே தலையாரி யன்பாகச் சூரனைத்தான்
கயறுகொண்டே கட்டியல்லோ காட்டுக்கே போகலுத்தார்

அப்போதே சூரனுந்தா னடித்துநல்ல விழுந்தானே
அய்யோ சிவனேயென்று அழுதானே சூரனுந்தான்
முன்செய்த பாவமிதோ முப்பழியள் செய்ததுண்டோ
என்தலையில் பிரமனுந்தா னெழுதியவா ரிப்படியோ

என்றுசொல்லிச் சூரனுந்தான் ஏங்கி யலறலுற்றான்
வடமுகக் காட்டிலேபோய் வைத்திருந்தார் கள்ளனைத்தான்
அரசனிடந் தானிருந்து ஆள்வருமே யென்றுசொல்லி
சாமநேரம் பாத்தல்லவோ தான்துணிந்தான் தலையாரி
உறையைவிட்டே வாளுருவி ஒருமித்தான் தலையாரி

துணிந்திருந்தான் சூரனுந்தான் சுந்தரமே துணையெனவே
நாலுதிசை பார்த்தானே நல்லதொரு தலையாரி
கண்ணை நல்ல கட்டலுற்றான் கைவாளை யெடுக்கலுற்றான்
வெட்டினான் தலையாரி வீரமுள்ள மழுவாலே
மாண்டானே சூரனுந்தான் மண்மேலே தான்விழுந்தான்

## மரணச் செய்தியைத் தலையாரி மன்னனுக்கு அறிவித்தல்

வடக்கேமுகக் காட்டைவிட்டு வந்துவிட்டான் தலையாரி
சோழனென்ற அரசனிடம் சொல்லலுற்றான் தலையாரி
கோலமுள்ள மழுவாலே கொன்றுபோட்டேன் சோழமன்னா
சொல்லலுற்றான் தலையாரி சோழனுமே வீத்திருந்தான்
வீரமுள்ள மழுவாலே வெட்டிவந்தேன் சோழமன்னா

அச்சிணமே[27] தலையாரி அறிக்கையிட்டே வெளியானான்

## நகர மக்களின் மனக்கலக்கம்

பாத்தார்கள் தலையாரியைப் பட்டணத்தி லுள்ளவர்கள்
வீரமுள்ள சூரனையும் வெட்டச்சொன்னான் சோழனுந்தான்
கொடும்பாவிச் சோழனுந்தான் கொல்லச்சொன்னான் சூரனையும்
என்றைக்குக் காண்பேனென்று ஏங்கி அழுவாரும்

அய்யோ சிவனேயென்று அழுதுவிட்டார் பட்டணத்தோர்
அந்நேரம் மாசாத்தான்செட்டிக் கறிக்கையிட்டான் தலையாரி
பாராமல் வெட்டச்சொன்னான் பழியள்வந்து நேந்துதென்றார்
வீணாக வெட்டச்சொன்னான் வீண்பழிகள் நேந்துதென்றார்

## பாவம் தீர்க்கத் தானமிடல்

பழியள்வந்து நேந்துதென்று பயந்தாளே வண்ணமாலை
வேதியரைத் தானழைத்து மிகக்கேட்டான் மாசாத்தான்
பாவத்துக் கென்னசெய்வோம் பாப்பாரே[28] என்றுசொன்னார்
அப்போது பாப்பாரும் - பாவம் - அமுதிட்டால் போகுமென்றார்
ஆயிரம்பேர் பாப்பாருக்கு அமுதிட்டான் மாசாத்தான்
வஸ்திரதானம் சொர்ணதானம் மாசாத்தான் மிகக் கொடுத்தான்
மன்னவரும் மங்கையரும் மகிழ்ந்திருக்குங் காலமதில்

## கோவலனின் பிறப்பும் வளர்ப்பும்

மாசாத்தான் செட்டியுடன் மனையாட்டி வண்ணமாலை
பூரண கெர்ப்பமாகப் புகழ்ந்திருந்தாள் வண்ணமாலை
அஞ்சுநல்ல மாத்தையிலே[29] அறிக்கையிட்டாள் இனமுறைக்கே
பத்துமாதம் சென்றல்லவோ பெற்றாளே பாலகனை
மாசாத்தான் செட்டியாரும் மகிழ்ந்துசெய்தான் தானதர்மம்
வேண்டும் திரவியத்தை மிகக்கொடுத்தான் வேதியர்க்கு
அரதேசி[30] பரதேசிக்கு அன்னசொன்ன[31] மிகக்குடுத்தார்
நலம்பார்த்தான் மாசாத்தான் லக்கனமே தான்பார்த்தான்
பாலகனை மடியில்வைத்துப் பாரமிகப் பேருமிட்டான்
சீரான பாலனுக்குச் செல்லப்பேர் தானுமிட்டான்
ஆணழகா வீரமன்னா அழகான கோவலவா
கோவலவா உன்னழகை-யிந்தக்-கொடுமுடியில் கண்டதில்லை

வளத்தானே கோவலனை வரிசையிட்டான் பொன்னாலே
அஞ்சுவய சானபின்பு அழகர் கோவலனும்

பள்ளிநல்ல குடந்தனிலே படித்தானே வேணதெல்லாம்
பத்து வயதுமட்டும் படித்தானே கோவலனும்
அஞ்சறையிற் குள்ளல்லவோ மைந்தனையே படிக்கவைத்தார்
பத்தறையிற் குள்ளல்லவோ படித்திருந்தான் கோவலனும்
வேணவித்தை தானும் மிகப்படித்தான் கோவலனும்

ஆயுத சர்ப்பனைகள்[32] அதியவித்தை கத்தானே
வில்தொழிலுங் கையில்மல்லும் வேணவித்தை கத்தானே
சாத்திரங்கள் உள்ளதெல்லாந் தான்படித்தான் கோவலனும்
அரிபூசை குருபூசை ஆனதொரு மந்திரமும்
சிவபூசை செய்யலுற்றான் செட்டிமகன் கோவலனும்

பன்னிரண்டு வயதானான் பாத்தவர்கள் மயலாக
சித்திரம்போல் வடிவானான் செட்டிமகன் கோவலனும்
அழகுள்ள மன்னனைப்போ லாருமில்லை வையகத்தில்
வாழ்ந்திருந்தான் கோவலனும் வளமான அரமனையில்

## பாண்டியர்களின் கொடுங்கோலாட்சி

நான நன்னா நன்ன நன்னா நானான நானான

பொன்மதுரை ஆண்டிருக்கும் மீனாட்சித் தாயே
புகழ்பெரிய பாண்டியர்கள் தானே
தென்மதுரை ஆண்டிருக்கும் மீனாட்சி ஆனால்
சிகவீர பாண்டியர்கள் தாயே
வடமதுரை ஆண்டிருக்கும் அங்கயற்கண் தேவி

மகிட[33] முடிப் பாண்டியர்கள் தானே
அஞ்சுபேர் பாண்டியர்கள் மீனாட்சி யானாள்
ஆண்டிருந்தாள் மதுரையை அப்போதுதானே
சுந்தர பாண்டியன்மகள் மீனாட்சித் தாயாள்
சொக்கருக்கும் கலியாணம் செய்தார்கள் தானே

மதுரைமேனிப் பாண்டியர்கள் மீனாட்சி ஆனாள்
வாழ்ந்திருந்தாள் வெகுகாலம் தானே
அணிபெறப் பாண்டியர்க ளங்கயக்கண் தேவி
அரசாண்ட வெகுகாலம் அப்போது தானே
காலமோ முடியுதய்யோ மீனாட்சித் தாயே

கலியுகத்துப் பாண்டியர்க்கே தானே

அதர்மம் தழைக்குதய்யே மீனாட்சித் தாயே
அக்குறுவம்[34] பண்ணலுற்றார் தானே
பாவம்பழி செய்யலுற்றார் அங்கயற்கண் தேவி
பாண்டிமன்னர் மதுரையிலே தானே

பாம்படித்தே வழக்கிடுவார் மீனாட்சித் தாயே
பழிகாரப் பாண்டியர்கள் தானே
கொம்படித்தே வழக்கிடுவார் மீனாட்சித் தாயே
கொடும்பாவிப் பாண்டியர்கள் தானே
பாண்டிமன்னன் நகரியிலே மீனாட்சித் தாயே
பாரா ........ ழுந்தைகள் தானே
தேவலோகப் பட்டணத்தே அங்கயற்கண் தேவி
தேவராசா சமூகமது அப்போது தானே
செப்பலுற்றார் தேவர்களும் மீனாட்சித் தாயே
செய்திசொல்லத் தேவர்களும் தானே

## மதுரையை அழிக்கத் தேவராசன் செய்த ஏற்பாடு

காளியை வரவழைத்தான் தேவராசா யிப்பம்
கனமதுரை யழிக்கச் சொன்னான் தானே
குணமான தேவகன்னிப் பெண்ணாரே யிப்பங்
கோவலவன் பாரியென்றார் தானே
செப்பலுற்றார் பெண்ணார்க்கே தேவராசா யிப்பம்
சிக்கிரமே வெளியானாள் காளியுமே அப்போது
பூலோகந் தன்னிலேதான் மீனாட்சி ஆனாள்
பிரிந்தார்க ளிருபேரும் தானே
திருக்கடையூர் மாதேவி மீனாட்சி ஆனாள்
தேவதாசி தன்னிடத்தே தானே

## காளி கன்னகையாய்ப் பிறத்தல்

நன்னநன்னா நானநன்னா நானான நானான
காளியுமே அந்நேரம் கனமதுரை தன்னில்வந்தாள்
மதுரையிலே பாண்டியனும் மகனாரே யில்லையென்று
பாண்டியனார் மதுரையாளப் பாலனில்லை
யென்றுசொல்லி
பாப்பார்க்கு அன்னமிடாப் பாவியல்லோ பாண்டியர்கள்

பரதேசிக் கன்னமிடா மாபாவிப் பாண்டியர்கள்
பாவதவஞ் செய்யார்கள் பழிகாரப் பாண்டியர்கள்
பாண்டியன்தன் தேவியல்லோ பத்தினியாள் கொப்பிலங்கி
அந்தநல்ல கொப்பிலங்கி-வயத்தில்-அவதரித்தாள் காளியுமே
அசலறிய அஞ்சுமாத மானாளே கொப்பிலங்கி

பத்துமாதஞ் சிமந்தல்லவோ பத்தினியைப் பெத்தெடுத்நாள்
தாதிமா ரோடியல்லோ தான்சொன்னார் பாண்டியர்க்கே
வேதியரை யழைக்கச்சொன்னார் வீரமுள்ள பாண்டியர்தான்

## பஞ்சாங்கக் கணிப்பு

அஞ்சுபேர் வேதியர்கள்-பாண்டிய-னருகில்வந்தா ரந்நேரம்
பஞ்சாங்கம் பாத்தார்க ளைபேரும் வேதியர்கள்

நாளுமொரு நச்சத்திரமும் லக்கனமும் பாத்தல்லவோ
அறிக்கையிட்டார் பாண்டியர்க்கே ஆனதொரு வேதியர்கள்
மங்கையுரைப் பெத்தெடுத்த மாதாவுக்கே ஆகாதென்றார்
பெத்தெடுக்கும் ராசாவே தாங்களுக்கு மாகாதென்றார்
உத்தார்[35] உறைமுறைக்கு[36] மொருத்தருக்கு
மாகாதென்றார்

வசனம்

இந்தப்பிள்ளை மூன்றேமுக்கால் நாழிகைக்குப்[37] பிழைத் திருந்தால் முழுவதும் ரணகளத்திலே செத்திறந்து மதுரைப் பட்டணமுஞ் சுட்டுகெட்டு வெட்டையாகப்[38] போகுமென்று தெய்வப் பிராமணர்கள் சொன்னவுடனே ராசாவும் தன்னுடைய மந்திரியாகிய அறுபத்திநாலு மந்திரியும் கூட்டி வைத்துப் பேசினார்கள்

ஒருகாலில் வீரதண்டை ஒருகாலில் வீரமணி
கூடப் பிறந்துதய்யோ கொப்புலிங்கி மகளாக
பஞ்சாங்கம் பொய்யாது பலிக்குமய்யா பாண்டியனே
பார்ப்பார்கள் சொன்னதெல்லாம் பலிக்குமே பாண்டியனே
பெண்பிறந்தா லாவதென்ன பொன்மதுரை
யாள்வதுண்டோ

ஆண்பிறந்தால் நம்முடைய அரசாளும் பாண்டியனே

## குழந்தையை வைகையாற்றில் இடுதல்

பொன்னாலே பொட்டகத்தைப்[39] போதரவா வைகைதனில்

பொட்டகத்துக் குள்ளேநல்ல பெண்கொடியை
வைத்தல்லவோ
பூட்டுமிட்டுக் கயறுகட்டிப் பொன்னரக்கு மேல்போட்டு
வைகைதனில் மணல்தோண்டி வைத்திடுங்கோ
பொட்டகத்தை

இப்படியே செய்தால் இருந்தாள்வீர் பாண்டியனே
செய்யாதே விட்டாக்கால் செத்திடுவீர் பாண்டியனே
சொல்லலுற்றார் மந்திரிமார் சோதினையள்[40]
உள்ளதெல்லாம்
அச்சிணமே பாண்டியனும்-கொப்பிலிங்கி-யருகில்வந்து
சொல்லலுற்றார்

கேட்டாளே கொப்பிலிங்கி கீழே விழுந்தழுதாள்
ஆத்திலே போறதற்கோ அவதரித்தா யென்வயத்தில்
என்றுசொல்லிக் கொப்பிலிங்கி யிருந்தழுதா ளந்நேரம்
பட்டத்துத் தேவியும்நான் பத்தினியாள் பெத்தெடுத்தேன்
பெத்தெடுத்தேன் பிள்ளையுந்தான் பிஞ்சிலே போச்சு
மனந்துணிந்து கையில்கொடுத்தாள் பிள்ளையை
வாங்கலுற்றார் பாண்டியனும்

பொட்டகத்துக் குள்ளேவைத்துப் பேரான வைகையிலே
ஆருக்குந் தெரியாமல் அரையளவு மணல்தோண்டி
குழியிலேதான் வைக்கச்சொல்லிக் குடுத்துவிட்டான்
பாண்டியனும்
வாங்கினான் தலையாரி வைகைநதிக் குழியிலேதான்
வைத்து மணலைத்தள்ளி வந்துவிட்டான் தலையாரி

## குழந்தையைக் கண்டெடுத்தல்

குழியில்பிள்ளை யாகவல்லோ கொம்பனையாள்
தானிருந்தாள்
கருந்தாழை பூச்சொரியுங் காவேரிப்பூம் பட்டணத்தை
காசுகொண்டே மடையடைக்குங் காவேரிப்பூம் பட்டணத்தை
பேரால் பெரியவன்தான் பெருத்தசெட்டி யாபாரி
மாசாத்தான் செட்டியாருக்கு வரத்துக்கப்ப லாயிரமாம்[41]

சுரிப்பிலே ஆயிரமாஞ் சொங்கிலே வேணதுண்டும்

*வங்காள மீனமுதல் வரத்துக்கப்ப லாயிரமாம்*
*மாசாத்தான் செட்டியுந்தான் வாழ்ந்திருக்குங் காலமதில்*
*கொல்லங்கொச்சி யாபாரஞ் சுரிப்பில்கொண்டு சரக்கேத்தி*
*திருச்சிராப் புரமிருக்கும் தீர்க்கமுள்ள வணிகேசன்* **(350)**
*நாகேந்திரன் செட்டிமகன் நல்லவண்ண மாலைச்செட்டி*
*மாசாத்தான் செட்டியாரும் வண்ணமாலைக்குக்*
*கப்பலாயிரமாம்*
*திருச்சிராப் புரமிருக்கும் தீர்க்கமுள்ள வணிகேசன்*
*நாகேந்திரன் செட்டிமகன் நல்லவண்ணமாலைச்*
*செட்டியாரும்*
*மாசாத்தான் செட்டியாரும் வண்ணமாலைச் செட்டியாரும்*
**(355)**
*மச்சினனும் மச்சினனும் மலையாளம் வந்தல்லவோ*
*சுரிப்புநல்ல யாபாரத் தோணியை விட்டிறங்கி*
*யாபாரஞ் செய்தார்கள் நல்லதொரு செட்டிமக்கள்*
*மலையாள தேசம்விட்டு வாரார்கள் வணிகேசர்*
*வாரநல்ல வழிதனிலே மதுரைநகர் வீதிவந்தார்* **(360)**
*வண்டியூர்ப் பட்டணத்தே வைகைநதி ஆத்திலேதான்*
*வைகைநல்ல பெருகியது வருகுதய்யோ பிரளயமாய்*
*பேரான வைகையிலே-தண்ணீர்-பெருகிவரும் வேளையிலே*
*குத்திநல்லா எழுப்புதய்யோ கொம்பினையாள் பொட்டகத்தை*
*பொன்னின்பொட்டி வருகுதய்யோ பேரான*
*வைகையிலே* **(365)**
*முதந்து வருகுதய்யோ மூர்க்கமுள்ள பொட்டியுமோ*

**வசனம்**

வருகிற பொட்டியை வண்ணமாலைச் செட்டிகண்டு மாசாத்தான் செட்டிக்குச் சொல்ல, வண்ணமாலைச் செட்டி நீ பொட்டகத்தைக் கண்டபடியினாலே பொட்டிக்குள்ளே யிருக்கிறது உனக்கு, பொட்டி யெனக்கென்றிருபேருங் கைபோட்டுக் கூட வந்தவரை விட்டு வைகை ஆத்திலேயிறங்கிப் பொட்டகத்தைக் கொண்டுவரச் சொல்லிக் காட்டிலே கொண்டு போயி உடைத்துப் பார்க்கற போது சந்திராள் சூரியாளைப் பிடித்துப் பொட்டிக்குள்ளே வைத்து அடைத்தாப் போலே இந்தப் பெண்பிள்ளையைக் கண்டார்கள். வண்ணமாலைச் செட்டி பிள்ளையில்லாத படியினாலே பிள்ளையை வாரி எடுத்துக் கொண்டான். மாசாத்தான் செட்டியும் பொட்டகத்தை

எடுத்துக் கொண்டு காவேரிப் பட்டணம் வந்தான். வண்ணமாலைச் செட்டி இந்தப் பிள்ளையைக் கன்னத்தோடும் வைத்து முத்திக் கொள்ளுகிறபோது இந்தப்பிள்ளை சிரித்தபடியினாலே கன்னகை என்று பேருமிட்டு திருச்சிராபுரம் வந்து சேர்ந்து பெண்டாட்டி கையிலே பிள்ளையைக் கொடுத்தான்; அவளும் வாங்கினா ளென்றவாறு.

## கன்னகை வளருதல்

வாங்கினாள் கன்னகையை வாய்நெறிய முத்தமிட்டாள்
கொங்கை சுரந்தல்லவோ கொடுத்தாளே பாலாக
சந்திரனோ எந்தனக்குத் தான்கொடுத்த பாக்கியமோ
சூரியனோ எந்தனக்குச் சூட்டிவைத்தான் பிள்ளையைப்போல்

மலடிக்குப் பிள்ளையுந்தான் கொடுத்தாரே மாயனுந்தான்
மங்கையரைத் தானழைத்தாள் வாழ்ந்தாள் சிலகாலம்
அஞ்சுநல்ல வயசானாள் அரையளவு பெண்ணானாள்
சித்திரம்போல் வடிவானாள் வச்சிரம்போல் மேனியுள்ளாள்
அன்னம்போல் நடையழகி அழகுள்ள கன்னகையாள்

பத்துநல்ல வயதானாள் பத்தினியாள் கன்னகையும்
ஆபரண முள்ளதெல்லா மலங்கரித்தார் கன்னகைக்கு
வயிரநல்ல சரமாலை மங்கையர்க்குத் தானணிந்தார்
தெய்வலோகக் கன்னியிலுந் தெய்வகன்னி போலானாள்
கன்னகையைப் போலேயல்லோ கண்டதில்லை வையகத்தில்

## மணம் முடித்தல்

வண்ணமாலை மகளார்க்கும் மாசாற்றான் மகனார்க்கும்
மாமனார் மகனார்க்கும் மங்கைநல்லாள் கன்னகைக்கும்
அத்தைநல்ல மகளார்க்கு மருமைமகன் கோவலர்க்கும்
கன்னகைக்குங் கோவலர்க்குங் கலியாணஞ் செய்யவென்றே
நாள்செய்தே முகிழ்த்தமிட்டு நல்லதொரு கோவலர்க்கு

சோழராசா சமுகத்திலே சொல்லலுத்தான் மாசாத்தான்
பாலன்நல்ல கோவலர்க்கும் பத்தினியாள் கன்னகைக்கும்

கலியாணம் கோவலர்க்கும் கன்னகைக்கு மென்றுசொல்லி
காவேரிப்பூம் பட்டணத்தில் கலியாணந் தான்முடித்தார்
மாணிக்கக் கால்நாட்டி வயிரவளை தான்பரப்பி
அட்டகோணக் கால்நாட்டி ஆகாசப் பந்தலிட்டு
பவளநல்ல கால்நாட்டிப் பந்தலிட்டான் மாசாத்தான்
வயிரச்சல்லி[42] பவளச்சல்லி மணவறையில் அலங்கரித்து
முத்துநல்ல சல்லிகொண்டு முகப்பிலேதான் கட்டலுற்றான்
அழகுபிச்சிக் கொழுந்தாலே யலங்கரித்தான் பந்தலிலே
வேணவித மலங்கரித்தார் மேலான பந்தலிலே
அலங்கரித்தான் மாசாத்தான் அரசர்மகள் வந்திருக்க
நானூறு பாப்பார்கள் நாளிட்டார் கோவலர்க்கே
முன்னூறு பாப்பார்கள் முகிழ்த்தமுள்ள பந்தலிலே
தம்பட்டமே[43] பேரிகையாந்[44] தவிலோசை[45] தான்முழங்க
துந்துமி[46] வாச்சியங்கள்[47] -வெகு-தூரமெல்லாந்
தான்கேட்கும்
தித்திவினை நாகபடந் தேவகன்னி யாடிடவே
கால்நாட்டிப் பந்தலிலே கலியாண முகிழ்த்தஞ் செய்தார்
விக்கினர்க்கும் லட்சிமிக்குங் காப்புக்கட்டிச் சடங்குசெய்தார்
ஓதினார் மந்திரத்தை ஓமகுண்டந் தான்வளத்தார்
முத்துமுளை தான்தொளித்து முன்னேயங்கே வைத்திருக்க
அம்மியங்கே போட்டல்லவோ அரசாணி[48] கட்டலுற்றார்
ஆயிரம் நெய்விளக்கு அக்கினியாள் முன்னிருக்க
நாலுநல்ல வேதமல்லோ நாயகனுமே தானறிய
ஆறுநல்ல சாத்திரமும் அரனுமையுந் தானறிய
முப்பத்தி முக்கோடிதேவர் முனிவர்களும் தானறிய
ஓமத்தி லக்கினியாள் உத்தமியாள் தானறிய
காவேரிப்பூம் பட்டணத்தில் கனகசபை தானறிய
மங்கிலியச் செப்பெடுத்தே வாழ்த்தினார் வேதியர்கள்
கோவலவன் கைக்கொடுத்தார் கொம்பனையாள் மங்கிலியம்
கோவலவன் மங்கிலியங் கொம்பனையாள் கழுத்திலிட்டான்
கன்னகைக்குத் திருமங்கிலியங் கட்டலுற்றான் கோவலவன்
மங்கிலியச் செப்பதிலே மல்லிகைப்பூ வைத்தல்லவோ
மன்னவர்க்கே தீங்குவந்தால்-இந்த-மல்லிகைப்பூ
வாடுமென்றே

கைக்கொடுத்தார் வேதியர்கள் கன்னகையாள்
வாங்கலுற்றாள்
காப்பறுத்தே சடங்குசெய்தார் கன்னகைக்கும் கோவலர்க்கும்
எழுநாச் சடங்குசெய்தே இருந்தார்கள் மனைதனிலே
பட்டணப் பிரவேசம் பாரிலெங்குஞ் சுத்திவந்து
மன்னவரும் கன்னகையும் வாழ்ந்திருக்கும் நாளையிலே

## மாதேவி பிறப்பும் வளர்ப்பும்

திருக்கடையூர் மாதேவி தேவடியாள் பெண்ணாரும்
பிள்ளைநல்ல தாகமல்லோ பெருகிமனம் புண்ணாகி
மதலைமொழி யில்லாமல் மனமுருகி வாடுறாளே
மன்னவர்க்கே திங்குசெய்து-அடியாள்-மாபாவஞ் செய்தேனோ
சன்னதியிற் சொல்லியல்லோ தானழுதாள் தேவடியாள்
அச்சணமே மகாதேவர் அறிக்கைசெய்தார் அந்நேரம்
சன்னதி விளக்கல்லவோ கொழுந்துவிட்டே சுடர்பெருக
கோவில்விளக் கல்லவோதான் சுடராய்ப் பெருகுதய்யோ
கண்ணாரக் கண்டாளே தேவதாசி கையாற் தெண்டனிட்டாள்
வாக்குமொழி நல்வசனம் வாங்கியல்லோ முடிந்துவிட்டாள்
கோவில்விட்டே வீட்டில்வந்தாள் கொம்பினையாள்
தேவதாசி
அதுமுதலாய்க் கெர்ப்பமல்லோ ஆனாளே தேவடியாள்
அசலறிய அஞ்சுமாத மரைவயறு சூலானாள்
பத்துமாதஞ் சிமந்திருந்தே பைங்கிளியைப் பெற்றெடுத்தாள்
தெய்வலோகக் கன்னியுமே தேவதாசி மகளானாள்
மகாதேவர் வரத்தாலே வாங்கியதோர் பெண்ணார்க்கே
மாதேவி யென்றுசொல்லி வளப்பமிட்டாள் தேவடியாள்
கழுத்திலே மாலைசுத்திக் கட்டழகி தான்பிறந்தாள்
பொன்மாலை கழுத்திலிட்டுப் பிறந்தாளே பெண்ணாரும்
மாலைசுத்திப் பெண்பிறந்தாள் மாதேவிப் பெண்ணாரும்
பெத்தவளுக்குத் தெரியாது பேறான பொன்மாலை
வளர்த்தவர்க்குத் தெரியாது மாயனுட பொன்மாலை
ஆர்க்குந் தெரியாது அரனுடைய மாலையிப்போ
ஒருவயது மிருவயது மூன்று வயதானாள்
அஞ்சுநல்ல வயதுதனில் அரங்கேத்திப் படிக்கவைத்தாள்
பொட்டகத்தைத் தான்திறந்தே பூட்டினா ளாபரணம்

வயிரநல்ல பதைக்குமுதல்[49] மாதேவிக்கே தானணிந்தாள்

## மாதேவி கலைகள் கற்றல்

நட்டுவனா ராட்டிவைக்க நாட்டியங்கள் தான்படித்தாள்
அணணாவி[50] படிக்கவைக்க அடவுடனே[51] தான்படித்தாள்
ஏழுநல்ல வயதானாள் இருந்துசெய்தாள் நாட்டியங்கள்
எட்டுநல்ல வயதானாள் கட்டாரி[52] லாகைசெய்தாள்

கத்திகட்டி லாகுசெய்தாள் கட்டழகி மாதேவி
பத்துநல்ல வயததிலே பரதனங்க ளாடயிலே
தெய்வலோகக் கன்னியுமே திசையள்தப்பி வந்தாளோ
பரமன்சிவன் நாட்டியத்தைப் பாத்திருந்தே வந்தாளோ
சிதம்பரத்து நாட்டியத்தைச் சேத்துக்கட்டிப் படித்தாளோ

மாதேவி யாடையிலே-மண்டலத்தில்-மயங்குவோர்
வெகுகோடி
மாதேவி நாட்டியம்போல் மண்டலத்தி லாருமில்லை
என்றுசொல்லிப் பாப்பாரும் இருந்துமய லாவாரும்
மாதேவிய ளாடயிலே மதிமயங்கி நிற்பாரும்
கும்மல்கும்ம லாகவல்லோ கூடியங்கே பாப்பாரும்

வேணவிதம் நாட்டியங்கள் மிகப்படித்தாள் மாதேவி
ஆரிய டொம்பவித்தை யதியவித்தை படிக்கவென்று
அறுபதுமுழக் கம்பமதை ஆகாசமாய்த் தான்நிறுத்தி
தமுக்கடித்தே[53] கழைஏறித்[54] தான்செய்தாள் நாட்டியங்கள்
உருக்குவட மேறியல்லோ[55]-அதில்-ஓடிடுவாள் மாதேவி

அடுக்குவடம் பாய்ந்தல்லவோ ஆடிவந்தாள் கழையதிலே
பறவைபோல் சுத்தியல்லோ பாய்ந்துநிற்பாள் மாதேவி
அழகுள்ள மாதேவி அதியவித்தை கத்தாளே
வேதநல்ல சாத்திரங்கள் மிகப்படித்தாள் கன்னியுமே
சாத்திரங்க ளுள்ளதெல்லாம் தான்படித்தாள் மாதேவி

வித்தைநல்ல களஞ்சியம்போல் வீத்திருந்தாள் மாதேவி
வித்தைக்கு மாதேவி விநாயகரைப் போலேயல்லோ

## மாதேவி பருவமடைதலும் சடங்குமுறைகளும்

பன்னிரண்டு வயதானாள் பருவமோ தானானாள்
திருக்கடையூர் மாதேவி திரண்டிருந்தாள் மனைதனிலே
நாளுமோ முகிழ்த்தமிட்டு லக்கனமும் பாத்தல்லவோ
(480)

பந்தலிட்டே சடங்குசெய்தார் பாத்திருந்தாள் மாதேவி
ஓமஞ்செய்தே வேதியர்கள் ஓதினார் மந்திரத்தை
சடங்குசெய்தே மாதேவிக்குத் தலைக்குத்தண்ணீர்
தான்வார்த்தார்
மகாதேவர் சன்னதியில் மாவிளக்குப் பார்க்கலுற்றார்
வேதியர்க்குத் தானமல்லோ மிகக்குடுத்தாள் மாதேவி (485)
அண்ணாவி நட்டுவர்க்கு ஆடையாபரணந்
தான்கொடுத்தாள்
வித்தைகத்தே கொடுத்தவர்க்கே வேணதெல்லாம்
தான்கொடுத்தாள்
தானதர்மம் பண்ணியல்லோ தானிருந்தாள் மாதேவி
இந்திரனைப் பொட்டகத்தில் இருந்தடைத்து வைத்தாப்போல
இந்திரனைப் போலேயல்லோ இருந்தாளே மாதேவி (490)
திருக்கடையூர் மாதேவி தேவகன்னி போலிருக்க

## தாயாரின் அறிவுரை

பேறுபெத்த தேவடியாள் பேணியல்லோ மகளார்க்கு
பெத்தநல்ல தாயாரும் புத்திசொன்னாள் மாதேவிக்கே
வித்தைநல்ல படிக்கவல்லோ வீட்டிலுள்ள உடமைவித்தேன்
நாட்டியங்கள் படிக்கவல்லோ நகையளெல்லாம்
வித்துவிட்டேன்-என் (495)

கணவன்மார் வரவுமில்லை-என்-கையிலொரு காசுமில்லை
திரண்டிருந்தாள் தேவதாசி தேடிவைப்பாள் திரவியத்தை
சமைந்தபெண்கள் மனைதேடித் தான்வருமே திரவியங்கள்
மண்ணில்நல்ல சடங்குசெய்யக் காத்திருந்த வேணபெண்கள்
மாதேவி மனைதேடி வந்துநிற்பார் வாசலிலே (500)
என்னைப்போல் தாசியர்கள் ஏசியென்னை நகையாரோ
கூட்டிவைத்தேன் கணவரைத்தான் கொம்பனையே மாதேவி
என்றுசொன்னாள் தாயாரு மினிக்கேட்டாள் மாதேவி

## மாதேவியின் நயப்புரை

அல்லவடி தாயாரே சொல்லவோ நீகேளாய்
அழகுள்ள மன்னவர்கள் ஆருமில்லை வையகத்தில்
எனக்கேத்த கணவரிடம் இருந்தல்லவோ உன்தனக்கே
வேணதெல்லாம் வரவழைத்து மிகத்தாரேன் திரவியத்தை
வீடெல்லாம் திரவியத்தை விரைத்துவைக்கேன் தாயாரே
மாதேவி சொல்லையிலே மனமகிழ்ந்தாள் தாயாரும்
வீத்திருந்தாள் மனைதனிலே வீரமுள்ள மாதேவி
வேளைநல்ல வருமளவும் வீத்திருந்தாள் மனைதனிலே

## மாதேவியின் கழைக்கூத்து

காலமோ வரும்போது கட்டழகி வெளியானாள்
மாதேவி வெளியில்வந்தாள் வந்தார்கள் தாசியர்கள்
ஆட்டிவிக்கும் நட்டுவனா ரண்ணாவி தானும்வந்தார்
ஆரியர் டொம்பமுதல் அனபேரும் வந்தல்லவோ
கழையெடுத்தே வாரார்கள் காவேரிப்பூம் பட்டணத்தில்
கருந்தாழைப் பூச்சொரியுங் காவேரிப்பூம் பட்டணத்தில்
காசுகொண்டே மடையடைக்குங் காவேரிப்பூம் பட்டணத்தே
அறுபது முழப்பாகம் ஆகாசக் கழைநிறுத்தி
கழைநிறுத்தித் தழுக்கடித்தார் காவேரிப்பூம் பட்டணத்தே
தழுக்குச்சத்தம் கேட்டல்லவோ தானும்வந்தார் ராசாக்கள்
சோழநல்ல ராசாவும் துணுக்கிட்டே தானும்வந்தார்
தவிலோசை கேட்டல்லவோ தானும்வந்தார் பெரியோர்கள்
பட்டணத்தி லுள்ளோரும் பாத்திருந்தார் சூழநின்றே
கும்மல்கும்ம லாகவல்லோ கூட்டமிட்டே வந்திருந்தார்
ஆடினாள் நாட்டியங்கள் அழகுள்ள மாதேவி
மாதேவி யாடையிலே மயங்கியல்லோ சோழமன்னன்
வேணதெல்லாம் தான்குடுத்தான் மிகக்கொடுத்தான் திரவியத்தை
கனகசபை சூழ்ந்துநிற்கக் கழைபார்த்தாள் மாதேவி
அந்திரமாய் நிற்குமந்த ஆகாசக் கழைபார்த்தாள்
ஏறிட்டுப் பார்த்தாளே என்னசொன்னாள் மாதேவி
கழுத்திலே கிடக்குமந்தக் கண்டசரம்[56] பொன்மாலை

ஆர்க்குந் தெரியாது அரனுடைய மாலையுமே
சிறியே பார்த்தாளே திசைநாலுந் தான்பார்த்தாள்
காலமேதான் வந்துதென்றே கையெடுத்தாள் மாலையுமே
-நான்
கணவனுக்கே மாலையிட-இந்தக்-கழைமேலே
போறேனென்றாள்-நான்
மன்னவர்க்கே மாலையிட-இந்த-மலைகள்மேல்
போறேனென்றாள்
தேவர்ரிஷி முனிகளையும் சிவனையுமே தானினைந்தாள்
நாலுதிக்கும் பாத்தல்லவோ நமஸ்கரித்தாள் மாதேவி
உருக்குவட மேறியல்லோ ஓடிவந்தாள் கழைமேலே
அடுக்குவடம் பாய்ந்தல்லவோ ஆடிவந்தாள் கழைமேலே
பறவையள்போல் சுத்தியல்லோ பாய்ந்துநின்றாள்
கழைமேலே
ஆகாசக் கழைஏறி யாடிநின்றாள் தூவியின்மேல்
அண்டசரப் பொன்மாலை கையிலேதான் வைத்தல்லவோ
மாதேவி கழைமேலே மனமகிழ்ந்தே நிற்கையிலே
கணவனா ரெங்கேயென்றே கனகசபை பார்க்கையிலே
மன்னவனா ரெங்கேயென்றே மாதேவி பார்க்கையிலே
காவேரிப்பூம் பட்டணத்தில் கனத்தசெட்டி வணிகேசன்
திரவியமே மிகுத்தவன்காண் செட்டியல்லோ வணிகேசன்
மாசாத்தான் செட்டிமகன் வணிகேசன் கோவலவன்
பதினாறு வயதானான் பக்குவமோ தானானான்

## கன்னகை பருவமடைதல்

பன்னிரண்டு வயதானாள் பத்தினியாள் கன்னகையும்
திரண்டிருந்தாள் கன்னகையும் தேன்மொழியா ளிப்போது
மாதவிடை யானாள் மங்கைநல்ல கன்னகையும்
நாளிட்டே சடங்குசெய்தார் நல்லதொரு கன்னகைக்கும்
மன்னவர்க்குங் கன்னகைக்கும் மணவறையில்
சடங்குசெய்தார்
சடங்குசெய்த நாள்முதலாய்த் தானறியாள் கோவலனை
படுக்கப்பாய் போட்டறியாள் பத்தினியாள் கன்னகையும்
தூத்துப்பாய் போட்டறியாள் சுகமறியான் கோவலனும்
கண்ணிலே கண்டதில்லை கன்னகையை வணிகேசன்

கெருவிதமோ[57] தானானான் கீர்த்தியுள்ள கோவலவன்

## கோவலனின் வேண்டுகோள்

அம்மஅம்மா தாயாரே நானொரு உண்மைசொல்லக்
கேளாயோ-இந்தக்
காவேரிப்பூம் பட்டணத்தே கழைக்கம்ப நாட்டியத்தை
இராசாக்கள் கூடியல்லோ நாட்டியங்கள் பாத்திருக்க
திசைக்கம்ப மேறியல்லோ தேவடியாள் நாட்டியத்தை
(565)
மாதேவி நாட்டியத்தைப்பார்க்க வணிகன்மக்கள் போறார்கள்
தெருவிலுள்ள வணிகேசர் செட்டிமக்கள் போறார்கள்
முத்தன்செட்டி மகன்போறான் முருகன்செட்டி
மகன்போறான்
கூடப்போய்த் தாயாரே கூத்துப்பார்த்தே வாரேனென்றான்

## தாயாரின் அறிவுரை

அல்லவடா யென்மகனே சொல்லவோ நீகேளாய் (570)
வாசல்வழி வந்தறியாய் வணிகேசா செட்டிமன்னா
தெருவீதி பாத்தறியாய் செட்டிமன்னா கோவலவா
ஆளுக் கழகனடா ஆணழகா கோவலவா
உன்னைப்போல அழகனல்லோ உலகத்தில் கண்டதில்லை
ராசதிட்டி பொல்லாது நல்ல மகனாரே (575)
கண்ணீறு பொல்லாது கட்டழகா கோவலவா
போகாதே மகனேயென்று புத்திசொன்னாள் வண்ணமாலை
வேணவிதம் புத்திசொல்லி மேலான தாயாரும்
காலமோ வரும்போது கட்டழகன் வெளியானான்
நாளுமோ வந்துதென்றே நமஸ்கரித்தான் தாயாரை (580)
அனுப்பிவித்தாள் வண்ணமாலை ஆதரவாய்
வார்த்தைசொல்லி

## கோவலன் கழுத்தில் மாலை விழுதல்

ஆபரண முள்ளதெல்லா மலங்கரித்தான் கோவலவன்
சந்திரனைப் பொட்டிக்குள் தானடைத்து விட்டாப்போல

தூரிய னுதையமதில் துலங்கிவெளி வந்தாப்போல
வீடுவிட்டே வெளியானான் வீரமுள்ள கோவலவன் (585)

வணிகேசன் மக்களுடன் வாரானே கோவலவன்
செட்டிமக்கள் கூடவல்லோ சேர்ந்திருந்தான் வணிகேசன்
சந்திரனைப் போலேயல்லோ தானிருந்தான் சபைதனிலே
தூரியனைப் போலேயல்லோ துலங்குகின்ற கோவலவன்
பாரநல்ல கழையில்நின்று பாத்தாளே மாதேவி (590)

நாலுதிக்கும் பாத்தாளே நாரணரைத் தானினைந்தாள்
சிவனை நினைந்தல்லவோ தெரிசித்தாள் திசைநோக்கி
மாலைதனைக் கையெடுத்தாள் மாதேவிப் பெண்ணாரும்
சுத்தினாள் மாலையைத்தான் சுழத்திவிட்டாள் சபைதனிலே
மாதேவி மாலையல்லோ வருகுதய்யா சபைதனிலே (595)

வசனம்

சேரன், சோழன், பாண்டியன், மந்திரிமார், காரியக்காரர், காவேரிப்பூம்பட்டணத்திலுண்டான சனங்கள் முதல் என் கழுத்திலே மாலை விழாதோ யென்றிருக்கிறபோது,

வேறு

சுற்றியே பாத்துதய்யோ சுழத்திவிட்ட பொன்மாலை
கட்டழகன் கோவலனார் கழுத்திலே விழுந்துதய்யோ
மாலையிட்டாள் மாதேவி மன்னவனார் கோவலர்க்கே

## கோவலன், மாதேவியின் மனை சேர்தலும் தங்குதலும்

கழையைவிட்டே கீழிறங்கிக் கணவரிடம் வந்தல்லவோ
முக்காலுஞ் சுத்திவந்து முடிவணங்கி நமஸ்கரித்தாள்(600)

கணவனுடன் கைப்பிடித்தாள் கட்டழகி மாதேவி
மணவாளன் கைப்பிடித்தாள் மாதேவிப் பெண்ணாரும்
மாதேவி முகம்பார்த்தான் மயலானான் கோவலவன்
மதனும் ரதியும்போலே வந்தங்கே நிற்கையிலே
சந்திரரும் தூரியருமிந்தச் சபைதனிலே வந்தாப்போல

சிவிகையின்மேல் கொண்டல்லவோ திருக்கடையூர் மாதேவி
மாதாவைக் கண்டல்லவோ மாதேவி நமஸ்கரித்தாள்
மருமகளைப் பாத்தல்லவோ மாமியாள் சொல்லலுத்தாள்
தெக்கித்திக் கப்பலல்லோ சேர்ந்துதடி மகளேஎன்றாள்
வடக்கித்திக் கப்பலல்லோ வந்துதடி மகளேஎன்றாள்

தேடிவைத்த திரவியமுஞ் சேர்ந்ததடி பொட்டகத்தில்
கும்பிட்ட தெய்வமல்லோ கொண்டுவந்து விட்டுதென்றாள்
கையெடுத்த தெய்வமெல்லாம் கண்டனளே தாயாரும்
மாதேவி செய்யலுற்றாள் மணவாளர் கோவலர்க்கே
தானபானம் பண்ணலுற்றாள் தனிப்பூசை செய்யலுற்றாள்

ஏலச்சம்பா அரிசிகொண்டே எடுத்துமங்கே சமைக்கலுற்றாள்
வர்க்கவகைக் கறிசமைத்தாள் மன்னவனார் கோவலர்க்கே
வாழைநல்ல இலைபோட்டு மயிலினம்போ லமுதுமிட்டாள்
புத்துருக்கு நெய்வார்த்தாள் பொற்கொடியாள் மாதேவி
சாப்பிட்டு இளைப்பாறித் தானிருந்தான் கோவலவன்

அருகிருந்த இலைதனிலே அசனமிட்டாள்[58] மாதேவி
சந்தனமும் பன்னீரும் தானுமொரு கும்பாவில்
சவாது புனுகுசட்டந் தானுமொரு கும்பாவில்
வெள்ளிநல்ல கும்பாவில் விதவிதமாய்த் தானும்வைத்தாள்
பரிமளமுஞ் சுகந்தாதியும் பக்கத்திலே முன்புவைத்தாள்

சாதிக்காய் கிராம்பல்லவோ தானும்வைத்தாள் மாதேவி
தம்புராவும் கின்னரமும்[59] தான்படித்தாள் வீணையோடு
மாதேவியார் மனையில் மகிழ்ந்திருந்தான் கோவலவன்
மதனும் ரதியும்போல் மகிழ்ந்திருக்கும் நாளையிலே

## கோவலனின் தாய், தந்தையர் மரணம்

மாசாத்தான் செட்டியாரும் வண்ணமாலைப்
பெண்ணாரும்
மாண்டிறந்தார் மண்மேலே வைகுண்டஞ் சேரலுற்றார்
செத்திறந்தார் மண்மேலே சிவலோகஞ் சேரலுற்றார்
கர்மம்தர்மஞ் செய்யலுற்றான் கட்டழகன் கோவலவன்
மாமி யருகிருந்து மருவிவிட்டாள் கன்னகையும்

தானதர்மம் தான்கொடுத்தான் சங்கையுள்ள கோவலவன் **(635)**

வேணதெல்லாந் தானமிட்டான் மிகக்கொடுத்தான் கோவலவன்
நெடுநாளாய்ப் பாத்திருந்தே நினைத்துவிட்டான் வணிகேசன்
மாதேவி யூர்தேடி வந்துவிட்டான் வணிகேசன்
மங்கைநல்லாள் கன்னகையும் மனைதனிலே வாழ்ந்திருந்தாள்
தாதிமார் கூடவல்லோ தானிருந்தாள் கன்னகையும் **(640)**

## கன்னகையின் கவலை

ஊழிநல்ல விதிப்படியோ உடையவனா ரிட்டெழுத்தோ
எழுதியிட்ட படியிதுவோ எழுதினவன் சோதினையோ
கணவனார் வெளிப்போக கன்னகைநான் பாத்திருக்க
மன்னவனார் வெளிப்போக மங்கைநான் பாத்திருக்க
என்தலையில் பிரமனுந்தான் எழுதியிட்ட படியிதுவோ **(645)**

என்றுசொல்லித் தானழுதாள் இனியதொரு கன்னகையும்

## மாதேவியின் மனைநிகழ்ச்சிகள்

வந்திருந்தான் கோவலவன் மாதேவியார் மனையில்
கண்டாளே மாதேவி கட்டழகன் கோவலவனை
மார்மேலே யப்பிக்கொண்டாள் மண்மேல் விழுந்தாள்
அத்தையா ரருகிருந்து அனுப்பலையே யென்றழுதாள் **(650)**

தலைமேலே கையைவைத்துத் தானழுதாள் மாதேவி
அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டாள் மாதேவி
தாய்க்கிழவி யோடிவந்து தானழுதே யங்குநின்றாள்
புத்திசொன்னாள் மாதேவிக்கே பேர்பெரிய தாய்க்கிழவி
வீத்திருந்தான் கோவலவன் வேசைமகள் மாதேவி **(655)**

தீர்த்தமாடி மாத்துடுத்துச் சிவபூசை செய்யலுற்றாள்
ஏலச்சம்பா அரிசிகொண்டு எடுத்தங்கே சமைக்கலுற்றாள்
வர்க்கவகைக் கறிசமைத்தாள் மணவாளன் கோவலர்க்கே
வாழைநல்ல இலைபோட்டு வகைவகையா யமுதுமிட்டாள்

**புத்துருக்கு நெய்வார்த்தாள் பொற்கொடியாள் மாதேவி**
**(660)**

**கந்தநல்ல பரிமணங்கள் கெருவிதமாய்த் தானணிந்தாள்**
**வெள்ளிலையு[60] மடைக்காயும்[61] மிகக்கொடுத்தாள் மாதேவி**
**மதனும் ரதியும்போலே மகிழ்ந்திருக்குங் காலமதில்**

வசனம்

*மாசாத்தான் செட்டியாருக்குச் சொங்கு சுரிப்புப் பார் படவு[62] வள்ளம்[63] போக்குவரத்துக் கப்பலாயிரம், வயிடூரியம், முத்துமாணிக்கம், பளவங் கோமேதகம், புட்பராகம், பச்சை யிப்படி ஒன்பது வகைக் காட்டினாதிகளும் வருமிப்படியிருக் கையில் மாசாத்தான்செட்டி தெய்வீகமானதின் பிறகு மாசாத்தான்செட்டி மகன் கோவலவன் என்ன செய்வானானால்*

## கோவலன் மாதேவியிடம் செல்வமிழத்தல்

**வெள்ளிக்கப்பல் பணத்தைஎல்லாம் மேடைகட்டத்**
**தான்கொடுத்தான்**
**முத்துக்கப்பல் பணத்தைஎல்லாம் முகப்புக்கட்டத்**
**தான்கொடுத்தான் (665)**

**பொன்னின்கப்பல் பணத்தைஎல்லாம் பூசணமாய்த்[64]**
**தான்கொடுத்தான்**
**பொக்கிசத்துத் திரவியத்தைப் பிடைவைவாங்கத்**
**தான்கொடுத்தான்**

வசனம்

*மாடமாளிகை கூடகோபுரம், தொட்டிக்கட்டி, முன்சாவடி பின்சாவடி, பூசைச்சாவடி இதுவெல்லாம் சிலவழிஞ்சி அந்த வீடுகள் கட்டினபிறகு மூன்று கப்பலுஞ் சரக்கேத்தித் தீவு, தீவாந்திரங்களெல்லாம் யாபாரங் கிடையாமல் மூன்று கப்பலும் வந்தது.*

வேறு

**வெள்ளிக்கப்பல் பணத்தைஎல்லாம் வெத்திலைக்கே**
**தான்கொடுத்தான்**
**பொன்னின்கப்பல் பணத்தைஎல்லாம் புகையிலைக்கே**
**தான்கொடுத்தான்**
**கப்பலையும் வித்தல்லவோ கண்ணாடிப் பட்டம்வாங்கி**
**(670)**

**மாதேவி மெத்தைவீட்டில் வைத்திருந்தாள் கோவலனை**
**மாதேவியும் கோவலனும் மகிழ்ந்திருக்கும் நாளையிலே**

வசனம்

மகளும் மருமகனும் மேடையில் வீத்திருக்கையில் தாதிமார் வந்து வீசறி வீசவும் வெத்திச்சங் கூதவும் பதினெட்டு வாச்சிய முழங்கவும் வெத்திலை சுருட்டிக் குடுக்கவும் இப்படி இருக்கையில் மாமியார் மறைந்து நின்று சொன்னது.

## தாய்க்கிழவி பேச்சும் மாதேவியின் போக்கும்

வேறு

**எடுத்துவைத்த பொன்களெல்லாம் இன்றுமுதல் செலவாச்சு**
**குடுத்துவைத்த திரவியங்கள் குறைச்சிலவாய்ப்**
**போச்சுதென்றாள்**
**நாளைச் சிலவுரொக்கம் நாயகமே இல்லையென்றாள் (675)**
**தாய்க்கிழவி சொல்லலுற்றாள் தன்மகளோ கேட்டிருந்தாள்**
**மாதேவிப் பெண்ணாரும் மனமகிழ்ந்து உள்ளுடைந்து**
**கோவலவன். முகம்பாத்துக் கொம்பனையாள்**
**சொல்லலுற்றாள்**

வசனம்

மாதேவி சொல்லுகிறேன் மன்னவரே கோவலரே நித்தம் ஆயிரத்தெண்கழஞ்சி பொன்னு மொருநாளைக் கஞ்னூறு சேலைகளும் தாய் தந்தை உறமுறைக்குத் தலைக்கெண்ணையும் படிச்சிலவும் கொண்டு வந்தீரானால் கோவலரே வாருமென்றாள் இல்லையென்றால் போமென்றாள்.

வேறு

**மன்னனுந்தான் கேட்டல்லவோ மனமுருகி உள்ளுடைந்து**
**(ஏதுசெய்ய) என்றுசொல்லிக்-கோவலவன்-ஏங்கிமனம்**
**வாடலுற்றான் (680)**

**மாதேவி பாத்தாளே வணிகேசன் முகவாட்டம்**
**ஆத்தினாள் மனதாக அன்புடனே கோவலனை**
**தேத்தினாள் கோவலனைத் தேன்மொழியாள் மாதேவி**
**மன்னவரும் மங்கையரும் மகிழ்ந்திருக்குங் காலமதில்**

அம்மா அம்மா மாதேவி நானொரு
உண்மை சொல்லக் கேளாயோ
நாட்டிலுள்ள பெரியோர்கள் நல்லமன்ன ரிங்கிருக்க
நட்டுவனா ராட்டிவைத்த நாடறிந்த தேவடியாள்
காலிலே கெச்சங்கட்டிக் கைகாட்டும் தேவடியாள்
தேவடியாள் மகளார்க்குச் செட்டிமகன் கணவனோதான்
கோவிலாடும் பெண்களுக்குக் கோவலவன் கணவனோதான்
என்னைப்போலத் தாசியர்கள் ஏசியென்னை நகையாரோ
வார்த்தைசொன்னாள் தாய்க்கிழவி மாதேவிப்
பெண்ணார்க்கே
தான்கேட்டான் கோவலவன் சம்பிமுகம் வாடலுற்றான்
கேட்டுநின்றாள் மாதேவி கெருவிதமோ தானானாள்
சிந்துதடி கோபமல்லோ சிவந்துதய்யோ கண்கள்ரெண்டும்
சீறினாள் மாதேவி தீப்பறக்கக் கண்ணாலே
தாதியரை வரவழைத்தாள் தள்ளச்சொன்னாள் வாசல்வழி
மாபாவி தாய்க்கிழவி வீடுவாசல் வெளியானாள்
அந்தநாப் போட்டல்லவோ மறுநா ளுதயமதில்
மாதேவி மனமுருகி வரவழைத்தாள் தாயாரை
வீட்டில்வந்தாள் தாய்க்கிழவி விசாரமிட்டாள்[65]
தாய்க்கிழவி
விழுந்து நினைந்தாளே எண்ணமத்த கோடிபுத்தி

வசனம்

மாதேவியைக் காணாமல் கோவலவனிருக்க கோவலனைக் காணாமல் மாதேவி இருக்க விசாரமிட்டாள் தாய்க்கிழவி.

## தாய்க்கிழவி வசிய மருந்து தயாரித்தல்

வேறு

மாதேவி யறியாமல் மருந்துசெய்தாள் தாய்க்கிழவி
மலையிலுள்ள பச்சிலைகள் வரவழைத்தாள் தாய்க்கிழவி
தலைமண்டைப் பித்துடனே சாரையுட கருவுடனே
நல்லபாம்புக் கருவுடனே நரிப்பித்து நரிநகமும்
கழுவினுட வலதுதுடை கட்டெறும்பு முட்டுடனே

பச்சைப்பாம்பின் தலைவாலும் பிறாவினுட முட்டை
பச்சநாவி யிட்டகொட்டை பாசாணம் தன்னுடனே
நரைபல்லி முட்டையுடன் நாரையுட வலதுகண்ணும்
கலையினுட தலைமூளை காட்டெருமைச் சவ்வுடனே
கொடுவேலிவேர் நாயுருவி குறுந்தொட்டி வேருடனே
செந்தட்டி வேருடனே செவ்வதலிக் கிழங்கெடுத்தாள்
காட்டிலுள்ள பச்சிலையும் கண்ணுப்பிளை வேருடனே
கடைச்சரக்கு உள்ளதெல்லாம் கனமாக வாங்கிவந்து
வீட்டில்வைத்தே மருந்தைஎல்லாம் கொடும்பாவித் தாய்க்கிழவி
கூட்டினாள் மருந்தெல்லாம் கொடும்பாவி தாய்க்கிழவி
ஆதியிலே முதப்பாட்டி அத்தரிசி வேளையிலே
கழுவிலே நெய்யுருக்கி அரிசி கால்படியில் தானூட்டி
கருக்கூட்டிப் பால்பழத்தில் கணவருக்கே சிலவாப்போய்
ஆழாக்கு இன்னம் அறைவீட்டில் தானிருக்க
மூலநல்ல மந்திரமும் முதக்காளிச் சக்கரமும்
காலனுட மந்திரமும் காட்டேரி மந்திரமும்
மோகினியாள் மந்திரத்தை முன்னூறு உருவேத்தி
அட்டகோணச் சக்கரமும் அன்பத்தோ ரச்சரமும்
தங்கநல்ல குழலுருட்டித் தானடைத்தே விட்டிருக்க
மாதேவியைக் கண்டவர்கள் மயலாகி வந்துவிட
சிதனமாய்க் கூட்டிவைத்துச் செப்பமிட்டாள் தாய்க்கிழவி
நாட்டிலுள்ள கருமருந்து நன்றாகப் பிடம்போட்டு
காட்டிலுள்ள பச்சிலையும் கடைச்சரக்கு உள்ளதெல்லாம்
வீட்டிலுள்ள மருந்தைஎல்லாம் விதவிதமாய்த் தானெடுத்து
கூட்டினாள் மருந்தைஎல்லாம் கொடும்பாவி தாய்க்கிழவி

வசனம்

மாதேவியும் கோவலனும் சப்பிரமஞ்சத்திலே யிருக்கிற போது தாதிமாரைப் போகச் சொல்வித் தாயார் கிட்டே வெத்திலை பாக்கு கேட்கிறபோது மருந்துக் கையோடே போயி வெள்ளித்தட்டை எடுத்துப் பாக்கு வெத்திலை கொண்டு வைத்துத் தாதிமார் வாங்கி வந்து சப்பிரமஞ்சக் கட்டிலிலே வைத்தார்கள். வெள்ளித் தட்டிலே மருந்து பட்ட படியினாலே மீறிக் கொண்டாடுகிறது.

## மருந்தினால் மாறுபட்ட மாதேவியின் போக்கு

வேறு

**வெள்ளித்தட்டு மருந்தல்லவோ-மாதேவிக்கு-மீறுதய்யோ தேகமெல்லாம்**
**வர்ணத்தட்டு மருந்தல்லவோ-மாதேவியை- மனதுவேறாய் ஆக்குதய்யோ (735)**
**நினவுவே றானாளே-மாதேவி-நிந்திச்சாள் கோவலனை**
**சீறினாள் மாதேவி சினத்துவிட்டாள் கோவலனை**

வசனம்

அப்போது கோவலவன் எண்ணினான். வந்தநாள் முதல் இதுவரையில் நிந்தினையாக இருக்கப் பொறாதவள் இப்படிச் சொன்னதென்ன யென்று அன்றையத் தினம் ஊணுறக்க மில்லாமல் மேடையிலே படுத்திருந்து மறுநாள் எழுந்திருந்து இருக்கையிலே மாதேவி தாதியாளைப் பாத்துச் சொன்னது.

**கோவலவன் கணக்கைஎல்லாங் கொடுவா வென்றுசொன்னாள்**
**கணக்குப்பாத்துத் தாதியர்கள்-திரவியங்-கலமரக்கா லாச்சுதென்றார்**
**கணக்கெடுத்தே கோவலர்தன் கைக்கொடுத்தார் தாதியர்கள் (740)**
**பாத்தானே கணக்கையெல்லாம் பதறினான் கோவலவன்**
**என்னசொல்வே னென்றுசொல்லி ஏங்கிமுகம் வாடலுற்றான்**

வசனம்

அப்போது மாதேவி யாகப்பட்டவள் என்ன சொன்னாளானாள். ஒன்பேரிலே வரவேண்டியது கலன் மரக்கால் பொன்வரவேண்டியதே யிருக்குதே அதற்கு ஒன்பேரிலே கிடக்கிற ஆடை ஆபரண மெல்லாங் கழத்திக் கீழே வையென்று கேட்டாள்.

வேறு

**காதில் கடுக்கன்முதல் கண்டசரங்க ளாழி**
**கையில் கணையாழி கைக்கடகம் மேல்நெளிவு**
**பட்டேநல்ல அரக்கொடியும் பவளமெனச் சரப்பளியும் (745)**

வயிரநல்ல முருகுமுதல் மாதேவிமுன்னே கழத்திவைத்தான்
தாதிகையில் நகையளெல்லாந் தான்கொடுத்தாள் மாதேவி

வசனம்

கணக்குத் தாதியைப் பாத்து இந்த ஆபரண மெல்லாம் செல்லுப் போகக் கணக்கு யென்ன வென்று கேட்டாள். அப்போது நிலுவை மத்தாளத் தாலே ஒரு மத்தாளப் பணமும் மரக்காலாலே ஒரு மரக்கால் பணமுஞ் செல்ல வேண்டிய திருக்குதென்று கணக்குத் தாதியர்கள் சொல்ல மாதேவி கோவலனைப் பாத்துச் சொன்னது.

வேறு

செட்டிமன்னா திரவியத்தைச் செலுத்துமென்றாள் மாதேவி
திரவியமோ யில்லையென்றால் செட்டிவெளிப் போமேயென்றாள்
பொன்னேதா னில்லையென்றால் போமென்றாள் வெளியிலேதான்
வீடுவிட்டே வெளியானான் வீரமுள்ள கோவலவன்
கண்டகண்ட செட்டிமக்கள்-கோவலனைக்-கள்ளனோதானென்பாரும்
தேவடியாள் மனைதனிலே செட்டிமக்கள் போவதுண்டோ
பிச்சுக்கொண்டாப்[66] போலேயல்லோ பேய்போலே திரியலுற்றான்
சிரிக்கவல்லோ உடம்பெடுத்தான் செட்டிமகன் கோவலவன்

அந்தநாள் போயல்லவோ மூன்றாநா ளுதையமதில்
மாதேவி வாசலிலே வந்துநின்றான் கோவலவன்
பசிபொறுக்க மாட்டாமல் பார்த்துநின்றான் கோவலவன்
கண்டாளே மாதேவி கட்டழகன் கோவலவனை
வீட்டுக்குக் கூட்டிவந்தாள் விசாரமுள்ள[67] மாதேவி
வெந்நீர்விட்டு நானஞ்செய்து விபூதியுமே தானணிந்தான்
அன்னமிட்டாள் மாதேவி அருகிருந்தே கோவலர்க்கே
சாப்பிட் டிளைப்பாறித் தானிருந்தான் கோவலவன்
மாதேவியுங் கோவலவனுஞ்-சப்பிர-மஞ்சத்திலே[68] யிருக்கையிலே
பாத்தாளே கோவலனைப் பழிகாரி தாய்க்கிழவி

**போனநல்ல சனியனுந்தான் பின்துடர்ந்தே வந்துதென்றாள்**
**ஆசையினால் மாதேவி யழைத்துவந்தாள் கோவலனை**
**எண்ணிவிட்டாள் மனந்தனிலே இடிவிழுவாள் தாய்க்கிழவி**

வசனம்

தாய்க்கிழவி விசாரமிட்டு, தட்டிலே பட்டமருந்து கோவலனைத் தலைவாசலுக்குத் தள்ளியது. நான் செய்த மருந்து சோதனைப் பட்ட மருந்தான படியினால் இருபேரும் சப்பிரமஞ்சம் விட்டுக் கீழிறங்கினது பாத்துத் தாய்க் கிழவி செய்தது.

## தாய்கிழவி மீளவும் வசியமருந்திடல்

வேறு

**சட்டியிலே மருந்தெடுத்தாள்-தாய்க்கிழவி-சப்பிரமஞ்சம்**
**தடவிவிட்டாள்**
**கட்டிலிலும் மெத்தைதன்னிலும்-மருந்தைக்-கரைத்துத்**
**தொளித்துவிட்டாள் (770)**
**மெட்டியிட்ட காலில்பட்ட-மருந்தை-விரைத்துவிட்டாள்**
**வீடெல்லாம்**
**வேணபடி மருந்துகளை விதவிதமாய்த் தொளித்துவிட்டாள்**
**வந்திருந்தாள் தாய்க்கிழவி மாபாவி மனைதனிலே**

வசனம்

மாதேவியும் கோவலனும் சப்பிரமஞ்சத்தி லிருக்கிறபோது அந்த வேளையிலே மாதேவிக்கு மருந்து வாடைபட்டுக் கோபமாய்ச் சொன்னது.

## மருந்து வாடைபட்ட மாதேவி கோவலனை வெளியேற்றுதல்

வேறு

**குடுக்கவில்லை திரவியத்தைக் கோவலவா எழுந்திரென்றாள்**
**அடுக்கநின்ற தாதியரைத் தான்சிறிச் சொல்லலுற்றாள்**
**(775)**

சவுக்கால்கட்டி யடிக்கச்சொன்னாள்-மாதேவி-தாய்க்கிழவி
தீவினையால்
சீறினாள் மாதேவி சினத்துவிட்டாள் கோவலனை
சவுக்கா லடியும்பட்டான் தானழுதான் கோவலவன்
அய்யோ சிவனேயென்று அழுதுவிட்டான் கோவலவன்
கையிலொரு காசுமில்லை கடன்கொடுப்பா ராருமில்லை
**(780)**

என்னசெய்வே னென்றுசொல்லி எண்ணிவிட்டான்
கோவலவன்
பாத்தாளே மாதேவி பழிநமக்கு வருமென்றெண்ணி
சேத்திருக்கும் கட்டவிழ்த்துத் தேவிடியாள் தாதியரை
வாசல்வழி யாக்குமென்று மாதேவி சொல்லலுற்றாள்
அம்மாஅம்மா மாதேவி-நானொரு-உண்மைசொல்லக்
கேளாயோ **(785)**

நாட்டிலுள்ள பெரியோர்கள் நல்லவர்கள் இங்கிருக்க
தேவடியாள் மகளார்க்குச் செட்டியோ கணவனென்றாள்
கோவிலாடும் பெண்களுக்குக் கோவலவன் கணவனோதான்
என்னைப்போலத் தாதியர்கள் ஏசியென்னை நகையாரோ
என்றுசொல்லி மாதேவி-புத்தி-யிப்போது வந்துதென்றாள்
**(790)**

அம்மாஅம்மா மாதேவி மூன்றுகுத்தம் பொறுத்தேனே
இனிமேல் சோறுபோடு வீட்டிலே வராதபடிக்கு
சொல்லிவி டென்று தாய்க்கிழவி சொன்னாள்

வேறு

அன்னமிட்டாள் மாதேவி அழகான கோவலர்க்கே
பின்னாசை யில்லாமல் பேச்சுரைத்தாள் மாதேவி **(795)**

வசனம்

மன்னவனே கோவலவா மரக்காலாலே மரக்கால் பணமும் மத்தாளத்தால் திரவியமுந் தந்துவிட்டே போயிவிடென்றுதான் சொன்னாள் மாதேவி.

ஆறுமாதம் ஒருவரிடம்[69] -மாதேவி-அவி தியுமோ[70] தப்பாமல்
சேருமல்லோ ஒன்னிடத்தில் திரவியமே யென்றுசொல்லி
எட்டானை சூழ்ந்திருக்கு மீசன்நல்ல மதுரையிலே
அட்டாலச்[71] சொக்கருமே லாணையிட்டே தான்கொடுத்தான்

சத்தியமாய் ஆணையிட்டே தான்கொடுத்தான் கோவலவன்

தாதியரை வரவழைத்தாள் தள்ளச்சொன்னாள் மாதேவி
வாசல்வெளி யானானே வணிகேசன் கோவலவன்

## கோவலனை ஆற்றில் தள்ளி விடுதல்

வேறு

உடலுருகி உள்ளுடைந்து-கோவலவன்-ஊரெல்லாந் திரியயிலே
தேவிடியா ளாசையினால் செட்டிமகன் கோவலவன்
திரவியமெல்லாந் தோத்துவந்து தெருவில்வந்தா னென்பாரும்
செட்டிமக்கள் கோவலனைச் சிறி நகைப்பாரும்
பேய்கொண்ட பித்தரைப்போல் புலம்பித் திரியலுற்றான்
வீடுவிட்டே வெளியானாள் வீரமுள்ள மாதேவி
சிவிகையின்மேல் கொண்டாளே தென்காவேரி செல்லலுற்றாள்
காவேரி நதித்திர்த்தங் கண்டல்லவோ தெண்டனிட்டாள்

பதினெட்டாம் பெருக்கமல்லோ பாத்தங்கே களிகூர்ந்தாள்
காவேரியும் கொள்ளிடமும் கரைபிரண்ட நதிதனிலே
திர்த்தமு மாடியல்லோ-மாதேவி-சிவபூசை செய்வதற்கே
ஆத்தங்கரை யோரமதில் ஆசனமுந் தான்போட்டு
பூசையல்லோ செய்தாளே பொற்கொடியாள் மாதேவி
வேசைமகள் மாதேவி வீத்திருந்தாள் நதிக்கரையில்
ஆசையினால் கோவலவன் அங்குவந்தான் காவேரியில்
மாதேவி பக்கத்திலே வந்துநின்றான் வணிகேசன்
பாத்தாளே கோவலனைக்-கண்டு-பதறினாள் மாதேவி
கூத்துவந்தா னெந்தனக்கு கோவிலவ னென்றுசொன்னாள்

ஆத்தங்கரை யோரமதி லங்குநின்ற கோவலவன்
மாதேவி மார்மேலே வர்ணநல்ல போர்த்துசிலை
வாரிப் பிடிக்கலுற்றான் வணிகேசன் கோவலவன்
சிறினாள் மாதேவி சினத்துவிட்டாள் கண்ணாலே
ஏறிட்டுப் பாத்தல்லவோ யென்னசொன்னாள் மாதேவி

தாதியரை வரவழைத்தாள் தள்ளச்சொன்னாள் மாதேவி
தாதியர்கள் கோவலனைத் தள்ளிவிட்டார் வெள்ளமதில்
வெள்ளங்கொண்டு போகுதய்யோ வீரமுள்ள கோவலனை
குத்திவெள்ள மெழுப்புதய்யோ கொம்பனையாள் கோவலனை
கத்தினான் கோவலன் கதறிவிட்டா னந்நேரம்
பத்தினியாள் கோவலனைப் பாவியுமோ தள்ளிவிட்டாள்
பத்தினியாள் கன்னகையைப் பாவினையாய்த் தானினைக்க
அத்திமரப் பலகையல்லோ அங்கேயொன்று முதந்துவர[72]
கைப்பிடித்த பலகையுமாய்க் கரைசேர்ந்தான் கோவலவன்
கரைசேர்ந்த கோவலனைக் கண்டுநின்ற மாதேவி
சிவிகையின்மேல் ஏறியல்லோ திருக்கடையூர் மனையில்வந்தாள்
மன்னவனார் கோவலர்க்கே மாபாவஞ் செய்தேனென்றே
மனமுருகி யுள்ளுடைந்து மாதேவி தானிருந்தாள்
மாபாவி தாய்க்கிழவி மாதேவி யருகில்நின்றே
அம்மாஅம்மா மகளாரே-நானொரு-உண்மைசொல்லக் கேளாயோ

கூத்துவனாய்த் தானிருந்த கோவலவன் வணிகேசன்
ஆத்திலே செத்திறந்தான் அடிஅம்மா மாதேவி
இன்றுமுதல் மாதேவி யினியிருப்பாய் சுகமாக
மண்டலத்தி லுனக்கேத்த மன்னவர்கள் தான்வருவார்
நன்றாகத் திரவியமும் நாயகமே யென்றாள்
சண்டாளி தாய்க்கிழவி தான்சொன்னாள் மாதேவிக்கே
மாதேவிப் பெண்ணாரும் மனமுருகிச் சொல்லலுற்றாள்
ஸ்ரீதேவி யானசெட்டி செத்திறந்து போனாலும்
மறுத்தொருவ ராசையில்லை மாதாவே யென்றுசொல்லி
கணவனார் கோவலவன் கணையாழி முன்புவைத்து

தினப்பூசை செய்திருந்தாள் தேன்மொழியாள் மாதேவி

## கோவலனின் மனவேதனை

காவேரிக் கரையருகே கட்டழகன் கோவலன்
இருந்து நினைக்கலுற்றான் எண்ணம்வைத்தான் சிந்தையிலே
அருந்துதியா ளிங்கிருக்க[73] ஆசையுற்றேன் வேசையின்மேல்

பத்தினியா ளிங்கிருக்க-நான்-பற்றிவிட்டேன் வேசையரை
மனையாட்டி தானிழந்தேனந்த-மாதேவி யாசையினால்
வீட்டிலுள்ள உடமையெல்லாம்-அந்த-வேசையர்க்கே
தானளித்தேன்
ஊருவிட்டேன் பூமிவிட்டேன் உறமுறையுந்[74] தானழித்தேன்
முத்துக்கப்பல் பணத்தையெல்லாம் மிளகுக்கே
தான்கொடுத்தேன்
வெள்ளிக்கப்பல் பணத்தையெல்லாம் வெத்திலைக்கே
தான்கொடுத்தேன்
பவளக்கப்பல் பணத்தையெல்லாம் பாக்குக்கே
தான்கொடுத்தேன்
பொன்னின்கப்பல் பணத்தையெல்லாம் புகையிலைக்கே
தான்கொடுத்தேன்
பொட்டிநல்ல திரவியத்தை-அவள்-பூமுடிக்கத்
தான்கொடுத்தேன்
போட்டிருந்த நகையளெல்லாம் பிடிங்கிவிட்டாள் மாதேவி
வேட்டிக்கட்டுஞ் சோமனையு மிகப்பறித்தாள் மாதேவி
வெள்ளத்திலே தள்ளிவிட்டாள் வேசைமகள் மாதேவி
என்தரத்துச்[75] செட்டிமக்கள்-கண்டால்-ஏசியென்னை
நகையாரோ
என்றுசொல்லித் தானழுதான் ஏங்கிமனம் புண்ணானான்
அழுதகண்ணீ ராறோடே அழுதுவிட்டான் கோவலவன்
காவேரிப்பூம் பட்டணத்தே-காவேரிக்-கரைதனிலே
வந்துநின்றான்
ஏரிக் கரையில்நின்றான் ஏற்றமுள்ள கோவலவன்

## கோவலன் தன்மனை சேருதல்

காரிகையாள் கன்னகையைக் கனத்தமுத்துத் தாதியர்கள்
காவேரித் தண்ணீருக்கே வார வழிதனிலே
கட்டழகன் கோவலனைக் கண்டார்கள் தாதியர்கள்
அலறிவந்தே தாதியர்கள் அறிக்கையிட்டார்
கன்னகைக்கே
வீடுவிட்டே போனமன்னர் வீரமுள்ள கோவலர்க்கே

அரையிலே[76] சோமனுட[77] ஆதரவு மில்லாமல்
ஏரிக்கரைக் கணவாயில் கண்டேனே தாயாரே
கேட்டுநின்ற கன்னகையும் கிலேசமிட்டாள்[78] கண்ணாலே
அழுதகண்ணீ ராறோடே அழுதுவிட்டாள் கன்னகையாள்

வீட்டிலிருந்த கட்டுவர்க்கம்[79] மிகவெடுத்தே கன்னகையாள்
தாதிகையில் தான்கொடுத்தாள் தான்போனா ரச்சணமே
கட்டுவர்க்கம் முன்புவைத்துக் கண்டுதான் தெண்டனிட்டார்
கோவலனைக் கண்டல்லவோ கும்பிட்டே தாதியர்கள்
அழைத்துவரச் சொன்னாள்காண் அய்யாவே கன்னகையாள்

கூட்டிவரச் சொன்னாள்காண் கொம்பிளையாள் கன்னகையாள்
என்றுசொன்னார் தாதியா ரினியதொரு கோவலனும்
கையால் மடித்துவைத்த கட்டுவர்க்கஞ் சோமனென்றே
கட்டலுற்றான் கோவலவன் கண்ணீரைச் சோரவிட்டான்
வீட்டில்வந்தே உள்புகுந்தான் வீரமுள்ள கோவலவன்

அரமனையைப் பாத்தல்லவோ அழுதுவிட்டான் வணிகேசன்
கன்னகையைக் கண்டல்லவோ கண்ணீரைச் சோரவிட்டாள்
வீரமுள்ள கோவலவன் வீத்திருந்தான் மனைதனிலே

## கன்னகையின் வரவேற்பு

அழுதுநின்ற கன்னகையா ளச்சணமே ஓடிவந்து
ஏலச்சம்பா அரிசிகொண்டு எடுத்தங்கே சமைக்கலுற்றாள்

வர்க்கவகைக் கறிசமைத்தாள் மணவாளன் கோவலருக்கே
சம்பங்கி எண்ணைகொண்டு தானஞ்செய்தான் கோவலவன்
திருநீறு தானணிந்தான் சிவபூசை செய்யலுற்றான்
தலைவாழை விரித்தேதான் சாதம்படைத்தாள் கன்னகையாள்
அமுதுகறி தான்படைத்தாள் அழகான கோவலர்க்கு

புத்துருக்கு நெய்வார்த்தாள் பொற்கொடியாள் கன்னகையாள்
சாப்பிட் டினைப்பாறித் தானிருந்தான் வணிகேசன்
வெள்ளிலையும் அடைக்காயும் மிகஅருந்தி அங்கிருந்தான்
கன்னகையாள் சொல்லலுற்றாள் கணவனார் கோவலர்க்கே

கணவனார் சொன்னதெல்லாம் காதிலே வாங்கலுற்றாள்
(965)

## மாதேவிக்குக் கடன்பட்டதைக் கோவலன் கூறுதல்

மாதேவி ஆசையினால்-வீட்டில்-வைத்திருந்த உடமைஎல்லாம்
கப்பல் திரவியமுங் கனத்தநல்ல ஆபரணமும்
தப்பாம லுள்ளதெல்லாம் தான்கொடுத்தேன் வேசையர்க்கே

வசனம்

கும்ம கும்மலாகக் குவித்த திரவியம் ஒரு மத்தளப்பணமும் ஒருமரக்கால் பணமும் ஒருவரிடம் ஆறுமாத்தையில் குடுக்குறேன் என்று மருதைச்[80] சொக்கர் மேலாணை வைத்து அவளுக்கு நான் ஆணையிட்டதின் பிறகு வந்தேனே கன்னகையே.

## கன்னகையின் கவலை

நடை

கன்னகைக்குச் சொல்லலுற்றான் கணவனார் கோவலவன்
மன்னவனே கோவலவா வைத்திருந்த திரவியமும் (970)
பொக்கிசத்துத் திரவியமும் போச்சுதென்று நானிருந்தேன்
இன்னமுந்தான் மாதேவிக்கு ஏத்துவந்திர் கடனாக
கையிலொரு காசுமில்லை கடன்கொடுப்பா ராருமில்லை
கடன்கொடுப்பா ராருமில்லை-யிந்தக்-காவேரிப்பூம்
பட்டணத்தே
கைப்பிடித்த நாள்முதலாய்-உன்னைச்-சேர்ந்ததுண்டோ
கோவலவா (975)
திருப்பூத்த நாள்முதலாய்-உன்னைச்-சேர்ந்ததுண்டோ
கோவலவா
கன்னகைநான் சேந்திருந்து-ஒரு-காய்காத்தே னில்லைஅய்யோ
மன்னவரைக் கூடியல்லோ-ஒரு-மதலைமொழி கண்டனில்லை
பள்ளிக் குடந்தனிலே படித்துவரப் பிள்ளையில்லை
கொள்ளிவைக்கப் பிள்ளையில்லை கோவலவா
என்றழுதாள் (980)
கடன்கொடுக்க மாதேவிக்கே கன்னகைநான் பெண்பிறந்தேன்
என்றுசொல்லித் தானழுதாள் ஏத்தமுள்ள கன்னகையாள்

## மதுரைக்குப் பயணமாதல்

பத்துநா ளொருமாதம் பாத்திருந்தாள் கோவலனை
மாதேவி கடன் கொடுக்கணுமே மனையாட்டி கன்னகையே
என்றுசொல்லி வணிகேசன் இன்பமுடன் சொல்லையிலே

கன்னகையாள் கேட்டல்லவோ கணவனுக்கே கூறலுற்றாள்
கன்னகையாள் பொற்சிலம்பைக் கணவனார் கைக்கொடுத்தாள்
வாங்கினான் பொற்சிலம்பை வணிகேசன் கோவலவன்
காவேரிப்பூம் பட்டணத்தே கனத்தசெட்டி கைக்கொடுத்தான்
விலைமதிக்கக் கூடலையே வீரமுள்ள பொற்சிலம்பை

என்றுசொன்னார் செட்டிமன்னர் ஏற்றமுள்ள கோவலருக்கே
கன்னகைக்குச் சொல்லலுற்றான் கட்டழகன் கோவலவன்
வடமதுரைப் பட்டணத்தே வர்த்தவர்கள்[81] கடைதனிலே
வித்துக் கொடுப்பேனான் வேசைமகள் கடன்தீர
என்றுசொன்னான் கன்னகைக்கு இன்பமுடன் கோவலவன்

அந்தநாள் போட்டல்லவோ மறுநா ளுதயமதில்
சம்பங்கி யெண்ணைவிட்டுத் தலைமுழுகிக் கோவலவன்
திருநீறு சாத்தியல்லோ சிவபூசை செய்யலுற்றான்
பொடிஅரிசி தான்சமைத்தாள் பொற்கொடியாள் கன்னகையும்
வகைவகையாய்த் தான்சமைத்தாள் வர்ணநல்ல கன்னகையாள்

தலைவாழை யிலைபோட்டாள் தான்படைத்தாள் சோறுகறி
புத்துருக்கு நெய்வார்த்தாள் பெண்கொடியாள் கன்னகையும்
சாப்பிட் டிளைப்பாறித் தானிருந்தான் கோவலவன்
நாளைநல்ல பயணமென்றே நாயகிக்கே சொல்லலுற்றான்
கன்னகையாள் கேட்டல்லவோ கண்ணீரைச் சொரியவிட்டாள்

வேசைமே லாசைவைத்து வெகுநாளாய்ப் போனவரை
இப்போவரக் கண்டிருந்தேன் எந்தனுட மனைதனிலே
அஞ்சாதே யென்பாரில்லை ஆருமில்லை பட்டணத்தே
கணவனார் கூடவல்லோ கன்னகையும் வருவேனென்றாள்

அல்லவடி கன்னகையே-நானொரு-உண்மைசொல்லக்
கேளாயோ

நல்லசெட்டி வணிகேசர் யாபாரியந்த[62] நாடுதனில்
போகயிலே செட்டிமகள் யாபாரி கன்னகையே
இந்தநல்ல தேசமதி லிப்போது போகயிலே
காவேரிப்பூம் பட்டணத்து கன்னகையே யிப்போது
கணவருடன் போவதுண்டோ கட்டழகி கன்னகையே

காட்டுவழி போகயிலே கன்னகையே நீயேதான்
நாட்டிலுள்ள செட்டிமக்கள் கண்டாரே யானாக்கால்
நகையாரோ கன்னகையேயென்று கோவலவன்
சொல்லலுற்றான்
கணவனார் போகயிலே கன்னகைநா னிருப்பதில்லை
மன்னவனார் போகயிலே-நான்-மனையாட்டி
யிருப்பதில்லை
கூட வருவேனென்றாள் கொம்பனையாள் கன்னகையும்
தாதியரைத் தான்பாத்துத் தானேது வார்த்தைசொன்னாள்

வசனம்

நான் வருமட்டு மாடமாளிகை, கூடகோபுர, முன்சாவடி, பின்சாவடி, தொட்டிக்கட்டு இவ்வளவும் பெருக்கித் தீபமும் வைத்துச் சுகமாக யிருங்கோவென்று கெட்டுச் சோறும் வழிக்கரிசியுஞ் சிலவுக்குச் சிறிது ரொக்கமும் கொண்டு மன்னவருங் கன்னகையும் மனையைவிட்டே வெளியானார்.

## கடந்த இடங்கள்

வேறு

காவேரிப்பூம் பட்டணமுங் கரந்தையார் மடங்கடந்தார்
காவேரி நதிதானஞ் செய்தல்லவோ யிருபேரும்
காவேரிப்பூம் பட்டணத்தைக் கையெடுத்தே
தெண்டனிட்டார்

காவேரிப்பூம் பட்டணத்தைக் காண்பதினி எக்காலம்
என்றுசொல்லித் தான்புலம்பி யிருந்துமனம் வாடலுற்றார்
காவேரி தான்கடந்தார் கணவனுட ஊரும்விட்டார்
திருச்சிரா புரந்தனிலே சேர்ந்திருந்தா ரிருபேரும்
மறுநா ளுதயமதில் மதுரைவழி தானடந்தார்

தெக்கிநோக்கித் தானடந்தார் தென்மதுரை வழிநடந்தார்
கல்லுநல்ல கரட்டுமுள்ளு கானநல்ல வெயில்தனிலே
கன்னகையாள் தான்நடந்தாள் காலுமங்கே கொப்பளிக்க
தண்ணிநல்ல தாகமல்லோ தாகம்விடை தானானாள்
தாகம் பெரிதாகித் தானழுதாள் கன்னகையும்

அழுதகண்ணீ ராறோடே அழுதுவிட்டாள் கன்னகையும்
பாத்தானே கோவலவன் பைங்கொடியாள் கன்னகையை
ஆத்தினான் கன்னகையை அழுதகண்ணீர் தான்துடைத்தே
போத்தினான் கோவலவன் பொற்கொடியாள் கன்னகையை
காடுநல்ல கழித்தார்கள் கடியவழி தானடந்தார்

காட்டேரி யச்சம்பட்டி கள்ளருட நாடதிலே
வலையனுட மலைதனிலே வந்திருந்தா ரிருபேரும்
மறுநா ளுதயமதில்-மதுரை-வைகைநதிக் கரையில்வந்தார்
வைகையிலே தான்முழுகி மாயவனைப் பூசைசெய்து

சாப்பிட் டிளைப்பாறித் தானிருந்தா ரிருபேரும்

## ஆச்சியம்மையிடம் அடைக்கலமாதல்

ஆபரணந் தானெடுத்து அலங்கரித்தா ரிருபேரும்
மன்னவனார் கோவலரும் மனையாட்டி கன்னகையும்
அறிஞ்சபே ரொருவரில்லை ஆருமில்லை மதுரையிலே
என்றுசொல்லித் தான்புலம்பி யிருந்தான்காண் கோவலவன்
என்றுசொல்லித் தானிருக்க ஏந்திழையா ளாச்சியம்மை

காச்சியபால் மோருகொண்டு கனமதுரை வித்தல்லவோ
வடக்குக்கோட்டை வாசல்வழி வாரவளைப் பார்த்தல்லவோ
எந்தாயே எவ்வூர் எனக்கேட்டான் கோவலவன்
ஆச்சியம்மை சொல்லலுற்றாள் ஆதரவாய்க் கோவலர்க்கே
அல்லக்காண் மகனாரே நான்சொல்லவே நீகேளாய்

குன்னெடுத்த[83] விசையநல்ல கோபாலர் வங்கிசமாம்[84]
கொக்கிலங்கி காத்துநின்ற-நந்த-கோபாலர் வங்கிசமாம்
வாழைக்குலை சாய்ந்திடுமாம்-நானிருக்கும்-வண்டியூருப் பட்டணமாம்
ஆயர்நல்ல இடைக்குலந்தா-னென்பே-ராச்சியம்மை மகனேயென்றாள்

பாண்டியன்தான் மதுரையிலே-யிப்போ-பால்மோரு விற்றுவந்தேன்
மதுரையிலே மோருவிற்று வாரேனடா மகனேயென்றாள்
என்றுசொன்னா ளாச்சியம்மை யின்பமுடன் கோவலர்க்கே
ஆச்சியம்மா யென்தாயேநா னம்பாகச் சொல்லுகுறேன்
வடதேசம் தானிருந்து மதுரையிலே வந்தல்லவோ
வாணியமே செய்யவந்தேன் மனையாட்டி கூடவந்தாள்
என்றுசொன்னான் கோவலவன் இன்பமுட னாச்சியம்மை
கோவலனும் கன்னகையுங் கூட்டிவந்தா ளாச்சியம்மை
வண்டியூருப் பட்டணத்தே வழிதனிலே கூட்டிவந்தாள்
வந்திருந்தா ரிருபேரும் ஆச்சிஅம்மை வளவதிலே[85]
பாத்தாளே ஆச்சியம்மை பாக்கியமே வந்துதென்றாள்
மதுரைச்சொக்கர் மீனாச்சி வந்துவிட்டாள் வீட்டிலென்றாள்
குலதெய்வம் வந்தெனக்குக் கூட்டிவந்தே விட்டுதென்றாள்
மலடிக்கே மகனாக வந்துவிட்டா யென்மகனே
என்றுசொல்லி ஆச்சியம்மை யின்பமுடன் சொல்லலுற்றாள்
வீட்டி லொருபிறமாய் மேலான ஆச்சியம்மை
அரிசிகறி நெய்பாலுடனே அன்புடனே தான்கொடுத்தாள்
சமைத்தாளே கன்னகைதான் சங்கையுடன் கோவலர்க்கே
சாப்பிட் டிளைப்பாறித் தானிருந்தான் வணிகேசன்
ஆச்சியம்மை யருகிருந்தே-கோவலவ-னம்பாகச் சொல்லலுற்றான்
அம்மாஅம்மா ஆச்சிஅம்மா-நானொரு-உண்மைசொல்லக் கேளாயோ
கருந்தாழை பூச்சொரியும் காவேரிப்பூம் பட்டணமாம்
காசுகொண்டே மடையடைக்குங் காவேரிப்பூம் பட்டணமாம்
கப்பல்நல்ல யாபாரி கனத்தசெட்டி மாசாத்தான்
மாசாத்தான் செட்டிமகன் வணிகேசன் கோவலவன்நான்
வேசைமக ளாசையினால் வேணதெல்லாந் தான்கொடுத்தேன்
மாதேவி ஆசையினால்-வீட்டில்-வைத்ததெல்லாந் தான்கொடுத்தேன்
கடன்கொடுக்க வேணுமென்றே கன்னகையாள் பொற்சிலம்பை

வடமதுரை விக்கவந்தேன் மனையாட்டி பின்துடர்ந்தாள்
அடைக்கலந்தா னிருபேரும் ஆச்சிஅம்மாள் என்தாயே
என்றுசொல்லிச் சொல்லலுற்றான் இன்பமுடன்
கோவலவன்

## ஆச்சியம்மை பாண்டியர்களைக் குறித்து எச்சரித்தல்

ஆச்சியம்மை சொல்லுகிறேன் அன்பான கோவலவா
ஆளுக் கழகனடா அன்பான கோவலவா
உன்னைப்போ லொருத்தர் உலகத்தில் கண்டதில்லை
பொல்லாத மதுரையிலே போகாதே மகனேயென்றாள்
மதுரைவளஞ் சொல்லுகிறேன் மகனாரே கேளுமென்றே

ஆச்சியம்மை சொல்லுகிறேன் அழகான கோவலரே
பேச்சிட்டே வழக்கிடுவார் பெரும்பாவிப் பாண்டியர்கள்
கொம்படித்தே வழக்கிடுவார் கொடும்பாவிப் பாண்டியர்கள்
பாம்படித்தே வழக்கிடுவார் பழிகாரப் பாண்டியர்கள்
மாபாவி மதுரையிலே வாணிபமே செய்யயிலே
தீபாவிச் செட்டிமக்கள் செப்பிடுவார் பாண்டியர்க்கே
கள்ளனென்றே கட்டச்சொல்வார் கனமதுரைப்
பாண்டியர்கள்
கொல்லச்சொல்வான் பாண்டியனுங் கோவலரே யிப்போது
என்றுசொல்லி ஆச்சியம்மை யின்பமுடன் சொல்லலுற்றாள்

## கன்னகை கவலையும் கணவன் தேற்றுதலும்

கன்னகையாள் கேட்டல்லவோ கணவனார் கோவலரே

போனீர் மதுரையிலே-ஒரு-புழைதான்[86] வந்தாலும்
எனக்கொருவர் தஞ்சமில்லை என்கணவா கோவலவா
என்றுசொல்லித் தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையாள்
அல்லவடி கன்னகையே-நான்-சொல்லவோ நீகேளாய்
வர்த்தவர்கள் வணிகேசர் வடமதுரை தானிருக்க
செட்டிமக்கள், யாபாரி-யிந்தத்-தென்மதுரை தானிருக்க
கள்ளனென்றே யடிப்பாரோ கனமதுரைப் பட்டணத்தே
போய்வாரேன் கன்னகையே பொன்மதுரைப் பட்டணத்தே
என்றுசொன்னான் கோவலவன் ஏந்திழையாள்
கன்னகைக்கே

## சிலம்பு விற்கப் புறப்படல்

பத்துநா ளாச்சுதிப்போ பார்பதியே ஆச்சியம்மா
பொற்சிலம்பு கொண்டல்லவோ போய்வாரேன் பொன்மதுரைக்கே
வர்ணமணிச் சிலம்புகொண்டு வடமதுரைக்கே போய்வாரேன்
அடைக்கலந்தான் கன்னகையாள் ஆச்சியம்மை யென்றுசொன்னான்
மருதைக்கே பயணமென்றான் வணிகேசன் கோவலவன்
எண்ணையிட்டே தானஞ்செய்தான்[87] ஈசனையும் பூசைசெய்தான்
சாப்பிட் டினைப்பாறித் தானே பயணமென்றான்
கன்னகையாள் கேட்டல்லவோ கண்ணீரைச் சோரவிட்டாள்
அழுதகண்ணீர் தான்துடைத்து ஆத்திவிட்டான் கோவலவன்
அடைக்கலந்தான் கன்னகையாள் ஆச்சியம்மை தாயேயென்றான்
போய்வாரேன் ஆச்சியென்றான் பொற்சிலம்பைக் கையெடுத்தான்
வீடுவிட்டே வெளியானான் வீரமுள்ள கோவலவன்
வாசல்வெளி யானானே வணிகேசன் கோவலவன்

## தீயசகுனங்கள்

அந்தநல்ல பிறங்கடந்தா னப்பறத்தே[88] போகையிலே
கத்துங்காகம் இடம்பாய கரும்பூச்சை[89] குறுக்கோட
ஒத்தப்பாப்பா னெதிர்வரவே ஒதுங்கிவரக் கண்டல்லவோ
தலையின்நல்ல விதிப்படியே தப்பாது யென்றுசொல்லி
வண்டியூரு தான்கடந்தே வழிநடந்தான் கோவலவன்
மருதைக்கெண்ணை கொண்டல்லவோ வாணியனும்[90] எதிரேவந்தான்
அந்தநல்ல தடைகடந்து அடுத்தவழி வருகையிலே
வாரநல்ல வழிதனிலே வர்ணமணிச் செந்நாகம்
குறுக்கே கிடந்துதய்யோ கோவலவன் தான்பாத்தே
பதறியல்லோ ஓடலுத்தான் பக்கவழி தான்கடந்தான்
வழிநடந்தான் கோவலவன் வடக்குக்கோட்டை வாசல்வந்தான்

## சொக்கர் மீனாட்சிக்கு அறிவித்தல்

வைகையில்தான் தானஞ்செய்தான் மாயனைத்தான் பூசைசெய்தான்
அரசடி மேட்டருகே அங்கிருந்தான் கோவலவன்

வந்துநின்ற கோவலனை மருதைச்சொக்கர் தான்பார்த்தார்
ஞானக்கண் கொண்டல்லவோ நல்லசொக்கர் தான்பார்த்தார்
கோவலவா யுன்னாலே கொடுமதுரை யழியுமென்றே
திடுக்கெட் டெழுந்திருந்தார்-சொக்கர்-சீக்கிரமா யோடிவந்தார்
அங்கயக்கண் மீனாட்சிக்கே அறிக்கையிட்டார் சொக்கருமே

என்னசொன்னார் சொக்கருமே யினிக்கேட்டாள் மீனாச்சி
காவேரிப்பூம் பட்டணமாம் கனத்தசெட்டி வணிகேசன்
மாசாத்தான் செட்டிமகன்-அடியேமீனாட்சி-வணிகேசன் கோவலவன்
வடக்குக்கோட்டை வாசலிலே வந்துநின்றான் கோவலவன்
வர்ணமணிச் சிலம்புகொண்டே-அடியேமீனாச்சி-வாரானே மதுரையிலே

பொற்சிலம்பு கொண்டல்லவோ-இந்தப்-பொன்மதுரைக்கே வாரானே
கள்ளனென்றே கட்டச்சொல்வான்-இந்தக்-கனமதுரைப் பாண்டியர்கள்
வெட்டச் சொல்வான் பாண்டியன்தான் வீரமுள்ள வாளாலே
மனையாட்டி யாலேயல்லோ-யிந்த-வடமதுரை யழியுமென்றார்
செட்டிநல்ல பெண்ணாலே-யிந்தத்-தென்மதுரை யழியுமென்றார்

அழகான மதுரைக்கல்லோ அழிவுவந்து நேர்ந்துதென்றார்
இருந்தநாள் போதுமடி-யடியேமீனாச்சி-யினியிருக்கக் கூடாதென்றார்
கூண்டபொட்டி[91] தலையிலெடு-அடியேமீனாச்சி-கூடல்விட்டுப் போவோமென்றார்
கஞ்சிப்பெட்டி தலையிலெடு-அடியேமீனாச்சி-காசிநகர் போவோமென்றார்
என்றுசொன்னார் சொக்கருமே யினிக்கேட்டாள் மீனாச்சி

கேட்டாளே மீனாச்சி கிருபையுள்ள சொக்கரேநீர்
பாண்டியனார் மதுரைக்கல்லோ பழியள்வந்து[92] நேராமல்
ஆண்டியள்போல் கோவலவ ரண்டையிலே நின்றுகொண்டு
வேண்டிய புத்தியல்லோ விதவிதமாய்ச் சொல்லியிப்போ
ஆண்டிருக்கும் நகர்தனிலே அனுப்பியே வாருமென்றாள்

## சொக்கர் பூண்ட ஆண்டி வேடம்

என்னநல்ல வடிவெடுத்தார் ஈசுரனார் சொக்கருமே
வைகைநல்ல உடைப்பெடுத்தே வந்ததுக்கு மண்சொமந்தார்
பிட்டுக்கே மண்சுமந்த பேரான சொக்கருமே
மதுரைச்சொக்க ராண்டியைப்போல் வடிவெடுத்தா ரந்நேரம்
சடைதுலங்க முடிதுவளச் சாத்திவிட்டார் வெண்ணீத்தால்[93]

ஒட்டியாணம் ருத்திராச்சி ஒருகாலே தானணிந்தார்
கமண்டலமும் பொற்பிரம்பும் கைப்பிடித்த தொண்றுக்கம்பும்[94]
சுரைக்குடுக்கை தோள்போட்டார் சுருக்குப்பையைத் தோள்போட்டார்
கஞ்சாநல்ல குடுக்கையல்லோ கையெடுத்தார் சொக்கருமே
கோல்கொண்ட சொக்கருமே கோவில்விட்டு வெளியானார்

## ஆண்டிச் சொக்கர் அடிபட்டு ஓடுதல்

வடக்குக்கோட்டை வாசல்விட்டு வாராரே வழிநடந்தே
வழிநடந்த சொக்கர்முன்னே வந்துநின்றான் கோவலவன்
பழிகொடுக்கப் போகாதே பாண்டியனார் மதுரையிலே
வந்தவழி போய்ப்பிழைநீ வணிகேசா கோவலவா
என்றுசொன்னா ராண்டிச்சொக்க ரின்பமுடன் கோவலர்க்கே

சிறினான் கோவலவன் சிவந்துதே கண்கள்ரெண்டும்
ஆருபழி கேட்காயடா ஆண்டியடா யென்றுசொல்லி
கஞ்சாக் குடிமயக்கம் கனத்ததலைக் கடாமயக்கம்

பயித்தியங் கொண்டவனோ பறிக்கவந்த கள்ளனென்றே
எதிர்த்துவிட்டா னாண்டிமுன்னே ஏந்திழையான்
கோவலவன் (1185)

ஆண்டிகம்பைப் பிடுங்கலுற்றான் அடிக்கலுற்றான்
கோவலவன்
கமண்டலமுஞ் சுரைக்குடுக்கை கஞ்சாக் குடுக்கையெல்லாம்
கம்பாலே அடித்துடைத்தான் கட்டழகன் கோவலவன்
அழகான குடுக்கையெல்லாம் அடித்துடைத்தான் வணிகேசன்
கம்புகொண்டே அடிக்கலுற்றான் காட்டுடே ஓடலுற்றார்
(1190)

அடிபட்ட ஆண்டிச்சொக்கர் அலறியல்லோ ஓடலுற்றார்
வழிநடந்தே கோவலவன் வடக்குக் கோட்டை வாசல்வந்தான்

## சொக்கர் மீனாட்சிக்கு அறிவித்தல்

பதறியல்லோ ஆண்டிச்சொக்கர்-வந்து-பார்பதியே
கேளுமென்றார்
மாசித்தெரு வீதியிலே வந்துநின்றான் கோவலவன்
அழகான மீனாட்சிக்கே அறிக்கையிட்டார் சொக்கருமே
(1195)

ஆண்டியாய்ப் போயல்லவோ அழகான கோவலர்க்கே
வேண்டிய புத்திமதி விதவிதமாய்ச் சொல்லயிலே
ஊணிநின்ற தொண்றுக்கம்பை ஒருகையினாலே பிடிங்கி
ஆண்டி சடைகுலைய அடித்துடைத்தான் கோவலவன்
பாண்டியர்க்கே பழிகுடுப்பான் பாத்திருடி மீனாச்சி (1120)
என்றுசொல்லச் சொக்கருமே இனிக்கேட்டாள் மீனாச்சி
போய்வாரேன் மீனாச்சி-கோவலர்க்குப்-புத்திசொல்லி
வாரேனென்றாள்

## மீனாட்சி பூண்ட குறத்தி வடிவம்

என்னநல்ல வடிவெடுத்தாள் ஈசொரியாள் மீனாச்சி
கரியமணிப் பாசியல்லோ கழுத்திலிட்டாள் கட்டுவடம்
காதிலே தோடணிந்தாள் கனத்தநெத்திச் சுட்டியிட்டாள்
(1125)

கோதிநல்ல குழல்சொரிகிக் குப்பித்தொங்கல் மேல்போட்டாள்
மார்மேலே வடமுங்கட்டி வர்ணநல்ல துயிலுடுத்தாள்
குறத்தியைப்போல் வேசங்கொண்டாள் கொம்பனையாள் மீனாட்சி
மாசித்தெரு வீதியிலே வணிகேசன் முன்னேவந்தாள்

## மீனாட்சிக் குறத்தி அடிபட்டோடுதல்

கோவலன் முகம்பார்த்தாள் குறத்தியுமோ சொல்லலுற்றாள்
சொல்லுகிறேன் கோவலவா சோதினையள் உள்ளதெல்லாம்
பொற்சிலம்பு கொண்டல்லவோ-யிந்தப்-பொன்மதுரை விக்கவந்தாய்
வர்ணமணிச் சிலம்புகொண்டே-யிந்த-வடமதுரை விக்கவந்தாய்
கள்ளனென்றே பிடிப்பார்கள் கனமதுரைப் பாண்டியர்கள்
பழிகொடுக்க வந்தாயோ பாண்டியன்தன் மதுரையிலே
வந்தவழி போய்ப்பிழைநீ வணிகேசா கோவலவா
என்றுசொன்னாள் குறத்தியுமோ யினிக்கேட்டான் கோவலவன்
சீறினான் கோவலவன் சிவந்துதய்யோ கண்கள்ரெண்டும்
ஆரைப்பழி கேட்டாயடி யரசழிவாய் குறத்தியென்றே
குறக்கூடை பிடுங்கியல்லோ கூன்முதுகில் தானடித்தான்
வர்ணக்கூடை பிடுங்கியல்லோ மாறலுற்றான்[95] கோவலவன்
அடிபொறுக்க மாட்டாமல் அலறிவந்தாள் குறத்தியுமே
ஓடிவந்தாள் குறத்தியுமே உள்கோவில் தான்புகுந்தாள்
அட்டாளச் சொக்கருக்கே அறிக்கையிட்டாள் மீனாச்சி
சொக்கருமே கேட்டல்லவோ சொல்லலுற்றார் பெண்ணார்க்கு
மதியினால் வேணபுத்தி வணிகேசருக்கே சொல்லலுற்றேன்
கெதியினால் தானடித்தான் கேடுபெற்றான் கோவலவன்
விதிப்படிதா னென்றுசொல்லிச்-சொக்கர்-வீத்திருந்தார் பதிதனிலே

## கோவலன் சிலம்பை விற்க முயலுதல்

மாடேறுஞ் சொக்கருட மாசித்தெரு வீதிவிட்டான்
காளையேறும் சொக்கருட கடைத்தெரு வீதிவந்தான்

வாணிபங்கள் செய்யுமந்த வணிகேசர் கடைதனிலும்
வத்தவர்கள்[96] கடைதனிலே வந்திருந்தான் கோவலன்
வர்ணமணிப் பொற்சிலம்பை வர்த்தகனார் கைக்கொடுத்தான்
பார்த்தானே வர்த்தகனார் பத்தினியாள் பொற்சிலம்பை
விலைமதிக்கக் கூடாதே வீரமுள்ள பொற்சிலம்பை

என்றுசொல்லி வர்த்தகனா ரேந்திழையான் கைக்கொடுத்தான்
வாங்கினான் பொற்சிலம்பை வணிகேசன் கோவலவன்
வணிகேசர் கடையைவிட்டு வர்த்தகனார் தெருக்கடந்தான்
வளவிச்செட்டி[97] வீதியிலே வணிகேசன்விலை கூறலுற்றான்
அந்தநல்ல தெருக்கடந்தான் ஆயருட தெருவில்வந்தான்

ஆசையிட்டே பணம்பறிக்கு மழகான தாசியர்கள்
வேசைநல்ல தெருத்தனிலே விலைகூறி நிற்கலுற்றான்
வேசைத்தெரு வீதிவிட்டே-கோவலவன்-வேதியர்கள்
தெருவில்வந்தான்
காசுழக்கி[98] யெண்ணைவிக்குங் கனத்தசொக்கர் வீதிவந்தான்
துலுக்கர்[99] தெருவில்வந்தான் சோனகனார்[100] வீதிவந்தான்

வெட்டியிழை மூட்டும் பணிக்கமார்[101] தெருவில்வந்தான்
வாணிபமோ சொல்லிவந்தான் வணிகேசன் கோவலவன்
மதுரைப்பதி நாலுதெரு வீதியெல்லாஞ் சுத்திவந்தான்
வாங்குவா ரொருவரில்லை வர்ணமணிப் பொற்சிலம்பை
என்றுசொல்லிக் கோவலவன் ஏங்கிமனம் புண்ணானான்

பசிபொறுக்க மாட்டாமல் பசித்தழுதான் கோவலவன்
தண்ணிநல்ல தாகமல்லோ தாகவிடை மிகவானான்
மாசித்தெரு கிழச்சந்தி வாத்தியார் மனையில்வந்தான்
பள்ளிக்கூ டந்தனிலே படுத்திருந்தான் கோவலவன்
வாடாது வாடியல்லோ-கோவலவன்-வண்ணமுகம் வேறாகி

மறுநா ளுதயமதில் வாத்தியா ரருகில்வந்தான்

## அண்ணாவி ஆதரித்து அறிவுரை கூறுதல்

எவ்வூ ரெவடமென்று யினிக்கேட்டா னண்ணாவி
வாத்தியார் கேட்கையிலே வணிகேசன் சொல்லலுற்றான்
கருந்தாழை பூச்சொரியும் காவேரிப்பூம் பட்டணமாம்
காசுகொண்டே மடையடைக்குங் காவேரிப்பூம் பட்டணமாம்

மாசாத்தான் செட்டிமகன் வணிகேசன் கோவலவன்
வர்ணமணிச் சிலம்புகொண்டே-யிந்த-மதுரையிலே விக்கவந்தேன்
வாங்குவா ரொருவரில்லை-யிந்த-வர்ணமணிப் பொற்சிலம்பை
அறிந்தவர்க ளொருவரில்லை ஆருமில்லை மதுரையிலே
தண்ணிநல்ல தாகமல்லோ தாகவிடை மிகவானேன்
பசிபொறுக்க மாட்டாமல் பசித்திருந்தே னிவடமதில்
அண்ணாவி தஞ்சமென்றே அறிக்கையிட்டான் கோவலவன்
அந்தமொழி கேட்டல்லவோ அண்ணாவி மனையில்வந்தார்
பொண்டாட்டி தனையழைத்துப் பொடியரிசி சமைக்கச்சொன்னார்
தானம்பண்ணிப் பூசைசெய்தான் சங்கையுள்ள கோவலவன்

சாப்பிட் டிளைப்பாறித் தாகவிடை தீர்ந்தல்லவோ
பள்ளிக் குடந்தனிலே-வாத்தியார்-பக்கத்திலே வந்தல்லவோ
வர்ணமணிச் சிலம்பெடுத்தான் வாத்தியார் கைக்கொடுத்தான்
பொற்சிலம்பைப் பார்த்தல்லவோ புத்திசொன்னா ரண்ணாவி
அல்லவடா கோவலவா-நானொரு-உண்மைசொல்லக் கேளாயோ
அழகுக் கழகனடா ஆணழகா கோவலவா
சித்திரம்போற் சிலையழகா தேன்மொழியான் கோவலவன்
உன்னைப்போ லழகனடா-யிந்த-வூர்தனிலே கண்டதில்லை
பொல்லாத மதுரையிலே-யிந்தப்-பொற்சிலம்பைக் கொண்டுவந்தாய்
பாம்படித்தே வழக்கிடுவார் பழிகாரப் பாண்டியர்கள்

கொம்பொடித்தே வழக்கிடுவார் கொடும்பாவிப் பாண்டியர்கள்
வந்தவழி போய்ப்பிழைநீ வணிகேசா கோவலவா
என்றுசொன்னார் வாத்தியார் இனிக்கேட்டான் கோவலவன்
வாத்தியார் சொல்லையெல்லாம் வணிகேசன் தான்கேட்டு
வாடாது வாடியல்லோ-கோவலவன்-வர்ணமுகம் வேறானான்
எண்ணாது எண்ணமெல்லா மெண்ணிவிட்டான் கோவலவன்
வாத்தியார் கிட்டவல்லோ வணிகேசன் தானிருந்தான்

## அரண்மனைச் சிலம்பைக் கருடன் கவர்தல்

பாண்டியனா ரரமனையில் பணிசமைக்கு[102] மாசாரி
கொப்புலிங்கி நகைசமைத்துக் குடுத்துவரும் வன்னித்தட்டான்
பாண்டியனார் பொக்கிசத்துப் பன்மணிப் பொற்சிலம்பை
கொப்புலிங்கி கால்சிலம்பைக் கொண்டுவந்தான் வீட்டருகே
விளக்கமிட்டே பொற்சிலம்பை மேலநல்ல சிகரமதில்
காரைநல்ல சிகரமதில் காயவைத்தான் பொற்சிலம்பை
வன்னித்தட்டான் பெற்றெடுத்த மாபாவி மகனாரும்
வாசலிலே நிற்குமந்த வன்னிநல்ல மரம்தனிலே
கெருடனுமே குஞ்சிவைத்தே[103] கிர்த்தினங்கள் சொல்லயிலே
மாபாவி வன்னித்தட்டான் மகனுமல்லோ கண்டானே
சுண்டுவில்லைக்[104] கைவாங்கித் துரத்தலுத்தான் கெருடனைத்தான்
கெருடனுமே பறந்துவிட கெருடன்குஞ்சி தட்டழிய
சுத்தினான் கவணுருண்டை[105] சுழத்திவிட்டான் சுண்டுவில்லை
பத்துச்சடா கவணுருண்டை-குஞ்சி-பார்மேலே விழுந்துதய்யோ
மாண்டுதே கெருடன்குஞ்சி வைகுண்டம் சேர்ந்துதய்யோ
செத்திறந்தே போச்சுதய்யோ-சொக்கர்-சிவபதமே சேர்ந்துதய்யோ
குழியைவெட்டிக் குஞ்சிததள்ளிக் கொடும்பாவி மண்போட்டான்

பள்ளிக்குடம் போயல்லவோ படித்திருந்தான் தட்டான்மகன் **(1225)**

பாத்திருந்தே கெருடனுமோ பார்மேலே போய்விழுந்து
பூமியிலே தான்விழுந்து புலம்பி யலறிடவே
பிள்ளை மயக்கம் பெருமயக்க முண்டாகி
வன்னி மரத்தருகே வந்துதய்யோ கெருடனுமே
செந்தலைக் கெருடனுக்குச் சிறகுரெண்டும் பின்னியல்லோ **(1230)**

வன்னிநல்ல மரந்தனிலே-கெருடன்-வந்தங்கே பாயுதய்யோ
மாளுவேன் மதுரையிலே வைகுண்டஞ் சேர்வேனென்றே
செத்தங்கே போவேனான் சிவபதமே சேர்வேனென்றே
அழுதகண்ணீ ராறோடே அலறுதய்யோ கெருடனுமே
பிள்ளைபழி வீண்போமோ கொடும்பாவி வன்னித்தட்டான் **(1235)**

மைந்தன்பழி வீண்போமோ மாபாவி வன்னித்தட்டான்
குஞ்சிபழி வீண்போமோ கொடும்பாவி வன்னித்தட்டான்
பழிவாங்கப் போறனடா பாவிவன்னித் தட்டானே
என்றுசொல்லிக் கெருடனுமே யேங்கிமனம் புண்ணாகி
வன்னிநல்ல மரந்தனிலே வாழ்ந்திருக்கும் நாளையிலே **(1240)**

வசனம்

கொப்புலிங்கி கால்சிலம்பை வன்னித்தட்டான் கொண்டு வந்து விளக்கமிட்டுக் காரைநல்ல சிகரமதில் காயவைத்தான் அந்நேரம்.

வேறு

பார்த்துதய்யோ கெருடனுமே பழியளுந்தான் வந்துதென்றே
வர்ணமணிச் சிலம்பெடுப்போம் வன்னித்தட்டான் பழிகொடுப்பான்
என்றுசொல்லித் தானினைத்தே ஏத்தமுள்ள கெருடனுமே
என்னநல்ல நினைவானார் ஈசுரனார் கெருடனுமே
வர்ணமணிப் பொற்சிலம்பை வாயதிலே கொத்தலுற்றார் **(1245)**

கொப்புலிங்கி கால்சிலம்பைக் கொத்தியல்லோ யெடுக்கலுற்றார்
பறந்துவிட்டார் கெருடனுமே-மதுரைப்-பட்டணமே தான்கடந்தார்

உசரப் பறந்தாரே-கெருடன்-உசந்தமலைச் சாருவுவந்தார்[106]
நாகமலைச் சார்வதிலே நல்லதொரு புத்ததிலே[107]
தேவருக்குந் தெரியாமல்-சிலம்பு-வைத்தாரே கெருடனுமே
வர்ணமணிச் சிலம்பையல்லோ வைத்தாரே புத்ததிலே
வாராரே கெருடனுமே-மதுரை-வன்னித்தட்டான் வீட்டருகே
வன்னிநல்ல மரந்தனிலே வாழ்ந்திருந்தார் கெருடனுமே
காரைச் சிகரமதில் காயவைத்த கால்சிலம்பை
ஆரெடுத்துப் போனாரோ அறிந்திலனே யென்றுசொல்லி
வாடாது வாடியல்லோ-தட்டான்-வர்ணமுகம் வேறாகி
மனமுருகி மனைதனிலே வன்னித்தட்டான் இருக்கையிலே

## வன்னித்தட்டான் கோவலன் மீது களவுப்பழி சாற்றல்

பள்ளிக் குடந்தனிலே-படித்த-பாலனுமோ ஓடிவந்து
வணிகேசன் கால்சிலம்பை வாத்தியார் கைக்கொடுத்தான்
பாத்துவந்தே னென்றுதட்டான் பாலனுமோ வந்துசொன்னான்
பாலனுமோ சொல்லலுற்றான்-தட்டான்-பள்ளிக் குடத்தில்வந்தான்
வன்னித்தட்டா னச்சிணமே வாத்தியா ரருகில்வந்தான்
கோவலவன் முகம்பார்த்தான் கொடும்பாவி வன்னித்தட்டான்
வணிகேசன் கால்சிலம்பை வாங்கலுற்றான் வன்னித்தட்டான்
வாரவிதி தெரியாமல் மாபாவி வன்னித்தட்டான்
வாத்தியார் முகம்பார்த்தே வன்னித்தட்டா னேதுசொல்வான்
பாண்டியனார் பொக்கிஷத்துப் பாரமணிப் பொற்சிலம்பை
கொப்புலிங்கி கால்சிலம்பைக் கொண்டுவந்தே விளக்கமிட்டேன்
காரைநல்ல சிகரமதில் காயவைத்தே னண்ணாவி
கண்டிருந்தே கொண்டுவந்தா-னிந்தக்-கால்சிலம்பை அண்ணாவி
என்றுசொல்லி வன்னித்தட்டான் இழுக்கலுற்றான் கோவலனை
வணிகேசன் மடிபிடித்தே மாசித்தெரு வீதிவந்தான்
கொப்புலிங்கி கால்சிலம்பைக் கொண்டுவந்த கள்ளனென்றே

கனகமணிப் பொற்சிலம்பைக் கன்னமிட்ட கள்ளனென்றே
கயறுகொண்டே கோவலனைக் கட்டலுற்றான் வன்னித்தட்டான்

மயிர்பிடித்தே தானிழுத்தான் மாசித்தெரு வீதியிலே
கொண்டை பிடித்திழுத்தான் கொடும்பாவி வன்னித்தட்டான்
அடிக்கலுற்றான் வன்னித்தட்டான் அழுதுவிட்டான் வணிகேசன்
கும்மல்கும்ம லாகவல்லோ கூட்டமிட்டார் வீதியிலே
கோவலனை அரமனையில் கொண்டுவந்தான் வன்னித்தட்டான்

மகுடமுடிப் பாண்டியனை மந்திரிமார் சூழ்ந்திருக்க
பாண்டியனார் சபையிருக்கப் பக்கத்தே கூட்டிவந்தான்
கும்பிட்டான் பாண்டியனைக் கொடும்பாவி வன்னித்தட்டான்
அறிக்கையிட்டான் வன்னித்தட்டான் அழகான பாண்டியர்க்கே
சொல்லலுற்றான் வன்னித்தட்டான் சொல்கேட்டான் பாண்டியனும்

கொப்பிலிங்கி கால்சிலம்பைக் கொண்டுவந்தே விளக்கமிட்டு
காரைச் சிகரமதில் காயவைத்தேன் பாண்டியனே
கண்டிருந்தே கொண்டுவந்த கள்ளனென்றான் வன்னித்தட்டான்
கள்ளனென்றே கோவலனைச் சொல்லலுற்றான் பாண்டியர்க்கே

## கோவலனின் மறுப்புரை

அல்லக்காண் பாண்டியனே-நான்-சொல்லவோ நீகேளாய்

கருந்தாழை பூச்சொரியுங் காவேரிப்பூம் பட்டினத்தே
காசுகொண்டே மடையடைக்குங் காவேரிப்பூம் பட்டினத்தே
மாசாத்தான் செட்டிமகன் வணிகேசன் கோவலவன்
வர்ணமணிச் சிலம்புகொண்டே வணிகனான கோவலவன்
வாணிபமோ செய்யவந்தேன்-இந்த-வடமதுரைப் பட்டணத்தில்

கால்சிலம்பைக் கொண்டுவந்தேன்-இந்தக்-கனமதுரைப் பட்டணத்தில்

கால்சிலம்பை வாங்கலுற்றான் கள்ளனென்றே
கட்டலுற்றான்
வன்னித்தட்டான் முகமறியேன் மனையறியேன்
பாண்டியனே
ஆளேறி விழவுமில்லை-வன்னித்தட்டான்-ஆட்டைமாட்டைப்
பிடிக்கவில்லை
பூட்டை முறிக்கவில்லை பொய்களவு செய்யவில்லை

பொக்கிசத்துத் திரவியத்தைப் போயங்கே திருடவில்லை
பாருமய்யா பாண்டியனே பாரமணிப் பொற்சிலம்பை
அநியாயங் கேளுமய்யா அழகான பாண்டியனே
கள்ளனென்றே அடிக்கலுற்றான் கனமதுரைப்
பாண்டியனே
என்றுசொல்லித் தானழுதான் ஏந்திழையாள் கோவலவன்

## அரசியிடம் அழைத்துச் செல்லல்

கோவலவன் சொல்கேட்டான் கொடுமதுரைப்
பாண்டியனும்
வன்னித்தட்டான் முகம்பாத்து வார்த்தைசொன்னான்
பாண்டியனும்
கொப்புலிங்கி (அரமனைக்கே)-கோவலனைக்-கூட்டிப்போ
வன்னித்தட்டான்
கைக்கொடுநீ கால்சிலம்பைக் கண்பாத்தே உள்ளதென்றால்
சொன்னபடி செய்கிறேனான்-என்று-சொல்லலுற்றான்
பாண்டியனும்

பாண்டியனார் சொல்கேட்டான் பாவிவன்னித் தட்டானும்
கொப்புலிங்கி யரமனைக்கே கூட்டிவந்தான் கோவலனைக்
காப்பிட்டே திபமிடுங் கல்தூணின் தன்னருகே
கருங்கல்லுத் தூணோடே கட்டலுற்றான் வன்னித்தட்டான்
கட்டுப்பட்டேன் மிதியும்பட்டேன் கள்ளனென்றே
பேருபட்டேன்

கட்டுப்பட்டே கோவலவன் கண்ணீரை வடியவிட்டான்
அழுதகண்ணீ ராறோடே அழுதுவிட்டான் கோவலவன்
வர்ணமணிச் சிலம்புகொண்டே வாரானே வன்னித்தட்டான்
பாண்டியனார் மனையாட்டி பத்தினியாள் கொப்புலிங்கி

மேடைமெத்தை வீடதிலே வீத்திருக்கும் வேளையிலே
கால்சிலம்பைக் கொப்புலிங்கி கைக்கொடுத்தான் வன்னித்தட்டான்

## அரசி கொப்புலிங்கி உண்மை உணர்தல்

பாத்தாளே கால்சிலம்பைப் பதறிவிட்டாள் கொப்புலிங்கி
கால்சிலம்பைப் பார்த்தல்லவோ கண்ணீரைச் சோரவிட்டாள்
அழுதகண்ணீ ராறோடே அழுதுவிட்டாள் கொப்புலிங்கி
தெய்வகன்னிப் பொற்சிலம்பு-யென்-தேன்மொழியாள் கால்சிலம்பு
வைகையிலே போனமகள்-என்-னண்டையிலே வந்தாளோ
ஆத்திலே போனமகள் வந்தாளோ யென்றழுதாள்
என்றுசொல்லிக் கொப்புலிங்கி யேங்கிமனம் புண்ணானாள்
மங்கைநல்லாள் சிலம்புயென்று மனத்திலே தானினைந்தாள்
கால்சிலம்பு கொண்டுவந்த கள்ளனெங்கே வன்னித்தட்டான்
என்றுசொல்லிக் கேட்கலுற்றாள் ஏந்திழையாள் கொப்புலிங்கி
வன்னித்தட்டா னோடிவந்து வணிகேசன் கெட்டவிழ்த்தான்
கொப்புலிங்கி பக்கத்திலே கூட்டிவந்தான் கோவலனை
சொல்லச்சொன்னான் வன்னித்தட்டான் சொல்லலுற்றான் வணிகேசன்

## கோவலன் கொப்புலிங்கியிடம் முறையிடல்

சொல்லுகுறேன் தாயேயென்று சொல்லலுற்றான் கோவலவன்
அல்லக்காண் மாதாவே-நான்-உண்மைசொல்லக் கேளாயோ
காவேரிப்பூம் பட்டணத்தே கனத்தசெட்டி வணிகேசன்
மாசாத்தான் செட்டிமகன் வணிகேசன் கோவலவன்
வர்ணமணிச் சிலம்புகொண்டே வாணிபமே செய்யவந்தேன்
வாணிபமே செய்யவந்தேன்-இந்த-வடமதுரைப் பட்டணத்தே
கால்சிலம்பை வாங்கலுற்றான் கள்ளனென்றான் வன்னித்தட்டான்

கயறுகொண்டே கட்டலுற்றான் கள்ளனென்றே
அடிக்கலுற்றான்
பாண்டியனார் பக்கத்திலே பாவியுமோ கொண்டுவந்தான்
பாரமணிப் பொற்சிலம்பைப் பாண்டியனார் பாக்கலுற்றார்
கூட்டிப்போய் வன்னித்தட்டான் கொப்புலிங்கி
பாக்கணுமென்றார்-உன்
கால்சிலம்பே யானாக்கால் கள்ளனென்றே
வெட்டச்சொல்லும்
அல்லவென்றால் மாதாவே யனுப்பிவிடும் வெளியாக
என்றுசொன்னான் கோவலவன் இனிக்கேட்டாள்
கொப்புலிங்கி
உள்ளபடி சொல்லுமென்று கேட்டாளே கொப்புலிங்கி
சொல்லலுற்றான் கோவலவன் சோதிகிளி வாய்திறந்தே
எனக்குவயது பதினாறு என்மனையாட்டி கன்னகையாள்
பன்னிரண்டு வயதானாள் பத்தினியா ளங்கிருக்க
கால்சிலம்பு வாங்கிவந்து-நான்-கனமருதை விக்கவந்தேன்

## கோவலனைக் கொப்புலிங்கி விடுதலையாக்குதல்

கேட்டாளே கொப்புலிங்கி கிலேசமிட்டாள் கண்ணாலே
காட்டிலே போனமகள் கணவனா ராகுமென்றாள்
மங்கைநல்லாள் பெண்ணார்க்கே மணவாள னாகுமென்றாள்
என்வயத்தில் பிறந்தவளுக்கே வயதுபன்னிரண் டாச்சு
என்றுசொல்லித் தானழுதாள் ஏந்திழையாள் கொப்புலிங்கி
வன்னித்தட்டான் முகம்பார்த்தாள் வார்த்தைசொன்னாள்
கொப்புலிங்கி
கள்ளனல்ல வணிகேசன்-என்-கால்சிலம்பு தானுமல்ல
கொல்லவேண்டாங் கோவலனை கொப்புலிங்கி
சொல்லிவிட்டாள்
அழகுக் கழகனல்லோ ஆணழகன் கோவலவன்
சித்திரச் சிலையழகன் தேன்மொழியா னென்றுசொல்லி
படத்தி லெழுதிவிட்ட பத்தினியாள் கோவலர்க்கே
தாதியர்க்கே சொல்லியல்லோ சாதமிட்டாள் கொப்புலிங்கி
சாப்பிட்டே கூட்டிவந்தான் கோவலனை வன்னித்தட்டான்
கூடவல்லோ தாதியரைக் கூட்டிவிட்டாள் கொப்புலிங்கி

பாண்டியனார் தானணித்தே பக்கம்வந்தான்
வன்னித்தட்டான்
தாதிமார் வந்தல்லவோ தான்சொன்னார் பாண்டியர்க்கே
கள்ளனல்ல வணிகேசன்-நம்முடைய-கால்சிலம்பு தானுமல்ல

கொல்லவேண்டாங் கோவலனைக் கொப்பிலிங்கி
சொல்லிவிட்டாள்
அஞ்ஞூறுபொன் படிச்சிலவாய்க்குடுத்து[108]
அனுப்பச்சொன்னாள் பாண்டியனே
அறிக்கையிட்டார் தாதியர்கள் அழகான பாண்டியர்க்கே

## பாண்டியனிடம் வன்னித்தட்டான் வாதிடுதல்

பாண்டியனு மந்நேரம் பாத்தானே தட்டானை
தட்டானே கேட்டாயோ தாதிமார் சொன்னதெல்லாம்

விட்டுவிடு கோவலனை வெளியிலேதா னிப்போது
என்றுசொன்னான் பாண்டியனும் இனிக்கேட்டான்
வன்னித்தட்டான்
வலமாக நின்றதட்டா னிடமாக வந்துநின்றே
கும்பிடுறேன் பாண்டியனே குத்தமென்று யெண்ணாதே
கோவலவன் முகம்பார்த்தாள் கொப்புலிங்கி வேறானாள்

கால்சிலம்பைப் பாத்தல்லவோ கண்ணீரைச் சோரவிட்டாள்
தாதியர்க்கே சொல்லியல்லோ சாப்பாடு பண்ணுமென்றாள்
அத்தரொக்க மொருமுடிப்பாய் அஞ்ஞூறு
பொன்னுஞ்சொன்னாள்
ஆசாரக் கள்ளனய்யா அழகான பாண்டியனே
மந்திர வாதிஅய்யா மயக்கிவிட்டான் பெண்ணாரை

தந்திரத்தால் களவாண்ட தனிக்கள்ளன் கோவலவன்
கொம்பைக்காட்டு மறவனய்யா கொல்லச்சொல்லும்
மழுவாலே
வேட்டைக்காட்டு மறவனய்யா வெட்டச்சொல்லும்
பாண்டியனே

என்றுசொல்லிப் பாண்டியர்க்கே யினிச்சொன்னான் தட்டானும்
அல்லவடா வன்னித்தட்டா நான்சொல்லக் கேளாயோ

பாண்டியன் மதுரையிலே பழிகள்செய்யக் கூடாது
வேண்டியதைச் செய்திடுநீ வீரமுள்ள தட்டானே
என்றுசொல்லப் பாண்டியனு மினியதொரு வன்னித்தட்டான்
சத்தியமோ பண்ணச்சொல்லும் பாண்டியனே யென்றுசொன்னான்

## கோவலன் பாம்புச் சத்தியம் செய்தல்

என்றுசொன்னான் வன்னித்தட்டான் இனிக்கேட்டான் பாண்டியனும்

சத்தியமோ பண்ணியல்லோ தான்போடா வணிகேசா
பாம்புக்குடம் கொண்டுவாரே-னிந்தப்-பாண்டியனார் சபைதனிலே
என்றுசொல்லி வன்னித்தட்டான் குசவேளான்[109] மனையில்வந்தான்
அண்ணேயண்ணே வேளானே-நான்-உண்மைசொல்லக் கேளாயோ
கூடநல்ல பிறக்கணுமோ கூட்டுப்பா லுங்கணுமோ[110]

ஒக்கநல்ல பிறக்கணுமோ ஒருமுலைப்பா லுங்கணுமோ
கள்ளனும் பாண்டியனுங் கைகலந்து போனார்கள்
கட்டிழந்தேன் மண்ணிழந்தேன்-மதுரைக்-காணியுமோ தானிழந்தேன்
தலைக்குநல்ல மகுடந்தாரேன் சந்திரகாவிச் சேலை[111] தாரேன்
பெண்டாட்டி கொண்டைக்கல்லோ குப்பித்தொங்கல்[112] தாரேனென்றான்

பெத்தநல்ல மகனார்க்கே-கொத்து-முத்துவடம் போடுகிறேன்
பாம்படைத்தே பாண்டியனார் பாரநல்ல சபையில்வைக்க
கையிட்டால் வாங்காத கனத்தகுடஞ் செய்யுமென்றான்
கைவழித்த மண்ணாலே கனத்தகுடஞ் செய்யுமென்றான்
அத்தரொக்க மொருமுடிப்பா யாயிரம்பொன் தாரேனென்றான்

பெண்டாட்டி மண்சுமக்கப் பொற்தட்டி தாரேனென்றான்
என்றுசொன்னான் வன்னித்தட்டான் இனிக்கேட்டான் வேளானும்
அந்நேரம் வேளானு மன்பாக மண்ணெடுத்து
குத்தி மிதித்தானே குசவனார் வேளானும்
கையிட்டால் வாங்காத கனத்தகுட முண்டாக்கி
கைக்கொடுத்தான் வேளானும் வன்னித்தட்டான் வாங்கிவந்து
பாம்புக்குடம் வாங்கியல்லோ பிடாரனுட மனையில்வந்தான்
அந்நேரம் பிடாராநீ-நானொரு-உண்மைசொல்லக் கேளாயோ[113]
கட்டிழந்தேன் மண்ணிழந்தேன் காணியுமோ தானிழந்தேன்
கள்ளனும் பாண்டியனும் கைகலந்தே போனார்கள்
தலைக்குநல்ல மகுடந்தாரேன் சந்திரகாவிச் சேலைதாரேன்
பொண்டாட்டி கொண்டைக்கல்லோ குப்பித்தொங்கல் தாரேனென்றான்
பொன்னாலே பாம்புப்பொட்டி பிடாரனே தாரேனென்றான்
அத்தரொக்க மொருமுடிப்பாய் ஆயிரம்பொன் தாரேனென்றான்
பாம்புக்குடம் கொண்டுவந்தேன் பிடாராநீ பாருமென்றான்
வன்னித்தட்டான் சொல்லயிலே மாபாவிப் பிடாரனுமே
மதுரைவிட்டே வெளியானான்-பிடாரன்-மலைச்சார்வில் தானும்வந்தான்
நாகமலைச் சார்வதிலே நல்லபாம்புப் புத்ததிலே
கடித்தால்விசந் திரும்பாத கருநாகப் பாம்பல்லவோ
செத்தால்விசந் திரும்பாத செந்நாகப் பாம்பல்லவோ
தெளிப்பாம்பு மணிப்பாம்பு சேரவே தான்பிடித்தான்
பிடித்துவந்த பாம்பையெல்லாங் குடத்தடைத்தான் பிடாரனுமே
பாம்புக்குடம் கொண்டுவந்தான் பாவிவன்னித் தட்டானும்
பாண்டியனார் சபைதனிலே பாம்புக்குடந் தானும்வைத்தான்
அறிக்கையிட்டான் வன்னித்தட்டா னழகான பாண்டியர்க்கே

வசனம்

வன்னித்தட்டான் பாண்டியன் கிட்ட வந்து இந்த வெள்ளி யுருண்டை, தங்க உருண்டை, பொன்னுருண்டை மூன்று

உருண்டையும் பாம்புக் குடத்திலே போடுகிறேன் இந்த மூன்று உருண்டையும் கோவலவ னெடுத்தால் போகச் சொல்லுங்கோ அல்லவென்றால் வெட்டச் சொல்லுங்கோ பாண்டியனே யென்று வன்னித்தட்டான் சொன்னான். கோவலனைப் பாண்டியன் பாத்துப் பாம்புக் குடத்திலே மூன்று உருண்டை போட்டிருக்கு எடு போவென்று சொன்னார்.

வேறு

பாண்டியனார் சொல்கேட்டான் பயமானான் கோவலவன்
பாம்புக்குடம் பார்த்தானே பதறிவிட்டான் வணிகேசன்
பாம்புக்குடம் கைபோட-ஆதி-பிரமனுந்தான் விதித்தானோ
மலைப்பாம்புக் கிரையாக-யென்தாய்-வண்ணமாலை
பெற்றுவிட்டாள்
செந்நாகப் பாம்புக்கல்லோ செட்டிமகன்-என்னை-
வளத்துவிட்டான் **(1440)**

பாம்புக்கிரை யாகவல்லோ பாவியுமோ பெத்துவிட்டாள்
உள்ளமோ கொதிக்குதய்யோ உருகுதய்யோ தேகமெல்லாம்
எண்சா ணுடம்பல்லவோ யீரலுமே பத்துதென்றான்
என்னசெய்வேன் மீனாட்சி யென்றழுதான் கோவலவன்
பாண்டியன் சபைதனிலே பாம்புக்குடம் பார்க்கையிலே
**(1445)**

சிறுதய்யோ செந்நாகம் செட்டிமகன் கோவலனை
ஒருச்சா ணுசரமல்லோ ஊருதய்யோ கருநாகம்
ஆரைநல்ல நினைக்கலுற்றா னழகான வணிகேசன்
கன்னகையைத் தானினைந்தான் கணவனார் கோவலரும்
பத்தினியை நினைக்கையிலே பதுங்குதய்யோ
செந்நாகம் **(1450)**

பத்தினியைத் தானினைந்தான் பாம்புக்குடங் கைபோட்டான்
பாம்புக்குடங் கைபோட்டான் பாரஉருண்டை
தானெடுத்தான்

செந்நாகப் பாம்பல்லவோ செங்கழுநீர்ப் பூவாச்சே
கருநாகப் பாம்பல்லவோ கட்டிமாலை யாச்சுதய்யோ
பாம்புக்குட உருண்டையல்லோ பாண்டியன்
முன்னேவைத்தான் **(1455)**

சபையில்வைத்தான் உருண்டைதனைத் தான்பார்த்தான்
பாண்டியனும்

அறிகார ரோடவிட்டே[114] அழைத்துவந்தான்
வன்னித்தட்டானை
வன்னித்தட்டான் முகம்பாத்தே வார்த்தைசொன்னான்
பாண்டியனும்
பாம்புக்குடங் கைபோட்டான் பாரஉருண்டை
சபையில்வைத்தான்
விட்டுவிடு கோவலனையென்று பாண்டியனுஞ்
சொல்லலுற்றான்

## மழுச்சத்தியம் செய்தல்

பாண்டியனார் சொல்லயிலே பாவிவன்னித் தட்டானும்
வலமாக வந்ததட்டான்-சுத்தி-யிடமாக வந்தல்லவோ
கும்பிடுகிறேன் பாண்டியனே குத்தமென்று எண்ணாதே
அல்லக்காண் பாண்டியனே-நானொரு-உண்மைசொல்லக்
கேளீரோ
மந்திரத்தால் பெரியவன்காண் வணிகேசன் கோவலவன்

அரவத்தின்வாய் கட்டினவன் அரசன்வாய் கட்டானோ
பாம்பின்வாய் கட்டினவன் பாண்டியன்வாய் கட்டானோ
இன்னமொரு சத்தியந்தான் இனிக்கேளும் பாண்டியனே
பாரநல்ல மழுவேந்திப் பாண்டியனே போகச்சொல்லும்
என்றுசொல்லி வன்னித்தட்டான் இனியதொரு மாபாவி

கொல்லனுட மனையில்வந்தான் கொடும்பாவி
வன்னித்தட்டான்
அண்ணேஅண்ணே ஆசாரி-நானொரு-உண்மைசொல்லக்
கேளாயோ
ஒன்குலமு மென்குலமு மொருகுலந்தா னிப்போது
கூடநல்ல பிறக்கணுமோ கூட்டுமுலை யுங்கணுமோ
ஒக்கநல்ல பிறக்கணுமோ ஒருமுலைப்பா லுங்கணுமோ

கள்ளனும் பாண்டியனுங் கைகலந்தே போனார்கள்
கட்டிழந்தேன் மனையிழந்தேன்-மதுரைக்-காணியுமோ
தானிழந்தேன்
தலைக்குநல்ல மகுடந்தாரேன் சந்திரகாவிச் சேலைதாரேன்

பெண்டாட்டி கொண்டைக்கல்லோ பொன்னாலே குப்பித்தொங்கல்
பெத்தெடுத்த மகனார்க்கே-கொத்து-முத்துவடம் போடுகிறேன்
பூண்டிருக்கும் சுத்தியல்தான் பொன்னாலே தாரேனென்றான்
அத்தரொக்கம் ஒருமுடிப்பா யாயிரம்பொன் தாரேனென்றான்
மழுக்காச்சு மாசாரி-யிந்த-வணிகேசன் கைகருக
என்றுசொன்னான் வன்னித்தட்டான் ஏற்றமுள்ள கோவலனும்
பாண்டியனார் சபையில்வந்தான் பாரமழுக் காயவைத்தான்
பதினாறு துருத்தியிட்டே[115] பாரமழுக் காயுதய்யோ
அக்கினியாள் தேவியல்லோ அருகுவந்தாள் மழுவதிலே
அறிக்கையிட்டான் வன்னித்தட்டான் அழகான பாண்டியர்க்கே
பாண்டியனு மந்நேரம் பாத்தானே கோவலனை
மழுவெடுக்கச் சொல்லுகுறான் வன்னித்தட்டா னிப்போது
மழுவெடுத்தே போய்விடுநீ வணிகேசா யென்றுசொல்லி
சொல்லலுற்றான் பாண்டியனும் சொல்கேட்டான் வணிகேசன்
பாண்டியனார் சொல்கேட்டான் பயமானான் பாண்டியனும்
பாரமழு திப்பொரியப் பார்த்தானே வணிகேசன்
பதினாறு துருத்தியிட்டே பாரமழு திப்பறக்கப்
பார்த்தானே கோவலவன் பதறிவிட்டா னந்நேரம்
மழுவுக்கிரை யாகவல்லோ வண்ணமாலை பெத்துவிட்டாள்

திக்கிரை யாகவல்லோ-மாசாத்தான்-செட்டியுமோ வளத்துவிட்டான்
உள்ளமோ கொதிக்குதய்யே உருகுதய்யோ தேகமெல்லாம்
எண்சா ணுடம்பலவோ யீரலுமோ பத்துதென்றான்
என்னசெய்வேன் மீனாட்சி யென்றழுதான் வணிகேசன்

ஆரைநல்ல நினைக்கலுற்றான் அழகான கோவலவன்
கன்னகையைத் தானினைந்தான் கணவனார் கோவலனும்
உத்தமியை நினைக்கையிலே உள்ளானா ளக்கினியும்
பத்தினியை நினைக்கலுற்றான் பாரமழு கையெடுத்தான்

மழுவெடுத்தான் வணிகேசன் மாதாளம்பூப்[116] போலாச்சே
பாரமழு வெடுத்தல்லவோ பாண்டியன்தன்
முன்புவைத்தான்
பாண்டியனு மந்நேரம் பார்த்தானே பாரமழுவை
அறிகார ரோடவிட்டு அழைத்துவந்தான்
வன்னித்தட்டானை
மழுவெடுத்தான் வணிகேசன் வன்னித்தட்டா னிப்போது

விட்டுவிடு கோவலனை யென்றுசொன்னான் பாண்டியனும்

## வேங்கைச் சத்தியம் செய்தல்

பாண்டியனார் சொல்லயிலே பாவிவன்னித் தட்டானும்
வலமாக நின்றதட்டான்-சுத்தி-யிடமாக வந்தல்லவோ
கும்பிடுகிறேன் பாண்டியனே குத்தமென்று எண்ணாதே
பாம்பின்வாய் கட்டினவன் பாண்டியன்வாய் கட்டானோ

அக்கினிவாய் கட்டினவன் அரசன்வாய் கட்டானோ
இன்னமொரு சத்தியந்தான் இனிக்கேளும் பாண்டியனே
வேங்கைநல்ல சத்தியந்தான் மிகச்செய்ய வேணுமென்றான்
என்றுசொல்லி வன்னித்தட்டான் வேட்டைக்காரர்
மனையில்வந்தான்
அண்ணேஅண்ணே வேட்டைக்காரா-நானொரு-
உண்மைசொல்லக் கேளாயோ

கட்டிழந்தேன் மண்ணிழந்தேன்-மதுரைக்- காணியுமோ
தானிழந்தேன்
கள்ளனும் பாண்டியனும் கைகலந்தே போனார்கள்
தலைக்குநல்ல மகுடந்தாரேன் சந்திரகாவிச் சேலைதாரேன்
பொண்டாட்டி கொண்டைக்கல்லோ பொன்னாலே
குப்பித்தொங்கல்
அத்தரொக்க மொருமுடிப்பாய் ஆயிரம்பொன்
தாரேனென்றான்

வேட்டைக்கார அண்ணனடா-ஒரு-வேங்கைகொண்டே வாருமென்றான்
அச்சிணமே வேட்டைக்கார ரடுக்குவலை தானெடுத்தார்
நாகமலைக் குள்ளதிலே நல்லவலை கட்டலுற்றார்
பதினாறடி வேங்கைப் பத்தையத்தைக் கொண்டுவந்தார்
பாண்டியர்க்கே அறிக்கையிட்டான் பாவிவன்னித் தட்டானும்
செவ்வேங்கைப் பத்தையத்தில் செட்டியைத்தான் போட்டிடவே
கொல்லாமல் வந்துவிட்டால் கோவலனைப் போகச்சொல்லும்
என்றுசொன்னான் வன்னித்தட்டான் இனிக்கேட்டான் பாண்டியனும்
பாண்டியனுஞ் சொல்லலுற்றான் பத்தினியான் கோவலர்க்கே
வேங்கைநல்ல பத்தையம்போய்[117] வெளியேவா வணிகேசா
விட்டுவிடச் சொல்லுகிறேன் வெளியேபோ யிப்போது
என்றுசொன்னான் பாண்டியனு மினிக்கேட்டான் கோவலவன்
பாண்டியனார் சொல்கேட்டான் பயமானான் கோவலவன்
பாத்தானே வேங்கையைத்தான் பதறிவிட்டான் வணிகேசன்
பசிபொறுக்க மாட்டாமல் பத்தையத்தை மோருதய்யோ[118]
பாண்டியனார் சபைபார்த்தே பருவேங்கை வீறிடுமாம்
செட்டிமகன் முகம்பார்த்தே செவ்வேங்கை வீறிடுமாம்
மலைவேங்கைக் கிரையாக வண்ணமாலை பெத்துவிட்டாள்
செவ்வேங்கைக் கிரையாகச் செட்டியுமோ யெனைவளத்தான்
என்னசெய்வேன் மீனாட்சி யென்றழுதான் வணிகேசன்
ஆரைநல்ல நினைக்கலுற்றான் அழகான கோவலவன்
கன்னகையைத் தானினைந்தான் கணவனார் கோவலவன்
பத்தினியைத் தானினைந்தான் பத்தையத்தைப் பாத்துநின்றான்
பாத்துநின்ற கோவலனைப் பாவிவன்னித் தட்டானும்
கயறுகொண்டே கட்டியல்லோ-வேங்கைக்-காலுமுன்னே தள்ளிவிட்டான்

ஞானக்கண் கொண்டுதய்யோ நல்லமலை வேங்கையுந்தான்
குத்தமில்லை யென்றறிந்தே கொம்பைக்காட்டு மலைவேங்கை
அத்துதய்யோ கயத்தையல்லோ அச்சிணமே வெளியானான்
வணிகேசன் கோவலவன் வந்துநின்றான் பாண்டியன்முன்
பாண்டியனு மந்நேரம் பார்த்தானே கோவலனை
அறிகார ரோடவிட்டு அழைத்துவந்தான் வன்னித்தட்டானை
மலைவேங்கைச் சத்தியமும் வணிகன்செய்தான் வன்னித்தட்டான்
விட்டுவிடு கோவலனையென்றான் வீரமுள்ள பாண்டியனும்

## ஆனைச் சத்தியம்

பாண்டியனார் சொல்லயிலே பாவிவன்னித் தட்டானும்
வலமாக வந்ததட்டான்-சுத்தி-யிடமாக வந்தல்லவோ
கும்பிடுகிறேன் பாண்டியனே குத்தமென்று எண்ணாதே
பாம்பின்வாய் கட்டினவன் பாண்டியன்வாய் கட்டானோ
அக்கினியைக் கட்டினவன் அரசன்வாய் கட்டானோ
வேங்கையைக் கட்டினவன் வேந்தன்வாய் கட்டானோ
புத்திகெட்ட பாண்டியனே-நீங்கள்-புவியாளப் போறியளோ
மதிகெட்ட பாண்டியனே-நீங்கள்-மதுரையாளப் போறியளோ
விட்டுவிட நினையாதே வீரமுள்ள பாண்டியனே
வெட்டச்சொல்லும் பாண்டியனே வீரமுள்ள மழுவாலே
கொல்லச்சொல்லும் பாண்டியனே கொப்பிலிங்கி மழுவாலே
கொம்பைக்காட்டு மறவனய்யா கொல்லச்சொல்லும் பாண்டியனே
வேட்டைக்காட்டு மறவனய்யா வெட்டச்சொல்லும் பாண்டியனே
என்றுசொன்னான் வன்னித்தட்டான் இனிக்கேட்டான் பாண்டியனும்
பாண்டியனுஞ் சொல்லலுற்றான் பத்தினியாள் கோவலர்க்கே
விட்டுவிடச் சொல்லுகிறேன் வெளியிலேபோ யிப்போது

என்றுசொன்னான் பாண்டியனு மினிக்கேட்டான்
வன்னித்தட்டான் (1575)

பாண்டியனு மந்நேரம் பார்த்தல்லவோ வன்னித்தட்டானை
பாண்டியன்தன் மதுரையிலே பழியள்செய்யக் கூடாது
வேண்டியதைச் செய்திடுநீ வீரமுள்ள தட்டானே
என்றுசொன்னான் பாண்டியனு மினிக்கேட்டான்
வன்னித்தட்டான்
அல்லக்காண் பாண்டியனே-நானொரு-உண்மைச்சொல்லக்
கேளீரோ (1580)

ஆனைநல்ல சத்தியந்தான் அரசனேநீர் பண்ணச்சொல்லும்
மதையானைச் சத்தியந்தான்-மதுரைப்-பாண்டியனே
செய்யச்சொல்லும்
என்றுசொல்லி வன்னித்தட்டான் ராவுத்தமார்[119]
தெருவில்வந்தான்
அண்ணேயண்ணே ராவுத்தனே-நானொரு-
உண்மைசொல்லக் கேளாயோ
கட்டிழந்தேன் மண்ணிழந்தேன்-மதுரைக்-காணியுமோ
தானிழந்தேன் (1585)

கள்ளனும் பாண்டியனும் கைகலந்தே போனார்கள்
தலைக்குநல்ல மகுடந்தாரேன் சந்திரகாவிச் சேலைதாரேன்
பொண்டாட்டி கொண்டைக்கல்லோ பொன்னாலே
குப்பித்தொங்கல்
பொன்னாலே துறட்டியுந்தான்[120] போதரவாய்த்
தாரேனென்றான்
ஆனைகொண்டே கொன்றுவிட்டால் ஆயிரம்பொன்
தாரேனென்றான் (1590)

வன்னித்தட்டான் சொல்லயிலே ராவுத்தமா ரந்நேரம்
ஆனைக்கே மதமேத்தக்-அஞ்சுதுலாம்-[121] கஞ்சாயிலை
வேணுமென்றான்
முன்னூறுதுலா மாதளம்பூ-சாராயம்-முன்னூறுகுத்தி
வேணுமென்றான்
ஆறுசேர்[122] மாசியமும்[123] நூறுகட்டுப் புகயிலையும்
கடைச்சரக்கு கூட்டியல்லோ கவளமிட்டான்
ஆனைக்குத்தான் (1595)

அத்திமதம்[124] பித்தமதம் ஆனைமத மீறுதய்யோ
மண்டைப்பித்தம் கொண்டுதய்யோ மனதுவே றாச்சுதய்யோ

குத்துதய்யோ பூமியிலே கொம்புரெண்டும் தான்முறிய
அத்துதய்யோ சங்கிலியை ஆனைவெளி யாச்சுதய்யோ
குறுக்குத்தெரு வீதியிலே முட்டுதய்யோ மதையானை

மீனாட்சி வாசல்வந்தே வீறிடுதே மதையானை
மதுரைநல்ல வீதியிலே மண்தூளி யாக்குதய்யோ
அஞ்சலஞ்ச லென்றோடி யழைத்துவந்தான் கோவலனை
மாபாவிப் பாண்டியனும் வழங்குரைத்தா னப்போது
கூட்டிவந்தான் கோவலனைக் கொடும்பாவி வன்னித்தட்டான்

மாசித்தெரு வீதியிலே மத்தியிலே பந்தலிட்டான்
நாலுகால் பந்தலிட்டான் நடுவேகுழி வெட்டலுற்றான்
வாழைநல்ல கரும்புகட்டி வாழைப்பழந் தூக்கலுற்றான்
குழியிலே நிறுத்திவிட்டான் கொடும்பாவி வன்னித்தட்டான்
மாசித்தெரு வீதியிலே வருகுதய்யோ மதையானை

ராவுத்தனைக் கொன்றுதய்யோ மாசித்தெரு வீதியிலே
பாத்தானே ஆனையைத்தான் பதறிவிட்டான் கோவலவன்
மதையானை கொல்லவென்றே வன்னித்தட்டான் குழிநிறுத்த
ஆனையுமோ யெத்திக்கொல்லப் -பாவி-யரசனுமோ சம்மதித்தான்
மதையானை யெத்திக்கொல்ல வண்ணமாலை பெத்துவிட்டாள்

என்னசெய்வேன் மீனாட்சி யென்றழுதான் கோவலவன்
ஆரைநல்ல நினைக்கலுற்றான் அழகான வணிகேசன்
கன்னகையை நினைக்கலுற்றான் கணவனார் கோவலரும்
பத்தினியை நினைக்கயிலே பாத்துதய்யோ மதையானை
ஞானக்கண் கொண்டுதய்யோ நல்லதொரு மதையானை

வணிகேசன் பழிவாங்க-வன்னித்தட்டான்-வரவழைத்தா னென்றறிந்தே
வன்னித்தட்டானைப் பிடிக்கவல்லோ வருகுதய்யோ மதையானை
விரட்டுதய்யோ மதையானை வீரமுள்ள தட்டானை
அரமனையில் புகுந்தல்லவோ-கோட்டை-யகிலிலே[125] போய்விழுந்தான்

கோட்டுமத யானையல்லோ[126] கோவலன் முன்னேவந்து
மண்பறித்தே வெளியாக்கிக்-கோவலனை-மத்தகமேல் வைத்துதய்யோ
மதையானை மேலேறி மாசித்தெரு வீதிவந்தார்
இச்செய்தி கேட்டானே இனியதொரு பாண்டியனும்
ஆனைமேல் தானிருந்த அழகான கோவலனை
நாலுவீதி சுத்தியல்லோ நன்றாக வாருமென்றே
அதிகார ரனுப்பிவிட்டான் ஆனதொரு பாண்டியனும்
சந்தோச முத்தியல்லோ தானிருந்தான் கோவலவன்

## மாசித்தெருப் பெண்களின் புலம்பல்

மாசித்தெரு வீதியிலே-வணிகேசன்-மத்தகமேல் வருகையிலே
மாசித்தெருப் பெண்களெல்லாம் வந்தங்கே கூட்டமிட்டார்
கும்பகும்ப லாகவல்லோ கூட்டமிட்டார் பெண்களெல்லாம்
ஆளுக் கழகனல்லோ ஆணழகன் கோவலவன்
தச்சன் கடைந்தானோ-வணிகேசன்-தானே சமைந்தானோ
கன்னார்[127] கடைதனிலே கருக்கூட்டி வாத்தானோ
செட்டிநல்ல கடைதனிலே சேத்துருக்கி வாத்தானோ
பட்டத்திலே யெழுதியல்லோ-மதுரைப்-பட்டணத்தை விட்டானோ
சோலையிலே மலையழகர் சொக்கரோ தெரியவில்லை
சொக்கரோ தெரியலையே சோதினைக்கே வந்தானோ
சோமன்கட்டும் நடையழகும்-மதுரைச்-சொக்கருக்கே ஒப்பிடலாம்
மண்டைக்கெட்டும் உருமாலும்[128] மலையழகருக்கே ஒப்பிடலாம்
என்றுசொல்லிச் சொல்வாரு மேங்கிமய லாவாரும்
ஆளனுக்கே[129] சோறிடாமல் அல்லேறிப்[130] பாப்பாரும்
மன்னவர்க்கே சோறிடாமல் வணிகேசன்முகம் பாப்பாரும்
மைந்தனுக்கே பால்கொடாமல் மச்சாவி[131] யென்பாரும்
சத்தியமோ செய்துவந்தான் சங்கையுடன்[132] கோவலவன்
வெத்திசெய்தே வந்தான்காண் விறல்வணிக னென்பாரும்

வன்னித்தட்டான் சொல்கேட்டான் மாபாவிப் பாண்டியனும்
என்னவந்து சூழ்ந்திடுமோ யென்றுசொல்லிச் சொல்வாரும்
கும்பகும்ப லாகவல்லோ கூடிப்பெண்கள் சொல்லலுற்றார்
மருதைக்கோட்டை அகிலில்விழுந்த வன்னித்தட்டானிப்போது
அகிலிவிட்டு மதிலேறிக்-கொப்புலிங்கி-யரமனையில் வந்துநின்றான்
அழகான மதுரைக்கல்லோ அழிவுவந்து நேர்ந்துதென்று
கொப்பிலிங்கி மெத்தைவீட்டில் கூப்பிட்டே தானழுதாள்

## வன்னித்தட்டான் கொப்புலிங்கி மீது பழிகூறல்

அழுதசத்தம் கேட்டல்லவோ-வன்னித்தட்டான்-அளப்பிட்டே ஓடிவந்தான்
பாவி வன்னித் தட்டானும் பாண்டியனார் சபையில்வந்தான்
வலமாக நின்றதட்டான்-சுத்தி-யிடமாக வந்தல்லவோ
கும்பிடுகிறேன் பாண்டியனே குத்தமென்று யெண்ணாதே
மானமுள்ள பாண்டியர்கள் மதுரையாண்டார் வெகுகாலம்
கோவலவன் செத்தானென்றே கொப்பிலிங்கி யழுகாள்பார்
வணிகேசன் செத்தானென்றே-உன்-மனையாட்டி யழுகாள்பார்
மானங்கெட்ட பாண்டியனே-நீங்கள்-மதுரையாளப் போறையளோ
புத்திகெட்ட பாண்டியனே-நீங்கள்-புவியாளப் போறையளே
வணிகேசன் தானிருந்தால்-உன்-மனையாட்டி மனதாவள்
கொல்லச்சொல்லும் பாண்டியனே கொப்பிலிங்கி மழுவாலே
வெட்டச்சொல்லும் பாண்டியனே வீரமுள்ள மழுவாலே
கூட்டிவந்தான் பாண்டியனைக் கொப்பிலிங்கி யரமனைக்கே
ஒப்பிவித்தான் வன்னித்தட்டான் உள்ளதென்றான் பாண்டியனும்

## வெட்டிக்கொல்ல ஆணையிடல்

பாரநல்ல சபைதனிலே பாண்டியனும் வீத்திருந்தான்
வன்னித்தட்டான் சொல்கேட்டான் மாபாவிப் பாண்டியனும்

அறிகார ரோடவிட்டே அழைத்துவந்தான் தலையாரியை
கும்பிட்டான் தலையாரி கொடும்பாவிப் பாண்டியனை

சொல்லலுற்றான் பாண்டியனும் சொல்கேட்டான் தலையாரி
அல்லக்காண் தலையாரி நான்சொல்லக் கேளுமென்றான்
மதையானை யேறிவரும் வணிகேசன் கோவலனை
சிக்கந்தர் மலைச்சார்பில் கொக்கிருந்தான் பாளையமாம்
நாலுதிக்கும் வன்னிமரம் நடுவேநிற்கும் வேங்கைமரம்

வேங்கைநல்ல மரத்தடியில் வெட்டுமென்றான் தலையாரி
மழுவரசா வெட்டியல்லோ மழுவில்ரெத்தங் காண்பி யென்றான்
சொல்லலுற்றான் பாண்டியனும் சொல்கேட்டான் மழுவரசன்
வாழ்த்திவிடை வாங்கியல்லோ மழுவரசன் வெளியானான்
மழுவரசன் கூடவல்லோ மதுரைக்காவல்கார் பன்னீராயிரமாம்

மாசித்தெரு வீதிவந்தே மதையானையைத் தான்வளைந்தார்
ஆனைவிட்டுக் கீழிறக்கி யழைத்துவந்தான் கோவலனை
பாண்டியனுங் கூட்டிவரச் சொன்னானோ யென்றல்லவோ
சந்தோச மாகியல்லோ தானிருந்தான் கோவலவன்
அந்தநல்ல தெருக்கடந்தே அப்பறத்தே வருகையிலே
கம்பிளிக் கயறுகொண்டே கட்டலுற்றார் கோவலனை
களவாண்ட கள்ளனைப்போல் கயறுகொண்டு கட்டலுற்றார்
தமுக்கடிக்கச் சொல்லியல்லோ தள்ளிவந்தார் கோவலனை

## கோவலனின் குமுறல்

வெட்டச்சொன்ன சொல்கேட்டான் விறல்வணிகன் கோவலவன்
அடித்து விழுந்தானே-கோவலவன்-அநியாய மென்றழுதான்

கட்டுப்பட்டேன் அடியும்பட்டேன் கள்ளனென்றே பேரும்பட்டேன்
வெட்டுப்படப் பிரமன்தான் விதித்தானோ யென்றழுதான்
அழுதகண்ணீ ராறோடே அழுதுவிட்டான் கோவலவன்

காளையேறுஞ் சொக்கருட கடைத்தெரு வீதிவந்தார்
கள்ளனுக்கே தலையாரி கடைப்பண்டம் தான்கொடுத்தான்

கடையிலுள்ள செட்டிமக்கள் கண்ணீர் சொரிவாரும்
வர்த்தகனார் செட்டிமக்கள் மதிமயங்கி நிற்பாரும்
குப்பங்கூடிப் பெண்களெல்லாங் கூடி யழுவாரும்
பார்த்தானே கோவலவன் பாரிலுள்ளோர் கேளுமென்றான்
அல்லேறி விழவுமில்லை-பாண்டியன்-ஆடுமாடு பிடிக்கவில்லை

பூட்டை முறிக்கவில்லை பொய்களவு செய்யவில்லை
பொக்கிசத்துத் திரவியத்தைப் போயங்கே திருடவில்லை
பாண்டியனோ வெட்டச்சொன்னான் பழிகொடுக்கான் மதுரையிலே
வன்னித்தட்டான் சொல்லாலே மாளப்போறேன் மதுரையிலே
கடையிலுள்ள செட்டிமக்கள்-என்-கன்னகைக்குச் சாட்சிசொல்லும்

சொக்கருமே லாணைவைத்தேன் சொல்லிடுங்கோ கன்னகைக்கே
என்றுசொல்லித் தானழுதான் ஏந்திழையான் கோவலவன்
கூட்டிவந்தான் கோவலனைச்-சொக்கர்-கோவில்வாசல் முன்னேவந்தான்
தலையாரி முகம்பார்த்தான் சொன்னான் கோவலவன்
கட்டை நெகிழ்த்துவிடு-சொக்கரைக்-கையெடுத்தே கும்பிடத்தான்

என்றுசொன்னான் கோவலவன் இன்பமுடன் தலையாரி
கட்டை யவிழ்த்துவிட்டான் தலையாரி கோவலனை
கையெடுத்தே தெண்டனிட்டான் கண்ணீரைச் சோரவிட்டான்
சொக்கரைப் பாத்தல்லவோ சொல்லலுற்றான் கோவலவன்
பக்கத்தே தானிருக்கும் பழிகாரி மீனாட்சி

தற்காப்பா யென்றலவோ தான்வந்தேன் மதுரையிலே
அல்லேறி விழவுமில்லை ஆடுமாடு பிடிக்கவில்லை
பூட்டை முறிக்கவில்லை பொய்களவு செய்யவில்லை
பொக்கிசத்துத் திரவித்தைப் போயங்கே திருடவில்லை
வன்னித்தட்டான் சொல்கேட்டான் மாபாவிப் பாண்டியனும்

வெட்டச்சொன்னான் பாண்டியனும் வீரமுள்ள மழுவாலே
பாண்டியர்க்கே பழிகுடுக்கப் போறேனடி மீனாட்சி
கன்னகையாளு முன்னிடத்தே கட்டழகி தான்வருவாள்-என்
பத்தினியா ளுன்னிடத்தே பார்பதியே தான்வருவாள்
சொக்கருமே லாணைவைத்தேன் சொல்லடியோ
மீனாட்சி-என் (1730)

கன்னகையாள் சொன்னதெல்லாங் கதையா
முடிந்திதிப்போ
கன்னகைக்கே சாட்சிசொல்லுங் கட்டழகி மீனாட்சி
உள்ளமோ உருகுதிப்போ உருகுதடி தேகமெல்லாம்
எண்சா ணுடம்பல்லவோ-மீனாட்சி-யீரலுமோ
பத்துதென்றான்
என்றுசொல்லித் தானழுதான் ஏந்திழையான்
கோவலவன் (1735)

கயறுகொண்டே கட்டலுற்றான் கள்ளனைத்தான்
மழுவரசன்
அடித்து விழுந்தானே-கோவலவன்-ஆயாசந்[133]
தான்தெளிந்தான்
காவல்காரர் பன்னீராயிரமாங் கள்ளனைத்தான்
சூழ்ந்துவர
மாசித்தெரு வீதியிலே வாரானே கோவலவன்

## மாசித்தெருப் பெண்களின் மனவருத்தம்

மாசித்தெருப் பெண்களெல்லாம் வந்தங்கே
கூட்டமிட்டார் (1740)

கும்பகும்ப லாகவல்லோ கூட்டமிட்டு அழுவாரும்
காவல்காரர் தலையாரி கட்டைநல்ல நெகிழ்த்துவிட
கள்ளனுட கைநிறையப் பொன்தாரே னென்பாரும்
அநியாயஞ் செய்தானே அரசழிவான் பாண்டியனும்
வன்னித்தட்டான் சொல்கேட்டான் மாபாவிப்
பாண்டியனும் (1745)

அழுதகண்ணீ ராறோடே அழுதங்கே நிற்பாரும்
கன்னார் கடைதனிலே கருக்கூட்டி வாத்தானோ
தச்சன் கடைந்தானோ தானாய்ச் சமைந்தானோ
செட்டிநல்ல கடைதனிலே சேத்துருக்கி வாத்தானோ
அழகை யெழுதினவன் ஆயித்தை யெழுதலையே (1750)

பெத்ததாய் கண்டாக்கால் பிச்செறிவாள் தேகமெல்லாம்
தகப்பனுமோ கண்டாக்கால் சாவானே முன்னேதான்
என்றுசொல்லி யழுவாரும் ஏங்கிமய லாவாரும்
பானக்க நீர்மோரு-கோவலவா-பசியாறு மென்பாரும்
பால்தாரேன் கோவலவா பசியாறு மென்பாரும்
சமைத்தநல்ல சாதமல்லோ-கோவலவா-சாப்பிடுநீ யென்பாரும்
என்றுசொல்லிப் பெண்களெல்லாம் நின்றங்கே யழுவாரும்

## கோவலனின் வேண்டுகோள்

மாசித்தெருப் பெண்களேநீர் வணிகேசன் சொல்கேளீர்
பசிதாக மில்லையம்மா பத்தினியாள் தாய்மாரே
தண்ணீரோ தாகமில்லை தாய்மாரே யிப்போது
என்றுசொல்லித் தானமூதே யினிச்சொன்னான் கோவலவன்
மாசித்தெருப் பெண்களெல்லாம் வணிகேசன் சொல்கேளீர்
தென்மதுரைக் கள்ளனுக்கே-யடியம்மா-வயிறு பசிக்கவில்லை
தண்ணிநல்ல தாகமில்லை தாய்மாரே யென்றழுதான்
உங்கணுமோ யிருக்கணுமோ-யிந்த-வுலகத்தார் தானகைக்க
அல்லேறி விழவுமில்லை-பாண்டியன்-ஆட்டைமாட்டைப் பிடிக்கவில்லை
பூட்டை முறிக்கவில்லை-யடியம்மா-பொன்களவு செய்யவில்லை
பொக்கிசத்துத் திரவியத்தைப் போயங்கே திருடவில்லை
வன்னித்தட்டான் சொல்கேட்டான்-அடியம்மா-மாபாவிப் பாண்டியனும்
வெட்டச்சொன்னான் பாண்டியனும் வீரமுள்ள மழுவாலே
பழிகொடுக்கப் போறேனம்மா பாண்டியர்க்கே தாய்மாரே
மாசித்தெருப் பெண்களெல்லாம் மாதாவல்லோ யென்தனக்கு-இந்த
ஊரிலுள்ள பெண்களெல்லாம் உடப்பிறப் பல்லவோ
வன்குலையாப்[134] போறேனம்மா-யென்று-வணிகேசன் தானழுதான்
கன்னகையாள் என்மனையாட்டி கடடழகி தான்வருவாள்

மனையாட்டி தான்வருவாள்-இந்த-மாசித்தெரு வீதியிலே
சாட்சியுமோ சொல்லிடுங்கோ தாய்மாரே கன்னகைக்கு
சொக்கருமே லாணைவைத்தேன் சொல்லிடுங்கோ
கன்னகைக்கு
முக்காலு மாணைவைத்தேன்-கோவலவன்-முழுதுமோ
சாட்சியென்றான்
என்றுசொல்லித் தானழுதான் ஏந்திழையான்
கோவலவன் (1780)
ஆச்சியம்மை மனைதனிலே யடைக்கலமாய் வைத்துவந்தேன்
கன்னகையைக் காண்பதெப்போ மீனாட்சி ...
பூஞ்சேர்வதெப்போ
காவேரிப்பூம் பட்டணத்தைக் காண்பதினி யெக்காலம்
என்றுசொல்லித் தானழுதான் ஏந்திழையான் கோவலவன்
காவல்காரன் தலையாரி கள்ளனைத்தான் சூழ்ந்துவர
(1785)
தெக்குக்கோட்டை விட்டே செட்டியுமோ வெளியானான்
காவல்காரர் பன்னீராயிரம்பேர் காத்திருங்கோ கோவலனை
என்றுசொல்லி மழுவரசன் இன்பமுடன் மனையில்வந்தான்

## மழுவரசனின் மனையாட்டி கனவுநிலை உரைத்தல்

மனையாட்டி தனையழைத்தே மழுவெடுத்தா
வென்றுசொன்னான்
மழுவரசன் மனையாட்டி வார்த்தைசொல்லக்
கேளுமென்றே (1790)
அழகுக் கழகனல்லோ ஆணழகன் கோவலவன்
பத்தினியாள் பெத்தெடுத்த பாலனல்லோ கோவலனை
சித்திரச் சிலையழகன் தேன்மொழியான் கோவலனை
வெட்டவல்லோ மழுக்கேட்டார் வீரியவா னென்றுசொல்லி
முட்டிநல்ல விழுந்தாளே முன்னே பிரண்டழுதாள் (1795)
அடித்துநல்ல விழுந்தாளே அத்தப் புழுதியிலே
மதிமயங்கித் தான்கிடந்தாள் மணவாளன் பாத்திருக்க
பொல்லாத கனவுகண்டேன் சொல்லுகிறேன்
கேளுமென்றாள்
மயக்கமோ தீர்ந்தாளே மன்னவரே கேளுமென்றாள்
கண்டகனாப் பலிக்குமய்யோ கணவனே
கேளுமென்றாள் (1800)
சந்திரர்க்குஞ் சூரியர்க்குஞ் சமுதாடு[135] பாயக் கண்டேன்

இந்திரனார் கையிருக்கும் எழுத்தாணி முறியக்கண்டேன்
வடக்குக்கோட்டை வாசல்வழி வந்தாளே பெண்ணொருத்தி
ஒருவன்பழிக் கொன்பது பழிவாங்க வேணுமென்று
பாண்டியனை மார்பிளந்து பழிமாலை யிட்டேனென்றாள்
எட்டுப்பேர் பழிவாங்க ஏந்திழையாள் தேடக்கண்டேன்
நம்முடைய பாலகனுஞ் செத்தலவோ போகக்கண்டேன்
மன்னவரைத் தலையறுத்து மண்மேலே விழவும்கண்டேன்
மங்கிலிய மத்துவிழ[136] மன்னவரே கண்டேனென்றாள்
தென்மதுரைக் கோட்டையெல்லாந் தீயா யெரியக்கண்டேன்
வடமதுரைக் கோட்டையெல்லாம் வனமாகப் போகக்கண்டேன்
கனவுகண்டு சொன்னதெல்லாம் பாண்டியர்க்கே சொல்லுமென்ன
மனையாட்டி சொல்கேட்டு மழுவரசன் ஓடிவந்தான்

## வன்னித்தட்டான் மழுவரசன்மீது பழிபோடுதல்

பாண்டியனார் சபையிருக்கப் பக்கம்வந்தே தெண்டனிட்டான்
மனையாட்டி கண்டகனா மழுவரசன் சொல்லலுற்றான்
பாரச் சபையிருந்தே பார்த்திருந்த பாண்டியனும்
அஞ்சலஞ்ச லாளோடி யழைக்கச்சொன்னான் பாண்டியனும்
அதிகார ரோடவிட்டே அழைத்துவந்தான் வன்னித்தட்டான்
வலமாக நின்றதட்டான்-சுத்தி-யிடமாக வந்தல்லவோ
கும்பிட்டான் வன்னித்தட்டான் கொடும்பாவிப் பாண்டியனும்
வன்னித்தட்டான் முகம்பாத்தே வார்த்தைசொன்னான் பாண்டியனும்
பத்தினி கண்டகனா பாண்டியனுஞ் சொல்லலுற்றான்
கேட்டுநின்ற வன்னித்தட்டான் கேடுகெட்ட-பாண்டியனே கேளுமென்றான்

புத்திகெட்ட பாண்டியனேநீங்கள்-புவி யாளப்
போறயளோ
மதிகெட்ட பாண்டியனே-நீங்கள்-மதுரையாளப்
போறயளோ (1825)
அல்லக்காண் பாண்டியனே-நானொரு-உண்மைசொல்லக்
கேளீரோ
கள்ளனுந் தலையாரியுங் கைகலந்தே போனார்கள்
மந்திரத்தை விட்டுத்தாரேன் மழுவரசா
யென்றுசொன்னான்
தந்திரத்தை விட்டுத்தாரேன் தலையாரி
யென்றுசொன்னான்
பச்சிலை மருந்தையெல்லாம் படித்தல்லவோ
தாரேனென்றான் (1830)
மலையிலுள்ள பச்சிலையள் மழுவரசா தாரேனென்றான்
கைக்கூலி வாங்கியல்லோ கள்ளனைத்தான் விட்டுவிட
விட்டுவிடத் தானினைந்தான் வீரமுள்ள மழுவரசன்
இன்னஞ்செய்தி சொல்லுகுறேன் இனிக்கேளும்
பாண்டியனே
வணிகேசன் கோவலனை மழுவரசா வெட்டிவிடும் (1835)
அல்லவென்றா லுன்தலையை யறுத்துவிட்டே
னென்றுசொல்ல
பாண்டியனார் சொல்கேட்டான் பதறிவந்தான் மழுவரசன்

## மழுவரசன் மனையாட்டியிடம் மழுப்பெறுதல்

மனைதனிலே வந்தல்லவோ மனையாட்டி
தனையழைத்தான்
அல்லவடி பெண்ணரசே-நான்-சொல்லவோ நீகேளாய்
பாண்டியர்க்கே அறிக்கையிட்டேன் பத்தினியே
சொன்னதெல்லாம் (1840)
மாபாவிப் பாண்டியனும் வன்னித்தட்டான்
சொல்கேட்டான்
வணிகேசன் கோவலனை மழுவரசா வெட்டிவிடு
அல்லவென்றா லுன்தலையை யறுப்பேனென்றான்
பாண்டியனும்
அரசழிவான் பாண்டியனு மறுத்துவைப்பா னென்தலையை
மனையாட்டி மழுவெடுத்தாவென்று மழுவரசன்
சொல்லலுத்தான் (1845)

அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டாள் பெண்ணாரும்
அல்லக்காண் மன்னவரே-உன்தலையை-யறுத்தேதான் போட்டாலும்
கொல்லவேண்டாம் மழுவரசா கோவலனைக் கொல்லவேண்டாம்
குருவிரெத்தம் மழுவிலிட்டுக் கொண்டுவந்தே மன்னவரே
மாபாவிப் பாண்டியர்க்கே மழுவரசா காட்டுமென்றாள்

நல்லதென்றான் மழுவரசன் நயஞ்சொன்னான் பெண்ணார்க்கே
நேரமோ மிகவாச்சே நெடுநேர மாச்சிதிப்போ
மனையாட்டி மழுவெடுத்தா வென்றுகேட்டான் மழுவரசன்
குதித்து விழுகுதய்யோ கொப்பிலிங்கி பாரமழு
ஒருச்சா ணுசரமல்லோ ஊணுதய்யோ பாரமழு

பூமியிலே பாயுதய்யோ பேறுபெற்ற பாரமழு
மழுவுக்கே பூசையிட்டாள் மங்கைநல்லாள் பெண்ணாரும்
கையிலே மழுவெடுத்தாள் கணவனார் முன்னேவந்தாள்
மன்னவரே கேளுமிப்போ வணிகேசன் கோவலனை
கொல்லவில்லை யென்றுசொல்லிக் கூறுமிப்போ சொன்னபடி

அழகான சொக்கருமே லாணையிட்டுக் கூறுமென்ன
மனையாட்டி கேட்கையிலே மழுவரசன் சொல்லலுற்றான்
அழகான சொக்கருமே லாணையிட்டே தான்கொடுத்தான்
வாழ்த்தியே மழுவாங்கி வாரானே மழுவரசன்
மனையைவிட்டே வெளியானான் மழுவரசன் தலையாரி

தெக்குக்கோட்டை வாசல்வழி செட்டிமகன் முன்னேவந்தான்

## தப்பிச் செல்லக் கூறுதலும் கோவலன் மறுப்பும்

கள்ளனைத்தான் மழுவரசன் கையிலே பிடிக்கலுற்றான்
காவல்காரர் பன்னீராயிரம்பேர் கனமதுரை போகச்சொன்னான்
சிக்கந்தர் மலைபார்த்தே தெக்குக்கோட்டை வழிநடந்தான்
காடோ செடிகடந்தான் கடியவனந் தான்கடந்தான்

வழிதனிலே மழுவரசன் வணிகேசன் முகம்பார்த்தான்
வாடாது வாடியல்லோ வர்ணமுகம் வேறானான்
கட்டுப்பட்ட வணிகேசன் கண்ணீரோ சோரவிட்டான்
உள்ள முருகியல்லோ உருகிவிட்டான் கோவலவன்
காட்டுவழி போகையிலே கட்டவிழ்த்தான் மழுவரசன்

காட்டுவழி போய்விடுநீ கள்ளனடா வணிகேசன்
என்றுசொன்னான் தலையாரி யினியதொரு கோவலனை
கட்டும்பட்டே னடியும்பட்டேன் கள்ளனென்றே பேரும்பட்டேன்
செட்டிமக்கள் கண்டாலே திருடனென்றே நகைப்பார்கள்
விட்டுவிட நினையாதே வீரமுள்ள தலையாரி
என்றுசொல்லித் தானழுதான் ஏந்திழையான் கோவலவன்

## கோவலன் வருத்தமும் கொண்ட தாகமும்

சிக்கந்தர்மலைக் காட்டூடே செட்டிமகன் தான்பார்த்தான்
நாலுதிக்கும் வன்னிமரம் நடுவேநிற்கும் வேங்கைமரம்
வேங்கைமரத் தடிதனிலே வீத்திருந்தான் கோவலவன்
வெட்டுக் களமிதுவாம் விறல்வணிகா வென்றுசொன்னான்

தலையாரி சொல்லயிலே தான்பதறிக் கோவலவன்
எண்சா ணுடம்பல்லவோ யிரலுமோ பதறுதய்யோ
உள்ளமோ உருகுதய்யோ உருகிவிட்டான் வணிகேசன
தண்ணிநல்ல தாகமல்லோ தாகமோ மிகவாச்சே
பசியோ பொறுக்குதில்லை பாக்கியவான் தலையாரி

என்றுசொல்லித் தானழுதான் ஏந்திழையான் கோவலவன்
வணிகேசன் முகம்பாத்தே வார்த்தைசொன்னான் தலையாரி
அல்லக்காண் கோவலவா-நானொரு-உண்மைசொல்லக் கேளாயோ
தண்ணிநல்ல கரையருகே தான்போடா கோவலவா
தாகவிடாய் பசிதீர்த்தே தான்வாடா யிப்போது
என்றுசொன்னான் மழுவரசன் இன்பமுடன் கோவலனும்
சீக்கிரமாய் வாரேனென்றே திரும்பிவிட்டான் செட்டிமகன்
காடெல்லாந் தான்திரிந்தான்-ஒருகை-தண்ணீர் கிடையாமல்

வடக்கே முகம்பாத்தான்-மதிரைச்-சொக்கருட மதில்பாத்தான்
பசிபொறுக்கக் கூடுதில்லை பழிக்கஞ்சிச் சொக்கரேதான்

தண்ணிநல்ல தாகமல்லோ தளர்ச்சையுமே[137] மிகவாச்சே
நம்பிவந்தேன் சொக்கரேநான் நடுக்காட்டில் தள்ளிவிட்டாய்
கும்பி கொதிக்குதென்றே கோவலவன் தானழுதான்
பரமசிவச் சொக்கருமேல் பழிபோட்டே னென்றழுதான்
என்றுசொல்லித் தானழுதான் ஏந்திழையாள் கோவலவன்

அழுதகண்ணீ ராறோடே அழுதங்கே வழிநடந்தான்

## கோவலன் தாகத்தை மீனாட்சி தீர்த்து வைத்தல்

ஞானக்கண் கொண்டல்லவோ நல்லசொக்கர் தான்பார்த்தார்
வயறுபசி யாத்தாமல்-வணிகேசன்-வாரானிவ் வழியாக
பழிபோட்டான் கோவலவன் பத்தினியுடன் மீனாட்சி
பசிபார்த்தே வாடியென்றார் பரமசிவச் சொக்கருமே
சொக்கருமே சொல்லயிலே சோலக்கிளியாள்[138] மீனாட்சி

அழகான மீனாட்சி யனுப்பியல்லோ வெளியானாள்
கோவில்விட்டே வெளியானாள் கோவலவன் பசிதீர்க்க
கோவில்விட்டே கடந்தாளே-வடக்குக்-கோட்டைவாசல் வெளியானாள்
வடக்குக்கோட்டை வாசல்விட்டே வைகையிலே தானும்வந்தாள்
ஆத்தங்கரை வைகைநதி அணைக்கரைமேல் வந்துநின்றாள்

தெக்கே முகம்பார்த்தாள் சிக்கந்தர் மலைபாத்தாள்
வணிகேசன் வாரவழி மலங்காட்டு வழிபாத்தாள்
பசிதாக மாகியல்லோ பத்தினியான் கோவலவன்
அழுதகண்ணீ ராறோடே அழுதசத்தந் தான்கேட்டாள்
எண்ணமிட்டாள் சிந்தையிலே யீசொரியாள் மீனாட்சி

கெங்கைநதி ஆறாக ஆக்கிவிட்டாள் பெருவிரலை
தெக்குக்கோட்டை வாசல்வழி திரும்புதய்யோ வைகைநதி
வைகைநதி பெருகியல்லோ-தெக்கு-வாசல்வழி வருகுதய்யோ
அலைமே லலைமோதி யலறுதய்யோ நதிதனிலே
வாளைமீன் துள்ளிவிழ மண்முதலை கொக்கரிக்க
கிறிவிட்டாள் மீனாட்சி கிக்கிந்தா நதியாச்சே
கிக்கிந்தா நதிதனிலே கிட்டியங்கே தானஞ்செய்தார்
பாவமெல்லாந் தான்துலையும் பாக்கியத்தைத் தான்பெறுவார்
புண்ணிய தீர்த்தமென்றே புராணமதில் சொல்லிவர
என்றுசொல்லிச் சாபமிட்டாள் ஈசொரியாள் மீனாட்சி

வைகை நதியைவிட்டு வடக்குவாசல் வழிவந்தாள்
கோவலவன் பசிதீர்த்தே கோவில்வந்தாள் மீனாட்சி
வழிநடந்தேன் கோவலவன் யந்தேநதி யாத்தேதான்
போகையிலே நதிகாணேன்-சொக்கர்-புண்ணியத்தால் கண்டேனென்றான்
தண்ணீரில் போய்முழுகித் தானம்பண்ணிப் பூசைசெய்து

தகையோ[139] பசிதீர்ந்தான் தனித்தங்கே கோவலவன்
எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணிவிட்டான் கோவலவன்
பசிதாகந் தீர்த்தாயே பரமசிவச் சொக்கரென்றான்
தெண்டனிட்டே யடிபணிந்தே சிக்கிந்தர் மலைபாத்தே
வாரானே வழிநடந்தே வணிகேசன் கோவலவன்
காடோ செடிகடந்தான் கடுகிவழி தானடந்தான்
சில்லென்று பூத்ததொரு செடியோ வனங்கடந்தான்
சிக்கிந்தர் மலைங்காட்டில்-தெற்கே-கொக்கிருந்தான் பாளையமாம்
நாலுதிக்கும் வன்னிமரம் நடுவேநிற்கும் வேங்கைமரம்
வேங்கைமரப் பொட்டலிலே வீத்திருந்தான் கோவலவன்

## வெட்டிக் கொல்லல் குறித்துக் கோவலன் - மழுவரசன் வாக்குவாதம்

பாத்தானே மழுவரசன் பத்தினியான் கோவலனை

போய்ப்பிழைப்பா யென்றிருந்தேன் பின்னும்வந்தாய் வணிகேசா
அல்லவடா வணிகேசா சொல்லவும் நீகேளாய்
கொல்லவில்லை யுன்னையிப்போ குருவிரெத்தம் பாண்டியர்க்கே
நல்லதொரு பாண்டியர்க்கே நானுமல்லோ காட்டிடுவேன்
என்றுசொன்னான் மழுவரசன் இன்பமுடன் கோவலர்க்கே
வணிகேசன் சொல்லுகுறேன் மழுவரசா கேளுமென்றான்
கோவலனை வெட்டச்சொன்னான் கொடும்பாவிப் பாண்டியனும்
வெட்டவல்லோ விடைவாங்கி வேங்கைமரக் காட்டில்வந்தாய்
வெட்டுங் களத்தில்வந்தேன் வெட்டிவிடு மழுவரசா
என்றுசொன்னான் கோவலவன் இனிக்கேட்டான் தலையாரி
வணிகேசன் முகம்பார்த்தே வார்த்தைசொன்னான் மழுவரசன்
அல்லவடா வணிகேசா-உன்னைக்-கொல்லமனம் கூடுதில்லை
மழுவெடுக்கக் கூடுதில்லை வணிகேசா கோவலவா
கையோ எழும்புதில்லை கட்டழகா வணிகேசா
மதிமயங்கி யுள்ளுடைந்து மழுவரசன் சொல்லலுற்றான்
மழுவரசன் சொல்லயிலே-இந்த-வணிகேசன் கோவலவன்
அண்ணேயண்ணே மழுவரசா-நான்-உண்மைசொல்லக் கேளாயோ
மனந்துணிந்து மழுவரசா மலைங்காட்டில் தானும்வந்தாய்
விட்டுவிட நினையாதே வெட்டிவிடு மழுவரசா
விட்டுவிட்டா யாமாகில்-உங்கள்-வேந்தனுக்கு மாகாது
பாண்டியர்க்கு மாகாது பாவியென்னை வெட்டிவிடு
கோவலனைக் கொல்லாவிட்டால்-உங்கள்-கோத்திரத்துக் காகாது
வணிகனைத்தான் வெட்டிவிட்டால் வாழ்ந்திருப்பாய் மழுவரசா
என்றுசொன்னான் கோவலவன் இதுகேட்டான் தலையாரி
அல்லவடா வணிகேசா-நான்-உண்மைசொல்லக் கேளீரோ

மழுவெடுத்தே வாரபோது மனையாட்டிப் பெண்ணாரும்
வணிகேசனைத்தான் வெட்டவேண்டாம் மழுவரசா
கேளுமென்றாள்
ஆணைவிட்டே தாருமென்றாள் அழகான பெண்ணாரும்
சொக்கருமே லாணையிட்டே சொல்லிவந்தேன் கோவலவா
**(1975)**

சத்திய தோசமல்லோ தான்வருமே யெந்தனக்கு
என்றுசொன்னான் மழுவரசன் இதுகேட்டான் கோவலவன்
வணிகேசன் சொல்லுகுறேன் மழுவரசா கேளுமிப்போ
பாண்டியனும் வெட்டச்சொன்னான் பாவ மவந்தனக்கு
நேரமோ ஆகுதிங்கே நெடுநேர மாகுதிப்போ **(1980)**

மழுவரசா வெட்டிவிடு மாபாவந் தீந்திருப்பாய்
என்றுசொல்லித் தானிருந்தான் ஏந்திழையான் கோவலவன்
வடக்கே முகம்பார்த்தான் வணிகேசன் கோவலவன்
வேங்கைமரப் பொட்டலிலே வீத்திருந்தான் வணிகேசன்
சொக்கரே மீனாட்சியென்றே சொல்லியல்லோ
தானிருந்தான் **(1985)**

இருபிளவாய் மழுவரசா யென்னையுந்தான்
வெட்டுமென்றான்
பாத்தானே மழுவரசன் பத்தினியான் கோவலனை
தேறுதில்லை யென்மனது செட்டிமன்னா வணிகேசா
வாலைப் பிராயமடா[140] வடிவழகா கோவலவா
மழுவெடுக்கக் கூடலையே வணிகேசா உன்மேலே **(1990)**

என்னசெய்வேன் மீனாட்சி யென்றழுதான் தலையாரி
அழுதகண்ணீ ராறோடே அழுதுவிட்டான் தலையாரி
என்றுசொல்ல மழுவரச னிதுகேட்டான் கோவலவன்
மழுவெடுத்தேதான் தலையாரிநீ வன்குலையள்
செய்யலையோ
கள்ளனைத்தான் கொண்டுவந்து-இந்தக்-காடுதனில்
வெட்டலையோ **(1995)**

புத்திகெட்ட மழுவரசா-உன்னை-விட்டுவிடப் போறதில்லை
வெட்டிவிடு மனந்துணிந்து வீரமுள்ள மழுவரசா
என்றுசொன்னான் கோவலவன் இனிக்கேட்டான்
மழுவரசன்

## மழுவரசன் கோவலனை வெட்டுதல்

வடக்கே முகம்பார்த்தான் மழுவரசன் தலையாரி

மதுரைச்சொக்கர் திசைபார்த்தே வார்த்தைசொன்னான்
மழுவரசன்
சொக்கரென்மேல் குத்தமில்லை சொல்லலுத்தேன்
புத்திமதி
வடமதுரை மீனாட்சி-யிந்த-வணிகனுக்கே சொல்லலுத்தேன்
என்பேரில் குத்தமில்லை ஈசுரரே சொக்கரேதான்
பழியள்வந்து நேராமல் பாத்திரெடி மீனாட்சி
தோசம்வந்தே நேராமல் சொக்கரென்னைக்
காருமென்றான்[141]
என்றுசொல்லித் தெண்டனிட்டான் இன்பமுடன் தலையாரி
மனந்துணிந்தே மழுவரசன் வணிகேசன் முகம்பார்த்தான்
வடக்கே முகமாக வணிகேசன் தானிருக்க
கொண்டை யவிழ்த்தலவோ கூந்த லொதிக்கிவிட்டான்
உச்சி வகுந்தல்லவோ ஒதிக்கிவிட்டான் கூந்தலைத்தான்
கண்ணுந் தெரியாமல் கட்டிவிட்டான் பட்டாலே
காலபூசை செய்தலவோ கையெடுத்தான் பாரமழு
வலஞ்சுத்திக் கயறாடி மழுவைச்சுத்தி முன்னேவைத்தான்
தெற்கே முகம்பார்த்தான்-நாலு-திசையுமோ கட்டலுற்றான்
வெட்டினான் கோவலனை வீரமுள்ள மழுவாலே
இருபிளவாய்த் தான்விழுந்தான் ஏந்திழையான்
கோவலவன்
துடித்து விழுகுதய்யோ சோரை[142] ரத்தம் பாயுதய்யோ
குதிக்குதய்யோ ரெத்தமல்லோ கோவலவன் றன்கழுத்தில்
மழுவில்ரெத்தங் கொண்டல்லவோ வாரானே தலையாரி
வெகுமதியள் வாங்கியல்லோ மழுவரசன்
மனையில்வந்தான்

## கோவலன் இறப்பை நகரில் அறிவித்தல்

அஞ்சலஞ்ச லென்றோடி யழையுமென்றான் பாண்டியனும்
அறிகார ரோடவிட்டே அழைத்துவந்தார் தட்டானை
கொடும்பாவி வன்னித்தட்டான் கும்பிட்டான்
பாண்டியனை
வன்னித்தட்டான் முகம்பார்த்தே வார்த்தைசொன்னான்
பாண்டியனும்
கோவலனை வெட்டியல்லோ கொண்டுவந்தான்
மழுவில்ரெத்தம்

மழுவரசன் காட்டலுற்றான் வன்னித்தட்டா னிப்போது
என்றுசொன்னான் பாண்டியனு மின்பமுடன் தட்டானை
அல்லக்காண் பாண்டியனே-நானொரு-உண்மை
சொல்லக்கேளீரோ
கோவலவன் செத்தானென்றே கூட்டமிட்டே பேசாமல்
வெட்டுப்பட்டான் செட்டியென்றே-மதுரை-வீதியிலே
பேசாமல் (2030)
தமுக்கடிக்கச் சொல்லுமிப்போ தென்மதுரை வீதியெல்லாம்
என்றுசொன்னான் வன்னித்தட்டான் இன்பமுடன்
பாண்டியனும்
தமுக்கடிக்க விடைகொடுத்தான் தானடித்தான்
மதுரையெல்லாம்
வாரவிதி தெரியாமல் வடமதுரை யரசாண்டு
சந்தோச மாயிருந்தான் வன்னித்தட்டானும் பாண்டியனும்
(2035)

## கன்னகை கனவுநிலை உரைத்தல்

நாட்டிலேயும் நல்லநாடு நாவலர்கள் வளரும்நாடு
பாண்டியரு மரசாளும் பரமசொக்கர் வளநாட்டில்
மீனாட்சி வீத்திருக்கும் வீரமுள்ள மதுரையிலே
வைகையாற்றங் கரையோரம் வண்டியூர்ப் பட்டணமாம்
வண்டியூருப் பட்டணத்தே ஆயருட வீதியிலே (2040)
ஆச்சியம்மை மனைதனிலே யடைக்கலமாய்த் தானிருந்த
கன்னகையாள் (கனவு) கண்ட செய்தியெல்லாஞ்
சொல்லலுற்றாள்
சொல்லலுற்றாள் கன்னகையுஞ் சோதிகிளி வாய்திறந்தே
அல்லவடி யாச்சியம்மா-நான்-சொல்லுகிறேன்
கேளுமென்றாள்
ஆச்சியம்மை மாமியத்தே யத்தரிசி வேளையிலே[143] (2045)
படுத்திருக்கும் வேளையிலே பத்தினியே கனவுகண்டேன்
முத்தத்தே[144] நிற்குமந்த முருங்கைமரம் சாயக்கண்டேன்
வாசலிலே நிற்குமந்த வன்னிமரம் சாயக்கண்டேன்
ஏரிக் கரையரச்சு[145] யிடிந்து விழவுங்கண்டேன்
பொல்லாத கனவுகண்டேன்-இந்தப்-பூமியிலே கேட்டறியேன்
(2050)
திருக்கழுத்து மங்கிலியம்-மாமியத்தே-தெறித்து
விழவுங்கண்டேன்

உன்கழுத்து மங்கிலிய முருகிவிழக் கண்டேன்நான்
என்கணவன் கோவலர்க்கே யென்னவந்து
நேர்ந்துதென்றாள்
மன்னவர்க்கு மெந்தனக்கும் மங்கிலியம் பூட்டையிலே
மன்னவர்க்கே திங்குவந்தால்-இந்த-மல்லிகைப்பூ
வாடுமென்றார்

வாழ்த்தியே கைக்கொடுத்தார் மல்லிகைப்பூ வேதியரும்
மங்கிலியச் செப்பில்வைத்தேன் மல்லிகை பூசைசெய்தேன்
வாடாத மல்லிகைப்பூ வாடுதெடி யாச்சியம்மா
என்றுமே தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையும்
என்தாயே மாமியத்தே யென்னசெய்வே னென்றழுதாள்

அழுதகண்ணீ ராறோடே அழுதுவிட்டாள் கன்னகையும்

## ஆச்சியம்மை நடந்ததை அறிந்துவருதல்

ஒன்கணவன் கோவலர்க்கு ஒருநாளும் தினமில்லை
கனவுகண்ட திரவியந்தான் கைவருமோ கன்னகையே
போய்ப்பார்த்து வாரேனிப்போ-நான்-பொன்னான
மதுரையிலே
கண்ணீர் துடைத்தலவோ கன்னகைக்கே புத்திசொன்னாள்

புத்திசொல்லிக் கன்னகைக்கே புறப்பட்டா ளாச்சியம்மை
முந்தாணி சுத்திவைத்தே மோர்ப்பானை
தலையில்வைத்தாள்
வாராளே யாச்சியம்மை-மதுரை-வைகையிலே தானும்
வந்தாள்
ஆச்சியம்மை மோர்ப்பானை யலையாமல் நீர்வார்த்தாள்
வாராளே மோருகொண்டே மதுரைக்கே யாச்சியம்மை

வடக்குக்கோட்டை வாசல்விட்டே மாசித்தெரு வீதிவந்தாள்
ஆச்சியம்மை மோருவிலை யங்குநின்றே கூறலுற்றாள்
மாசித்தெருப் பெண்களெல்லாம் மோருவிலை கேட்கலுற்றார்
உழக்குநெல்லுக்கு ரண்டுழக்கு ஊத்திவாரேன்
வீதியெல்லாம்
என்றுசொன்னா ளாச்சியம்மை யிதுகேட்டே
பெண்களெல்லாம்

சொல்லுவார் பெண்களெல்லாஞ் சோதிகிளி வாய்திறந்தே
அல்லவடி யாச்சியம்மே-மதுரையி-லதிரவிலை கூறாதே
ஆணழகன் பட்டசெய்தி யறிந்திலையோ ஆச்சியம்மா
என்றுசொன்னார் பெண்ணாரு மிதுகேட்டா ளாச்சியம்மை
ஆணழகன் பட்டசெய்தி யாச்சியம்மை கேட்கலுற்றாள்
அரைப்பானை மோரையெல்லா மவளுக்கே வார்த்துவிட்டாள்
சொல்லலுற்றாள் பெண்ணாரும் சோதிகிளி வாய்தெறந்தே
அல்லவடி யாச்சியம்மா-நானு-முண்மைசொல்லக் கேளாயோ
ஆளி லழகனல்லோ ஆணழகன கோவலவன்
கால்சிலம்பு கொண்டுவந்தான் கள்ளனென்றே பாண்டியனும்
வெட்டச்சொன்னான் பாண்டியனும் வீரமுள்ள மழுவாலே
என்றுசொன்னாள் பெண்ணாரு மிதுகேட்டா ளாச்சியம்மை
அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டா ளாச்சியம்மை
அவடம்விட்டே[146] வெளியானா ளாச்சியம்மை யிடச்சியுந்தான்
காளையேறுஞ் சொக்கருட கடைத்தெரு வீதிவந்தாள்
மாடுமேய்க்குந் தம்பியர்கள் வந்தங்கே சொன்னார்கள்
சிக்கந்த மலைக்காட்டில் கொக்கிருந்தான் பாளையமாம்
வேங்கைமரப் பொட்டலிலே வெட்டிவிட்டான் கோவலனை
மாடுகொண்டே போய்ப்பார்த்தோம் வணிகேசன் பட்டகளம்
என்றுசொன்னான் மாட்டுக்காரன் இடச்சியுமோ கேட்டுநின்றாள்
பக்கத்தே மோர்ப்பானை பதறியங்கே போட்டுடைத்தாள்
அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டா ளிடைச்சியம்மை
அழுவானேன் இடைச்சியென்றே ஆணழகன் கேட்கையிலே
ஆதியிலே தாய்தகப்பன் வைத்திருந்த மோர்ப்பானை
சீதனமாய் வாங்கினேன்நான் தெருவீதியிலே போட்டுடைத்தேன்
மோருதான் போனாலும் மோருப்பானைக்கே யழுதுநின்றேன்
செட்டிகடை வீதிவிட்டே தெக்குக்கோட்டை மடத்தில்வந்தாள்

மடத்திலே போயிருந்தாள் மங்கைநல்லா ளிடைச்சியம்மை
கோவலனைத் தேடியல்லோ கொம்பனையாள் தானழுதாள்
அழுதசத்தங் கேட்டல்லவோ அறிகார ரோடிவந்தே
அழுதவகை கேட்கையிலே ஆச்சியம்மை சொல்லலுற்றாள்
அல்லக்காண் அறிகாரா-நான்-உண்மைசொல்லக் கேளுமென்றாள்
ஆளி லழகனடா அறிகாரா யென்மகன்தான்
வசூரி[147] தானுங்கொண்டு வாரிக் கொடுத்தமடம்
வன்குலையாய் மகனைஇந்த மடந்தனிலே வழுகிவிட்டேன்
மடம்பார்த்தே தானழுதேன் மதுரைநல்ல அறிகாரா
என்றுசொன்னா ளிடைச்சியம்மை யிதுகேட்டா னறிகாரன்
அழவேண்டா மிடைச்சியம்மை யறிகாரன் போகலுற்றார்
தெக்குக்கோட்டை வாசல்வந்தாள் சிக்கந்தர் மலை பார்த்தாள்
அதிரவழி தானடந்தாள் ஆச்சியம்மைப் பெண்ணாரும்
சிக்கந்தர் மலைக்காடு தேடியல்லோ தான்போனாள்
நாலுதிக்கும் வன்னிமரம் நடுவேநிற்கும் வேங்கைமரம்
வேங்கைமரப் பொட்டலிலே வீதிவந்தா ளாச்சியம்மை
வெட்டுக் களம்பார்த்தாள் விறல்வணிகன் முகம்பார்த்தாள்
கோவலவன் முகம்பார்த்தாள் கொம்பனையா ளாச்சியம்மை
அடித்து விழுந்தாளே ஆச்சியம்மைப் பெண்ணாரும்
அழுதகண்ணீ ராறோடே அழுதுவிட்டா ளாச்சியம்மை
அழுதகண்ணீ ராறோடே அவடம்விட்டே வெளியானாள்
அதிரவழி தானடந்தா ளாச்சியம்மை யந்நேரம்
மதுரைவழி தான்கடந்தே வண்டியூரில் தானும்வந்தாள்
ஆயருட வீதிவிட்டே யாச்சியம்மை மனையில்வந்தாள்

## கன்னகைக்கு அறிவித்தலும் கன்னகை கதறலும்

மனையாட்டி கன்னகையே வார்த்தைசொல்லக் கேளாயோ
மதுரையிலே போயலவோ விசாரித்தேன் கோவலனை

காலசிலம்பைப் பார்த்தலவோ கள்ளனென்றே பாண்டியனும்
சிக்கந்தான் மலங்காட்டில் செட்டியைத்தான் வெட்டச்சொன்னான்

பட்டகளம் பார்த்துவந்தேன் பத்தினியே கன்னகையே
என்றுசொல்லித் தானிருந்தே யிடைச்சியம்மை தானழுதாள்
ஆச்சியம்மை சொல்லயிலே அடித்தங்கே தான்விழுந்தாள்
முட்டி விழுந்தாளே முகத்தறைந்தாள் கன்னகையும்
பிச்செறிந்தாள் கூந்தலைத்தான் பேய்க்குவிருந் திடுவேனென்றாள்

மார்மேலே யப்பிக்கொண்டாள் வயத்தறைந்தாள் கன்னகையும்
நெஞ்சிலே தானடித்தாள் நிலத்திலே பிரண்டழுதாள்
எண்சா ணுடம்பலவோ யீரலுமோ பத்துதென்றாள்
என்றுசொல்லித் தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையும்
ஆச்சியம்மை மனைதனிலே யடைக்கலமாய் வைத்துப்போனீர்

என்கணவா கோவலவா-நா-னெங்கிருந்து காண்பேனென்றாள்
தலையை விரித்தாளே தானழுதாள் கன்னகையும்
அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டாள் கன்னகையும்
இருக்கமனங் கூடலையே யென்தாயே யாச்சியம்மை
ஆச்சியம்மை போறேனென்றே யழுதுவிட்டாள் கன்னகையும்

பட்டி தழைத்திடுநீ-ஆச்சியம்மா-பால்பானை பொங்கிடவே
பாலாறாய் நெய்யாறாத்தான் பாக்கியத்தை யுண்டாக்கி
கிளைகள் பழுத்திருங்கோ கிளைகளெல்லாம் வாழ்ந்திருங்கோ
என்றுசொல்லி வரங்கொடுத்தாள் இனிவாராள் கன்னகையும்
மனையைவிட்டே வெளியானாள் மங்கைநல்லாள் கன்னகையும்

ஆச்சியம்மை முகம்பாத்தே அழுதுவிட்டாள் கன்னகையும்
அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டா ளாச்சியம்மை
வாராளே கன்னகையாள் வண்டியூரு தான்கடந்தாள்
கல்லுங் கரடுமுள்ளும் கடியவனந் தான்கடந்தாள்
சில்லென்று பூத்ததொரு செடியோ வனங்கடந்தாள்

வாராளே கன்னகையாள் மதுரைநல்ல தேடியல்லோ
அழுதகண்ணீ ராறோட அழுதங்கே வழிநடந்தாள்
தலைமேலே கையைவைத்தே தானழுதாள் கன்னகையும்
வடக்குக்கோட்டை வாசல்வழி வைகையிலே தானும்வந்தாள்
தீர்த்தமாடி மாத்துடுத்திச் சிவபூசை செய்யலுற்றாள் (2160)

ஏங்கியே தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையும்
அழுதகண்ணீர் தான்துடைத்து ஆத்திவிட்டா ளாச்சியம்மை
என்தனக்கு மகளாக யிருமென்றா ளாச்சியம்மை
அல்லவடி கன்னகையே-எனக்குப்-பிள்ளையாகத் தானிரென்றாள்
இருப்பதில்லை யென்தாயே யென்றுசொன்னாள் கன்னகையும்-நான் (2165)

ஒத்தைநல்ல மரமானேன் ஒருமரத்தின் கொப்பானேன்
பட்டநல்ல மரமானே-னடியம்மா-பாழூர்ச் செக்கானேன்
பிஞ்சிலே மாலையிட்டேன்-ஒரு-மைந்தன்முளைக் கண்டனில்லை
அஞ்சாதே யென்புர்ரில்லை ஆருமில்லை வையகத்தே
எருதுகொண்டேன் கன்னகைநான் உழுதுகொண்டாள் மாதேவி (2170)

பசுக்கொண்டேன் கன்னகைநான் பால்குடித்தாள் மாதேவி
தோட்டம்போட்டேன் கன்னகைநான் பூமுடித்தாள் மாதேவி
போறேனடி யாச்சியம்மா-நான்-பூமிக் கிரையாக
ஆச்சியம்மை யென்தாயே அடைக்கலமாய் வைத்திருந்தாய்

## கெருடன் உண்மை உரைத்தல்

சிவனை நினைந்தாள் தெரிசித்தாள் கன்னகையாள் (2175)
சிவஞானங் கொண்டலவோ தேவகன்னி போலானாள்
வைகைநதி கடந்தேதான் வாராளே கன்னகையாள்
அழுதகண்ணீ ராறோட அழுதுகொண்டே தான்வாராள்
ஆறவிட்டாள் கண்ணீரால் மார்மேலே தான்வடிய
ஆத்தங்கரை வீதிவிட்டு அரசமரத் தடியில்வந்தாள் (2180)
கிஷ்டிண கெருடனுமே வந்தங்கே பாயுதய்யோ
செந்தலைக் கெருடனுமே சேந்தங்கே பாயுதய்யோ
செத்தபிள்ளை தேடியல்லோ சிறகுரண்டுந் தான்விரித்து

பத்தினியாள் முன்னேவந்தே பாயுதய்யோ கெருடனுமே
அழுதகண்ணீ ராறோட அலறுதய்யோ கெருடனுமே

பார்த்தாளே கெருடனைத்தான் பத்தினியாள் கன்னகைதான்
கேட்டாளே கன்னகைதான் கெருடனுமே சொல்லலுற்றார்
மதுரையிலே வன்னித்தட்டான் மனைதனிலே வாழ்ந்திருந்தேன்
மதலையைத்தான் கொன்றுவிட்டான் வன்னித்தட்டான் மகனாரும்
மதலைப்பழி வாங்கவல்லோ மனையிலே காத்திருந்தேன்

கொப்பிலிங்கி கால்சிலம்பைக் கொண்டுவந்தான் வன்னித்தட்டான்
விளக்கமிட் டல்லவோ வெயிலிலே காயவைத்தான்
நானெடுத்தேன் கால்சிலம்பை நாகமலைப் புத்தில்வைத்தேன்

நினைத்திடும் போதுவந்து நிசந்தாரேன் கால்சிலம்பை
பழிவாங்கித் தாடியம்மாவென்றே பறந்துதே கெருடனும்

## கன்னகை வருகையைப் பாப்பான் அறிவித்தல்

கெருடன்சொல்லைக் கேட்டாளே கிளிமொழியாள் கன்னகையும்
அரசடி மேட்டருகே யங்குநின்றே தானழுதாள்
என்கணவா கோவலவா யென்றழுதாள் கன்னகையும்
மதுரைநல்ல பாப்பானும் வைகையிலே தானஞ்செய்தான்
தானஞ்செய்தே வேதியனும் சந்திபண்ணி[148] நிற்கையிலே

கணவனென்றே கோவலனைக் கன்னகையாள் சொல்கேட்டான்
பாப்பானுங் கேட்டுநின்றான் பத்தினியாள் சொன்னதெல்லாம்
வைகைவிட்டே ஓடிவந்தான் மதுரைவந்தான் வேதியனும்
பாப்பானு மோடிவந்தான் பாண்டியனே கேளுமென்றான்

வைகைநதி அரசடியில் மங்கைநல்லாள் கன்னகையும் (2205)
என்கணவா கோவலவா யென்றழுதே வாராளே
ஓடிவந்தேன் முன்னாலே உண்மைசொன்னேன் பாண்டியனே
என்றுசொன்னான் பாப்பானும் இதுகேட்டான் பாண்டியனும்

## வன்னித்தட்டானின் வஞ்சகப் பேச்சு

வன்னித்தட்டான் முகம்பார்த்தே வார்த்தைசொன்னான் பாண்டியனும்
வணிகேசன் பெண்டாட்டி மங்கைநல்லாள் பெண்ணாரும் (2210)
வடக்குக்கோட்டை வாசல்வழி வாராளே பெண்ணாரும்
என்றுசொன்னான் பாண்டியனு மிதுகேட்டான் வன்னித்தட்டான்
வாரவிதி தெரியாமல் வன்னித்தட்டான் சொல்லலுற்றான்
அல்லக்காண் பாண்டியனே-நானொரு-உண்மைசொல்லக் கேளீரோ
மதிகெட்ட பாண்டியனே-நீங்கள்-மதுரையாளப் போறையளோ (2215)
புத்திகெட்ட பாண்டியனே-நீங்கள்-புவியாளப் போறையளோ
கோவலவன் பொண்டாட்டி வடக்குவாசலில் வந்தாலும்
வந்தவழி போகவல்லோ மதிகேளும் பாண்டியனே
நாலுகோட்டை வாசலையும் நன்றா யடையுமென்றான்
நாலுகோட்டை வாசலுக்கும் நாலாயிரங்கிங்கிலிவர்[149] காவலென்றான் (2220)
வணிகேசன் பொண்டாட்டி வந்துநிற்பாள் வாசலிலே
மங்கைநல்லாள் முகம்பார்த்தே வார்த்தைசொல்லக் கேளுமென்றான்
தாரமோ தங்கையோடி தனிமதுரைப் பாண்டியர்க்கே
தாரமென்று சொல்லிவிட்டால் தான்விடுவேன் வழியாக
என்றுசொல்லக் கேட்டலவோ யேந்திழையாள் பெண்ணாரும் (2225)
வந்தவழி போய்விடுவாள் வணிகேசன் பொண்டாட்டி
என்றுசொன்னான் வன்னித்தட்டான் இதுகேட்டான் பாண்டியனும்

வாச லடையுமென்றான் வடமதுரைப் பாண்டியனும்
வாசலுக்கு ஆயிரம்பேர் வைத்தானே கிங்கிலிவர்
வன்னித்தட்டான் சொல்படியே மந்திரிக்கே புத்திசொல்லி

நாலுகோட்டை வாசலுக்கும் நாலுமந்திரியைத் தானும்வைத்தான்
அனுப்பிவிட்டான் பாண்டியனும்-வாச-லருகில்வந்து மந்திரிமார்

## கன்னகையாள் சீற்றத்தால் கதவுடைந்து வீழல்

வைகைவிட்டு வாராளே வணிகேசன் பெண்டாட்டி
வடக்குக்கோட்டை வாசலிலே வந்துநின்றாள் கன்னகையாள்
அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டாள் பெண்ணாரும்

வாச லடைத்திருக்க மங்கைநல்லாள் தான்பாத்தாள்
தோசமல்லோ வாசலைத்தான் துறவுமென்றாள் கன்னகைதான்
புண்ணியந்தா னண்ணேயடா போகணுமே மதுரையிலே
தர்மமுண்டு யண்ணேயடா தலைவாசல் திறவுமென்றாள்
வாசல் துறக்காயோநான் மதுரைக்கே போகணுமே
என்றுசொல்லித் தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையும்
கோட்டைமதி லேறியங்கே கொத்தளத்தைப் பாப்பாரும்
கும்பகும்ப லாகவல்லோ கொம்பேறிப் பாப்பாரும்
கோவலவன் மனையாட்டியென்றே கூட்டியங்கே சொல்வாரும்
வாசலிலே கிங்கிலிவர் வந்தங்கே நிற்பாரும்

வாசலிலே வந்துநின்றே மந்திரியுஞ் சொல்லலுற்றான்
அல்லக்காண் பெண்ணாரே-நான்-சொல்லுகுறேன் மந்திரிதான்
தென்மதுரைப் பாண்டியர்க்கே-நீ-தாரமோ தங்கையோடி
தாரமென்றால் வழிவிடுவேன் தங்கையென்றால் போய்விடுநீ
என்றுசொன்னான் மந்திரியு மிதுகேட்டாள் கன்னகையும்

கட்டழகன் கோவலர்க்கே கன்னகைநான் தாரமடா
வணிகனுக்கே மனையாட்டிநான் மந்திரியே யிப்போது

பாண்டியர்க்கே தாரமென்றாய் பாவியடா மந்திரியே
ஆண்டிச்சொக்கர் மீனாச்சி யறிந்திருங்கோ
வென்றுசொன்னாள்
என்னசெய்வேன் மீனாட்சி யென்றழுதாள்
கன்னகையும்
ஆரை நினைத்தாளே அளவத்த சிந்தையிலே
சிவனை நினைத்தாளே சிந்தித்தாள் கன்னகையாள்
கன்னகையாள் தானினைந்தாள் காளியைப்போல்
கொக்கரித்தாள்
வாசல் கதவல்லோ மண்ணோடே சாஞ்சுதய்யோ
கதவிலே காலைவைத்தாள் கன்னகையாள்
கொக்கரித்தாள்
வாச லிடிந்துவிழ மாண்டார்கள் கிங்கிலிவர்
மந்திரியு மாண்டானே வடக்குக்கோட்டை வாசலிலே
அஞ்சலிலே[150] யாளோடி யறிக்கைவிட்டான் பாண்டியர்க்கே
பாண்டியனும் கேட்டலவோ பதறியங்கே தானிருந்தான்

## கன்னகையிடம் மதுரைமக்கள் சாட்சியம்கூறல்

வடக்குக்கோட்டை வாசல்விட்டே மாசித்தெரு வீதிவந்தாள்
தலையை விரித்தாளே தானழுதாள் கன்னகையாள்
மாசித்தெருப் பெண்களெல்லாம் வந்தங்கே கூட்டமிட்டார்
வணிகேசன் பெண்டாட்டி மங்கைநல்லா ளென்பாரும்
கோவலவன் மனையாட்டி கொம்பனையா ளென்பாரும்
கன்னகையாள் முகம்பார்த்தே கண்ணீர் சொரிவாரும்
தெருவிலே நில்லாதேயென் திண்ணையிலேவா
யென்பாரும்
வீதியிலே நில்லாதேயம்மா-யென்-வீட்டில்வா யென்பாரும்
வடிவழகி கன்னகைபோ-லிந்த-மதுரையிலே கண்டதில்லை
என்றுசொல்லித் தானழுதா ரேந்திழையார்
பெண்களெல்லாம்
சித்திரைச் சிலைவடிவே தேன்மொழியே கன்னகையே
சத்தியமாய்ச் சாக்கிவைத்தே[151] தான்போனான் கோவலனை

**சாக்கிசொன்னார் பெண்களெல்லாந் தான்கேட்டாள் கன்னகையும்**
**கால்சிலம்பு கொண்டுவந்தான் கள்ளனென்றே** கோவலவனை
வன்னித்தட்டான் கூட்டிவந்தே பாண்டியர்க்கே யறிக்கையிட்டான்
வெட்டச்சொன்னான் பாண்டியனும் விறல்வணிகன் கோவலனை
சிக்கந்தர் மலைக்காட்டில் செட்டியைத்தான் வெட்டிவிட்டான்
சத்தியமாய்க் கன்னகைக்கே சாட்சிசொன்னார் பெண்களெல்லாம்
கடையில்செட்டி மக்களெல்லாம் கன்னகைக்கே சொன்னார்கள்
சாச்சியுமோ[152] கேட்டல்லவோ தான்வாராள் கன்னகையாள்
பாக்கியமோ வுண்டாக்கிப் பத்தினியோ வாழ்ந்திருக்க

என்றுமே தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையாள்
கடைத்தெரு வீதிவிட்டே கட்டழகி தான்வாராள்

## சொக்கர் மீனாட்சியிடம் முறையிடல்

சொக்கருட வாசல்வந்தாள் சொல்லலுற்றாள் பெண்ணாரும்
மீனாட்சி சன்னதியில் முன்னேவந்தாள் கன்னகையும்
சொல்லலுற்றாள் கன்னகைதான் சொக்கரே கேளுமென்றாள்

மன்னவரை வெட்டிவிட்டான் மாபாவி மதுரையிலே
கோவலனை வெட்டிவிட்டான் கொடும்பாவிப் பாண்டியனும்
பாத்திருந்தீர் சொக்கரேநீர் பழிகாரி மீனாட்சி
அரசழிவான் பாண்டியனு மநியாயஞ் செய்தானே
அடியறுவான்[153] மதுரையிலே யிடிவிழாதோ யென்றழுதாள்

தெக்குக்கோட்டை வாசலிலே தீயிடியாய் விழுந்துதய்யோ
தீயா யெரித்திடுவேன் செட்டிநல்ல மகனாலே
என்றுசொல்லித் தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையும்
அக்கினியைத் தானினைத்தாள் அலறிவந்தா ளந்நேரம்

கத்திமுனை தனிலேயொரு காலைவைத்தாள் கன்னகையும்
பத்தினியாள் கன்னகையும் பார தவசானாள்
அக்கினித் தவசானா ளங்குநின்றாள் கன்னகையும்
தென்மதுரைக் கோட்டையெல்லாம் தீயா யெரிப்பேனென்றாள்
என்றுசொல்லிக் கன்னகையாள் ஏந்திழையாள் தவசானாள்
தீயா யெரியுதய்யோ சிவசொக்கர் மேனியெல்லாம்
அக்கினி பத்தியல்லோ அழகான சொக்கருமேலே
அட்செணமே[154] மீனாட்சி யருகுவந்தே சொல்லலுற்றார்
அல்லவடி மீனாட்சி சொல்லுகுறேன் கேளுமென்றார்
கோவலவன் மனையாட்டி கொம்பனையாள் பெண்ணொருத்தி
வணிகேசன் பெண்டாட்டி-நம்முடை-வாசலிலே வந்துநின்று
அக்கினித் தவசாக அருந்தவசு செய்யிறது
அக்கினி பத்துதடி அழகான மேனியெல்லாம்
என்றுசொல்லச் சொக்கருமே யிதுகேட்டாள் மீனாட்சி
கோவில்விட்டே வெளியானாள் கொம்பனையாள் மீனாட்சி
வாசல்விட்டே வெளியானாள் மாதவசு பார்க்கலுற்றாள்
கன்னகையாள் முகம்பார்த்தாள் கட்டழகி மீனாட்சி
தந்தையடி பெண்ணாரே தவசைவிட்டே யிறங்குமென்றாள்
என்றுசொன்னாள் மீனாட்சி யினிச்சொன்னாள் கன்னகையாள்
அல்லவடி மீனாட்சி அழகான கோவலனை
வணிகேசன் மன்னவனை மாபாவி வெட்டிவிட
பாத்திருந்தாய் கோவிலிலே-யடி-பழிகாரி மீனாட்சி
என்கழுத்து யிருந்தாப்போ லுன்கழுத்து மிராதோ
என்கணவன் மாண்டாப்போ லுன்கணவன் மாளாரோ
மன்னவனார் கணவனைத்தான் வரவழைநீ கோவலனை
அல்லவென்றால் மீனாட்சி யக்கினியா யெரிப்பேனென்றாள்
தீயா யெரிப்பேனென்றாள் தென்மதுரைக் கோட்டையெல்லாம்

என்றுசொன்னாள் கன்னகையாள் இனிச்சொன்னாள்
மீனாட்சி

## மீனாட்சி வரமருளுதல்

செத்தவன் பிழைப்பதுண்டோ தென்மதுரைப் பட்டணத்தே
ஆண்டிச்சொக்கர் புத்திசொன்னார் அழகான
கோவலர்க்கே
குறத்தியைப்போல் வெளியானேன் கோவலர்க்கே
புத்திசொன்னேன் (2330)

விதிப்படியே தானிறந்தான் வீரமுள்ள கன்னகையே
என்றுசொன்னாள் மீனாட்சி ஏந்திழையே கேளுமென்றாள்
அல்லவடி கன்னகையே அழகான கோவலனை
மூன்றேமுக்கால் நாழிகைக்கு முழுதுமே தானிருக்க
வரம்வாங்கி வாரேனென்றே வந்தாள் சொக்கரிடம் (2335)

வரம்கொடுத்தார் சொக்கருமே வாங்கிவந்தாள் மீனாட்சி
பொன்னூசி பொற்சரடு பொற்பிரம்பு கமண்டலநீர்
கன்னகையாள் கைக்கொடுத்தாள் கட்டழகி மீனாட்சி
சாபமிட்ட கன்னகையைத் தான்கேட்டாள் மீனாட்சி
சித்திரத்தேர் பத்தாமல் தியெரிப்பாய் சாபமிட்டு (2340)

என்றுசொல்லித் தான்கேட்டாள் இன்பமுடன் மீனாட்சி
சித்திரத்தேர் நீங்கவென்றாள் தேன்மொழியாள்
கன்னகையும்
கோவில் புகுந்தாளே கொம்பனையாள் மீனாட்சி

## கன்னகை படுகளம்கண்டு புலம்பல்

தவசுவிட்டு யிறங்கியல்லோ தான்வாராள் கன்னகையும்
வாராளே கன்னகையாள் மதுரைச்சொக்கர் வாசல்விட்டே
(2345)

பொன்னூசி பொற்சரடு[155] பொற்பிரம்பு கையெடுத்தாள்
கமண்டலத்து நீரெடுத்தாள் தான்வாராள் கன்னகையும்
தெக்குக்கோட்டை வாசல்வந்தாள் சிக்கெந்தர்
மலைபார்த்தாள்
மன்னவனைத் தேடியல்லோ வழிநடந்தாள் கன்னகையாள்
சில்லென்று பூத்ததொரு செடியோ வனங்கடந்தாள் (2350)

தலையை விரித்தழுதாள் தான்வாராள் கன்னகையாள்

மலங்காட்டு[156] வழியாக வாராளே யிப்போது
நாலுதிக்கும் வன்னிமரம் நடுவேநிற்கும் வேங்கைமரம்
வேங்கைமரப் பொட்டலிலே வீத்திருந்தாள் கன்னகையும்
வெட்டுப்பட்ட களந்தனிலே விறல்வணிகன் கோவலர்க்கே

கொக்கினங்கள் குடைபிடிக்கக் கூகையிருந் தோலமிட
கழுகினங்கள் வீசிவரக் காகமோ காத்திருக்க
நரியோரி காத்திருக்க நல்லதொரு கோவலர்க்கே
கன்னகையாள் தான்பாத்தாள் கணவனார் படுகளத்தை
வணிகேசன் பட்டகளம் மங்கைநல்லாள் தான்பாத்தாள்

அடித்து விழுந்தாளே ஆணழகன் மேலேயல்லோ
பிச்செறிந்தாள் கூந்தலைத்தான் புழுதியெல்லாந் தான்புரள
மார்மேலே யப்பிக்கொண்டாள் வயத்தறைந்தாள் கன்னகையும்
எண்சா ணுடம்பலவோ யீரலுமோ பத்துதென்றாள்
அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டாள் கன்னகையும்

என்கணவா கோவலவா எப்பம்வரக்[157] காண்பதென்றாள்
என்றுசொல்லித் தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையும்

## கன்னகை கோவலனை உயிர்ப்பித்தல்

இருபிளவாய்த் தான்கெடந்த எழுதுபுகழ் கோவலவன்
புழுதியெல்லாந் தான்துடைத்துப் பொத்திவிட்டாள் மன்னவனை
பொன்னூசி பொற்சரடு பூட்டிவிட்டாள் மேனியெல்லாம்

கமண்டலத்து நீரெடுத்துக் கணவனார் மேல்தெளித்தாள்
பொற்பிரம்பும் நெஞ்சில்வைத்தே வேங்கைமரம் போயமர்ந்தாள்
திடுக்கென் றெழுந்திருந்தான் செட்டிமகன் கோவலவன்
மாதேவியோ கன்னகையோ வந்ததென்றான் செட்டிமகன்
வேங்கைமரம் போயமர்ந்த கன்னகையும் வெளியானாள்

மன்னவனார் கோவலவன் வணிகேசன் முன்னேவந்தாள்
சீதேவி கன்னகையைச் செட்டியென்னை மாலையிட்டள்

மாதேவி யாசையின்ன மறக்கலையோ கோவலவா
என்றுசொல்லித் தானழுதே யினிச்சொன்னாள்
கன்னகையும்
பட்டதெல்லாம் வீணானேன் பாண்டியனார் மதுரையிலே
(2380)

கட்டழகா வணிகேசா கன்னகைநான் வேறானேன்
வெட்டுப்படப் பிரமனுந்தான் விதித்தெழுதி விட்டானோ
பிரமனுந்தான் சாகானோ பெண்டாட்டிதாலி அறாதோ[158]
என்றழுதாள் கன்னகையா ளினிச்சொன்னான் கோவலவன்

## கோவலன் நடந்தது உரைத்தல்

விதித்தவிதி தப்பாமல் வெட்டுப்பட்டேன் கன்னகையே
(2385)

வெட்டுப்பட்ட செட்டிமகன் வீதியிலே வாரதில்லை
கொறைப்பட்ட கோவலவன் கொம்பனையே
பிழைப்பதில்லை
கொடும்பாவி வன்னித்தட்டான் கூட்டிவந்தான்
கள்ளனென்றே
கால்சிலம்பை வாங்கலுற்றான் கனமதுரைப் பாண்டியனும்
சத்தியமோ பண்ணச்சொன்னான் தட்டானு மங்கிருந்தே
(2390)

பத்தினியே யுனைநினைந்தேன் பண்ணலுற்றேன்
சத்தியந்தான்
குசவேளான் குடங்கொடுத்தான் கொன்றடைத்தான்
பாம்புச்சித்தன்
கொல்லனுமோ மழுக்காச்சிக் கொல்லவைத்தான் கைகருக
வேங்கையல்லோ பிடித்துவந்து வேட்டைக்காரன்
விருதுபெற்றான்
மதயானை கொன்றிடவே ராவுத்தமார் விருதுபெற்றார்
(2395)

உன்னைநினைத்தே சத்தியத்தில் ஒன்றுமில்லை
மேனியெல்லாம்
மதுரைத்தட்டான் சொல்கேட்டான் பாண்டியனும்
வெட்டச்சொன்னான்
மழுவரசன் தலையாரியிந்த மலங்காட்டில்
வெட்டிவிட்டான்

நேரமோ ஆச்சுதய்யோ நெடுநேர மாகுதிங்கே
வேசைமகள் மாதேவிக்கே வெட்டுக்களஞ் சொல்லிவிடு
ஊசிநூ லுருகடியோ[159] உண்மைசொன்னேன் கன்னகையே
சேரனுமே சிவபதந்தான் செய்திசொன்னான் கோவலவன்
தங்கநிற மேனியுள்ளாள் சங்கையுடன் கன்னகையாள்
மங்கிலியங் கைக்கொடுத்தாள் வாங்கினான் கோவலவன்
ஆதிசிவன் பாத மடையுமென்றாள் கன்னகையும்
ஊசியிலே நூலையல்லோ உருகிவிட்டாள் கோவலர்க்கே

## மாதேவிக்குக் கன்னகை சுருட்டோலை அனுப்புதல்

ஓலை யெழுதிவிட்டாள் உள்ளோலை சீட்டடைத்தே
காகத்தின் முன்னேபோட்டாள் கன்னகையா ளந்நேரம்
சொக்கருமே லாணையிட்டே சுருட்டோலை முன்போட்டாள்
காகம் பறந்துதய்யோ கட்டழகி யோலைகொண்டு
திருக்கடையூர் மாதேவியைத் தேடியல்லோ மேடையிலே
ஓலையைப் போட்டலவோ-காகம்-உசக்கே பறந்திடவே

## மாதேவி படுகளம் காணல்

மாதேவி கையெடுத்தே வாசித்தாள் ஓலையுமே
அடித்து விழுந்தாளே ஆணழகன் மேடையிலே
அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டாள் மாதேவி
என்தாயே மாதாவே யினிருக்கக் கூடாதென்றாள்
இருக்கமனங் கூடுதில்லை யென்தாயே யென்றழுதாள்
தங்கநல்ல பணிகளெல்லாந்[160] தாய்கையிலே தான்கொடுத்தாள்
வெள்ளிநல்ல பணிகளெல்லாம் வெள்ளாட்டி[161] கைக்கொடுத்தாள்
மனையைவிட்டே வெளியானாள் மாதேவி யந்நேரம்
திருக்கடையூர்ப் பதிகடந்தாள் தென்மதுரை வழிநடந்தாள்
தென்மதுரை வீதிவந்தாள் சிக்கந்தர் மலைபார்த்தாள்
மலங்காட்டுப் பாதையல்லோ வழிநடந்தாள் மாதேவி
சில்லென்று பூத்ததொரு செடியோ வனங்கடந்தாள்

சிக்கந்தர் மலங்காடு தேடிவந்தாள் மாதேவி
நாலுதிக்கும் வன்னிமரம் நடுவேநிற்கும் வேங்கைமரம்
வேங்கைமரப் பொட்டலிலே வீத்திருந்தாள் மாதேவி
அழுதசத்தங் கேட்டல்லவோ அங்குவந்தா ளந்நேரம்
படுகளத்தைப் பார்த்தாளே பத்தினியா ளங்கிருக்க
கன்னகையா ளங்கிருக்கக் கண்டாளே மாதேவி
இருபிளவாய்த் தான்கிடக்கும் ஏந்திழையான் கோவலவன்

## மாதேவி புலம்பலும், செய்கையும்

அடித்து விழுந்தாளே யழகான மாதேவி
முட்டிநல்ல விழுந்தாளே முகத்தறைந்தாள் மாதேவி
பிச்செறிந்தாள்[162] கூந்தலைத்தான் புழுதியெல்லாந் தான்புரள
கூடநல்ல எரிவேனென்றாள் கோவலவா யென்றழுதாள்
வேசையல்லோ மன்னவரே வேறுமுகம் பார்த்தறியேன்
தாசியல்லோ மாதேவி தானறிவேன் மன்னவரை
என்றுசொல்லித் தானழுதாள் ஏந்திழையாள் மாதேவி

## கன்னகை-மாதேவி சண்டையும் சமாதானமும்

கன்னகையு மாதேவியுங் கலந்தங்கே பேசயிலே
மாதேவி மாலையிட்டாள் மாண்டானென்றாள் கன்னகையும்
உன்கால் சிலம்பாலே மாண்டானென்றாள் மாதேவி
இருபேரும் பேசியல்லோ யிருக்குமந்த வேளையிலே
மலங்காட்டி லேவாழும் மாமுனிவ னங்குவந்தான்
மாதேவி மாலையிட்டாள்-மணிச்சிலம்பு-வாங்கிவந்தான் வணிகேசன்
இருவராலே மாண்டான் இனியதொரு கோவலனும்
எடுத்தே யடக்குமென்று இருவருக்கும் புத்திசொல்லி
மலங்காடு தேடியல்லோ மாமுனிவன் போகலுற்றான்

## கோவலனுக்கு இறுதிச் சடங்கு செய்தல்

காட்டுநல்ல விறகையெல்லாங் கன்னகையாள் கொண்டுவந்தாள்
காட்டெரு முண்டமெல்லாம்[163] களமாகத் தான்குமித்தாள்
மலங்காட்டு விறகையெல்லாம் வாங்கிவந்தாள் மாதேவி

அல்லவடி கன்னகையே-நான்-உண்மைசொல்லக்
கேளாயோ
மன்னவனார் பழிக்காக-மதுரைப்-பாண்டியனைப்
பழிவாங்கு
கோவலவன் பழிக்காக-அந்தக்-கொடும்பாவியைப்
பழிவாங்கு
கூட யெரிவேனடி கொம்பனையாள் கன்னகையே
கோவலவர் கூடவல்லோ கொம்பனையே
யெரிவேனென்றாள்

மலைக்காட்டில் மாளவென்றே மாதேவி சொல்லலுற்றாள்
கன்னகையாள் கேட்டலவோ கண்ணீரோ சோரவிட்டாள்
கட்டைநல்ல விறகடுக்கிக் காட்டெருவோ மேல்பரப்பி
கணவனார் கோவலனைக் கட்டையின்மேல் தான்கிடத்தி
கொள்ளிவைத்தாள் சுத்திவந்தே குடமுடைத்தாள்
கன்னகையாள்

குப்பனுத்தி[164] பத்தியல்லோ கொழுந்துவிட் டெரியுதல்லோ
அக்கினி பத்தியல்லோ அனலா யெரியுதிப்போ

## மாதேவி உடன்கட்டை ஏறலும் கன்னகை அங்கங்கரைத்தலும்

பத்தினியா ளக்கினியில் பாய்ந்தாளே மாதேவி
கோவலனு மாதேவியும் கூடநல்ல எரிந்தாளே
அக்கினியே யாத்தியல்லோ அங்கமெல்லாந்[165] தான்கூட்டி

முந்திதனை விரித்தே சிந்தாமல் வாரியல்லோ
வாராளே கன்னகையாள் மலங்காட்டு வழியாக
மதுரைவழி யாகவந்தாள் வைகையிலே தானும்வந்தாள்
வாரிவந்த அங்கமெல்லாம் வைகையிலே தான்போட்டாள்
தானபானம் பண்ணியல்லோ சங்கையுடன் கன்னகையாள்

## கன்னகை பாண்டியனைப் பழிகேட்டல்

மஞ்சநல்ல பாவாடை மடித்துடுத்தா ளந்நேரம்
சிவனை நினைந்தாளே திருநீறணிந்தாள் தேகமெல்லாம்
கையிலே வேப்பங்குழை கக்கத்திலே தானிடிக்கி
வாராளே கன்னகையாள் மாசிதெரு வீதிவந்தாள்
தலையை விரித்தாளே தானழுதாள் கன்னகையும்

மாசித்தெருப் பெண்களெல்லாம் வந்தங்கே கூட்டமிட்டார்
மதிரைநல்ல அழிக்கவல்லோ வந்தாள்கா ணென்பாரும்
அழகான மதுரைக்கல்லோ அழிவுவந்து தென்பாரும்
என்றுசொல்லிப் பாண்டியனை யேசியங்கே நிற்பாரும்
வலசைப்[166] பொட்டி[167] யெடுத்தலவோ மதுரைவழி போவாரும்

உள்கோட்டை வாசல்வந்தாள் ஓடிவந்தாள் கன்னகையாள்
பக்கத்தே மந்திரிமார் பாண்டியனைச் சூழ்ந்திருக்க
சிங்காசனப் பாண்டியனும் தேவசபை போலிருக்க
பாத்தங்கே சொல்லலுற்றாள் பத்தினியாள் கன்னகையும்
செட்டிபழி வீண்போமோ வடமதுரைப் பாண்டியனே

வணிகன்பழி வீண்போமோ வடமதுரைப் பாண்டியனே
பழிகுடடா பாண்டியனே பத்தினியான் கோவலர்க்கே
களவாண்ட கள்ளனுக்கே-ஒரு-கால்விலங்கு பஞ்சமோடா
செட்டிமகன் களவாண்டால்-ஒரு-செவ்விலங்கு பஞ்சமோடா
கள்ளனென்றால் திரவியத்தைக் கட்டியல்லோ வைப்பேனடா

வன்குலையள் செய்தாயே மாபாவிப் பாண்டியனே
என்றுசொல்லித் தானழுதாள் ஏந்திழையாள் கன்னகையும்
அறிந்தானே பாண்டியனு மழைத்துவந்தான் வன்னித்தட்டானை
பழிகேட்கா ளென்றுசொல்லிப்[168] பாண்டியனுஞ் சொல்லலுற்றான்
வன்னித்தட்டான் சொல்லுகிறேன்-மதுரைப்-பாண்டியனே கேளுமென்றான்

சீமையிலும் பாதி திரவியமோ தாரேனென்றும்
ஆனை குதிரையெல்லா மநேகமாய்த் தாரேனென்றும்
என்றுசொல்லும் பாண்டியனே யென்றுரைத்தான் தட்டானும்
பாண்டியனும் சொல்லலுற்றான் பத்தினியாள் கன்னகைக்கே
கன்னகையாள் கேட்டலவோ கண்ணீரோ சோரவிட்டாள்

சீமைதந்தால் என்கணவன் சீமையாளவுந்தான் வருவானோ
திரவியமோ தந்தாலுஞ் செட்டிமகன் வருவானோ
ஆனைதந்தா லென்கணவன் ஆளயிங்கே வருவானோ

குதிரைதந்தா லென்கணவன் கோவலவன் வருவானோ
பழிவாங்கிப் போவேனடா பாண்டியனே யிப்போது
என்றுசொன்னாள் கன்னகையும் இனிச்சொன்னான் பாண்டியனும்
அல்லகாண் பெண்ணாரேநா னும்மைசொல்லக்[169] கேளாயோ
செத்தவன்தான் பிழைப்பதுண்டோ-அம்மா-திரும்பியிங்கே வருவதுண்டோ
மாண்டவன்தான் வருவதுண்டோ-அம்மா-மருதையிலே வருவதுண்டோ
ஆண்டிருநீ பூமியைத்தா னரசாளுங் கன்னகையே
என்றுசொன்னான் பாண்டியனும் இனிச்சொன்னாள் கன்னகையாள்
சீமையாண்டே யிருக்கணுமோ யிந்தத்தேசத்தார் தான்நகைக்க
பூமியிலே யிருக்கணுமோ புத்திகெட்ட பாண்டியனே
மதிகெட்ட பாண்டியனே வணிகேசன் பழிகுடென்றாள்
அரசழிவாய் பாண்டியனே அநியாயஞ் செய்தாயே
பழிவாங்கப் போறேனடா பாத்திருடா பாண்டியனே
என்றுசொன்னாள் கன்னகையா ளிதுகேட்டான் பாண்டியனும்
பாண்டியனும் தட்டானும் பத்தினியாள் முன்னேவந்து
கன்னகையே கேளுமென்றான் கனமதுரைப் பாண்டியனும்
கொப்புலிங்கி கால்சிலம்பைக் கொண்டுவந்தே தட்டானும்
விளக்கமிட்டே தட்டானும் வெயிலிலே காயவைத்தான்
கண்டிருந்து கொண்டுவந்த கள்ளனைத்தான் கன்னகையே
திருடிவந்த கள்ளனைத்தான் சிக்கிந்தர் மலைக்காட்டில்
வெட்டச்சொன்னேன் செட்டியைத்தான் வீரமுள்ள மழுவாலே
என்றுசொல்லப் பாண்டியனும் இதுகேட்டாள் கன்னகையாள்

வசனம்

களவாண்ட கால்சிலம்பைக் கன்னகையாள் கேட்டு வாங்கிப் பாண்டியனே பாத்துக்கோவென்று தன்காலில் கிடக்கிற சிலம்பைக் கழத்தி ரெண்டு சிலம்பையு மிணைப்பாகச் சொல்லச்

சொன்னாள். பாண்டியனும் ரெண்டு சிலம்பையும் பார்த்து ஒரு சுவடுதானென்று சொல்ல வன்னித்தட்டா னரண்மனைச் சிலம்பென்று சொல்ல அப்போது கன்னகையாள் கொப்புலிங்கி ஒத்தைக் கால்சிலம்பைக் கொண்டு வரச் சொல்லி, தன் சிலம்பும் ஒத்தைச் சிலம்புஞ் சரியில்லாமல் பாண்டியனும் பாத்து வன்னித்தட்டானைக் கோவிக்கிறபோது அவன் சொன்னது. அரமனைச் சிலம்பு போச்சுதென்று பொய் சொல்லவில்லையென்று மதிமயங்கி நின்றான். இது விசாரித் தாரில்லை பாண்டியன். கன்னகையாள் விசாரித்து கால்சிலம்பு வரவழைக்கிறேன் பாரென்று வன்னித்தட்டான் மகன் வன்னிமரத்திலே வாழுகிற கெருடன் குஞ்சியைக் கொன்று போட்ட படியினாலே அந்தப் பழிக்காக ஒத்தைச் சிலம்பைக் கெருடன் கொண்டுபோய் விட்டுது. அதற்கே என் கால்சிலம்பை என் கணவன் கொண்டு வந்தான். வன்னித்தட்டான் கள்ளனென்றே கூட்டிவர, நீ விசாரியாமல் வெட்டச் சொன்னாய். உன் சிலம்பை வருவிக்கிறேனென்று கன்னகையாள் கெருடனை நினைக்கிற போது கால்சிலம்பைக் கொண்டு வந்து போட்டுது. அதையெடுத்துப் பாண்டியன் முனனேபோட்டுப் பழிகேட்டாள் கன்னகையாள்.

## கன்னகைமிடம் பாண்டிமாதேவி மடிப்பிச்சை கேட்டல்

வேறு

**பழிகேக்காள் கன்னகையாள் பதறியல்லோ பாண்டியனும்**
**பத்தினியாள் கொப்புலிங்கி பக்கம்வந்தா னந்நேரம்**
**பத்தினியே கேட்டாயோ பாண்டியனுஞ் சொல்லுகிறேன்**
**உத்தமியாள் பெண்ணொருத்தி ஓடிவந்தாள் வாசலிலே**
**மதுரை யழிப்பேனடா வணிகேசன்பழி வாங்குவே**
**னென்றாள் (2530)**

**என்றுசொல்லி நிற்கானே யினிச்சொன்னாள் கொப்புலிங்கி**
**மனையாட்டி கொப்புலிங்கி-மதுரைப்-பாண்டியனே**
**கேளுமென்றாள்**

**வன்னித்தட்டான் சொல்கேட்டாய் வணிகேசன்**
**பழிகொடுத்தாய்**

**வணிகேசன் பழிவாங்க மனையாட்டி வாசல்வந்தாள்**
**அநியாயஞ் செய்தாயே அரசழிவாய் பாண்டியனே (2535)**

அழகான மதுரைக்கல்லோ அழிவுவந்து நேர்ந்துதென்றாள்
அழுதகண்ணீ ராறோட அழுதுவிட்டாள் கொப்புலிங்கி
அந்நேரங் கொப்புலிங்கி கன்னகையாள் முன்னேவந்தாள்
முந்திப்பிச்சை[170] போடணுமே முந்தியங்கே ஏந்தலுற்றாள்
மங்கிலியப் பிச்சையல்லோ மங்கையரே போடுமென்றாள்

மங்கையரைப் பெற்றெடுத்த மாதாவல்லோ நானுனக்கு
கொங்கை சுரக்குதடி கொம்பனையாள் கன்னகையே
பாண்டியனே பிதாவல்லோ பத்தினியே மங்கையரே
ஆண்டிருநீ மதுரையெல்லா மரசாளும் மங்கையரே
மாண்டவன் வருவதுண்டோ மணவாளந்தான் மங்கையரே

பிரமலவி[171] தப்பாதுநான் பெத்தெடுத்த மங்கையரே
என்றுசொன்னாள் கொப்பிலிங்கி யிதுகேட்டாள்
கன்னகையாள்

## கன்னகை பழிவாங்கல்

அல்லவடி மாதாவேநான் உண்மைசொல்லக் கேளாயோ
மன்னவன்தான் மாண்டானே மலைக்காட்டி
லென்றிருந்தேன்
பெத்தநல்ல மாதாவேநான் உண்மைசொல்லக் கேளாயோ

பெண்டுக் கழைத்தானடி பெரும்பாவிப் பாண்டியனும்
பழிவாங்கிப் போவேனடி பத்தினியே கொப்புலிங்கி
என்றுசொன்னாள் கன்னகையா ளிதுகேட்டாள்
கொப்புலிங்கி
பாண்டியனைப் பாத்தழுதாள் பத்தினியா ளங்கிருந்தாள்
பாண்டியனு மந்நேரம் பார சபையில்வந்தான்
வன்னித்தட்டான் முகம்பார்த்தே வார்த்தைசொல்லக்
கேளுமென்றான்
வாசலிலே வந்துநின்றாள் வணிகேசன் பெண்டாட்டி
பழிவாங்கிப் போவேனென்று பார்த்துநிற்கா ளிப்போது
என்றுசொல்லப் பாண்டியனு மினிக்கேட்டான்
வன்னித்தட்டான்
வன்னித்தட்டான் சொல்லுகுறேன்-மதுரைப்-பாண்டியனே
கேளுமென்றான்

பெண்ணொருத்திக் கஞ்சியல்லோ-யினிப்-போவதுண்டோ
கேளுமென்றான்
அஞ்சாமல் மதுரையுந்தான் ஆண்டிருந்திர் பாண்டியனே
வஞ்சினையாய்க் கன்னகையை-மதுரை-வாசல்வழி
தள்ளுமென்றான்
தள்ளுந்தள்ளு மென்றலவோ தான்கேட்டாள் கன்னகையாள்
தள்ளுமென்ற சொல்கேட்டாள் தாடகைபோல்
சுரூபங்கொண்டாள் **(2560)**

தெற்கே முகம்பார்த்தாள் சிவசங்கரனைத் தான்தொழுதாள்
பொற்சிலம்பைக் கையெடுத்தாள் பொற்தூவி தான்பாத்தாள்
சுத்தினாள் கால்சிலம்பைச் சுழத்திவிட்டாள் தூவியின்மேல்
சிங்காசனத் தூவியின்மேல்-கால்-சிலம்புபட்டே
உடைந்துதய்யோ
சிலம்புடைந்த சத்தமல்லோ தீயிடிபோ லாச்சுதங்கே **(2565)**
சிலம்பில் கருவியுண்டை திப்பொறிபோ லாச்சுதய்யோ
சிங்காசன மேடையெல்லாம் சிக்கிரமெங்கு மெரிந்துவிழ
தீயா யெரியுதய்யோ சிங்காசன மேடையெல்லாம்
மதுரைநல்ல பாண்டியனால் மாண்டவர்கள் சேனையுண்டு
மேடைவிட்டே ஓடலுற்றான் வீரமுள்ள பாண்டியனும்
**(2570)**

சிறியல்லோ பாண்டியனைச் சினத்தங்கே தான்பிடித்தாள்
மாரைப் பிளந்தலவோ மணிக்குடலைத் தான்பிடிங்கி
குடல்பிடிங்கி மாலையிட்டாள் கொம்பனையாள்
கன்னகையும்
வன்னித்தட்டான் மார்பிளந்தாள் மகன்பழியும்
வாங்கலுற்றாள்
கொல்லனுட தன்பழியும் குசவேளான் தன்பழியும் **(2575)**
ராவுத்தன் பழியும் மழுவரசன் பழிவாங்கி
பாம்புச்சித்தன் வேட்டைக்காரன் பழிவாங்கிக்
கன்னகையாள்
ஒருவன் பழிக்காக ஒன்பது பழிவாங்கி
கோவலவன் பழிக்காகக் குடல்பிடிங்கி மாலையிட்டாள்

## கன்னகை மதுரையை எரித்தல்

மாலையிட்டே வாராளே மாகாளி சுரூபங்கொண்டே
**(2580)**

மதுரைநாலு தெருவுசுத்தி நடுத்தெருவு வீதிவந்தாள்
வலதுமுலை தான்திருகி யெறிந்துவிட்டாள் கன்னகையாள்
இடதுமுலை தான்திருகி யெறிந்துவிட்டாள் கன்னகையாள்
தீயா யெரியுதய்யோ தென்மதுரைக் கோட்டையெல்லாம்
ஆய ரிடைக்குலந்தா னந்நேர மோடிவந்து
வெண்ணைநல்ல திரட்டியல்லோ விட்டெறிந்தார் மார்மேலே
பால்தயிருங் கொண்டலவோ பார்த்தாரே கன்னகையை
பட்டி தழைத்திடுங்கோ பால்பானை பொங்கிடுங்கோ
ஆருமனை வெந்தாலும் ஆயர்மனை வேகாமல்
சித்திரத்தேர் பத்தாமல் தீவிலக்கிக் கன்னகையாள்
சத்தியுள்ள கன்னகையாள்-சொக்கர்-சன்னதியில் வந்துநின்றாள்

## சொக்கர் கன்னகையை மலையாளம் அனுப்பல்

சொக்கரைத் தெண்டனிட்டாள் சொல்லலுற்றாள் கன்னகையும்
தக்கமிட்டே[172] மதுரைவந்தே சபதமுடித்தே னிப்போது
பக்கத்தே நானிருந்து பாராண் டிருப்பதற்கு
நிற்கநிலை தாருமென்றே நிசங்கேட்டாள் கன்னகையாள்
சொக்கர்வெளி யானாரே சொன்னாரே கன்னகைக்கே
தக்கமிட்டே பாண்டியனைச் சதிசெய்தே யிப்போது
குடல்பிடிங்கி மாலையிட்டாய் கொடுமதுரை தானழித்தாய்
அக்கினியா யெரித்தாயே அழகான மதுரையெல்லாம்
நிக்கயிடம் தான்கேட்க நீதமுண்டோ கன்னகையே
கொல்லவரம் வெல்லவரம் கொடுக்கவரந் தாரேனென்றார்
மலையாள தேசமெல்லாம் பகவதியாய்ப் போயிரென்றார்
பாக்களட்டுச் சீமையெல்லாம் பாராண்டு நீயிரெடி
கன்னிமார் குமரிமுதல்[173] கையெடுப்பா ருன்னையுந்தான்
என்றுசொன்னார் சொக்கருமே யிதுகேட்டாள் கன்னகையாள்
தெண்டனிட்டாள் கன்னகைதான் திருசித்தாள்[174] சொக்கரையும்
அங்கையக்கண் மீனாட்சி யம்மனையும் அனுப்பிக்கொண்டு
மலையாள தேசத்துக்கு வாராளே கன்னகையாள்

## கன்னகை தெய்வமாக நிலைபெறல்

வைகையிலே தித்தமாடி மகாபூசை செய்துகொண்டு
மதுரைநல்ல கோட்டைவிட்டே வாராளே
கன்னகையாள்

தெக்குக்கோட்டை வாசல்விட்டே சிக்கிந்தர் மலைகடந்தாள்
சாத்தூர் பதிகடந்தே தான்வாராள் கன்னகையாள்
சங்கரநயினார் கோவிலிலே தானும்வந்தாள்
கன்னகையாள்
நாககனையிலே தித்தமாடி சங்கரேசரையுந்
தெண்டனிட்டாள்
ஆவுடை யம்மைனையும் அடிவணங்கித் தெண்டனிட்டாள்

ஆவுடை யம்மனுந்தான்-கன்னகைக்கு-அபையந்தம்
தான்கொடுத்தாள்
பால்பழமும் சக்கரையும் பரதமானம்[175] தான்கொடுத்தாள்
வாங்கியல்லோ கன்னகைதான் வயறுபசி யாத்திக்கொண்டு
தெற்கேநல்ல முகமாகத் தேன்மொழியாள் வாராளே
குத்தாலத்திலே வந்தலவோ கொம்பினையாள்
கன்னகைதான்

அருவியிலே தீர்த்தமாடி-திருகூட-லிங்கரையுந்
தெண்டனிட்டாள்
குழல்வாமொழி அம்மனையும் கொம்பனையாள்
தெண்டனிட்டாள்
குத்தால லிங்கருந்தான் கொம்பினையாள் கன்னகைக்கு
பால்பழமும் சக்கரையும் பரதமானந் தான்கொடுத்து
வேணதெல்லாம் தான்கொடுத்தார் விருப்பமுடன்
கன்னகைக்கு

வாங்கிநல்ல கன்னகைதான் வயறுபசி தித்துக்கொண்டு
ஆரியங்கா பாதையல்லோ அழகான கன்னகைதான்
மாகாளி ரூபங்கொண்டு மலைஅய்யரையும் தான்பாத்து
மாகாளி ரூபங்கொண்டாள் மங்கைநல்லாள் கன்னகைதான்
சொக்கர்சொன்ன உத்தரவைச் சொன்னாளே அய்யருக்கு

அய்யருமே கேட்டலவோ அவருமங்கே வரம்கொடுத்தார்
நம்முடை தேசத்திலே நாயகியே நீயிருந்து
பாலக்காடு சீமைமுதல் பாராண்டு கொள்ளச்சொல்லி

கொல்லவரம் வெல்லவரம் கோடிவரம் தான்கொடுத்தார்
அப்போது கன்னகையும் ஆரியங்கா அய்யரைத்தான்
தெண்டனிட்டே அடிவணங்கித் தேன்மொழியாள் கன்னகைதான்
வரம்பெற்று விடைவாங்கி வாராளே கன்னகையாள்
மலையாளம் வந்தலவோ மங்கைநல்லாள் கன்னகையும்
மாகாளி சுரூபங்கொண்டு மனுசரையும் பிடிக்கலுற்றாள்
ஆட்டையு மாட்டையுந்தான் அடங்கலுமோ அழிக்கிறாளே
மலையாளத்துச் சனங்களெல்லாம் மதிமயங்கித் தான்பயந்து
இருக்கிற வேளையிலே ஏந்திழையாள் பகபதியும்
மலையாளத்து ராசாவு மந்திரியும் அந்நேரம்
நம்முடைய சீமைக்குத்தான் இப்படியும் வந்ததென்ன
என்றுசொல்லி மந்திரியும் கிராமத்தார் தனையழைத்து
காளியுட கோவிலுக்குக் காளியூட்டு[176] நடத்தச்சொன்னார்
சுத்திலுள்ள தேவதைக்கு ஊட்டுப்போட்டுக் குடுக்கச்சொன்னார்
பட்டிநல்ல பொங்கலும்தான் பாங்காகக் குடுக்கச்சொன்னார்
அந்தப்படி சனங்களெல்லாம் அன்பாகச் செய்தார்கள்
செய்தபின்பு சனங்களெல்லாஞ் சிந்தையுடன் தானிருந்தார்
ஆல்போலே தான்தளுத்து[177] அருகதுபோல் வேரூணி
மூங்கில்போ லன்னசுத்தம்[178] முசியாமல் வாழ்ந்திருந்தார்
வாழிமிக வாழி-அவர்கள்-வங்கிசங்கள்[179] தான்வாழி
மூங்கில்போல அன்னசுற்றம் முசியாமல் வாழியதே
கோவலவர் கதை முற்றிற்று முற்றும்

## நரசிங்க மூர்த்தி துணை

❊❊❊❊❊

# அருஞ்சொற் பொருள் விளக்கம்

1. சத்தி - சக்தி.
2. காரியப்பேர் - காரியங்கள் செய்பவர்கள்.
3. முகிழ்த்தம் - முகூர்த்தம், நல்வேளை.
4. கலுங்கி - கலுங்கு, மதகு.
5. கையார்ச் சோழமன்னா - கரிகால் சோழமன்னா.
6. வரிசை - வெகுமதி.
7. விருது - பட்டம்.
8. கம்மாளன் - கட்டுமானத் தொழில் புரிபவன்.
9. வானம் - அஸ்திவாரக்குழி.
10. சாரம் - சத்து, வலிமை.
11. சூரம் - வீரம்.
12. ஊத்து - ஊற்று.
13. கருப்புநிலை - கற்பு.
14. கற்பினை - கற்பனை.
15. கன்னல் - கரும்பு.
16. சென்னல் - செந்நெல்.
17. பத்தா - பர்த்தா, கணவன்.
18. கால் - வாய்க்கால்.
19. அன்ன சொன்னம் - அன்னம், சொர்ணம் அதாவது உணவு, தங்கம்.
20. அடப்பக்காரன் - வெற்றிலை மடித்துக் கொடுப்பவன்.
21. கருவேல நகை - கருவூல நகை.
22. அதற்றல் - அதட்டல், உரக்கக் கடிந்துபேசுதல்.
23. இளப்பம் - தாழ்வு.
24. மழு - பழுக்கக் காய்ச்சிய இரும்பு.
25. பச்சிலை - மூலிகை.
26. தலையாரி - தலைமைக் காவல்காரன்.
27. அச்சிணம் - அச்சணம், அக்கணம் அதாவது அந்தப் பொழுதில்.
28. பாப்பார் - பார்ப்பார், அந்தணர்.
29. மாத்தையிலே - மாதத்திலே.
30. அரதேசி - தனக்கென்று ஒருதேசம் இல்லாதவன்.
31. சொன்னம் - சொர்ணம்-தங்கம்
32. ஆயுத சர்ப்பனை - ஆயுத தந்திரங்கள்.

33. **மகிடம்** - மகுடம்.

34. **அக்குறுவம்** - அக்கிரமம், முறைகேடு.

35. **உத்தார்** - உற்றார்.

36. **உறைமுறை** - உறமுறை, உறவுமுறை.

37. **நாழிகை** - அறுபது விநாடி கொண்ட நேரம்.

38. **வெட்டை** - வெப்பம், நிலக்கொதி.

39. **பொட்டகம்** - பெட்டகம், பெட்டி.

40. **சோதினையள்** - சோதனைகள்.

41. **வரத்துக்கப்பல்** - வருகின்ற கப்பல்.

42. **சல்லி** - ஆபரணத் தொங்கல்.

43. **தம்பட்டம்** - தோற்கருவி வகை, தற்காலத்தில் தப்பட்டை, தப்பு என வழங்கப்படுகிறது 'தப்தப்' என ஒலிப்பதால் 'தப்பு' எனப் பெயர் பெற்றது. கோயில் திருவிழா, திருமணம், இறப்புச் சடங்குகளில் பயன்படுத்தப்படுகின்றது.

44. **பேரிகை** - பேரி என்றும் வழங்கப்பெறும். வன்மைக் கருவி, தலைக்கருவி, அகமுழவு என இசைநூல் இதனை வகைப்படுத்தும். குரவமரத்தால் செய்யப்படும். வளைந்த குச்சிகளால் தாக்கி முழக்கப்படும்.

45. **தவில்** - பீப்பாய் வடிவான தோற்கருவி, கோயில் மேள வாத்தியங்களில் ஒன்று. திருமணம், பண்டிகை முதலிய சடங்குகளில் பயன்படுத்தப்படும். தவிலின் உடல் பலா மரத்தால் செய்யப்படுவது. முழக்கும் குறுந்தடி புரசை மரத்தால் ஆனது.

46. **துந்துமி** - துந்துமி, முழக்கும் இசைக்கருவி, பேரி, பேரிகை எனப்படும்.

47. **வாச்சியங்கள்** - வாத்தியங்கள்.

48. **அரசாணி** - அரசங்கொம்பு.

49. **பதைக்கம்** - பதக்கம், சரடு முதலியவற்றில் கோக்கப்படும் கல்லிழைத்த தொங்கற் கழுத்தணி.

50. **அண்ணாவி** - கூத்துத்தலைவன்.

51. **அடவு** - அடைவு, முறை.

52. **கட்டாரி** - குத்துவாள்.

53. **தமுக்கு** - தோற்கருவி. சங்ககாலம் தொட்டு இன்று வரை மக்களுக்குச் செய்தி அறிவிக்கும் கருவியாக உள்ளது. ஓரளவு வடிவில் சிறியது. தமுக்குடன் சேர்த்துக் கட்டப்பட்ட வாரைத் தன் கழுத்தில் தொங்கவிட்டு அடிப்பது வழக்கம்.

54. **கழை** - மூங்கிற் கம்பு.

55. **உருக்குவடம்** - உறுதியான, முறுக்கிய கயிறு.

56. **கண்டசரம்** - கழுத்தணிவகை.

57. **கெருவிதம்** - கர்வம்.
58. **அசனம்** - உணவு.
59. **தம்புராவும் கின்னரமும்** - இவை நரம்பிசைக் கருவிகள்.
60. **வெள்ளிலை** - வெற்றிலை.
61. **அடைக்காய்** - பாக்கு.
62. **படவு** - படகு.
63. **வள்ளம்** - தோணி.
64. **பூசணம்** - பூஷணம், ஆபரணம்.
65. **விசாரம்** - ஆலோசனை.
66. **பிச்சு** - பித்து, பைத்தியம்.
67. **விசாரம்** - கவலை.
68. **சப்பிரமஞ்சம்** - மேற்கட்டமைந்த சிங்காரக் கட்டில்.
69. **ஒருவரிடம்** - ஒருவருடம்.
70. **அவிதி** - அவதி, துன்பம்.
71. **அட்டாலம்** - அட்டாலை, மேல்வீடு.
72. **முதந்துவர** - மிதந்துவர.
73. **அருந்துதியாள்** - அருந்ததியாள், வசிஷ்டர் மனைவி.
74. **உறமுறை** - உறவுமுறை.
75. **தரம்** - தகுதி.
76. **அரை** - இடுப்பு.
77. **சோமன்** - வேட்டிக்கு மேலும் துப்படிக்குக் கீழுமாக உடுத்தும் ஆடை
78. **கிலேசம்** - துக்கம்.
79. **கட்டுவர்க்கம்** - உடுத்துகின்ற ஆடை வகைகள்.
80. **மருதை** - மதுரை.
81. **வர்த்தவர்கள்** - வர்த்தகர்கள்.
82. **யாபாரி** - வியாபாரி.
83. **குன்னு** - குன்று.
84. **வங்கிசம்** - வம்சம்.
85. **வளவு** - வீடு.
86. **புழை** - பிழை.
87. **தானம்** - ஸ்நானம், குளியல்.
88. **அப்பறத்தே** - அப்புறத்தே, வெளிப்புறத்தே.
89. **கரும்பூச்சை** - கரும்பூனை.
90. **வாணியன்** - வாணிகன்.
91. **கூண்டபொட்டி** - கூடப்பொட்டி, கூடாரப்பெட்டி
92. **பழியன்** - பழிகள்.

93. வெண்ணீத்தால் - வெண்ணீறால்.
94. தொண்றுக்கம்பு - ஊன்றுதடி.
95. மாறலுற்றான் - தள்ளலுற்றான்.
96. வத்தவர்கள் - வர்த்தகர்கள்.
97. வளவிச்செட்டி - வளையல் செட்டி
98. காசுழக்கி - காசுக்கு உழக்கு (காசு = ஒரு பழைய பொன்நாணயம் (An Ancient gold coin = 28gr. troy).
99. துலுக்கர் - துருக்கர், முகமதியர்.
100. சேனகனார் - யவன தேசத்தவர்.
101. பணிக்கமார் - தச்சர்.
102. பணிசமைக்கும் - நகை செய்யும் .
103. குஞ்சி - குஞ்சு.
104. சுண்டுவில் - விளையாட்டுக்கு உதவும் ஒருவகைவில்.
105. கவண் - கல்லெறியுங்கருவி.
106. மலைச்சாருவு - மலைச் சார்வு, மலைச்சாரல்.
107. புத்ததிலே - புற்றதிலே.
108. படிச்சிலவு - படிச்செலவு, வழிச்செலவுக்கான பணம்.
109. குசவேளான் - குயவேளான், மண்பாண்டத் தொழில் செய்வோன்.
110. உங்கணுமோ - உண்ணவேண்டுமோ.
111. சந்திரகாவிச்சேலை - சேலை வகையுள் ஒன்று.
112. குப்பித் தொங்கல் - தலையணி.
113. காணி - நிலம்.
114. அறிகாரர் - அறிக்கையிடுபவர்.
115. துருத்தி - உலையூதுங் கருவி.
116. மாதாளம்பூ - மாதுளம் பூ.
117. பத்தையம் - கூண்டு.
118. மோருதய்யோ - முகருதய்யோ (முகர்ந்துபார்த்தல்).
119. ராவுத்தமார் - மாவுத்தமார், யானைப்பாகன்.
120. துறட்டி - அங்குசம்.
121. துலாம் - 5 வீசை கொண்ட நிறை.
122. சேர் - எட்டுப் பலம் கொண்ட ஒரு நிறுத்தலளவை.
123. மாசியம் - மாசனம், கஞ்சாவைக் கொண்டு செய்யும் ஒரு வகை லாகிரிப் பண்டம்
124. அத்திமதம் - கொலைவெறி.
125. அகில் - அகழி.
126. கோட்டு மதயானை - கொம்புடைய, தந்தமுடைய மதயானை.

127. **கன்னார்** - கொல்லர்.
128. **உருமால்** - தலைப்பாகை.
129. **ஆளன்** - கணவன்.
130. **அல்** - மதில்?.
131. **மச்சாவி** - மச்சான், சகோதரியின் கணவன்.
132. **சங்கை** - அச்சம்.
133. **ஆயாசம்** - மனவருத்தம், களைப்பு.
134. **வன்குலை** - வன்கொலை.
135. **சமுதாடு** - ஈட்டிவகை.
136. **அத்துவிழ** - அறுந்துவிழ.
137. **தளர்ச்சை** - தளர்ச்சி.
138. **சோலக் கிளியாள்** - சோலைக் கிளியாள்.
139. **தகை** - தாகம்.
140. **வாலைப்பருவம்** - இளம்பருவம்.
141. **காருமென்றான்** - காப்பாற்றுமென்றான்.
142. **சோரை** - இரத்தம் (மலையாள வழக்கு).
143. **அத்தரிசி வேளை** - அத்தநிசிவேளை, நட்டநடுநிசிவேளை (நடுஇரவு).
144. **முத்தம்** - முற்றம்.
145. **அரச்சு** - அரசமரம்.
146. **அவடம்விட்டே** - அவ்விடம் விட்டே (மலையாள வழக்கு).
147. **வசூரி** - வைசூரி, அம்மைநோய்.
148. **சந்தி** - சந்தியாவந்தனம்-காலை, உச்சி, மாலை வேளைகளில் வேத மந்திரங்களால் செய்யும் வழிபாடு.
149. **கிங்கிலிவர்** - கிங்கரன், ஏவலாள்.
150. **அஞ்சல்** - விரைவில்.
151. **சாக்கி** - சாட்சி, (பேச்சு வழக்கு).
152. **சாச்சி** - சாட்சி
153. **அடியறுவான்** - பரம்பரையின்றி அடியோடு அழிவான்.
154. **அட்செணமே** - அக்கணமே.
155. **பொற்சரடு** - பொன்னாலான தடித்த நூல்.
156. **மலங்காடு** - மலைக்காடு.
157. **எப்பம்** - எப்பொழுது.
158. **அறாதோ** - அறுந்துபடாதோ.
159. **உருகடியோ** - உருவி விடுடியோ.
160. **பணிகளெல்லாம்** - அணிகலன்களெல்லாம்.
161. **வெள்ளாட்டி** - பணிப்பெண்.

162. **பிச்செறிந்தாள்** - பிய்த்தெறிந்தாள்.
163. **முண்டம்** - மரத்தண்டு, மரத்தடி.
164. **குப்பனுத்தீ** - குப்பெனத்தீ.
165. **அங்கமெல்லாம்** - சாம்பலெல்லாம்.
166. **வலசை** - வேற்று நாட்டுக்குக் குடியோடுகை.
167. **பொட்டி** - பெட்டி.
168. **கேட்காள்** - கேட்கிறாள் (தென்மாவட்ட வழக்கு).
169. **நானும்மை சொல்ல** - நான் உண்மை சொல்ல.
170. **முந்திப்பிச்சை** - முந்தானைப்பிச்சை.
171. **பிரமலவி** - பிரமன்லிபி, பிரமன் எழுதிய எழுத்து.
172. **தக்கமிட்டே** - தர்க்கமிட்டே
173. **கன்னிமார்குமரி** - கன்னியாகுமரி.
174. **திருசித்தாள்** - தெரிசித்தாள், வணங்கினாள்.
175. **பிரதமானம்** - பிரதமன், பாயாசம், (மலையாள வழக்கு).
176. **காளியூட்டு** - காளி ஊட்டு, காளிக்குப் பலியிட்டு விழா எடுத்தல்.
177. **தளுத்து** - தளிர்த்து.
178. **சுத்தம்** - சுற்றம்.
179. **வங்கிசம்** - வம்சம்.

# துணை நூல்கள்


1. Tamil Lexicon (Vol.I to Vol. VI) (தமிழ் அகராதி), சென்னைப் பல்கலைக் கழகம், 1989.
2. அபிதான சிந்தாமணி, ஆ. சிங்காரவேலுமுதலியார், ஏசியன் எஜுகேஷனல் சர்வீசஸ், நியூடெல்லி, 1996.
3. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், பதிப்பாசிரியர் உவே. சாமிநாதய்யர், மறுபதிப்பு, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1944.
4. வழிவழிச் சிலம்பு, டாக்டர் சரளா ராசகோபாலன், ஒளிப்பதிப்பகம், சென்னை-18, 1986.
5. முத்தாரம்மன் கதை, பதிப்பாசிரியர் சு. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1995.
6. நற்றிணை, கழக வெளியீடு
7. கோவலன் கதை, பி. இரத்தின நாயகர் & ஸன்ஸ், சென்னை-1.
8. கோவலன் கர்ணகை கதை, பதிப்பாசிரியர் டாக்டர் தி. நடராசன், 1979.
9. கோவலன் கதை, (சுவடிப்பட்டய ஆய்வேடு), வெ. சொக்கன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஏப்., 1994.


❄❄❄❄❄

## சிறப்புச் சொல்லகராதி

(எண் - பக்க எண்)


அக்கினி 42
அக்கினி தேவன் 15
அக்கினி தேவி 43
அங்கங் கரைத்தல் 33
அடப்பக்காரன் சூரன் 16
அண்ணாவி நட்டுவனார் 29
அந்தணர்கள் 29
அரச மரங்கள் 38
அரசரடி 23
அரசாணி 50
அரதேசி 28
அழகன் பெருமாள் கதைப்பாடல் 1
அழகாபுரிப் பட்டணம் 11,16
ஆண்டி 54,55,56,58
ஆரியங்காவு 24,35,72
இசைக் கருவிகள் 30
இந்திரன் 8
இந்திரனார் 37
இளங்கோவடிகள் 38
உக்கிரகாளி 37
உடன் கட்டை 14,32,33
உடன் கட்டை ஏறல் 60,61
உள்ளோலை 18
எழுத்தாணி 37
எழுத்துமிகை 6
ஏந்திழை 45
ஏலச்சம்பா அரிசி 30
ஒலிக் குறிப்பு 7
ஒற்றைப் பார்ப்பான் 31
ஓமகுண்டம் 30
கண் திருஷ்டி 33
கதைப்பாடற் சுவடிகள் 1
கரந்தை மடம் 35
கரிகால் சோழ மன்னன் 19
கரிகாற் சோழன் 46
கரும்பூனை 31
கல்தூண் 23
கல்லணை 19,46
கவுந்தி அடிகள் 15
கழைக்கூத்து 17
கற்பரசி 61,62,63
கன்னிமா குமரி 24
கன்னிமார் குமரி 24
கன்னியா குமரி23
காகம் 31
காட்டேரி அச்சம்பட்டி 35
காய்கதிர்ச் செல்வன் 15
காரியக்காரர் 26
காவிரித் தாய் 47
காவிரிப்பூம் பட்டினம் 20
காளி 11,16,19
காளியம்மன் 78
காளியூட்டு 72
கிக்கிந்தா நதி 21,25
கிளி 44
குசவேளான் 36
குத்தாலம் 24,35
குரு 79
குருக்குளாஞ்சி கதை 1
குழந்தை திருமணச் சட்டம் 49
குழந்தை மணம் 52
குறத்தி 56,57,58
கூட்டெழுத்துகள் 4
கூத்துவன் 8
கெருடன் 63
கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் 1
கேரளப் பல்கலைக் கழகச் சுவடி நூலகம்-38
கையூட்டு 31,59
கொக்கிருந்தான் பாளையம் 25
கொண்டை 31
கொப்புலிங்கி 11,14,63
கொம்பைக்காடு 22
கொல்லம் ஆண்டு 3
கொல்லன் 36
கோவர்த்தன கிரி 40
கோவலன் கர்ணகை கதை 1
கோவலன் பொட்டல் 25
சக்களத்திச் சண்டை 18
சகுனத்தடை 31
சங்கர நயினார் கோவில் 24,35
சத்தியம் 58,59,60
சந்திரகாவிச் சேலை 59
சந்திரர் 37

சமுதாடு 37
சாத்தூர் 24
கிக்கிந்தா மலை 24
சித்த மருத்துவச் சுவடிகள் 1
சிலப்பதிகாரப் பிரதி 38
சின்னத்தம்பி கதை 1
சுந்தரி 16,47,61,62
சுருட்டோலை 18
சூரன் 11
சூரிய பகவான் 48
சூரியர் 37
சேரன் 26
சொக்கர் 26,54,55,56,57,58
சோதிடக் கணிப்பு 29
சோதிடர் 64,65,66
சோழன் 26
டொம்பக் கூத்து 17
தடிவீர சுவாமி கதை 1
தமுக்கடித்தல் 32
தாசியர் வளமை 29
தாய்க்கிழவி 53
தாவி 18
திருக்கடையூர் 11
திருச்சிராபுரம் 35
திருமணச் சடங்குகள் 49
திருமாங்கல்யம் 30
திருமாவுண்ணி 78
திருவிளையாடற் புராணக் கதை 40
துர்க்குறி 38
தென்மதுரைக் கோட்டை 37
தென் மாவட்ட வழக்குச் சொற்கள் 40
தேவகன்னி 8
தேவையற்ற எழுத்துகளை இடுதல் 6
தேன்மொழி 43
தேன்மொழியாள் 43
நகில் 78
நந்த கோபால வம்சம் 40
நரபலி 16,62
திருவனந்தபுரம் 1
நாகப்பாம்பு 31
நாகமலை 22
நாகமலைப்புற்று 63
நாட்டார் 10
நிழற்படப்படி 10
பகவதி 19
பகவதித் தெய்வம் 15
பஞ்சாங்கம் 28
பத்தினி 44,45
பரத்தமை 50,51
பரத்தையர் 51
பிரதேசி 28
பாண்டிமா தேவி 63
பாண்டியர் 47,48
பாண்டியன் 26
பாம்புச் சித்தன் 36
பார்ப்பனர் 65,66
பார்ப்பார் 27,28
பாலக்காடு 24
பாவாடை 37
பிரமன் 18
பிராமணர் 64
புகழேந்திப்புலவர் 1
பூப்புச் சடங்கு 29
பொடி அரிசி 30
பொற்கொல்லன் 78
பொன்மாலை 26
மகாதேவர் 26
மகாதேவி 26
மகாபாரதம் 48
மங்கிலியச் செப்பு 12,30
மடிப்பிச்சை 33
மணவறை அலங்கரிப்பு 50
மதுராபுரித் தெய்வம் 15
மதுரை 21
மதுரைக் கோட்டைக் கதவு 15
மந்திரிமார் 26
மரக்கால் 54
மல்லிகைப்பூ 30
மலை நாடு 15
மலையாள ஈரா 3
மலையாளச் சொற்கள் 39
மலையாள தேசம் 24
மழுவரசன் 36
மாசாத்தான் 13,15
மாசித்தெரு 21
மாநாய்கன் 13
மாரியம்மன் 78
மாவிளக்கு 29
மாவுத்தன் 36,60
மீனாட்சி 26,54,56,57,58
முத்தாரம்மன் கதை 24
முதலில் வரக் கூடாத எழுத்து 7
முருங்கை 38

முன்னுணர்த்தும் உத்தி 38
மோகினி 15
வசிய மருந்து 52,53
வடமதுரைக் கோட்டை 37
வண்டியூர் 20,21
வண்ணமாலை 11,13,15
வண்ணமாலைச் செட்டி 11,13
வலையனுட மலை 35
வன்னி 38
வன்னித்தட்டான் 63,66,67,68
வன்னியராயன் கதை 1
விருத்தப்பாடல்கள் 9
வெண்ணை வீசும் வழக்கம் 70
வெப்பு 79
வேங்கைப்பத்தயம் 63
வேட்டைக்காரன் 36
வேதியர் 64,65
வேதியர்கள் 29
வேப்பங்குழை 37
வைகைநதி 21
வையாபுரிப் பிள்ளை 1

❁❁❁❁❁

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| குறுந்தொகை – ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ்நாடகம்–நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம் பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி–1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி–2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை–4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| தமிழ்மொழி–இன–இலக்கிய மேம்பாடு மறைமலையடிகளாரின் பங்களிப்பு | 20.00 |
| அறிவியல் தொழில் நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள் | 25.00 |
| WORK BOOK SPOKEN TAMIL | 50.00 |
| தமிழ் அன்னை | 40.00 |
| பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி | 25.00 |
| வ.உ.சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| மிருச்ச கடிதம் | 50.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும். | 125.00 |
| தமிழில் விடுதலை இலக்கியம் | 20.00 |
| உலக அரங்கில் தமிழ் | 30.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தெசிணியின் தமிழாக்கப்பாடல் திரட்டு | 50.00 |
| உலேசா பதிப்புப்பணியும் பன்முகமாட்சியும் | 35.00 |
| தமிழ்மொழியின் வரலாறு | 30.00 |

450 கோவலன் கதை 50.00